# செவ்வியல் நோக்கில் சங்க இலக்கியம்

ஞானி (கி. பழனிச்சாமி)

காவ்யா

**செவ்வியல் நோக்கில் சங்க இலக்கியம்**

© ஞானி (கி. பழனிச்சாமி)

முதல் பதிப்பு : டிசம்பர் 2010

வெளியீடு :

**காவ்யா**

16, இரண்டாம் குறுக்குத் தெரு,

டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை – 600 024.

☎ : 044 – 2372 6882

அச்சாக்கம் : மணி ஆப்செட், சென்னை – 5.

பக்கங்கள் : 216

விலை : ரூ.175/-

**SEVVIYAL NOKIL SANGA ILLIAKIYAM**

© Gnani (K. Palaniswamy)

First Edition : December 2010

Published by **KAAVYA**

16, Second Cross Street,

Trustpuram, Kodambakkam, Chennai - 600 024.

☎ : 044 - 2372 6882

Printed at Mani Offset, Chennai - 5.

Pages : 216

Price : Rs.175/-

# பதிப்புரை

அந்தப் பழனிச்சாமிக்கு ஞானப்பழம் கிடைக்கவில்லை.

எனவே அவரே ஞானப்பழமானார்.

இந்தப் பழனிச்சாமியும் ஞானிதான்.

கோவை ஞானியைத்.

தோழர் என்பதா? உடன்பிறப்பு என்பதா? குரு என்பதா?

எல்லாமுந்தான்.

இவருக்கும் காவ்யாவுக்குமான தொடர்பு எளியது;

என்றாலும் இனியது.

இந்த ஆண்டில் மட்டும் இவரது மூன்று நூல்கள்

எங்களால் வெளியிடப்படுகின்றன.

இதுவும் ஒன்று.

சங்க இலக்கியம் பற்றி தமிழ் வாசகர்கள்

தெரிந்தே ஆக வேண்டிய சில சிந்தனைகள்

இந்நூலில் அடங்கியுள்ளன.

'செவ்வியல் நோக்கில் சங்க இலக்கியம்'

இது அவசியமான - அவசரமான நூற்பு.

ஞானியரைப் போற்றுவோம்.

அன்புடன்

காவ்யா சண்முகசுந்தரம்.

## முன்னுரை

'செவ்வியல் நோக்கில் சங்க இலக்கியம்' என்ற இந்தக் கட்டுரைத் தொகுப்பினுள் பன்னிரெண்டு கட்டுரைகள் அடங்கியுள்ளன. தமிழைச் செம்மொழியென அரசு ஏற்பு கிடைத்தபிறகு தமிழகத்தில் நடந்த சில கருத்தரங்குகளில் நான் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தபோது நான் எழுதிய கட்டுரைகளும், அதற்கு முன்பு என்னளவில் என் ஈடுபாடு காரணமாக எழுதிய கட்டுரைகளும் இந்தத் தொகுப்பில் உள்ளன. என் பழைய கோப்புகளைத் தேடிப் பார்த்தபோது, எனக்கே வியப்புத்தரும் முறையில் கிடைத்த ஒரு கட்டுரையையும் இந்தத் தொகுப்பில் இறுதியாக இணைத்துள்ளேன். அந்தக் கட்டுரையை நான் எழுதிய ஆண்டு 1974. செவ்வியல் நோக்கில் சங்க இலக்கியத்தை ஆய்வதற்கான என் பார்வை என்னளவில் தொடக்கம் முதலே இருந்து வந்ததை இக்கட்டுரை புலப்படுத்தும்.

தமிழைச் செம்மொழியென மைய அரசு ஏற்றுக் கொண்டதன் மூலம் நமக்குக் கிடைத்த வாய்ப்பை முழு அளவில் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதைதான் இத்தொகுப்பிலுள்ள அனைத்துக் கட்டுரைகளும் வலியுறுத்துகின்றன. இந்திய நாகரிகத்தின் அடித்தளம் முழுவதும் தமிழ் நாகரிகம்தான் என்ற பேருண்மையை நம்மால் மெய்பிக்க முடியுமென்றால், இன்றைய இந்திய அரசியல், பொருளியல், மெய்யியல், பண்பாடு முதலிய அனைத்துக் களங்களிலும், கடந்த ஆயிரமாண்டுகளில் நாமிழந்த பெருமையை மீட்டுக் கொள்ள முடியும். இந்த அரிய பணியை நிறைவேற்றுவதற்கான தகுதியை நாம் பெற்றாலன்றி இன்றைய இந்தியச் சூழலில் நம்மை முன்னிறுத்த முடியாது என்பதையும் என் கட்டுரைகள் வலியுறுத்துகின்றன.

சங்க இலக்கியத்தின் தோற்றம், எழுச்சி, மாறுதல் முதலிய அனைத்துப் போக்குகளையும் அக்கால வரலாறு மற்றும் பொருளியல் சூழலில் வைத்து நான் ஆராய்கிறேன். இத்தகைய பார்வையை மார்க்சியம்தான் நமக்கு வழங்குகிறது. கட்சி மார்க்சியரிடம் இடம்பெற்ற இறுக்கமான பார்வை என்னிடம் இல்லை என்பதனாலும் சங்க இலக்கியம் குறித்து என் ஆய்வு தமிழுக்கு வளம் சேர்ப்பதாக, தமிழ் வரலாற்றுக்கு

புதிய பொருள் வழங்குவதாக அமைகிறது என்று நான் நம்புகிறேன். இன்னொன்றையும் இங்கு நான் சொல்வதை நண்பர்கள், ஆய்வாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பது என் வேண்டுகோள். மார்க்சியப் பார்வை இல்லாமல் தமிழிலக்கிய ஆய்வை, சிறப்பாகவும் நுட்பமாகவும் செய்ய இயலாது என்பதை இங்கு அழுத்தமாக குறிப்பிட விரும்புகிறேன். நவீன காலத்திற்கு ஒத்த நோக்கு என்ற முறையில் சங்க இலக்கியத்தை நம் காலத்திற்கு ஒத்த முறையில் மறுவாசிப்பு செய்வதும் என் கருத்து.

கிரேக்கம், இலத்தீன், ஈப்ரு, சீனம், சமஸ்கிருதம் முதலிய உலகளவிலான செம்மொழிகளுக்கிடையில் தமிழின் தனித்தன்மையென தமிழறத்தையும் தமிழ் மெய்யியலையும் நான் விடாப்பிடியாக இந்தக் கட்டுரைகளில் வலியுறுத்துகின்றேன். சமதர்மம் இல்லாமல் நமக்கு வாழ்வில்லை என்பதையும், இலக்கிய நயம் காண்பது முதலிய மேம்போக்கான பார்வைகளைக் கொண்டு தமிழ் வாழ்வை, சங்க இலக்கிய ஆய்வை நம்மால் மேம்படுத்த முடியாது என்பதையும் வற்புறுத்துகிறேன். சங்க இலக்கியம் போன்ற அற்புதமான பேரிலக்கியத்தை, ஆய்ந்து தெளிவதன் மூலமே இன்றைய வரலாற்றில் நம்மைத் தக்கவைத்துக்கொள்ள முடியும் என்பதையும் தெளிவுப்படுத்துகிறேன்.

சங்க இலக்கிய ஆய்வை தொல்காப்பியத்தோடு இணைந்துதான் நாம் செய்கிறோம். தொல்காப்பியம், சங்க இலக்கியத்திற்கு முற்பட்டதா, பிற்பட்டதா, என்பதற்கான ஆய்வின் முக்கியத்துவத்தை நான் மறுக்கவில்லை. தொல்காப்பியரைத் தொடர்ந்து உரையாசிரியர்களாலும் தமிழ் இலக்கண ஆசிரியர்களாலும் பொருளிலக்கணம் நுட்பமான முறையில் வளர்ச்சிப் பெற்றே வந்திருப்பதை நம்மவர் கண்டு கொள்வதில்லை. தொல்காப்பியர் நமக்கு வகுத்துச் சொன்ன முதல், கரு, உரி மற்றும் புலநெறி வழக்கு — இவற்றோடு அகம், புறம் முதலியவை பற்றிய ஆய்வை, சங்க இலக்கியத்தோடு பின் வந்த தமிழிலக்கியங்கள் வழியினும் நம்மால் தொடர முடியும். அண்மைக்காலத்தில் ஐயப்பப்பணிக்கர் அவர்களின் ஆய்வின் மூலம் தொல்காப்பியர் தந்த வரையறைகளை எவ்வாறெல்லாம் ஆழப்படுத்தவும் விரிவுபடுத்தவும் வேண்டுமென்பதில் நம் கவனத்தைக் குவிக்கத்தான் வேண்டும். இவ்வாறெல்லாம் செய்வதன் மூலம் தொல்காப்பியரின் திணைக் கோட்பாடென்ற அரிய திறனாய்வு மற்றும் படைப்பியக்க முறையை உலக அளவிலான இலக்கிய ஆய்வுத் தளத்திற்கு நம்மால் கொண்டு

செல்லமுடியும். தமிழைச் செவ்வியல் மொழியென நிறுத்துவதற்கும் இத்தகைய ஆய்வு நோக்கு நமக்குப் பெரிதும் பயன்படும். இத்தகைய ஆய்வும் வெறும் மொழி (அ) இலக்கியம் சார்ந்த ஆய்வாகவும் இருக்க முடியாது. தமிழர் என்ற முறையில் நமக்கான வாழ்வை, வரலாற்றை இன்றைய நெருக்கடி மிக்க உலகச்சூழலில் தக்க வைத்துக்கொள்வதற்கான ஆய்வாகவும் அமையும்.

என்னை முன்னிலைப்படுத்துவதற்காகவா நான் இப்படியெல்லாம் எழுதுகிறேன்? தமிழை, தமிழ் வாழ்வை, தமிழிலக்கியத்தை முன்னிலைப்படுத்து- வதல்லாமல் வேறு எந்த நோக்கத்திற்காக நான் எழுதுகிறேன்? ஔவையும், கபிலரும், வள்ளுவரும், இளங்கோவும், பாரதியும், பாரதிதாசனும் நமக்குள் இன்றும் வாழ்கிறார்கள் என்பதை உணர்ந்தவர் எவரும் வேறு எப்படி இயங்க முடியும்? இவர்களையெல்லாம் என் மூலம் முன்னிலைப்படுத்துகிறேன் என்பதை நண்பர்கள் பெரியவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

இந்தக் கட்டுரைத் தொகுப்பை உருவாக்கும் முறையில் என்னோடு ஒத்துழைத்த நண்பர்கள் அனைவருக்கும் என் நன்றி. குறிப்பாக நான் பெரிதும் மதிக்கிற கவிஞர் தமிழன்பன் அவர்கள், என் வேண்டுகோளை ஏற்று சிறப்பான அணிந்துரை ஒன்றை வழங்கியுள்ளார். என் கட்டுரைகள் சங்க இலக்கிய ஆய்வுக்கான ஒரு திறப்பு என்று ஆய்வாளர்களுக்கு அன்பான முறையில் பரிந்துரை செய்கிறார். அவருக்கு என் மனம் நிறைந்த நன்றி.

என் கட்டுரைத் தொகுப்பை வெளியிடுவது, தனக்கு கிடைத்த வாய்ப்பு என்று, என் அருமை நண்பர். 'காவ்யா' திரு.சண்முகசுந்தரம் அவர்களைத் தவிர வேறு யாரால் இப்படிக் கூறமுடியும் என்று நினைத்து மருள்கிறேன். கட்டுரைத் தொகுப்பை அன்போடு ஏற்று வெளியிடும் சண்முகசுந்தரம் அவர்களுக்கும் அவரது துணைவியாருக்கும் நானும் என் குடும்பத்தாரும் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- ஞானி

# சங்க இலக்கியத்திற்கு ஒரு திறப்பு

## அணிந்துரை

- ஈரோடு தமிழன்பன்

தமிழ், செம்மொழி என இந்திய நடுவண் அரசின் ஆணை வழி ஏற்பின் சென்னையில், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டதன் தொடர்ச்சியில், தமிழகத்தில் பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், மதிக்கத்தக்க இலக்கிய அமைப்புகள் எனப் பலவும் செவ்வியல் காலத் தமிழ் இலக்கியங்கள் என வரையறுக்கப்பட்டவற்றை மையமாகக் கொண்ட ஆய்வுக் கருத்தரங்குகளால் புதிய எழுச்சியை ஏற்படுத்தி வருகின்றன. இத்தகைய கருத்தரங்குகளில் பங்குபெற்று அறிஞர் ஞானி வழங்கிய அழுத்தமான கட்டுரைகளைப் படித்துப் பயன்பெற்ற வாய்ப்பைப் பெருமைக்குரியதாக நான் கருதுகிறேன்.

சங்ககாலம் அல்லது செவ்வியல் தமிழ் இலக்கியக் காலம் என்னும் கி.மு. 250 முதல் கி.பி. 200 வரையிலான நானூற்றைம்பது ஆண்டுகளின் பரப்பில் தோன்றிய இலக்கியங்கள் எல்லாமே தொகுக்கப்பட்டுவிட்டன என்று நாம் கருத முடியாத நிலையில், கிடைத்தனவற்றையேனும் படிக்கும் முறையறிந்து தொடர்ந்து படித்து வந்திருக்கிறோம் என்றும் சொல்லிவிட முடியாது.

தொல்காப்பிய இலக்கண வழியிலும், தொல்காப்பிய உரையாசிரியர்கள் காட்டிய வழியிலும்தான். சங்க இலக்கியத்தை நமக்கு அறிமுகப்படுத்தியுள்ளனர், நமக்குக் கற்பித்தவர்கள். இவ்வாறன்றி சங்க இலக்கிய உரையாசிரியர்கள் பார்வையிலும் – பழந்தமிழ் இலக்கியங்களோடு நமக்குப் பழக்கம் உண்டு. இன்று, தொல்காப்பிய ஆணை வழிக்கு மாற்றாகச் சங்க இலக்கியத்தை மறுவாசிப்புச் செய்தால் என்ன என்கிற வினா எழுந்துள்ளது. அவ்வாறே உரையாசிரியர்கள் உதவி இல்லாமல் தொல்காப்பியப் பயிற்சி என்பது பற்றியும் எண்ணங்கள் இருக்கின்றன. உரையாசிரியர்கள் உதவியோடும் உதவியில்லாமலும் மொழியியல் அறிஞர்கள் தொல்காப்பியப் பயணம் மேற்கொண்டு வருவதைத் தமிழ் அறிவுலகம் அறியும்.

ஞானி அவர்களின் இக்கட்டுரைத் தொகுப்புக்குள் – இரண்டு கட்டுரைகள் மட்டுமே பதினென்கீழ்க்கணக்குப் பற்றியனவாக அமைந்துள்ளன. பதினென்கீழ்க் கணக்கு நூல்கள் எல்லாமே செவ்வியல் தமிழ் நூல்கள் என்ற பட்டியலில் இடம் பெறமுடியுமா என்கிற கேள்வி எழாமல் இல்லை. ஞானியின் பத்துக்கட்டுரைகள் சங்க இலக்கியத் தொடர்புடையனவாகவே உள்ளன. பாட்டும் தொகையுமான இரண்டனுள் தொகை பற்றிய – அதிலும் குறிப்பாகப் புறநானூற்றை மையம் கொண்ட கட்டுரைகளாகவே உள்ளன. காதல் அறம், பேசப்படுகிற இடங்களில், ஞானி தமிழின் அன்பின் ஐந்திணையை உயர்த்திப் பிடிக்கிறார். தமிழ்க் காதலில், களவு கற்பை நோக்கியதாக அமைய, வடவரின் காந்தருவம் கனவோடு முடிந்து விடுகிற தன்மையை ஞானி சிறப்பாகப் பதிவு செய்திருக்கிறார். தமிழரின் பேரறம் புறத்தில் விளங்குவது போல அகத்திலும் விளங்குகிறது என்கிற கோணத்தில் மட்டுமே – சங்க இலக்கியங்களில் உள்ள அகப்பாடல்களைத் தனது கட்டுரைகளில் ஞானி பயன்படுத்திக் கொள்கிறார்.

தனக்கே உரியதான, சமூக, வரலாற்று இயங்கியல் தளத்திலான பார்வையில் – சங்கப் படைப்புகளை ஞானி, மறுவாசிப்புப் புரிந்து அரிய உண்மைகளைக் கண்டெடுத்து ஒவ்வொரு கட்டுரையிலும் வழங்கியுள்ளார்: படிக்கிறவர்களுக்குப் புதிய புதிய காட்சிகள் கிடைக்கின்றன.

சங்க இலக்கியத்துள் இது தொல் பொதுமை இனக்குழுத் தலை எடுப்புக்காலம் – இது தனியுடைமை அரசு ஆதிக்கத் தலை எடுப்புக் காலம். இது தொல் பொதுமை இனக்குழுச் சமுதாயத் தகர்ப்புக்காலம் என்று உறுதிபட வரையறை செய்ய வரலாற்றின் உதவி நமக்குக் கிடைக்கவில்லை. எல்லைகளைத் துல்லியமாகக் கணக்கிட்டுக் கொள்ள எவ்வித வாய்ப்பும் அற்ற நிலையில் – சங்கப் பாடல்களில் இப்படியும் பார்ப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்கிற புதிய திறப்பை ஞானி நிகழ்த்தியுள்ளார். இத்திறப்புக் குறித்து ஆய்வாளர்கள் தொடர்ந்து விவாதிக்க முடியும். எடுத்துக்காட்டாக, "நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்ற புறநானூற்றுப்பாடலை எடுத்துக் கொண்டு ஞானி விளக்குவதை இங்குச் சுட்டலாம். நெல்லோடும் நீரோடும் மக்கள் நேரடியாகத் துய்ப்பும் தொடர்பும் பெற்றிருந்த காலம் ஒன்றிருந்தது. மக்களே அவற்றின் சொந்தக்காரர்கள். அவர்கள் விரும்பியாங்குச் சமத்துவ அடிப்படையில் பகிர்ந்து அவற்றைப் பயன்கொண்டனர்; பெருக்கினர்;

பேணினர். அவை மக்கட்கு உயிராக இருந்தன. இவ்வுறவுக்கு இடையில் எப்படி வேந்தர்கள் நுழைந்து, தரமில்லாமல் மக்கள் அவற்றை நுகரவோ, உரிமை கொண்டாடவோ முடியாத நிலையை ஏற்படுத்தினர். வேந்தர்கள் தயவு இல்லாமல் இன்றும் நடக்காது என்கிற நிலையில் அவர்கள் எப்படி உயிராக மாறி முக்கியத்துவம் பெற்றனர் என்கிற வினாக்களை ஞானி எழுப்புகிறார். இனக்குழுத் தலைவர்கள் பேணிய சமுதாயத்தில் பகிர்வும், சமத்துவமும் உயிராக இருந்தன. அரசு அதிகாரமும் தனியுடைமையும் தலை தூக்கிய காலத்தில் வேந்தர்களுக்கு ஏற்ப நிலைமைகள் மாற்றம் கண்டன.

கணியன் பூங்குன்றனாரின் "யாதும் ஊரே" பாடல் வழியாகவும், பக்குடுக்கை நன்கணியனாரின் "ஓரில் நெய்தல் கறங்க' பாடல் வழியாகவும் திரும்பத்திரும்ப இக்கட்டுரைகளில் சமூக இயல் அடிப்படையிலான வரலாற்று உண்மையாக ஞானி, தொல் – பொதுமை இனக்குழு வாழ்வையும், தனியுடைமை அரசு ஆதிக்கம் – அவ்வாழ்வைச் சிதைத்ததையும் எடுத்துரைக்கிறார். கூடவே தொல் பொதுமைச் சமுதாய விழுமியங்களின் மிச்ச சொச்சங்களை அறஉணர்வு படைத்த தமிழ்ச் சான்றோர் பேணிய நிலைமையும் – அவற்றைப் பாதுகாக்க முடியாத வாழ்வோடு முரணி – வாழ்வின் இறுதியை வரவழைத்துக் கொண்ட அவர்களின் அறத்திறப்பாடு விளங்கிய நிலைமையும் – பதிவாகியிருப்பதைச் சங்க இலக்கியங்களிலிருந்து ஞானி ஒளிபடர்ந்த காட்சிகளாகக் காட்டியுள்ளார்.

தமிழரின் மெய்யியல் குறித்த தேடுதலையும் திரட்டுதலையும் ஞானி இக்கட்டுரைகளில் நிகழ்த்தியுள்ளார். 'தமிழ் வாழ்வை உறுதியான தளத்தில் நிறுத்துவது நமக்கான தேவை என்பது உண்மையானால், தமிழ் வாழ்வுக்கு அடித்தளமாக இருக்க வேண்டிய மெய்யியல் குறித்த ஆய்வு நமக்கு தேவை' என்று சங்க இலக்கிய மெய்யியல் என்னும் தலைப்புள்ள கட்டுரையில் சுட்டிக்காட்டும் ஞானி, மெய்யியல் என்பதை வேதாந்த சித்தாந்தங்களோடோ, மாயாவாதம் சூனியவாதம் ஆகியவற்றோடோ, கடவுள், உயிர், பிறப்பு, வினை, வினைப்பயன், இறப்பு, மறுபிறப்பு, சுவர்க்கம், நரகம் என்பவற்றோடோ – தொடர்புபடுத்திச் சமயம், மதம் ஆகியவற்றின் தளத்தில் தேடித் திரட்டத் தேவையில்லை என்கிறார். அசலான வாழ்வியலிருந்து – அனுபவ ஞானங்களிலிருந்து – வடித்தெடுக்கப்படும் உண்மைகளே 'மெய்யியல்' என்கிற பார்வை ஞானியினுடையது. எனவே, சங்க இலக்கியத்துள் மார்க்சியப் பார்வையோடு

பயணம் செய்து தமிழரின் மெய்யியலைத் தொகுக்க முடியும் என்கிற ஞானி, 'தமிழருக்கு என்று மெய்யியல் உண்டா?' என்று வினாவுவோர்க்கும் விடையைச் சொல்லியிருக்கிறார். 'சங்க இலக்கியத்தில் படைப்பியக்கம்' என்கிற கட்டுரையிலும் ஞானியின் மெய்யியல் பார்வை, நான் யார்? என்னும் வினாவை எழுப்பி விடையைத் தேடுகிறது. பரிணாமம் என்ற உள்ளுறை ஆற்றல் மனிதனைத் தோற்றுவித்ததைக் குறிப்பிட்டுவிட்டு அந்த ஆற்றல் இயற்கையா? சக்தியா? இறைவனா? என்று மீண்டும் வினாக்கள் வழியாகப் பிரபஞ்சம் வரை நீளும் விடையை ஞானி தொடர்கிறார். எனினும் இவ்வினாக்களுக்கும், படைப்பியக்கத்துக்குமான இணைப்புச் சங்கிலி எங்குள்ளது? எத்தகையது? என்கிற வினாக்கள் உடன் தழைப்புகளாகத் தோன்றி நம் ஆய்வை ஆழப்படுத்தி விடுகின்றன.

பொதுவாக – உயிர், வேகம், இறைவன், விதி என்னும் இவை நான்கிற்கும் இடையே உள்ள உறவுநிலை, இவற்றுள் இறைவன் பெற்றிருக்கும் முதன்மையான இயக்குநிலை ஆகியவற்றைக் குறித்து வைதீகம் சார்ந்த மெய்யியல்கள் அக்கறை காட்ட, உயிர், உலகம், வாழ்க்கை, இவை மூன்றிற்கும் இடையே உள்ள உறவு இயக்கத் தன்மைகள் குறித்து, அவைதீக மெய்யியல்கள் ஆராய முற்பட்டன. சாங்கியம், பவுத்தம், சமணம் முதலியவற்றை இப்படிப்பட்ட மெய்யியல் போக்குகளாக – மெய்யியல் வரலாறு விளக்கும். ஞானியின் மெய்யியல் தேடலில் இவற்றின் சுவடுகள் தெளிவாகத் தென்படுகின்றன. எனவேதான், தன்னை அறிதல், தன்னை இழத்தல், வரலாறு, சமூகம், இயற்கை முதலியவற்றுள்ளே தன்னைக்காணுதல் – அதுவே பெருங்காட்சி (தரிசனம்) ஆதல் என்கிற பட நிலைகளை அவர் எடுத்துச் சொல்லவும் – இப்பெருங்காட்சி என்பதே படைப்பியக்கத்தின் உச்சம் என்று பிரகடனப்படுத்தவும் முடிகிறது.

தனக்குள் படைப்பியக்கத்தைக் கண்டவன் எல்லாவற்றிற்கும் விடுதலையாகி விடுகிறான். அதிகாரத்தையோ, பணத்தையோ பொருட்படுத்தி அவற்றுக்கு அவன் ஆசைப்படுத்துவதுமில்லை அடிமையாவதும் இல்லை. இத்தகைய மெய்யியல் சார் படைப்பியக்கக் கூறுகளே 'செல்வத்துப் பயனே ஈதல்' துய்ப்போம் என்னே தப்புந பலவே' என்றும், "இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது வல்லாங்கு வாழ்வதும் என்னாது நீயும் எல்லோர்க்கும் கொடுமதி மனை கிழவோயே" என்றும், பீடின் மன்னர் புகழ்ச்சி வேண்டி செய்யா கூறிக்கிளத்தல்

எய்யாதாகின்னு எம்சிறு செந்நாவே என்றும் – கட்டற்ற சுதந்திரம் பெருவெளியில் வெளிப்பட்டிருக்கின்றன. ஞானி, இத்தகைய பார்வையோடு சங்க இலக்கியத்தை அணுகியிருப்பதையே இக்கட்டுரைத் தொகுப்பில் பரவலாகக் காணப்படுகிற பொதுத்தன்மை என்று நாம் சொல்ல முடியும்.

“பழைமையும் எதிர்காலமும் பற்றிய கவலையோ, கவனமோ தேவையில்லை; நிகழ்காலமே போதுமானது என்கிற பின்நவீனத்துவவாதிகளிலிருந்தும் ஞானி மாறுபடுகிற இடம், ‘தமிழ் அறம்’ என்பதே தமிழ்ச் செம்மையின் அடையாளம், அதனைச் சங்க நூல்களிலிருந்தும் வள்ளுவத்திலிருந்தும் தமிழன் திரட்டிக் கொள்ளலாம் என்று அவர் விவாதிக்கிற இடம் என்று சொல்லலாம். எனினும் பின் நவீனத்துவத்தை முற்றிலுமாகப் புறக்கணிக்கிறவர் அல்லர் ஞானி என்பதையும், ‘விடுதலை’ என்பதை முதன்மையாகக் கொண்ட அதன் ஆக்கக் கூறுகளை ஆரத்தழுவுபவர் என்பதையும் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை எவரும் அறிவர்.

இக்கட்டுரைத் தொகுப்பில் காணப்படும் மற்றும் ஒரு பொதுத்தன்மையாக நாம் காண்பது கவிதை இயல் குறித்த ஞானியின் கருத்துத் தெறிப்புகள். ‘கவிதை என்பது மனிதனின் உள்ளூறுப்பு என்றும் உள்ளியக்கம்’ என்றும் கூறுகிற ஞானி, கவிஞன் எவ்வாறு இயங்குகிறான் அல்லது இயங்க வேண்டும் என்பதையும் சொல்லத் தவறவில்லை. ‘முரண்பட்ட உலகைத் தனக்குள் வைத்து ஏதாவது ஓர் அர்த்தத்தில் தன்னோடு இணைத்துக் கொள்கிறான். இயலுமானால் மாற்றுகிறான் என்று நுட்பமாகக் கவிதை இயலின் மீதான தனது கண்ணோட்டத்தை ஞானி பதிவு செய்கிறார். கவிதை வெறும் புலமைசார் தொழிலாக அல்லது செயற்பாடாகக் குறுகிவிடாமல் முரண்பாடுகளால் நிறைந்த உலகினின்றும் அந்நியமாகி விலகி விடாமல் வரலாற்றுக் கடமையாகத் தனக்குள்ள பொறுப்பை ஏற்பதன் மூலமே, தனது வெளிப்பாட்டுக்கான நியாயத்தைப் பெறமுடியும். இயலுமானால், படைப்பாளி மாற்ற வேண்டும்; இல்லாவிட்டால் கூட, மாற்றுகிற முயற்சியில் ஈடுபடுகிற சக்திகளுக்கு ஆதரவுக் கரமாக அவன் இருக்க வேண்டும். இப்படி இருந்தால் மட்டுமே அவனுடைய கவிதை புதைபடிமமாக மாறிவிடாமல், தொடரும் மக்கள் வாழ்வியக்கத்தோடு தன்னை இணைத்துக் கொண்டு காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ள முடியும்.

'தொல்காப்பியர் மனிதனிடமிருந்து கவிதை வெடித்து எழும் சூழல் பற்றிப் பேசுகிறார்' என்று குறிப்பிடும் ஞானி வாழ்வின் பரந்த எல்லைக்குள் இடம்பெறும் அனைத்து உரிப்பொருள்களையும் அவர் பேசவில்லை என்கிறார். இன்றைய உரிப்பொருள்களான நாட்டுப்பற்று, மொழிப்பற்று அரசியல், இறை நேயம் விடுதலை எல்லாமே தொல்காப்பிய நூற்பாவுக்குள் எப்படி இடம்பெற முடியும்? இலக்கியத்தின் எல்லையை இலக்கண ஆசிரியர்கள் குறைத்தனர் என்று குறைபட்டுக் கொள்கிற ஞானியின் கருத்தை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதில்லை. தொல்காப்பியர் காட்டும் எல்லையிலிருந்து – இன்றைய உரிப்பொருள்களை விரித்துக் கொள்ள எந்தத் தடையும் இல்லையே 'இந்தக் கோணத்திலேயே முதல் பொருள்களைக் கூடக் காலச் சூழலில் வைத்துக் கணிப்பது பொருத்தமாக இருக்கும். சிறுபொழுது, பெரும்பொழுது என்னும் காலப்பகுப்பு - சமுதாய, வரலாற்று உள்ளீடற்றவையாக உள்ள நிலையில், நாம் தொல் பொதுமைச் சமுதாயம், அடிமைச் சமுதாயம் – எனக் காலத்தை வரலாற்று இயங்கியலோடு பொருத்திப் பகுப்பதற்கு நமக்கு உரிமை உண்டு. அவ்வாறே, அறிவொளிக்காலம் – தொழிற்புரட்சிக்காலம், அறிவியல்காலம் என்றும், பழங்கற்காலம், புதுக்கற்காலம், வெண்கலக்காலம், இரும்புக்காலம் – என்று வரிசைப்பட்டுத் தொடரும் கூறுகளிலும் வரலாற்றை நாம் பார்க்கமுடியும். பார்த்திருக்கிறோம். ஆண்டின் பெரும்பொழுதுகள் – நாளின் சிறுபொழுதுகள் ஆகியவற்றில் மட்டுமே, முதற்பொருள்களில் ஒன்றாகிய காலத்தைக் குறுக்கிவிடத் தேவையில்லை. தமிழரின் திணைக்கோட்பாடுகள் குறித்த, மலையாளக் கவிஞரும், ஆங்கிலப் பேராசிரியருமான ஐயப்பப்பணிக்கரின் சிந்தனைகளை - இவ்விடத்தில் நான் நினைத்துக் கொள்கிறேன். இலக்கியம் தனது எல்லைகளை விரிவுபடுத்திக் கொள்ளும்போது, இலக்கணமும் அதற்கேற்ப வரிந்து கொள்கிறது – உரிமையாகப் படைப்பாளி எல்லைகளைத் தாண்டும்போது – இலக்கணக்காரன் நெகிழ்ச்சியாக விட்டுக் கொடுக்கிறான். ஒழிபியல், புறநடை, வழுவமைதி, விதிப்புக்கிளவி - என்றெல்லாம் இலக்கணக்காரன் குறிப்பிடுவதை – படைப்பாளியின் உரிமைகளை - அவன் மதிப்பதும் ஏற்பதுமாகிய செயலாகவே நாம் கருதலாம்.

படைப்பிலக்கியம் என்பது பல திசைகளில் பலவழிகளில் விரிவது – பலர் வழியாக வெளிப்படுவது. அதனைத் தொல்காப்பியம் என்ற ஒரு நூலில் அடக்கி விட முடியாது என்று ஞானி சரியாகவே சொல்கிறார் – பழையன கழிதலும், புதியன புகுதலும் – இலக்கணக்காரன் அதிகார

வரம்புகளை ஒட்டியவை அல்ல. இன்னும் சொல்வதெனில், வரம்புகட்டும் அதிகாரமையம் அன்று இலக்கணம். சமுதாயம், மொழி, படைப்பு இவற்றின் பரிமாணங்களையும் கவனித்துப் பதிவு செய்து, அவ்வக்காலத்தில் வெளிப்படுத்துவதே இலக்கணத்தின் முதன்மையான பொறுப்பு என்றும் நாம் கருதலாம்.

நவீன ஆய்வுநோக்கில், சங்க இலக்கியத்தைப் பார்ப்பதற்குச் சாளரம் திகழ்ந்து வைத்து ஞானி காட்டும் காட்சிகள் என்னை அறிவு நயப்பாடுகளிலும், வியப்பிலும் ஆழ்த்துகின்றன. நம்மை மீட்டுக் கொள்ளத் தேவைப்படும் நவீன காலப் பார்வை எதுவென்று ஞானி சான்றுகளோடு விளக்கியுள்ளார். இனியும் சங்கக் கவிதைகளைக் கதைவருணனைத் தொகுப்பு என்றோ, கூலிக்குக் கவிபாடிய அடிமைப் புலவர்களின் 'யாசகப்பறை' என்றோ தள்ளிவிட முடியாது. அரசு ஆதிக்கத்தால், அதிகார வெறியால், நாடிழந்த பாரிமகளிரின் துயரப்பாடல், ஞானியின் கருத்துப்படி, வரலாற்றால் வஞ்சிக்கப்பட்டு வீடிழந்தும் – நாடிழந்தும், சொந்தங்கள் இழந்தும் தவிக்கும், எஞ்சிப் போயிருக்கும் ஈழத்தமிழர் வாழ்வு வரை தொடர்ந்து அவர்களின் குருதியிலும், கண்ணீரிலும் வெதும்பிப் பெருகுவதை நாம் பார்க்கிறோம். அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில் என்னென்ன இருந்தன? எப்படி இருந்தோம்? இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவில் என்னென்ன இருக்கின்றன? எப்படி இருக்கிறோம்? இக்கேள்விகள் சங்ககாலத்தோடு ஓய்ந்துவிடவில்லை.

இதுவரையில் நீங்கள் கணியன் பூங்குன்றனாரின் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று தொடங்கும் பாடலை எப்படி எப்படியோ அணுகியிருப்பீர்கள். 'ஓரில் நெய்தல் கறங்க, ஓரில் ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப' என்று தொடங்கும் பக்குடுக்கை நன்கணியனார் பாடலுக்குள் உரையாசிரியர்களோடு உலாப்போய் நீங்கள் காட்சிகள் சிலவற்றைக் கண்டிருப்பீர்கள். ஆனால் அறிஞர் ஞானியோடு, இப்பாடல்களிலும், அவர்காட்டும் இன்னும் பல பாடல்களிலும் நீங்கள் பயணம் போய்ப்பாருங்கள். புதிய அர்த்தங்கள், புதிய விளக்கங்கள், புதிய வெளிச்சங்கள் உங்கள் அனுபவத்தின் அடுக்குகளில் புதிய அறிவு அணுக்களாய்ச் செறிவதை, சிலிப்பதை உணர்வீர்கள் என்று இத்தொகுப்பைக் கையில் எடுக்கும் தமிழ்ப் பொதுப்படிப்பு உலகத்தவர்க்கும் தேடலில் திளைக்கும் ஆய்வுலகத்திற்கும் நான் உறுதியளிக்கிறேன்...

# உள்ளடக்கம்

# 1. சங்க இலக்கியம் – ஆய்வு நோக்கு

1. சங்க இலக்கியங்களைக் கண்டெடுத்துத் தொகுத்து, சங்க இலக்கியத்தில் தமிழின் தொன்மை, பண்பாட்டு மேன்மை, மன்னர்கள், புலவர்கள், தனித்திறன், சங்க இலக்கியகாலம், சங்க இலக்கியத்தில் உவமைகள், மெய்ப்பாடு என்றெல்லாம் கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக ஆய்வுகள் நடத்தியதோடு சங்க இலக்கியம் தமிழனுக்கே உரிய தனிச்சொத்து என்றெல்லாம் நாம் பெருமைப்பட்டிருக்கிறோம். சங்க இலக்கியங்களில் காணப்படும் மக்களின் உலகியல் சார்பு, பொருண்மைக் கோட்பாடு, சங்ககாலத்தில் சமயம், சங்க இலக்கியத்தில் இயற்கையோடு மனிதன் கொண்டிருந்த உறவு முதலியவை குறித்தும் விரிவான ஆய்வு செய்திருக்கிறோம்.

தொல்காப்பியத்திற்கும், சங்க இலக்கியத்திற்கும் இடையில் காணப்படும் உறவுகள், உறவின்மை, சங்ககாலத்தில் பெண்பாற்புலவர்கள் குறித்தும் ஆய்வுகள் செய்தோம். இவ்வகை ஆய்வுகள் பகுப்புமுறை, தொகுப்பு முறை, வரலாறு மற்றும் காலப்பின்னணி குறித்த பார்வை என்று பலவகை நோக்கில் செய்யப்பட்டன. இவ்வகை ஆய்வின் நிறை, குறைகள் பற்றி இங்கு நாம் பேசுவதற்கில்லை. சங்க இலக்கிய ஆய்வுகள் தமிழ் அரசியலின் பண்பாட்டு வாழ்வின் பகுத்தறிவு முதலிய பார்வைகளின் பகுதியாகவும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டதில் வியப்பில்லை. இருபதாம் நூற்றாண்டில் இந்தியச் சூழலில் தமிழகம் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கான தேவை என்ற முறையில் சங்கஇலக்கியம் நமக்குப் பெரிதும் பயன்பட்டது. தமிழன் சமயப்பார்வைக்கு வசப்படவில்லை, தமிழனுக்கு சமயச்சார்பின்மை இயல்பான பண்பாக இருந்தது என்றெல்லாம் தற்காலத்துக்குத் தேவையான சமுதாய பார்வைக்கும் சங்க இலக்கிய ஆய்வுகள் பேருதவியாக இருந்தன. புலமையாளர்கள் சங்க இலக்கியத்திற்கான உரைகள் குறித்த ஆய்விலும் இவை குறித்த தொகுப்பிலும் பேரார்வத்துடன் ஈடுபட்டனர். சங்க இலக்கியம் ஒரு மாபெரும் புதையல் என்ற முறையில் இதுகுறித்த நுட்பமான ஆய்வுகள் தேவைப்பட்டன. இவ்வகை நுட்பமான ஆய்வுகளுக்கானத் தேவை இனியும் தொடரும் என்பதில் ஐயமில்லை.

2. சங்க இலக்கியம் குறித்த வாசிப்பும் ஆய்வுகளும் இவ்வாறு இருபதாம் நூற்றாண்டுச் சூழலில் நடைபெற்றன. 'தமிழ்' செம்மொழிதான் என்ற உணர்வு தமிழறிஞர் பலருக்கு இருந்தபோதிலும் இந்தியாவில் சமஸ்கிருதம் முதலிய

நான்கைந்து மொழிகளுக்கு அரசால் வழங்கப்பட்ட இந்தத் தகுதி தமிழுக்குக் கிட்டவில்லை என்பது நமக்குப் பெரும் வருத்தமாக இருந்தது. ஒரு நூற்றாண்டுக்கால அளவில் குரல் எழுப்பியும், போராடியும் இறுதியாக ஒரு குறிப்பிட்ட அரசியல் சூழலில் தமிழைச் செம்மொழியென இந்திய அரசு ஏற்றது. இந்த ஏற்பில் தொடர்ந்திருக்கும் குறைகள் நம்மைப் பெரிதும் வருத்துகின்றன எனினும் கிடைத்திருப்பது ஒரு பெருமை என்று நாம் திளைப்பதை விடவும் தமிழின் ஆற்றல் குறித்த ஆய்வுக்கு இது ஒரு பெரும் வாய்ப்பு என்ற முறையில் நம் பார்வை செல்ல வேண்டியிருக்கிறது. செம்மொழி என்று மெய்ப்பிப்பதற்கு சில/பல காரணிகளை நம்மவர் முன் வைக்கின்றனர். இவ்வகை காரணிகள் தனித்தனியானவை என்று சிலர் எடுத்துக் கொண்டு சங்க இலக்கியத்தை பகுப்பு முறை கொண்டு பார்க்கின்றனர். இந்நாள் வரை தொடரும் ஆய்வு முறையிலிருந்து இவ்வகை ஆய்வு வேறுபடவில்லை. இவ்வகை ஆய்வு சங்க இலக்கியத்தின் வழியே தமிழின் பேராற்றலை கண்டறிவதற்கான ஆய்வாகத் தோன்றவில்லை. அன்றியும் சங்க இலக்கியத்தின் அடிப்படைகளைச் செம்மொழி என்ற நோக்கில் தோண்டி எடுப்பதற்கான ஆய்வு முறையாகவும் இது இருக்கவில்லை. உலக அளவில் ஒப்புக்கொள்ளப்பட்ட செம்மொழிகள் என்ற தொகுப்பில் தமிழை இணைத்துப் பார்ப்பதற்கான தமிழின் தனிச்சிறப்புகள் இவ்வகை ஆய்வில் வெளிப்படவில்லை.

கிரேக்கம் முதலிய மொழிகளுக்கு நிகரான தொன்மை தமிழுக்கும் உண்டு. அதேபோல இலக்கிய வளம், இலக்கண வளம், பண்பாட்டு வளம் முதலியனவும் கிரேக்கத்துக்கு நிகராகவோ, சற்று கூடுதலாகவோ தமிழுக்கும் இருக்கமுடியும். தமிழ் தன்னளவில் வேறு எந்த மொழியின் ஆதரவின்றியும் தானே தோன்றித் தனித்து உயர்ந்ததோடு வேறு பல மொழிகளின் தோற்றத்திற்கும் துணையாக இருந்திருக்கிறது. இம்முறையிலும் செம்மொழி என்ற முறையில் தமிழின் தனித்தன்மையை நாம் சிறப்பித்துப் பேசத்தான் செய்கிறோம். செம்மொழி என்பது செவ்வியல் தன்மையுடையது. அதாவது தன்னளவில் மூலச்சிறப்பும் மொழி ஆளுமையும் செறிவான விழுமியங்களும் கொண்டது தமிழ் என்ற முறையிலும் நாம் பார்த்து வருகிறோம். இவ்வளவு தானா? இதற்கு மேலும் தமிழின் செவ்வியல் தன்மை குறித்து நமக்குச் சொல்ல ஏதேனும் உண்டா? என்றும் நமக்குள் கேட்டுக்கொள்கிறோம். இவ்வளவுதான் என்றால் தமிழின் பெருமை சொல்லுவதற்கான தகுதிகள் குறித்த ஆய்வில்தான் நாம் இன்னும் ஈடுபட்டிருக்கிறோம் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. பெருமையும், பெருமித உணர்வும் நமக்குள் என்ன ஆற்றலைத் தோற்றுவிக்க முடியும். நான் பெரியவன் என்ற உணர்வு நம்மைச் சிறுமைப்படுத்தவும் செய்யும்.

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இப்படிப் பெருமை, பெருமிதம் என்று பேசித் தற்செருக்குற்று, நமக்குள் ஆற்றல் இழந்து போலித்தன்மைகளை உண்மை என பூசிக்கொண்டு நம்மை நாமே பதவிக்கும் பணத்திற்கும் தொலைத்திருக்கிறோம். செம்மொழி என்ற பெருமை நம்மை மேலும் சிறுமைப்படுத்துவதற்கு வாய்ப்பாக மாறிவிடக்கூடாது. போலிப் பெருமைகள் பேசி மகிழ்பவர்கள் கையில் செம்மொழித்தமிழ் சிக்கி விடக்கூடாது.

3. தமிழ் எப்படிச் செம்மொழி ஆயிற்று? சங்க இலக்கியம் தான் தமிழின் முதல் பேரெழுச்சி, சங்க காலத்திற்கு முன்பும் தமிழ் வரலாறு எவ்வளவு தொன்மை உடையது என்ற போதிலும் தொடர்ந்து சில ஆயிரம் ஆண்டுகளேனும் பிறந்து தவழ்ந்து நடைபயின்று நாவசைத்து எழுந்து நின்று ஆற்றலும் அழகும் பெற்று நான் 'தமிழின் முதல் பெரும் எழுச்சி' என்று தலைநிமிர்ந்து நின்ற தமிழின் இலக்கியம் சங்க இலக்கியம். இப்படி நெடுங்கால பன்முக வளர்ச்சியைத் தனக்குள் ஒருமுகப்படுத்திக் கொண்டு ஒருங்கிணைந்ததாய் நிமிர்ந்து நின்றது தமிழ்ச்செம்மொழி. இத்தகைய பன்முக வளர்ச்சியை ஒருங்கிணைத்த காலம் சங்ககாலம்.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முடிய ஐநூறு ஆண்டுக்கால அளவில் தன்னை, தன் வளர்ச்சியின் பன்முக நெறிகளையும் ஒருங்கிணைத்துக் கொண்ட இலக்கியம் சங்க இலக்கியம். தன்னை ஒருமுகப்படுத்திக் கொள்வதற்குத் தேவைப்பட்ட காலஅளவு 500 ஆண்டுகள் என நாம் கணித்து வைத்திருக்கிறோம். இத்தகைய ஒருமுகப்பட்ட தோற்றத்திற்கு இதற்கு முன்னர் எவ்வளவு காலம் தேவைப்பட்டிருக்க வேண்டும் என்று நம்மால் கணித்து அறிய இயலவில்லை. குமரிக்கண்டம், ஹரப்பா என்றெல்லாம் தடையங்கள் நமக்குக் கிடைக்கின்றன.

குறிஞ்சி, முல்லை, நெய்தல் எனத் தொழில், வாழ்வியல் முயற்சிகள், நாகரிக வளர்ச்சிகள் முதலியவை தோன்றி வளர்ந்து மருதநில நாகரிகத்திற்குள் சங்ககாலம் தன்னை வளர்முகம் எனக் கண்டிருக்கிறது. குறிஞ்சி, முல்லை, நெய்தல் ஆகிய நாகரிகங்களை எந்த அளவு தனக்குள் உள்வாங்கிக் கொண்டது, எவ்வகைக் கூறுகளை உள்வாங்கிக் கொண்டது, எவற்றைத் தவிர்த்து, எவற்றை அழித்தது, எவற்றைப் புதியதாகப் படைத்துக் கொண்டது. என்றெல்லாம் நமக்குள் கேள்விகள் எழுகின்றன. ஒன்றின் ஆக்கத்திற்கு சில அழிவுகளும் காரணம் ஆக முடியும். ஆக்கம் என்பது தன்னைப் புதியதாக படைத்துக் கொள்வதும் ஆகும். எந்த ஒரு ஆக்கத்தினுள்ளும் முரண்களுக்கு இடமுண்டு. முரண்பாடுகள் இல்லாமல் ஆக்கமும் இல்லை. முரண்பாடுகளின் மோதலில்

ஒன்று அழிந்து வேறொன்று தோன்றவும் முடியும். இவையெல்லாம் வரலாற்று இயக்கத்தின் பொதுவிதிகள் எனப் பார்க்க முடியும். மருத நில நாகரிகம் சங்க காலத்தின் உச்சம் என வைத்துக் கொண்டால் இந்த உச்ச நிலைக்குள் இயங்குவன எவை என்றும் நாம் பார்க்க வேண்டியிருக்கும். இந்த ஆய்வைப் பிறகு தொடரலாம்.

இப்பொழுது சங்க இலக்கியத்தின் தோற்றக் காலத்திற்குள் நாம் கவனம் செலுத்தலாம். சுருக்கமாகச் சொல்வதென்றால் சங்ககாலத்திற்கு முன்னரும், சங்க காலத்தின் தொடக்க காலத்திலும் நிலவிய இனக்குழுச் சமூகம் மெல்ல மெல்ல மறைந்து தனியுடைமையும், அரசதிகாரமும் வலுப் பெற்றது என்பதை நெடுங்கால சங்க இலக்கியத்தின் வழியில் நாம் காண்கிறோம். பாரி முதலிய வேளிர்கள் மறைந்து, வேந்தர்கள் சங்ககாலத்தின் இறுதியில் முன்நிலைக்கு வருகின்றனர். இனக்குழுச் சமூகத்தை இழந்துவிட முடியாது என்ற முறையில் பாரி முதலியவர்களோடு இணைந்து வேந்தர்களுக்கு எதிராகப் போரிட்டு மக்கள் வீரத்தோடு மடிந்த கதையை புறநானூறு தனக்குள் பதிவு செய்து வைத்திருக்கிறது. இனக்குழுச் சமூகத்தின் காப்புக்காக மகளிர் உறுதியோடு நின்றனர். வீரர்கள் போராடி மடிந்தனர். பாரி முதலியவர்கள் அழிந்த நிலையில் பாணர், விறலியர் முதலிய கலைஞர்களுக்குப் பாதுகாப்பில்லை. பழுமரம் தேடி அலையும் பறவைகளைப் போல இவர்கள் நாடெல்லாம் ஆதரவு தேடி அலைந்தனர். இனக்குழுச் சமூகத்தின் உயர்வகையான விழுமியங்களை, அறஉணர்வு முதலியவற்றைத் தமக்குள் தக்க வைத்துக்கொள்ள போராடினர் தமிழ்ச் சான்றோர். வேந்தர் எனினும் அவர் முகத்தில், அவர் தவறு செய்த போது அச்சம் இல்லாமல் அறம் கூறினர் இந்தச் சான்றோர். வாழ்வு பெரிதன்று இவர்கள் தம்மைச் சிறுமைப்படுத்திக் கொள்ளவில்லை. மன்னர்களிடம் ஆதரவு தேடியவராய் அலைந்த நிலையிலும் இவர்கள் தன்மானத்தை இழந்து விடவில்லை. மக்கள் சார்பில் இவர்கள் மன்னரோடு வாதிட்டனர். அரசன் செய்த தவறுகளைத் தட்டிக்கேட்டனர். புகழுக்காக உயிர் வழங்குவதைப் போற்றினர். மேலுலகம் உண்டு என நம்பி இவர்கள் உலகியல் வாழ்வின் மேன்மையைக் குறைத்துப் பேசவில்லை. இவர்களுக்கு இல்லறமே நல்லறம். தனியுடைமை குலப்பெருமை முதலியவை ஆதிக்கம் பெற்றுவரும் சூழலில் அதுவரையில் மக்கள் மத்தியில் நிலவிய சமத்துவம் தகர்வதை இவர்கள் ஏற்கவில்லை. களவு மணத்திற்கு வாய்ப்பு குறைந்த நிலையிலும் களவு மணத்தையே இவர்கள் வற்புறுத்தினர். களவிலிருந்தே கற்பென்ற நேர்பாதைதான் இவர்கள் வற்புறுத்திய நெறி. காதலன் அங்கும் மிங்கும் என அலையலாம். அவனை ஒரு மையத்தில் நிறுத்தும் உணர்வுடையவர் காதலி.

இவள் அறத்தோடு நிற்கிறாள். காதலன்தான் தனக்கு கணவன். இன்னொருவன் எத்தகையவன் ஆகினும் அவனோடு எனக்கு வாழ்வில்லை. இதுதான் அறம். கபிலர் முன்நிறுத்திய தமிழ் அறம். இத்தகைய அற உணர்வுதான் இவளுக்குள்ளிருந்து காதலைத் தன்னோடு கட்டிப்போடுகிறது. காம நுகர்வுக்காக அலைபவன் காதலன். அவனது காமத்தைக் கட்டுப்படுத்துபவள் தலைவி. இல்லறமே நல்லறம் என்பவள் பொருளை விட அன்பே பெரிது என்பவள். களவு வாழ்விலும் சரி, கற்பு வாழ்விலும் சரி இந்த அறத்திலிருந்து தலைவி சற்றும் பிறழ்வதில்லை. பரத்தையோடு உனக்கு என்ன உறவு என்று இவள் கேட்கிறாள். பரத்தையிடமிருந்து இவனைப் பிரித்துத் தன்னோடு இணைத்துக் கொள்கிறாள். ஒரு வகையில் அன்பின் ஐந்திணை அனைத்திலும் மையமாக இருப்பது இந்த அறம்.

அகத்திற்கு மட்டுமல்லாமல் புறத்திற்கும் இந்த அறம்தான் மையமாக இருக்கவேண்டும். தற்காப்புபோர் இந்த அறத்தின் சார்புடையது. உலகம் தனக்கு உரிமையாக வேண்டும் என்று படை நடத்திச் சென்று நகரங்களை, நாடுகளை அழிப்பது அறமாக முடியாது. இப்படிச் செய்தவர்கள் வெறிபிடித்த வேந்தர்கள். இவர்களைத் தமிழ்ச்சான்றோர் ஏற்பதற்கில்லை. வெட்சி முதலிய அனைத்துத் திணைகளையும் அறம் என்ற உணர்வு கொண்டே உரசிப்பார்க்க வேண்டும். பாரி தமிழன் என்றால் பாரியை அழித்தவனை நாம் எப்படித் தமிழனென்று கொண்டாட முடியும்? ஆனால் காலம் மாறுகிறது. போர் வேந்தர்களைப் போற்றிப்பாடும் புலவர்களும் வந்து விட்டனர். அரசனாயினும், வேட்டுவனாயினும் உண்பது நாழி உடுப்பவை இரண்டு, என்ற வாழ்வு மாறுகிறது. செல்வத்துப் பயன் ஈதல் என்ற அறநெறி தவறி எத்தகைய பண்புகளை இழக்க நேரினும் செல்வம் பெரிது என்னும் போக்கும் வந்து விடுகிறது. அண்ணனைத் துரத்தும் தம்பி வந்து விட்டான். தந்தைக்கு எதிராகப் படை நடத்துபவனும் வந்து விட்டான். முன்னை உலகம் இப்பொழுது இல்லை.

உலகம் இனியதாக இல்லை. இன்னாததாக மாறிவிட்டது. இவற்றுக்கிடையில் நல்லது எது என இனித் தேடியாக வேண்டும். மன்னர்களை மறுக்க முடியாது. உலகத்தோடு ஒத்து வாழ்தலும் தேவை. இல்லறமும் இனி இனியதாக இல்லை. இல்லறத்தைத் துறப்பதும் ஒருவகையில் தேவைதான். பிறவி துன்பமாகிறது. மனிதவாழ்வின் எல்லைகள் சுருங்கி வருகின்றன. வாழ்வுக்குள்ளிருந்து வெளியேறுவதும் நல்லதே. மேலுலகம் கவர்ச்சியாக இருக்கிறது. புலன்களைக் கட்டுப்படுத்துவதும் தேவை. தெய்வத்தைச் சிலர் அழைக்கின்றனர். நகரங்கள், தொழில் பெருக்கம், நெடும் பயணங்கள்,

பெரும்படையெடுப்புகள், நாடுகள் அழிவு என்றெல்லாம் நடைபெறுகின்றன. வேந்தர்களுக்கு வெற்றி வேண்டும். யாகம் செய்தால் வெற்றிக்கு வாய்ப்புண்டு. பார்ப்பனர்களை இதற்காக அழைத்துக் கொள்கின்றார்கள். இப்பொழுது சங்ககாலம் முடிவுக்கு வருகின்றது. சங்க இலக்கியமும் முடிவுக்கு வருகிறது. இனக்குழுச் சமூகத்தில் தொடங்கிய இனக்குழுச்சமூகத்தின் வாழ்வியல் மேன்மைகள் மெல்ல மெல்லத் தகர்ந்து உடமை மற்றும் அரசு சமூகத்திற்குள், மருதநில நாகரீகத்தின் உச்சத்திற்குள் செல்லும்போது முன்னைய மரியாதைக்குரிய தமிழ்வாழ்வு தடம்புரளுகிறது. முன்னைய சமூகத்தைத் தமக்கு உயிரெனக்கொண்டவர்கள் வடக்கிருந்து உயிர் துறக்கின்றனர். பாணர்களும், விறலியர்களும் பரத்தையர் வீடுகளில் தங்குகின்றனர். புதிய சமூகத்தின் அறம் என்பது வன்முறையாக, அதிகாரமாக, இச்சகம் பேசுவோருக்கு நன்கொடையாக மாறுகிறது. மெல்ல மெல்ல சமூகத்திற்குள் சமயம் நுழைகிறது. உலகியல் வாழ்வில் முன்னர் உறுதியாக நின்றவன் இப்பொழுது மேலுலக வாழ்வைக் கவர்ச்சியாகக் கருதுகிறான். இவனுக்குள்ளும் தமிழன் வாழ்கிறான். முன்னைய அறத்தின் உறுதி இவனுக்குள் தகர்ந்து கொண்டிருக்கிறது. இவனை நிமிர்த்த வள்ளுவரும் இளங்கோவும் இனி வரவேண்டும். சமணர்கள் வந்து இவனைத் திருத்த வேண்டும்.

4. செம்மொழி எனத் தமிழை அடையாளம் காண்பதற்கான ஆற்றல்மிக்க முதன்மையான கூறு, தமிழறம் என்ற முடிவுக்கு நாம் வரமுடியும். சங்ககால வாழ்வின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் தமிழறம் என்பதை நாம் தொகுத்துக்கொள்ள முடியும். சங்ககால இனக்குழுச் சமூக அழிவிலிருந்து உடைமைச் சமூகத்திற்கு மாறிக்கொண்டிருக்கிற காலம் என்பதனுள் முரண்பட்ட வரலாற்று இயக்கத்தை நாம் காண்கிறோம். உடைமைச் சமூகம், அரசதிகாரம் உடைமைப் பெருக்கம், வணிகம், நகர நாகரிகம், படை வலிமை, படையெடுப்பு, ஆகியவற்றைத் தனக்கு உள்ளுறுப்புகளாகக் கொண்டு இயங்கும் சமூகம் இனக்குழுச் சமூகத்தின் இயல்புகளிலிருந்து தன்னைத் தொடர்ந்து மாற்றிக்கொண்டும், இனக்குழுச் சமூகத்தின் மேன்மைகளை மறுத்துக்கொண்டும் நாகரிக வளர்ச்சிக்குள், முரண்பாடுகளோடு தன்னை உருவாக்கிக் கொண்டிருக்கிற சமூகம். முல்லை நிலத்தையும், நெய்தல் நிலத்தையும் மெல்லமெல்லத் தனக்குள் இந்தச்சமூகம் உள்வாங்கிக் கொள்ளும். குறிஞ்சி நிலத்து வேளிர்களை இந்த ஆதிக்கச் சமூகம், இயலுமானால் உள்வாங்கிக் கொள்ளும். இயலாத போது அழித்தொழிக்கும்.

இனக்குழுச் சமூகத்தின் வாழ்வியல் மேன்மைகளைத் தனக்குள் உறுதியாக பற்றிக்கொண்ட தமிழ்ச் சான்றோர்கள் இந்தப் புதிய சமூகத்தை, புரிந்துகொண்ட அளவில் மறுக்கத்தான் செய்வார்கள். புரிந்து கொள்ளாத நிலையில் தயக்கத்தோடு, ஏற்பார்கள். "நான்குடன் மாண்டதாயினும் அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" என்றுதான் இவர்களால் அரசனுக்கு அறம் உரைக்க முடியும். புதிய சமூகத்தை ஓரளவுக்கேனும் ஏற்றுக்கொள்கிற சான்றோர்களைப் பார்த்து "நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்" என்றுதான் இவர்கள் அறம் உரைக்க முடியும். உலகம் முழுவதையும் தனக்கென உரிமைப்படுத்திக் கொள்கிற மன்னன் என்பவனுக்கும் காட்டில் விலங்குகளை வேட்டையாடும் வேட்டுவனுக்கும் "உண்பது நாழி, உடுப்பவை இரண்டு" என்பதைக் காட்டிலும் வேறு என்ன வேற்றுமை வந்து விடக்கூடும்? செல்வத்தையும், அதிகாரத்தையும் கூடுதலாகச் சேர்க்கும் அளவுக்கு தவறுகளைத்தான் உங்களால் பெருக்க முடியும் என்று தான் இவர்களைப் பார்த்துப் புலவர்கள் கேட்கமுடியும்.

புதியதாகத் திடீரென தோன்றிய மன்னர்கள் ஒரு சிலர் மட்டுமில்லை. கடற்கரை மணலைக் காட்டிலும் எண்ணிக்கையில் மிகுந்த அளவுக்குப் புதியவர்கள் வந்து தங்களை மன்னர் எனக் கூறிக் கொண்டார்கள். ஒருவரை ஒருவர் மாய்த்தார்கள். ஆதிக்கம் என்றும் அரசு என்றும் பேசிய இவர்கள் எல்லாம் மண்ணோடு மண்ணாக விரைவில் போனார்கள். இவர்கள் எதைத் தமக்கென வைத்து விட்டுச் சென்றார்கள்? என்றும் ஒரு புலவர் கேட்கின்றார்கள். அரசதிகாரத்தை நிலை நிறுத்துவதற்காக ஒரு இளம் பெண்ணைக் கொன்ற நன்னனை மட்டுமல்லாமல், அவன் வழிவந்த எவனையும் புலவர்கள் பாட மறுத்தார்கள். கரிகாலன் பெருமன்னன் என்ற போதிலும் அவனிடம் தோற்று புறப்புண்ணுக்கு நாணி மடிந்த சேரலாதனையே நல்லவன் என்றும் வீரன் என்றும் ஒரு பெண்பாற்புலவர் பாடினார். இவ்வாறெல்லாம் ஆற்றல் மிகுந்த கவிதைகளை நமக்கு விட்டுச் சென்ற சங்ககால கவிஞர்கள் நம் நெஞ்சில் இன்றும் வாழ்கிறார்கள்.

அவ்வையும், கபிலரும், கணியன் பூங்குன்றனும், இளம்பெருவழுதியும், கோவூர்க்கிழாரும் நம் நெஞ்சில் தமிழறத்தை நிலைநிறுத்தியவர்கள். "யாதும் ஊரே யாவரும் கேளீர்" "உண்டால் அம்ம இவ்வுலகம்" "எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" இனிப் பாடுநரும் இல்லை. பாடுநர்க்கு ஒன்று ஈகுநரும் இல்லை. இப்படி நூற்றுக்கணக்கான வரிகளை நம்மால் இன்றும் மறப்பதற்கில்லை. இத்தகைய நினைவிலிருந்துதான் நாம் இன்றும் கேட்கிறோம்.

பாரியைத் தமிழன் என்று கொண்டாடுகிறோம். பாரியைக் கொன்றவர்களைத் தமிழரெனக் கொண்டு பாராட்ட முடியவில்லை. பல நூறு யாகங்களைச் செய்த முதுகுடுமிப்பெருவழுதியை நம்மால் பாராட்ட முடியாது. நகரங்களையும் குளங்களையும் நாசமாக்கிய வஞ்சிமன்னர்களை நம்மால் மதிக்க முடியாது. காதலில் உள்ளம் ஒன்றுபட்ட தலைவனுக்கும் தலைவிக்கும் குறுக்கே வந்த எவரையும் நம்மால் ஏற்க முடியாது.

இப்படிக் காலந்தோறும் தொடர்வதுதான் தமிழறம். 'கிடைப்பது சிறிதென்றாலும் எல்லோருக்கும் கொடு' என்ற பெருஞ்சித்திரனார் தமிழறத்தின் உரம் பெற்றவர். இனியும் இந்த உடைமைச் சமூகத்தில் உயிரோடு வாழ்வது நமக்கு மாண்பில்லை என்று கோப்பெருஞ் சோழனோடு வடக்கிருந்து உயிர்நீத்த பிசிராந்தையார் முதலிய தமிழ்ச்சான்றோர் இன்றும் நம் வணக்கத்திற்குரியோர். கடையேழு வள்ளல்கள் என்று பின்னாளில் பெயர் பெற்ற இனக்குழு சமூகத்தின் தலைவர்களைத் தமிழ்ச்சமூகம் என்றைக்கும் மறக்க இயலாது. முல்லைக்குத் தேர் ஈந்தவனையும், மயிலுக்குப் போர்வை நல்கியவனையும் மடவர் என்று நம்மவர் இகழவில்லை. வறியவர்க்கு, எளியவர்க்கு, தம்மிடம் உள்ள எதனையும், உயிரையும் ஈவது சான்றோரியல்.

சங்ககாலத்தில் அரசதிகாரத்தைத் தமக்குள் திரட்டிக்கொள்கிற மன்னர்களுக்கு தம்மால் இயலுமானால் கோவூர்கிழார் முதலிய சான்றோர்கள் அறம் கூறித் திருத்த முயன்றனர். திருத்த இயலாத நிலையில் சாடியிருப்பார்கள் எதிர்த்துக் கலவரம் செய்தார்களா? என்று கூற இயலவில்லை. சங்ககாலச் சமூகத்தை அடுத்து வந்த வள்ளுவரும், இளங்கோவும், சாத்தனாரும் அறம் தவறிய மன்னர்களைக் கடுமையாகச் சாடவே செய்தனர். அரசனின் செல்வத்தை அல்லல் பட்டு அழுதவர் கண்ணீர் அழிக்கும் என்றார் வள்ளுவர். மக்களைத் துன்புறுத்தி வரி வாங்குபவனை வழிப்பறி கள்வன் என்று சாடினார்.

அறம் தவறிய பாண்டியனை கண்ணகி அழித்த கதையை இளங்கோ பாடினார். மணிமேகலையை அவள் விருப்பத்திற்கு மாறாக கைக்கொள்ள முனைந்த இளவரசனைக் கொல்வது சரி என்றார் சாத்தனார். இவர்களும் சங்ககாலத்தில் நாம் கண்ட தமிழறத்தை மேலும் வலுப்படுத்தியவர்கள். சங்ககாலத்தில் தொடங்கி வளர்ந்து வந்த சமூக ஏற்றத்தாழ்வுகளை வள்ளுவர் ஏற்கவில்லை. "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்ற வள்ளுவர் சாதியால் மனிதன் வேறுபடுத்தப் படுவதை மறுக்கவே செய்தார். தமிழ்ச்சமூக வாழ்வுக்குள் நுழைந்து மக்களின் உலகியல் சார்ந்த அறிவை மயக்கி, அவர்களை மண்ணுலக வாழ்நெறியிலிருந்து மாற்றி, துறவு மற்றும் மேலுலகச் சார்பிற்குத் தள்ளியவர்களை வள்ளுவர் மறுத்தார்.

மனிதர்களுக்குள் தெய்வச் சார்பைக் கண்டு வள்ளுவர் போற்றினார். விதியை மனிதனால் வெல்ல முடியும் என்றார். சங்ககாலச் சமூகத்தின் இல்லற வாழ்வைச் சீர்குலைத்த பரத்தமையைச் சாத்தனார் மறுத்தார். தவம் என்பது மழித்தலும், நீட்டலுமான பொய்த்தவ வேடமாக இருக்க முடியாது, உற்ற நோய் பொறுத்தலும் பிற உயிர்களுக்கு ஊறு செய்யாமையுமே உண்மைத் தவமாக இருக்கமுடியும் என்றார் வள்ளுவர். சடங்குகள் சிலவற்றைச் செய்தால் பிரிந்த கணவன் தன்னை வந்து சேர்வான் என்று ஒரு பார்ப்பனப் பெண் கூறிய அறிவுரையைப் பீடு அன்று என்று கண்ணகி மறுத்ததாக இளங்கோ அறம் கூறினார். பன்னிரண்டு ஆண்டுக்கொருமுறை பழுக்கும் நாவற்கனிக்காக அந்த நாவல் மரத்தனடியில் தவம் செய்து காத்திருந்த விருச்சிகனைச் சாத்தனார் சாடினார்.

இப்படித் தமிழறத்தின் வீச்சுக்களைச் சங்க இலக்கியத்தினுள்ளும் சங்ககாலத்தை அடுத்து வந்த சான்றோர்களுக்குள்ளும் நாம் காண்கிறோம். இத்தகைய தமிழ் அறச்சார்பையே இன்றும் நாம் போற்றுகிறோம். இந்த அறத்திற்கு இன்று நாம் கொடுத்திருக்கிற பெயர் சமத்துவம், மற்றும் சமதர்மம். தமிழறம் என்ற இந்த முதன்மையான கூறு செழித்திருக்கிற தமிழைத்தான் செம்மொழி என நாம் கொண்டாடுகிறோம்.

5. சங்க இலக்கியத்தைச் செவ்வியல் இலக்கியம் என்று பொருள்படுத்தும் முறையில் 20/21ம் நூற்றாண்டுச் சூழலில் உலகமயமாதல் முதலிய நெருக்கடிகள் நமக்குள்ளும் வெளியிலும் சூழ்ந்துள்ள நிலையில் பேசுகிறோம். எவ்வகை ஆதிக்கத்தோடும் ஒத்தியங்குவது நம் தமிழ்ச்சமூகத்தை அழிக்கவே செய்யும். சமத்துவம், சமதர்மம் என்பதைத் தவிர நம்மையும் நம் சமூகத்தையும் காத்துக் கொள்ள வேறு நெறியில்லை. இத்தகைய நெறியை நமக்குள் வளர்த்துக் கொள்ளும் முறையில்தான் சங்கஇலக்கியம் குறித்தும், சங்கஇலக்கியம் செவ்வியல் இலக்கியம் என்றும் நாம் பொருள்படுத்துகிறோம் சங்ககால வாழ்வுக்குள்ளும் தமிழ்ச்சான்றோரோடுதான் நம்மை இணைத்துக் கொண்டு பேசுகிறோம். சங்கஇலக்கியம் தமிழ்மக்களைச் சாதி என்றும் மதம் என்றும் கூறுபோடவில்லை.

சங்ககாலத்திற்குள் முற்பட்டுவரும் ஆதிக்கங்களோடும் நமக்கும் உடன்பாடில்லை. உண்மையில் இந்தியச் சூழலில் தமிழைச் செம்மொழியென நாம் மதித்துப் பேசும் பொழுது இந்திய நாகரிகத்தில், இந்திய சமூகத்தில் நமக்குள்ள இடம், நாம் பெற வேண்டிய இடம் எது? என்ற கேள்வியோடும்தான் நாம் பேசுகிறோம். வடமொழிச் சார்பில் சொல்லப்படும் வருணமுறை நமக்கு எந்தவகையிலும் உடன்பாடில்லை. வருணமுறையை இந்திய சமூகத்தின் அமைதிக்கும் மேன்மைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் எதிரான முறையென்றுதான்

நம்மால் கணிக்க முடியும். அன்றியும் இந்திய நாகரிகம் என்று நெடுங்கால வரலாற்று நோக்கில் நாம் பார்க்கும் போதும் ஆரியத்திற்கு முற்பட்டது தமிழர் நாகரிகம் என்றும், இந்திய நாகரிகம் என்று சொல்லப்படும் அனைத்துக் கூறுகளும் - பொருளியல் - வேளாண்மை - அறிவியல் - மருத்துவம் - ஆட்சியியல் - கட்டிடக்கலை - இசைக்கலை - கணிதவியல் - வானவியல் - கால்நடை வளர்ப்பு - மொழியியல் - முதலிய அனைத்துக் கூறுகளும் தமிழ் நாகரிகத்தின் ஆக்கங்களே என நம்மால் உறுதியாகச் சொல்ல முடியும். இவையனைத்தின் மீதும் ஆரிய நாகரிகம் தன் ஆளுகையை விரித்தன் மூலம் தமிழ் நாகரிகத்தின் ஆளுமையை மறைத்தது அல்லது சிதைத்தது என்றுதான் நாம் இன்று காண்கிறோம். இத்தகைய சூழலில்தான் இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக இந்தியாவில் ஏற்றத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கும் வடமொழியாளரிடம் எப்படி இந்த மேன்மை உங்களுக்கு வந்தது என்ற கேள்வியைத் தமிழின் சார்பிலிருந்து இப்பொழுது நாம் எழுப்புகிறோம். செம்மொழி என்று ஏற்றுக் கொள்ளப்பட்ட பாளியோடும், பிராகிருதத்தோடும் நமக்கு எவ்வித முரணும் இல்லை.

அன்றியும் வடமொழியின் வாழ்வுக்குத் தமிழிடமிருந்து வடமொழி எடுத்துக் கொண்ட ஆக்கங்கள் குறித்தும் நாம் கேள்வி எழுப்புகிறோம். இந்த உறவில் பகைமையை கொண்டு வந்தவர் வடமொழிச் சார்பினர் தாம் என்ற உணர்வோடும் நாம் பேசுகிறோம். இப்படிப் பேசுவதற்கான வாய்ப்பைத் தமிழைச் செம்மொழி என்று இந்திய அரசும் ஏற்றுக்கொண்டதையடுத்து நாம் உறுதியாகக் கேட்கிறோம். இப்படிக் கேட்கும் பொழுதே இன்றைய தமிழ்ச் சமூகத்தினுள்ளும் வடமொழிக்கு அனுசரணையாக, தமிழையும் தமிழ் நாகரிகத்தையும் தாழ்த்தியவர்களுக்கு எதிராகவும்தான் இந்தக் கேள்விகளை நாம் எழுப்புகிறோம்.

தமிழ் வாழ்வுக்குள் ஏற்றத்தாழ்வுக்கு எந்த வகையிலும் இடமில்லை என்ற உணர்வோடும்தான் பேசுகிறோம். தமிழ் மக்களின் வாழ்வுக்கு ஆதாரமான வரலாற்றையும் கல்வி மருத்துவம் முதலியவற்றையும், நீர்நிலைகள், நிலம், பொருளியல் ஆட்சி முதலியவற்றையும் இனியும் அந்நியருக்கும், பிறருக்கும் விட்டுக்கொடுக்க முடியாது என்ற உணர்வோடும்தான் பேசுகிறோம். இவ்வாறெல்லாம் பேசுவதற்கு சங்கத்தமிழ்ச்சான்றோர்களும் வள்ளுவர், இளங்கோ முதலியவர்களும் நமக்குள்ளிருந்து நமக்கு உயிர்ப்பைத் தருகிறார்கள் என்ற உணர்வோடும்தான் பேசுகிறோம். இவர்களுக்கு நாம் இரண்டகம் செய்யமுடியாது. தமிழ் மொழியின் ஆக்கத்தை எல்லா வகைகளிலும் இன்று நாம் முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

தமிழைச் செம்மொழியென நாம் உணர்வதன் மூலம் நமக்குள் ஏற்படும் தமிழ் உணர்வின் எழுச்சியோடுதான் இப்படிப் பேசுகிறோம். நம் கால

வரலாற்றையும், நெருக்கடிகளையும் பற்றிய உணர்வோடுதான் பேசுகிறோம். சங்க இலக்கியத்தை வெறும் இலக்கியச் சுவைக்காக தமிழன் தற்பெருமை கொள்வதற்காக, சங்கஇலக்கியத்தில் உவமை, படிமம் என்றெல்லாம் குறிக்கிப் பேசுவதற்கு எதிராக, சங்கஇலக்கியத்தின் உள் ஆழத்திலிருந்து, சங்கஇலக்கியத்தின் பல்வேறு கூறுகளை, ஒருங்கிணைத்துப்பார்த்து சங்க இலக்கியத்தினுள் செயல்படும் கவித்துவத்தோடு ஒன்றினைந்து நாம் இப்படிப் பேசுகிறோம். சங்க இலக்கியத்தைத் தம்பதவி, பெருமை, மேடைப் பேச்சு, நுனிப்புல் மேயும் பகட்டான ஆய்வு முதலியவற்றைச் செய்வதன்மூலம் சிறுமைப்படுத்து- வோர்க்கு எதிராகவும் தான் பேசுகிறோம்.

6. மேலும் ஒன்றை இப்பொழுதே சொல்லிக்கொள்கிறோம். இருபதாம் நூற்றாண்டு வரலாற்றுச் சூழலில்தான் நாம் சங்க இலக்கியத்தைக் கண்டெடுத்தோம். உலக வரலாற்றில் அறிவு மறுமலர்ச்சி மக்களாட்சியின் வெற்றி, சமதர்மத்தின் எழுச்சி, குடியரசுக்கோட்பாடு முதலியனவெல்லாம் இரண்டு/மூன்று நூற்றாண்டுக்குமேல் வளர்ச்சி பெற்ற நிலையில் - இந்தியாவின் விடுதலைப் போராட்டச்சூழலில் - இவற்றையெல்லாம் உட்கொண்ட நிலையில்தான் - இனியும் நமக்கு சாதி மதங்களின் ஆளுமை தேவையில்லை, மன்னராட்சி தேவையில்லை, இனிமக்கள் தான் வரலாற்றை உருவாக்க முடியும் என்ற உணர்வுகள் எல்லாம் ஏற்பட்ட சூழலில்தான் - நாம் சங்க இலக்கியத்தை ஆராய்கிறோம். சிந்துவெளி நாகரிகத்தின் மூலம் தமிழ் நாகரிகத்தின் தொன்மையை - அறிஞர் கால்டுவெல் மூலம் தமிழின் தனித்தன்மையை - ஹிராஸ் பாதிரியார் மூலம் திராவிட நாகரிகத்தைக் கண்டறிந்தோம்.

இத்தகைய சூழலில் தான் சங்க இலக்கிய ஆய்வுக்குள் நாம் தீவிரப்பட்டோம். இலக்கியம் மட்டுமல்லாமல் தமிழகத்தில் வளர்ந்த அனைத்துச் சமயங்களினுள்ளும் - மனிதச்சார்பை நாம் தேடினோம் மனித வாழ்வைக் கீழ்ப்படுத்தும் எதனையும், எவரையும் நாம் ஏற்கமுடியாது. சைவத்திற்குள்ளும், வைணவத்திற்குள்ளும் தமிழ்ச் சார்பைத் தேடினோம். சமணம், பௌத்தம் ஆகியவற்றின் வழியே தமிழ் வாழ்வு பெற்ற பெருமதிகளை மதித்தோம். இவற்றின் வழியே நமக்குள் வந்து பதிந்த துறவு, வினைக்கோட்பாடு முதலியவற்றையெல்லாம் - மக்கள் சார்பில் இன்று கேள்விக்குட்படுத்தினோம். தமிழ்க் காப்பியங்களினுள்ளும் புராணங்களினுள்ளும் வரலாற்றின் கூறுகளைத் தேடினோம். இவற்றுள் பதிந்து கிடந்த பொய்மைகளை, மாயைகளை நாம் மிகுந்த சிரமத்தோடு மெல்ல மெல்லக் கண்டறிந்து நமக்குள்ளிருந்து வெளியேற்றிக் கொண்டிருக்கிறோம். இவ்வகை ஆய்வுகளுக்கெல்லாம்

செம்மொழி பற்றிப் பேசும் இந்தச் சூழலில் என்னத் தேவை என்று கேட்கலாம். தமிழ் அறம் தான், தமிழறத்தை ஒரு முதன்மைக் கூறாகக் கொண்ட தமிழ் மெய்யியல் தான் தமிழைச் செம்மொழி என நாம் கண்டு உணர்வதற்கான ஆதாரம் என்ற அடிப்படையில் இருந்துதான் இந்தக் கேள்வியை எழுப்புகிறோம்.

கிரேக்கம் முதலிய பிற செம்மொழிகளில் சமூகத்தை மெய்ம்மைப்படுத்துகிற இந்த அறிவியல் கூறு, தமிழில் காணப்படும் அறிவியலுக்கு நிகராக உண்டா என்பதும் நமக்குள் எழுகின்ற கேள்வி? செம்மொழி எனக் கூறுவதற்கு இன்னும் சில பல கூறுகளை அறிஞர் சிலர் பட்டியலிட்டிருக்கின்றனர் என்ற போதிலும் அவற்றையெல்லாம் நுனிப்புல் மேய்வதுபோல அங்கும் மிங்குமாக பகுத்துப் பேசுவதைக் காட்டிலும் இப்படிச் செம்மொழி என்பதன் அடியாழத்தைக் கண்டுணர்ந்து பேசுவதுதான் - தமிழை மேன்மைப்படுத்துவதற்கான நெறி - என்ற புரிதலோடும்தான் இப்படிப் பேசுகிறோம். நாம் இனம் காணும் தமிழறம் என்பது - தமிழ் வரலாற்றில், நெடுங்காலத் தமிழிலக்கியத்தில் எங்கெல்லாம் - யாரிடத்தில் எல்லாம் ஆழமாக வேர்பிடித்துக் கிளை பரப்பி உள்ளதோ - அவற்றையெல்லாம் செம்மொழி என்பதன் சார்பில் வைத்து நாம் பேசுகிறோம். இதன் காரணமாகத்தான் சித்தர் இலக்கியங்களைச் செம்மொழி என்பதன் சார்பில் மதித்து நம்மால் பேசமுடியும். தமிழ் காப்பியங்களினுள்ளும் தமிழறத்தின் விரிவை இனங்கண்டு பேசமுடியும். தமிழறத்தை மறுக்கும் இலக்கியக்கூறுகளை - வெற்று இலக்கியச்சுவைக்காக நாம் பாராட்டுவதற்கில்லை. இப்படித் தொடர்கிறது நம் ஆய்வு.

## 2. சங்க இலக்கியம் – மெய்யியல் நோக்கு

1. இலக்கியம், மெய்யியல், வரலாறு முதலிய எதனையும் நம்காலச் சூழலிலிருந்துதான் வாசிக்க முடியும்.

சங்க இலக்கியத்தையும் அது தமிழ்ச் சமுதாயத்தில் முதலில் கண்டறிந்த சூழலில்தான் நாம் வாசித்தோம், பொருள்படுத்தினோம், பயன்படுத்தினோம்.

தற்போது பின்நவீனத்துவக்காலம். வரலாறு, இலக்கியம் ஆகிய எதனையும் தகர்த்துவிட்டு நிகழ்காலம் மட்டுமே நமக்குரியது என்ற முறையில், சங்க இலக்கியம் இன்று நமக்குப் பெருமளவில் பயன்படாது என்ற முறையில் வாசிக்க வேண்டும் என்பது ஒரு போக்கு. 'உலகமயமாதல் சூழலில் முதலாளியம் கூறுகிறபடி நம்மைத் தகர்த்துக் கொள்ள முடியாது, மாறாக நம் மரபிலிருந்து நம்மைத் திரட்டிக் கொள்ளத்தான் வேண்டும், இம்முறையில் சங்க இலக்கியத்தினுள்ளும் நமக்கான உணர்வு முதலியவற்றைத் திரட்டிக் கொள்ள வேண்டும்' என்பது இன்னொரு போக்கு. இம்முறையில்தாம் நாம் சங்க இலக்கியத்தைப் பொருள்படுத்துகிறோம்.

### 2. மெய்யியல் பார்வை

தமிழ்ச்சூழலில் சமயப்பார்வை, பகுத்தறிவுப் பார்வை மேலோங்கியிருக்கிறதே ஒழிய இரண்டையும் கடந்து செல்வதாகிய மெய்யியல் பார்வை கண்டு கொள்ளப்படவில்லை. தமிழ்ச்சமூக மேன்மைக்கு மெய்யியல் பார்வையில்லாமல் முடியாது.

இலக்கியத்தின் உள்ஆழத்தில் மெய்யியல் பார்வையிருப்பதை நாம் கண்டு கொள்ள வேண்டும். இலக்கியத்தை ஆயும் பொழுது வரலாற்றுச்சூழல், சமூகச்சூழல் என்பனவற்றின் ஆதாரத்தில் இலக்கியம் தோன்றுகிறது என்பது பெரும்பாலும் ஒப்புக் கொள்ளப்படும் ஓர் உண்மை. இவற்றையும் ஊடறுத்துக் கொண்டு மெய்யியல் இயங்குகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இலக்கியம் ஒரு தனிமனிதனின் படைப்பு என்றாலும் அவனுக்குள் இயங்கும் சமூகமும் வரலாறும் தரும் தூண்டுதல் காரணமாகவே, தனிமனிதன் படைப்பில் ஈடுபடுகிறான். படைப்பில் ஈடுபடும் அவன் தனிமனிதனாகவும் இருக்கமுடியாது. அவன் சமூக மனிதன். சமூகத்தின் ஏதாவது ஒரு சார்பிலிருந்தே இலக்கியத்தைப் படைக்கிறான். இலக்கியம்

குறித்த திறனாய்வு என்பது இவையனைத்தையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இம்முறையில்தான் சங்க இலக்கிய ஆய்வையும் நாம் தொடரவேண்டும்.

வாழ்வின் அடிப்படைகள் என்ன என்பதையும் வாழ்வுக்கான அர்த்தம்/பொருள் என்னவாக இருக்கிறது, இருக்க வேண்டும் என்பதைப்பற்றிய ஆய்வை மெய்யியல் ஆய்வு என்று கூறலாம். இறுதியில் மனித விடுதலை என்பது மனித வாழ்வின் இறுதியான நோக்கம். வர்க்கம், சாதி முதலியவற்றைக் கடந்த நிலையில்தான் மனிதவிடுதலை சாத்தியப்படும். எவ்வகை ஆதிக்கமும் மனிதனுக்கான விடுதலையைத் தராது. தனியுடைமை, அரசதிகாரம், மதம் முதலியவை வரலாற்றுக்காலம் முழுவதும் செயல்படும் ஆதிக்கங்கள் / ஆதிக்க சக்திகள்.

3. சங்க இலக்கியத்தினுள்ளும் இடம் பெற்ற சில மெய்யியல் கூறுகளை நாம் காணவேண்டும். இனக்குழுச் சமூக வாழ்வினுள் ஏற்றத்தாழ்வில்லை. ஆதிக்கமில்லை. எல்லாவற்றையும் மனிதர் பகிர்ந்து கொண்டனர். இவ்வகைப்போக்கு, அடுத்துவரும் உடைமைச் சமூகத்தில் அழிகிறது. ஆதிக்கத்தில் உள்ளவன் இவ்வகைப் போக்கை எதிர்க்க மாட்டான். ஆதிக்கத்திற்கு உட்படும் நிலையில் இருப்பவன் ஆதிக்கத்தை ஏற்கமாட்டான். அவனுக்கு ஒப்புரவு தேவை. ஆதிக்கம் நிலவும் காலம் முழுவதும் ஒப்புரவின் தேவையை மக்கள் உணர்ந்தே இருப்பார்கள். இத்தகைய உணர்வு மெய்யியல் உணர்வு.

சங்க காலத்திலேயே, சமூகம் இரண்டுபட்ட நிலையில் மறுமை, மேலுலகம் பற்றிய கருத்துக்கள் எழுந்தன. இவற்றின் வழியே சமயம் உள்நுழைகிறது. இவற்றை ஏற்பதா? வேண்டாமா? என்பதை அன்றைய சூழலில் மறுக்கமுடியாது. என்றாலும் இவை வேண்டாம் என்பதும் ஒரு கருத்து. மனிதனுக்குப் புகழ்போதும். இதைப் போலவே, மரணத்தோடு உயிர்வாழ்க்கை முற்றுப் பெறுகிறதா என்பதுவும் ஒரு கேள்வி? இறந்த மனிதனது உடலை, இறந்தவனின் ஆயுதங்களோடு இறந்தவனுக்கு இன்னும் தேவைப்படும் என்ற முறையில் அவனுக்கான அணிகலன், உணவு முதலியவற்றோடு அவனைப் புதைப்பது பண்டை வழக்கம். இந்த அடிப்படையில்தான் மனைவி, அடிமை முதலியவர்களையும் சேர்த்தே புதைத்தனர். இது கொடுமை என்றாலும் அன்றைய வழக்கமாக இது இருந்தது. புதைப்பது வேண்டாம். சடலத்தை எரிக்கலாம் என்பது வைதீக வழக்கு என்கின்றனர். இதுவும் அந்தக் காலத்து ஆதிமனிதனின் உணர்வுகள்.

உயிர் என ஒன்று உண்டா இல்லையா? என்பதில் தீராத ஐயம். அக்கால நிலையில் இவ்வகை கேள்விகள் எல்லாம் பிற்காலத்தில் சமய ஆதிக்கத்திற்கு காரணங்கள். உயிர் இல்லை. மறுமை இல்லை. மேலுலகம் இல்லை என்று முற்றாக மறுக்கும் போக்கும் அக்காலத்திலேயே ஒரு சிலர் மத்தியில் இருந்தது. சங்ககால மெய்யியல் விரிவான ஆய்வுக்குரியது.

*4. கவிதையியல்*

1. நவீன கால ஆய்வியல் என்ற முறையில் கவிதையியல் என்பதற்கு அழுத்தம் கொடுத்துப் பேசவேண்டும். நவீன காலத்தில்தான் கவிதை என்றால் என்ன என்பது குறித்துக் கூடுதலான புரிதல் ஏற்பட்டிருக்கிறது. கவிதை மனிதனுக்கு ஓர் அலங்காரமில்லை. அலங்காரத்தை மட்டுமே நம்பிக் கவிதை இயங்குவதில்லை. கவிதை என்பது மனிதனின் ஓர் உள்ளூறுப்பு/ உள்ளியக்கம். கவிதையிலிருந்து மனிதனைப் பிரித்துப் பேச முடியாது. மனிதவாழ்வுக்கு அழகும் வேண்டும், அறமும் வேண்டும். மனிதன் தான் உலகத்திற்கு, வாழ்விற்கு, வரலாற்றிற்கு பிரபஞ்சத்திற்கு பொருள் கூறியவன்/ பொருள் கண்டவன். மனிதன் தனக்கு ஏற்றதாக உலகத்தை மாற்றியிருக்கிறான். இப்படித்தான் மனிதன் தனது உலகைப் படைத்துக் கொள்கிறான். மனிதனல்லாத இன்னொரு உயிர்க்கு வேறுபட்டதாகத்தான் உலகம் இருக்கமுடியும். ஆறு புலன்களோடு கூடிய மனிதனுக்குத் தென்படுகிற உலகமும் 7/8 புலன்கள் கொண்டவன் என்ற முறையில் மனிதனுக்குள் வளர்ச்சி ஏற்படுமானால் அவனுக்குத் தென்படும் உலகமும் வேறுவேறானது. கவித்துவம், படைப்பியக்கம், இல்லாமல் மனிதன் இல்லை. ஏற்றத்தாழ்வான, நெருக்கடியான உலகில் கவிஞன்/மனிதன் துடிக்கிறான்/ துன்புறுகிறான். முரண்பட்ட உலகைத் தனக்குள் வைத்து ஏதாவது ஒரு அர்த்தத்தில் தன்னோடு இணைத்துக் கொள்கிறான். இயலுமானால் மாற்றுகிறான். கவிதையியல் என்பதை இப்படித்தான் சுருக்கமாகவேனும் விளங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

2. இலக்கியம்/கவிதை என்பதை நமக்குள் வைத்துப் பொருள்படுத்துகிறோம். நமக்கானப் பொருளை, அர்த்தத்தைக் கவிதைக்குள் இருந்து எடுத்துக் கொள்கிறோம். நமக்குள்ளும் இருக்கும் கவிஞன் இன்னொருவர் கவிதையையும் இப்படித்தான் தனக்கு உரியதாகக் காண்கிறான். தொன்மை இலக்கியத்தையும்/கவிதையையும் இப்படி வாசிக்கும் பொழுதுதான் கவிதைக்குள், வரலாற்றுக்குள் நாம் செல்கிறோம். தொன்மை மனிதர்கள் நமக்குள்ளும் வருகிறார்கள்/

வாழ்கிறார்கள். பாரியோடு, பாரி மகளிரோடு, அவர்களது துன்பத்தோடு, நமக்குப் பங்கில்லையா? பூதப்பாண்டியன் தேவியோடு நாம் நெருங்கவில்லையா? வேந்தர் படையெடுப்பில் ஒரு நகரமே அழிவதை நம்மால் ஏற்க முடியுமா? தனியுடைமையும் அரசதிகாரமும் இப்படித்தானே மனிதர்களை நாசமாக்குகிறது. இப்படி இத்தகைய ஒரு உலகம் நமக்குத் தேவைதானா? இப்படித் துண்டுபட்ட உலகம் நமக்கு ஏற்புடையது தானா? இத்தகைய உலகம் வள்ளுவருக்கு உடன்பாடில்லை. இளங்கோ ஏற்கவில்லை. இத்தகைய உலகத்திற்குள் மெய்ப்பொருள் நாயனாரால் வாழமுடியுமா? இத்தகைய உலகில் தானே கடவுளும் கல்லாகி விட முடிகிறது. இத்தகைய உலகத்தை மாற்றத்தான் வேண்டும். இந்த உலகில் அறமில்லை. காதலுக்கு இந்த உலகில் மரியாதை இல்லை. மகளின் காதலைப் பெற்றோர் மறுக்கிறார்கள். காதலனோடு பெண் உடன் போகிறாள். காட்டு வழியில் துன்புறுகிறாள். அவனுக்கும் அவளுக்கும் எதுவும் நேரலாம். இல்லறத்தில் ஈடுபடுகிறாள். பொருள் இல்லாமல் வாழ்க்கையில்லை. பொருளில் மட்டும் குறிவைத்தால் வாழ்க்கை இல்லை. வறுமை வாழ்க்கையை அழிக்கிறது. பட்டினங்களில் என்ன வாழ்க்கை மிஞ்சும்? நாகரிகப் பெருக்கம் மனித வாழ்வை என்ன செய்யும்? இப்படியெல்லாம் வாசிக்கும் போது சங்க இலக்கியம் இன்றும் நமக்கான இலக்கியம்.

3. நவீன கால நோக்கிலிருந்து கவிதையியல் பற்றி இன்று நாம் பேசுவது, தொல்காப்பியருக்குத் தெரியுமா? தொல்காப்பியத்திலிருந்து இப்படி நமக்குத் தேவையான கவிதையியலைக் கண்டறிய முடியுமா? இப்படி நம்மை நாமே கேட்டுக் கொள்கிறோம்.

இலக்கியம் என்பதைப் புரிந்து கொள்வதற்கான கோட்பாடு ஒன்றைத் தொல்காப்பியர் முன்வைக்கிறார். முதல், கரு, உரி என்பது அவர் முன்வைக்கும் கோட்பாடு. இன்னொன்று உலக வழக்கையும், நாடக வழக்கையும் இணைக்கும் முறையிலான புலநெறி வழக்கு.

இலக்கியத்தின் உரிப்பொருள் என்பது காதலாக, வீரமாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. இலக்கியத்தின் உரிப்பொருள் அறமாக, பக்தியாக, அரசியலாக இருக்கமுடியும். அறம், பொருள், இன்பம் என மூன்றையும். உரிப்பொருள் எனத் தொல்காப்பியரும் கூறியிருக்கிறார். எந்த ஒரு இலக்கியத்தின் தோற்றம், இயக்கம் என்பதை அந்த இலக்கியத் தோற்றத்திற்கான வரலாற்றுச் சூழலிலிருந்துதான் புரிந்து கொள்ள முடியும்.

சமூக நெருக்கடிச் சூழலிலிருந்து புரிந்து கொள்ளமுடியும். தொல்காப்பியர் நிலம், பொழுது, கருப்பொருள் எனக் கூறுவதை இப்படி விளக்கமுடியும். நிலம், பொழுது என்பவை காலவெளி, இடைவெளி என்றும் கருப்பொருள் என்பதைக் குறிப்பிட்டக் காலச் சூழலில் சமூகம், நாகரிகம், உற்பத்தி என்றெல்லாம் விரிவுபடுத்திக் காணமுடியும்.

இதைப்போலவே இலக்கியம் என்பது அதிகஅளவில் புனைவு என்று இன்று கூறுகிறோம். எத்தகைய புனைவும் குறிப்பிட்ட யதார்த்த வாழ்நிலையில் உள்ள முரண்பாட்டிலிருந்து எழுவதாகத்தான் இருக்கமுடியும்.

கிள்ளிவளவன் இறந்தான். பழங்கால வழக்கப்படி அவனைத் தாழியிலிட்டு அடக்கம் செய்ய வேண்டும். உலகளவு தன்னை விரித்துக் கொண்டவன் கிள்ளிவளவன். அவனை ஒரு சிறு தாழிக்குள் எப்படி அடக்க முடியும் இப்படி ஒரு தாழியை குயவனால் வனைய முடியுமா? என்று கேட்கிறார் கவிஞர். இது புனைவு. இப்படித்தான் உணர்வுமிக்கச் சூழலில் நாம் பேசுகிறோம். யதார்த்தத்தை இது மறுப்பதாக இல்லை. யதார்த்தச் சூழலின் நெருக்கடியிலிருந்து புனைவு எழுதுகிறது. இதுதான் புலனெறி வழக்கு - புலமை நெறி.

4. தொல்காப்பியர் நமக்கு நெருக்கமாகத்தான் இருக்கிறார். தொல்காப்பியரின், பொருளதிகாரத்தில் இடம் பெறும் பொருளியல் என்பது அதிகளவில் கவிதையியல் தான். நம் பேராசிரியர்களில் இரண்டொருவர் பொருளியலை கவிதையியல் என்று கண்டு விளக்கியுள்ளனர். விரிவாகப் பேசுவதற்கு இங்கு இடமில்லை. தொல்காப்பியரே பொருளியலில் மனிதனிடமிருந்து கவிதை வெடித்து எழுவதற்கான சில சூழல் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடுகிறார். தலைவி, தோழியோடு அறத்தொடு நிற்கிறாள். தோழி செவிலியோடு அறத்தொடு நிற்கிறாள். கபிலரின் குறிஞ்சிப்பாட்டு இதற்கு மிகச் சரியான சான்று. தலைவனோடு தலைவிக்கு எத்தகைய சூழலில் உறவு ஏற்பட்டது என்பதைத் தோழி சொல்கிறாள். இது உண்மையா? பொய்யா? என்பது பற்றி நாம் உறுதியாகச் சொல்வதற்கில்லை. இப்படிச் சொல்வதன் மூலம் தான் தோழி செவிலியைத் தன் கருத்துக்கு உடன்படுத்த முடியும். ஆற்று வெள்ளத்தில் தலைவி அடித்துச் செல்லப்படாது தலைவன் காப்பாற்றினான். தினைப்புனத்திற்குள் புகுந்த யானையிடமிருந்து தலைவியைத் தலைவன் காப்பாற்றினான். இத்தகைய

சூழலில் தான் தலைவிக்கும் தலைவனுக்கும் உறவு ஏற்பட்டது. இவனை தலைவியால் எப்படி மறுக்கமுடியும்? இவன் தானே தலைவிக்குத் தகுதியுடையவன்?

தோழி, சொல்வது பொய்யா? செவிலியை நம்ப வைக்க வேண்டும். நிலைமையை இனி மாற்றமுடியாது. தலைவியின் காதலுணர்வு உண்மையானது. தலைவி, வேறொருவனை இனி மணக்க முடியாது. இவனைப்போல இன்னொரு தலைவன் வாய்க்க மாட்டான் அல்லது தேவையில்லை. காதலிப்பது போல வேறு இன்பமில்லை. காதலித்தவனை இனி ஏமாற்றவும் முடியாது. அவன்தான் இனி தனக்குக் கணவன். இப்பிறவியிலும் சரி இனி வரும் பிறவிக்கும் இவனே கணவன். இது மனிதனுக்குள் இயங்கும் உணர்வு இயக்கம், இது கவிதை இயக்கம். காதலிப்பவன் பார்வையில் உலகம் பேரழகுடையதாக, அற்புதமானதாக தெரிகிறது. மனிதனுக்குள் எழும் உணர்வெழுச்சி இப்படி அவனைத் தனக்குள் முழுமையாக வசப்படுத்திக் கொள்கிறது. அதன் வசத்திலிருந்து இவனால் தன்னை விடுவித்துக் கொள்ளவும் முடியாது. நெருக்கமான ஒருவர் இறந்த சோகம் மனிதனைக் கவ்வும் போது, உலகமே இருண்டு விடுகிறது. இப்படியேதான் வெற்றியின் போது, தோல்வியின் போது மனநிலை மாறுகிறது. இதிலிருந்து இன்னும் ஒன்றைப் புரிந்து கொள்ளலாம். சிலரைச் சமய உணர்வு கடுமையாக வசப்படுத்திக் கொள்கிற போது அவரது உலகப்பார்வை, வாழ்வியல் பார்வை முற்றிலும் மாறுபட்டதாகிறது. சாதி வெறியும் இத்தகையது. பணமே வாழ்வின் ஒரே குறியாகிற போது அவன் என்னவாக இருக்கிறான் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. சாதி வெறியும் கட்சி வெறியும் கூட இப்படி மனிதனைக் குறுக்கி விடுகிறது.

தொல்காப்பியர் பொருளியலில் கவிதை எழுச்சிக்கான பல சூழல் குறித்து விரிவாகப் பேசுகிறார். தலைவி அறத்தொடு நிற்றலின் போது மட்டுமல்லாமல் வரைவு கடாதல் என்பது இன்னொரு சூழல். தலைவனோடு உடன்போக்கின் போது இருவர் மனநிலையும் மாறுபடுகிறது. இதேபோலத்தான் கற்புக் காலத்தில் தலைவன் தன்னை விட்டுப் பிரிந்து பரத்தையரோடு உறவுகொண்டு திரும்பி வரும்போது தலைவியின் மனநிலை – தலைவன்மீது கடுமையான வெறுப்பு - வெளிப்படையாக அவனைச் சாடமுடியவில்லை. ஆனால் பேசியாக வேண்டும். சங்கக் கவிதைகளில் உள்ளுறை என்ற வகையில் பொருள்படுத்தும் முறையிலான பல கவிதைகள் இத்தகையவை. கவித்துவம் செழித்த கவிதைகள் இவை. தொல்காப்பியர் கைக்கிளை, பெருந்திணை பற்றிக்

குறிப்பிடும் சூழலும் இப்படி மிக மாறுபட்டச் சூழல். ஒருத்தியை விரும்பி அவளையே சுற்றிவரும் இளைஞன் தனக்குள் செய்து கொள்ளும் கற்பனைகள் குறித்து நாம் சொல்ல வேண்டியதில்லை. காமவெறிமிக்க சூழலைப் பெருந்திணை வெளிப்படுத்துகிறது. மிக்க காமத்து மிடல் என்கிறார் தொல்காப்பியர். பொருளியலை நாம் முழுமையாகக் கற்றாக வேண்டும்.

5. அறத்திணைச் சூழலில் தான் கவித்துவ மன எழுச்சி சாத்தியம் என்பதில்லை. புறத்திணைச் சூழலிலும் கவித்துவ மன எழுச்சி இயல்பானதுதான் என்பதில் ஐயமில்லை. முதல், கரு, உரி என்றும் புலநெறி வழக்கு என்றும் தொல்காப்பியர் குறிப்பிடுவது புறத்திணைக்கும் முழுமையாகப் பொருந்தும். புறநானூற்றில் இடம்பெறும் கவிதைகளை வாசிக்கும் எவரும் இதை முழுமையாக உணர முடியும்.

6. சங்க இலக்கியம் குறித்து நாம் பேசும்பொழுது அல்லது பொதுவாக கவிதைகள் பற்றிப் பேசும்பொழுது கவிதையை, கவிதைக்குள் இடம்பெறும் அரசியல், வரலாறு, காதல், கற்பு என்ற முறையில் பொருள்படுத்தி கவிதையின் இயக்கத்தை நமக்குள் விரியவிடாமல் சுருக்கிவிடுகிறோம் கவிதையின் உள்ளியக்கம் மிக முக்கியமானது. முன்னம், நோக்கு என்றெல்லாம் தொல்காப்பியர் விரிவாகப் பேசுகிறார். உவமை, உருவகம், என்பதை மட்டும் முதன்மைப்படுத்தி பேசும்பொழுது கவிதையின் உள்ளியக்கம் சுருங்கி விடுகிறது. சங்கக் கவிதைகள் பெரும்பாலும் தனிக் கவிதைகள். கவிதை முழுவதும் ஒரு புள்ளியை நோக்கி இயங்குவது. எல்லா வரிகளும் அந்தப் புள்ளியில் தான் குவியும். அங்கிருந்தே கவிதையை நமக்குள் விரித்துச் செல்லவேண்டும். பெண்ணியம், தலித்தியம் என்பதை முதன்மைப்படுத்துகிற போதும் கவிதைக்கு நேர்வது இத்தகைய விபத்துத்தான். இலக்கிய நயம் என்று பேசுவதும் இப்படியொரு விபத்து. கவிதையின் உள்ளியக்கம் நமது ஆழ்மனத்தோடு உறவுடையது. நம் ஆளுமையோடு தொடர்புடையது. ஒரு வணிகனாக, அரசியல்வாதியாக பதவுரை சொல்லும் புலவனாக இருந்து கவிதையின் உள்ளியக்கம் காணமுடியாது. கவிதையியல் என்பது நமக்கு ஒரு முதன்மையான பாடம்/கல்வி. கவித்துவம் என்பது கவிதையோடு மட்டும் அடங்குவதன்று. கவித்துவம் தான் அறிவியல், மெய்யியல், அறவியல், அழகியல் முதலிய எல்லாவற்றுக்கும் ஆதாரம்.

# 3. சங்க இலக்கியம் – மார்க்சிய நோக்கு

1. சங்க இலக்கியம் கண்டறியப்பட்ட இருபதாம் நூற்றாண்டு வரலாற்றுச் சூழல் பற்றிச் சொல்ல வேண்டும். இ த் த கை ய சூழலில்தான் சங்க இலக்கியம் கண்டறியப்பட்டு விரிவான ஆய்வுகள் நடைபெற்றன. இருபதாம் நூற்றாண்டுச்சூழல் நம்மைப் பெரிதும் பாதித்திருந்தது. மதம், கடவுள், சாதி முதலியவை கேள்விக்குள்ளாயின. கடவுள், அரசன் இன்றி நம்மால் வாழ முடியும். மனிதன்தான் இனி எல்லாவற்றுக்கும் மையம். சமதர்மம்தான் மனித வாழ்வுக்கு அழகும் ஆற்றலும் தரமுடியும். இவ்வகை கருத்தியல் காரணமாக சங்க இலக்கியம் நமக்கு நெருக்கமாயிற்று. சங்க இலக்கியத்தில் சாதி, மதம் ஆளுமை பெறவில்லை. மனிதனை மையப்படுத்திய உலகியல் வாழ்வுக்கே முதன்மையிருந்தது. இக்காரணங்களால் சங்க இலக்கியத்தை நாம் ஆழமாகக் கற்றோம்.

மனோன்மணியம் சுந்தரனார், கா.சு.பிள்ளை, மறைமலை அடிகள், சோமசுந்தர பாரதியார் தொடங்கி அற்புதமான தமிழறிஞர்கள் தமிழியல் ஆய்வில் ஈடுபட்டதன் விளைவாகத் தமிழ் நமக்கு நெருக்கமாயிற்று. நாம் தமிழர் என்ற உணர்வு நமக்கு ஏற்பட்டது. தமிழியக்கங்கள் பல எழுச்சி பெற்றன. தமிழ் நாகரிகத்தின் தொன்மை, மேன்மை முதலியவை நம்மைக் கவர்ந்தன. சங்க காலத்திலேயே தமிழன் தனக்கென தனி ஆட்சியைப் பெற்றிருந்தான். நகர நாகரிகம் செழித்து இருந்தது. கிரேக்கத்தோடும் சீனத்தோடும் நாம் வணிகத் தொடர்பு கொண்டிருந்தோம். சாதி, மதம் முதலியவற்றை நமக்குள்ளிருந்து களைந்து கொள்ள முடியும். தமிழன் தனக்கென ஒரு நாட்டைப் பெற்று வாழ முடியும். சமஸ்கிருதத்தின் தாக்கத்திலிருந்து தமிழை விடுவிக்க முடியும். சங்க இலக்கியக் கல்வி இவ்வகை உணர்வுகள் பலவற்றை நமக்குள் தூண்டி வளர்த்தது. தமிழரசுக் கழகம், நாம் தமிழர் இயக்கம், தனித்தமிழ் இயக்கம், பகுத்தறிவு இயக்கம் எனப் பலவும் இந்திய வரலாற்றில் தமிழன் தனக்கான அரசியல், பொருளியல், பண்பாடு, கல்வி ஆகியவற்றைப் பெற்றுச் சிறக்க முடியும் என்ற பேருணர்வைத் தமிழ் மக்களுக்குள் வளர்த்தன.

பெரியார், அண்ணா முதலியவர்கள் தமிழனின் எதிர்காலத்துக்கான பாதையைச் சுட்டிக் காட்டினர். பகுத்தறிவு இயக்கத்தோடு மார்க்சியமும்

தமிழகத்தில் எழுச்சி பெற்றது. 1960 வரை வரலாற்றில் முன்னோக்கிச் சென்ற நாம் எண்பதுக்குப் பிறகு எல்லாத் துறைகளிலும் தளர்ச்சிக்கு உள்ளானோம். இந்தியச் சூழலில் நாம் எவற்றை நிலைநிறுத்திக் கொள்ள முடியும் என்று நமக்குள் கேட்டுக் கொண்டோம்.

1980க்குப் பிறகு உலகமயமாதல், தாராளமயம், தனியார்மயம், சந்தைப் பொருளாதாரம் முதலிய தீவிரமான போக்குகளின் விளைவாகத் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் பல வகைகளிலும் நெருக்கடிகள் அதிகரித்தன. ஆங்கில ஆதிக்கம் வலுப்பெற்றது. தமிழ் தனக்கான மரியாதையை இழந்தது. இத்தகைய சூழலை பின்நவீனத்துச் சூழல் என்றும் சிலர் குறிப்பிடுகின்றனர். முன்னைய வரலாறு, பண்பாடு முதலியவற்றை இன்று போற்றிப் பயனில்லை. பழமைப்பற்றும் எதிர்கால உணர்வும் இன்று வேண்டாம். நிகழ்கால வாழ்க்கை நமக்குப் போதும். வாழ்க்கை வசதிகள் இன்று கூடி வருகின்றன. இவற்றை நம்மால் பெற முடியும். இதைவிட வாழ்வுக்கு வேறு குறிக்கோள் தேவையில்லை. உலகம் இன்று சுருங்கி விட்டது. எங்கும் நம்மால் செல்ல முடியும். உலகளவில் வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன. உலகத்தோடு நாம் ஒத்துச் செல்ல வேண்டும். நமக்கான தேசம், மொழி, இனம், பண்பாடு என்றெல்லாம் பேசி நமக்குள் சுருங்கிக் கொள்ள வேண்டியதில்லை. பின்நவீனத்துவம் இப்படியும் பேசுகிறது. முதலாளியத்திற்கு, அரசதிகாரத்திற்கு உலகமயமாதல் முதலிய போக்குகளுக்கு அனுசரணையானவை இவ்வகை வாதங்கள். இவற்றை ஒப்புக்கொள்வதன் விளைவாகச் சமூகத்தில் நமக்கும் உயர்பதவி, உச்ச அளவில் வசதி வாய்ப்புகள் முதலியவை கூடும். பணம் கிடைக்கிறது. பண்பாட்டால் என்ன பயன்? தமிழ் நமக்குச் சோறு போடுமா? என்றெல்லாம் கேள்விகள் நமக்கு எழும்.

இந்தச் சூழலில்தான் நம்மை மீட்டுக் கொள்வதற்குத் தேவையான நவீன காலப் பார்வை என்னவாக இருக்க வேண்டும் என்பது பற்றி நாம் பேசுகிறோம். நவீன உலகில் நம்மைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமானால் நம் மரபிலிருந்து, நம் மக்களிடமிருந்து, நம் இலக்கியத்திலிருந்து, நம் வரலாற்றிலிருந்து நம்மைத் திரட்டிக் கொள்ள வேண்டும். இவ்வகையில் ஒன்றுதான் நவீன கால நோக்கில் தமிழிலக்கியம் பற்றிய நம் பார்வை. தமிழிலக்கியத்தினுள்ளும் சங்க இலக்கியத்தை முதன்மைப்படுத்தும் முறையில் நமக்கானப் பார்வை என்னவாக இருக்க முடியும் என்று ஆராய்கிறோம். நமக்கு சாதி வேண்டாம். மதவெறி

வேண்டாம். ஆதிக்கம் நமக்கு எவ்வகையிலும் வேண்டாம்.. சாதி ஆதிக்கம், மத ஆதிக்கம் போலவே ஆணாதிக்கமும் வேண்டாம். நமக்கு எத்தகைய அரசியல் தேவை? பொருளியல் தேவை? என்பதில் நமக்குத் தெளிவு தேவை. இயற்கையோடு நம் உறவு என்னவாக இருக்க முடியும்? என்ற புரிதல் தேவை. முன்னைய வரலாற்றிலிருந்து எதை எடுத்துக் கொள்ள வேண்டும், எதை விட்டுவிட வேண்டும் என்பதிலும் நமக்குத் தெளிவு தேவை. ஒரு சரியான மெய்யியல் பார்வை இல்லாமல் இவற்றிலிலெல்லாம் நாம் தெளிவு பெற முடியாது. சங்க இலக்கிய ஆய்வுகள் இவற்றுக்கெல்லாம் நமக்கு உதவியாக இருக்குமா? என்று நாம் கேட்டுக் கொள்கிறோம். இலக்கியத்தோடு, கவிதையோடு நமக்கு என்ன வகையான உறவு தேவை? என்பதும் ஒரு கேள்வி. இத்தகைய கேள்விகள் மூலம் நம்மை நவீனப்படுத்திக் கொள்கிறோம். நம் கால உலகில் நம்மைப் புதுப்பித்துக் கொள்கிறோம். நம்மைத் திரட்டிக் கொள்கிறோம்.

2. சங்க இலக்கியத்தின் வழியே எத்தகைய மெய்யியல் பார்வையை நாம் இன்று திரட்டிக் கொள்ள முடியும் என்பதை முதலில் பார்ப்போம்.

பக்குடுக்கை நன்கணியார் ‘ஓரில் நெய்தல் கறங்க ஓரில் மணப்பறை முழங்க’ (புறம் 194) என்ற பாடலில் முன்னைய உலகம் இரண்டு பட்டது பற்றிக் கூறுகிறார். இப்படி உலகை இரண்டாகத் துண்டாடியவனை – இப்படிப் படைத்தவனை பண்பிலாளன் என்கிறார். இதற்கு மாற்றாக என்ன செய்ய வேண்டும் – இன்னாதது இந்த உலகம் எனினும் இனியதைக் காண வேண்டும் – படைத்துக் கொள்ள வேண்டும் என்கிறார். இரண்டு பட்ட உலகை ஒன்றாக்க வேண்டும்.

இரண்டு பட்ட உலகில் கோப்பெருஞ்சோழனால் வாழ முடியாது. இவனுக்கு எதிராக இவன் மக்களே படை திரட்டினர். சோழன் எல்லாவற்றையும் தன் நாட்டு மக்களோடு பகிர்ந்து கொள்கிறான். இறுதியில் என்னதான் மிஞ்சும்? ஆகவே அவனிடமிருந்து நாட்டையும் செல்வத்தையும் பறித்துக் கொள்ள அவனுக்கெதிராக மக்கள் போர் தொடுத்தனர். இடையில் வந்த புலவர் சொன்ன அறிவுரைப்படி நாட்டைத் தன் மக்களுக்கே கொடுத்து விட்டு இரண்டு பட்ட இந்த உலகில் இனி வாழ முடியாது என்று கருதி சோழன் வடக்கிருந்து உயிர் துறந்தான். இன்னாத இந்த உலகத்தில் இனி வாழ முடியாது. வாழ்வதில் பொருளில்லை என்று கருதிய புலவர்களும் அவனோடு உயிர் நீத்தார்கள். உயிர் துறக்கும் முன்பு புலவர் சிலர் அவனோடு வாதிட்டார்கள். வடக்கிருந்து உயிர்த் துறப்பதால் மேலுலகம் கிட்டுமா? தொடரும் பிறப்புக்கள் இல்லாமல் அறுபடுமா? சோழன் பதில் கூறினான்.

மேலுலகம் இல்லை என்றாலும் மறுபிறப்பு அறுபடாது என்றாலும் என் புகழ் நிலைக்கும் (புறம்.214) நாட்டு மக்கள் என்னை மறக்க மாட்டார்கள். அது போதும் எனக்கு. இதிலிருந்து நாம் அறிவது என்ன? ஒன்று ஏற்றத்தாழ்வுக்கு இடங்கொடாத உழைப்பையும் பகிர்வையும் பகிர்ந்து கொண்ட முந்தைய இனக்குழுச் சமூகம் இனி இல்லை. தனியுடைமைக்கும் அரசதிகாரத்திற்கும் முதன்மை தருவதாகிய புதிய சமூகத்தில் மனிதப் பண்புக்கு இடமில்லை. உழைப்பு ஒரு பக்கம் – செல்வமும் அதிகாரமும் இன்னொரு பக்கம். இப்படித் தான் உலகம் இரண்டு பட்டது. இதே காலத்தில் சில புதிய கருத்துக்கள் உள்நுழைந்தன. மேலுலகம் என ஒன்று உண்டு. அதைப்போல மறு பிறப்பும் தொடரும். இவற்றை நம்பியவர் சோழனிடத்தில் வினா எழுப்பினர். சோழன் நம்பினானா? ஐயுற்றான் என்றுதான் நாம் புரிந்து கொள்ள முடியும். இவை இல்லை என்றாலும் சோழனுக்குக் கவலையில்லை. புகழ் ஒன்றே போதும்.

தமிழகத்தில் சங்ககாலச் சூழலில் இப்படிச் சில கேள்விகள் எழுந்தன. இவை மனித வாழ்வின் அடிப்படை பற்றிய கேள்விகள். இவை மெய்யியல் கேள்விகள். இவை போல மேலும் சில கேள்விகள் அக்காலத்தில் எழுந்தன.

நம்பி நெடுஞ்செழியன் பகைவர்களோடு போரிட்டான் நண்பர்களோடு பகிர்ந்து கொண்டான். சோலையில் மகளிரோடு விளையாடினான். புலவர்களுக்குக் கொடுத்தான். அவன் மன்னன் இல்லை என்றாலும் ஒரு மறவன். இவன் இறந்த போதும் சில கேள்விகள். இவனைப் புதைக்கலாமா? எரிக்கலாமா? இடையில் ஒரு புலவர் பதில் கூறினார். நம்பி நெடுஞ்செழியன் தன்னளவில் நிறை வாழ்வு வாழ்ந்தவன். இவனை எரித்தால் என்ன புதைத்தால் என்ன? (புறம் 239).

சங்க இலக்கியத்தில் குறிப்பாக புறநானூற்றில் இப்படி எத்தனையோ விவாதங்கள் – கருத்துக்கள். 'செல்வத்துப் பயன் ஈதல் தாமே துய்ப்போம் என்றால் இழப்பவை பலவாகிவிடும்'. (புறம் 189) செல்வத்தை மட்டுமே இறுக்கமாக பற்றிக் கொண்டிருந்தால் வாழ்வில் இசையில்லை. கலையில்லை. உறவில்லை. நோய் நொடிகள் தீரா. பாதுகாப்பும் இல்லை. ஆகவே செல்வம் சேர்ந்தால் பகிர்ந்து கொள்ள வேண்டும். மேலும் சில பாடல் கருத்துக்கள். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்'. (புறம் 192) 'நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லவை ஓம்புமின்' (புறம் 195) இப்படி எவ்வளவோ.

அகத்திணை நூல்களை எடுத்துக் கொள்வோம். அறத்தொடு நிற்றல் என்பது ஒரு துறை. தலைவி தலைவனைக் காதலித்தாள். இருவர் இணைந்து வாழ இவர்களுக்கிடையில் அன்பு போதும். இப்படி இருந்தது முன்னைய சமூகம். புதிய சமூகத்திற்குள் ஏற்றத்தாழ்வு நுழைந்து விட்டது. குலம், செல்வம் மக்களைப் பிரித்தது. அன்பு செய்த இருவரை பெற்றோர்தான் சேர்த்து வைக்க வேண்டும். செல்வத்தில் குலத்தில் வேறுபட்டவன் தலைவன். சேர்த்து வைக்க முடியாது. தலைவி அறத்தொடு நிற்கிறாள். தலைவனோடு உடன்போக்கு மேற்கொள்கிறாள். இடைவெளியில் எவ்வளவோ நேரலாம். துணிந்து செல்கிறாள். தன் காதலை அன்பை உறுதிப்படுத்த முனைந்திருக்கிறாள். இதுவே அறம்.

குலத்தையும் செல்வத்தையும் முதன்மைப்படுத்தினால் அன்பு சிதையும், அறம் அழியும். இனக்குழுச் சமூகத்தின் அற்புதமான இந்தப் பண்பு தலைவன் தலைவி இருவரையும் இயக்குகிறது. இத்தகைய உறுதியான அறத்தொடு தலைவி இல்லறத்தில் நுழைகிறாள். தன் கற்பு வலிமையால் தலைவனைக் கட்டுப்படுத்துகிறாள். குடும்பத்தில் தலைவிதான் மையம். தலைவி தன் அன்பை உறுதிப்படுத்திக் கொள்ள முனைகிறாள். இதுவே கற்பு. இதுவே அறம். தலைவன் ஈட்டும் பொருள் கொண்டு வறியவர் துயர் தீர்க்க வேண்டும். தலைவிக்கு இதுவே விருப்பம். அறத்தொடு நிற்றல் அகத்திணையில் ஒரு துறைதான் என்றாலும் அகத்திணை வாழ்வு முழுமையின் உள்ளும் அறமே தொடர்கிறது. பொருள் தேடச் செல்லும் காட்டு வழியின் உள்ளும் உயிர்களிடம் நேசம் காண்கிறான். திரும்பி வரும் போது உயிர்நேயத்தைப் போற்றுகிறான். பட்டினமே பெறினும் தலைவியோடு வாழ்தலே தலைவனுக்கு இன்பம்.

சங்க இலக்கியத்தினுள் நாம் காணும் அற உணர்வே வள்ளுவரிடம் மேலும் விளக்கம் பெறுகிறது. மேலுலகம் இல்லையென்றாலும் கொடுக்கத்தான் வேண்டும். வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவர், தெய்வம். ஊழ் வலியது என்றாலும் உழைக்கும் மனிதன் அதனை வெல்ல முடியும். மன்னன் கொடுங்கோலனாகி மக்களைத் துன்புறுத்துவானென்றால் அவன் செல்வம் அழியும். உழுவார் உலகத்திற்கு ஆணி. பேரறிவாளன் திரு ஊருணி நீரால் நிறைந்தது போன்றது. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலே பேரறம். இவற்றைத் தொகுத்தால் நமக்குக் கிடைப்பது ஒப்புரவு – சமதர்மம். சமதர்மம் இன்றைக்கு நமக்குத் தேவையான பேரறம்.

3. சங்க இலக்கியம் 2000 ஆண்டுகளுக்கு முன் எழுந்த இலக்கியம். சங்ககால மனிதனின் பல்வேறு போராட்டங்களை, வாழ்வியல் அனுபவங்களைத் தனக்குள் தாங்கியிருப்பது சங்க இலக்கியம். சங்க இலக்கியத்தோடு, நாம் நெருக்கமாக உறவு கொண்டிருக்கிறோம். சங்க இலக்கியத்தை நமக்குள்ளும் வைத்து வாசிக்கிறோம். நவீன கால வாசிப்பு என்பது இத்தகைய ஓர் இயக்கம். எந்த ஓர் இலக்கியத்தினுள்ளும் காலங் கடந்து நிற்கும் ஒரு கூறு இருக்கத்தான் செய்கிறது. இலக்கியத்திற்கு சாவு இல்லை என்று சொல்கிறோம். தொன்மை இலக்கியம் எனினும் அந்த இலக்கியம் நமக்குள் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது. நம் காலத்திற்கான பொருளை அந்த இலக்கியம் வழங்குகிறது. சங்க இலக்கியத்தையும் இன்று இப்படி வாசிப்பதன் மூலம் சங்க இலக்கியம் நமக்கு நெருக்கமாகிறது. நமக்கு உரியதாகிறது.

சில சான்றுகள் இங்கு எடுத்துக் கொள்ளலாம். பாரி போர்க்களத்தில் இறந்தான். மூவேந்தர்கள் படையெடுத்து அவனை வென்றனர். பாரி, மக்கள் தலைவன். எல்லாவற்றையும் மக்களோடு பகிர்ந்து கொண்டான். 'பாரி பாரி' என மக்கள் என அவனைப் போற்றினர். வேந்தர்களை மக்கள் போற்றவில்லை. மக்களோடு அவர்கள் தம்மைப் பகிர்ந்து கொள்ளவில்லை. தமக்கு உடைமைகளையும் அதிகாரங்களையும் சேர்த்துக் கொள்வதிலேயே அவர்கள் குறியாக இருந்தனர். இதனால் பாரியின் மீது அவர்கள் பொறாமை கொண்டனர். பாரி இருக்கும் வரை மக்கள் தம்மை மதிக்க மாட்டார்கள். பாராட்ட மாட்டார்கள் என்பதை உணர்ந்தே பாரியின் மீது படையெடுத்து பாரியை வென்றனர். மூவேந்தர்களுக்கு யானை, குதிரை என நால்வகைப் படைகள் உண்டு. பாரியைப் பொறுத்தவரை அவனைச் சூழ்ந்திருக்கும் மக்களே போர் வீரர்கள். நால்வகைப் படைகளின் முன்னர் இவர்கள் தாக்குப் பிடிக்கவும் முடிய்யாது. வேந்தர்களுக்குப் பாரி தன்னைத் தன் மக்களைத் தன் நாட்டை விட்டுக் கொடுக்கவில்லை. போராடிப் பாரி இறந்தான்.

பாரியின் சாவுக்கு நாம் இன்றும் வருந்துகிறோம். இன்றைக்கும் பாரிகள் சாகின்றனர். மக்களுக்காகப் போராடுபவர்களை அரசின் படைகள் அழிக்கின்றன. அரசதிகாரம் தன்னை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். எதிர்ப்பவர் எவராயினும் அவர்களை ஒழிக்க வேண்டும். அரசுக்கு அறம் முக்கியமில்லை. அதிகாரமே முக்கியம். இளையவனை வலியவன் ஒடுக்குகிறான். கொன்றொழிக்கிறான்.

பாரி மகளிருக்கு இனி ஆதரவில்லை. தங்கள் நாட்டில் அவர்கள் வாழ முடியாது. பாரியின் மகளிரை வேந்தர்கள் வாழவிட மாட்டார்கள். அவர்கள் கைப்பற்றும் முன் பாரி மகளிர் தப்பிச் செல்ல வேண்டும். கபிலர் துணையோடு பறம்பு மலையை விட்டுப் பாரி மகளிர் நீங்கிச் செல்கின்றனர். பறம்பு மலையைக் கூட வேந்தர்கள் இனி விட்டு வைக்க மாட்டார்கள். மக்களை அவர்கள் ஒடுக்குவார்கள். தப்பிச்செல்லும் பாரி மகளிர் பறம்பு மலையை அடிக்கடி திரும்பிப் பார்த்துக் கண்ணீர் சொரிந்த வண்ணம் நீங்குகின்றனர். தன் உறவினரோடு தன் சொந்த ஊரில், தன்னைச் சூழ உள்ள மக்களோடு, இயற்கையோடு வாழ்வதில்தான் மனிதன் நிம்மதி காண முடியும். எங்கோ தொலைதூரத்தில் அந்நியர்கள் மத்தியில் ஆதரவில்லாமல் தங்களைப் புரிந்து கொள்ளாத மக்கள் மத்தியில் வாழ்வது எப்படி வாழ்க்கையாக இருக்க முடியும். ‘அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்’ (புறம் 112) என்று பாரி மகளிர் பாடியதாக ஒரு பாடல் புறநானூற்றில் இடம் பெற்றிருக்கிறது. தம் சொந்த நாட்டிலிருந்து துரத்தப்பட்ட மக்களின் அவல உணர்வைப் பாரி மகளிரின் பாடலில் இன்று நாம் உணர்கிறோம். நல்லவர்களுக்கு இன்றைக்கும் வாழ்வில்லை. சொந்த வீட்டில் குடியிருக்க முடியாது. சொந்த ஊரிலும் வாழ்வதற்கு வழியில்லை. அயலூரில் வாழ்ந்தாக வேண்டும். அந்நியர் மத்தியில் வாழ்ந்தாக வேண்டும். ‘தம் வேரை இழந்து இன்னொரு மண்ணில் வாழ்வது அவலம்’.

புறநானூற்றில் இடம்பெற்ற இன்னும் சில மனிதர்களை, அவர்களின் அவலங்களை நமக்குள் வைத்துச் சுருக்கமாக பார்ப்போம். பூதப்பாண்டியன் இறந்த நிலையில் பூதப்பாண்டியன் தேவி தீக்குளித்தாள். கணவனை அவள் பெரிதும் நேசித்தாள். அவன் இறந்தபிறகு தான் உயிர் வாழ விரும்பவில்லை. தன்னால் வாழ முடியாது. கணவனை நம்பி, இதுவரை அவன் ஆதரவில் வாழ்ந்தவளுக்கு இனி அது போன்ற ஆதரவில்லை. பருக்கை கற்கள் மீது விரித்த பாயில் படுத்துறங்க வேண்டும். உப்பில்லாமல் வேக வைத்த கீரையை உண்ண வேண்டும். இது அக்கால நியதி. இப்படி உயிர் வாழ்ந்து அவள் என்ன சாதிக்கப் போகிறாள்? வாழ்வின் வெறுமைக்குள் என்ன கண்டெடுக்க முடியும்? அர்த்தமற்ற வாழ்வை வாழ்ந்து இனி என்ன பயன்? ஆகவே அவள் துணிந்து தீக்குளிக்கிறாள். (புறம் 246). புலவர்கள் தடுத்தும் பயனில்லை. அக்காலப் பெண்ணுக்கு வேறு வகையான வாழ்க்கையுமில்லை. சமுதாயம் பெண்ணை இப்படித்தான் வைத்திருந்தது.

இன்றும் கணவனை இழந்த பெண்கள் தீக்குளிக்கிறார்கள். உறவினர் ஆதரிக்கமாட்டார். எத்தனையோ கடன் தொல்லைகள். சொந்த வீடில்லை. வேறு ஆதரவுமில்லை. குழந்தைகளைக் காப்பாற்றவும் வழியில்லை. அந்தப் பெண் என்ன செய்வாள்? தீக்குளித்துச் சாகிறாள். இவள் துயரம், நம் துயரம் ஆகுமா? ஏன் ஆகவில்லை. நாம் சிந்திக்க வேண்டும். பாரி மகளிர் என்றோ வாழ்ந்தார்கள், அலைந்தார்கள், அவர்களுக்காக ஏன் நாம் வருந்த வேண்டும். இப்படித்தான் நாம் நினைக்கிறோமா? கவிதை அனுபவம் நமக்குள் செல்கிறதா? கவிதை வெளியிலேயே தங்கிவிட்டதா? பதவுரை, பொழிப்புரைக் கண்டுதான் நாம் கவிதையை படிக்கிறோமா? வரலாற்றனுபவம், சமூக அனுபவம் நமக்குள் ஏன் வரவில்லை? இப்படியெல்லாம் எண்ணிப் பார்த்து வருந்த நமக்கு நேரமில்லை. நம் வாழ்க்கையை நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். பின் எதற்காக நாம் இலக்கியம் கற்கிறோம்? எண்ணிப் பார்க்க வேண்டும்.

'முல்லையும் பூத்தியோ' (புறம் 242) என்று இன்னொரு பாடல். மன்னன் இறந்தான் அல்லது கொல்லப்பட்டான். நகர மக்கள் வருந்துகிறார்கள். எதிரிகள் நகரத்திற்குள் எந்நேரமும் உட்புகுவார்கள், கொள்ளையடிப்பார்கள், கொலை செய்வார்கள். இந்தச் சூழலில் முல்லை எப்படிப் பூக்கலாம் என்று கேட்கிறார் கவிஞர். முல்லை பதில் சொல்லாது. நகரத்திற்கு நேர்ந்த அழிவு முல்லைக்குத் தெரியாது. நகர மக்களோடு சேர்ந்து முல்லை எப்படிப் பூக்காமலிருக்க முடியும்? கவிஞர் தெரியாமல்தான் முல்லையைக் கேட்கிறாரா? கவிஞருக்கு தாங்க முடியாத துயரம். முல்லை பூத்திருப்பதன் அழகை அவரால் இரசிக்க இயலவில்லை. தந்தை இறந்து கிடக்கிறார். அது தெரியாமல் சிரித்துக் கொண்டே குழந்தை விளையாடுகிறான். இதைப் பார்க்கும் போது நாம் பொருமுகிறோம். நகரம் அழியட்டும். இயற்கை இயங்காமலிருக்குமா? முல்லை பூக்காமலிருக்க முடியுமா? வாழ்க்கை எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டுதான் இயங்குகிறது. வாழ்வின் முரண் இத்தகையது. இறந்தவரை அடக்கம் செய்துவிட்டு அடுத்த சில நாட்களில் வாழ்வை நாம் எதிர்கொள்கிறோம். முல்லையும் பூத்தியோ என்று கவிஞர் கேட்பது கவிதை. இதைத்தான் நாம் புனைவு என்கிறோம். துயரத்தின் மிகுதியை முல்லை பூப்பதில் உணர்கிறோம்.

புனைவு என்பதற்கு இன்னும் ஒரு சான்று. மாவீரன், படையெடுத்து நாடுகள் பலவற்றை வென்றவன். உலகத்தை ஒரு குடைக்கீழ் வைத்தவன்

இவன். இவன் இறந்துவிட்டான். இவனை அடக்கம் செய்ய தாழி வனைகிறான் குயவன். இந்தச் சிறிய தாழிக்குள் இவனை அடக்கவா முடியும்? இவனை அடக்க உலகத்தையே கொள்ளத்தக்க ஒரு பெரிய தாழியைக் குயவன் வனைய வேண்டும். குயவனுக்கு இது இயலுமா? என்று கேட்கிறார், கவிஞர் (புறம். 256) கவிதை மனம் இப்படியெல்லாம் இயங்குகிறது. கவித்துவத்தின் இயக்கம் இத்தகையது.

புறநானூற்றிலிருந்து சில கவிதைகளைச் சான்று காட்டி அவை எவ்வாறு வாழ்வியல் அனுபவங்களைக் கொண்டிருந்தன என்று பார்த்தோம். எத்தகைய வரலாற்றுச் சூழலில் இவ்வகை அனுபவங்கள் ஏற்பட்டன என்றும் குறிப்பிட்டோம். தொல்காப்பியரைப் பொறுத்தவரை முதல், கரு, உரி என வகுத்த இலக்கண மரபு அகத்திணைக்கே உரியது என்று நாம் கருத வேண்டியதில்லை. உரி என்பதையும் ஐந்திணைத் தலைவர்களின் அனுபவத்தோடு நிறுத்திக் கொள்ள வேண்டியதுமில்லை. புறத்திணை கவிதைகளுக்கும் இந்த இலக்கண மரபு பொருந்துகிறது என்பதை நாம் ஒருவாறு கண்டோம். முதல், கரு, உரி முதலிய விளக்கங்களைப் புறத்திணைப் பாடல்களோடு தொல்காப்பியரோ உரையாசிரியரோ ஏன் விளக்கவில்லை என்று நமக்குள் கேள்வி எழலாம். இப்படிப் பொருத்திப் பார்ப்பதற்கான வாய்ப்புக்களைத் தொல்காப்பியம் கொண்டிருக்கிறது என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும். புறநானூற்றில் நாம் கண்ட சில வாழ்வியல் அனுபவங்கள் அதிகளவில் உலக வழக்குகள் இவற்றைக் கவிதைப்படுத்தும் போது நாடகத் தன்மை இயல்பாக நுழைகிறது. கவிதை சொல்வது என்பது கூட உலகியல் வழக்கன்று. வாழ்வியல் அனுபவத்தை கவிதையாக்குவது நாடக வழக்கு. 'முல்லையும் பூர்த்தியோ' என்பது மட்டும் புனைவன்று. உணர்வுகளை ஒரு அடுக்கில் ஓசை நயத்தோடு, உணர்வோடு, உணர்வுக் கிளர்ச்சியோடு சோகம் கொப்பளிக்க அல்லது அவலம் வெடிப்புறச் சொல்வது கவிதை. இது புனைவு – நாடக வழக்கு.

கவிதையியல் குறித்து, கவிதையாக்க நெறி குறித்து தொல்காப்பியர் நேரிடையாக என்ன கூறினார் என்று நாம் கேட்கலாம். பொருளதிகாரத்தில் இடம் பெற்றுள்ள பொருளியல் முழுவதும் கவிதையியல் குறித்த இயலாகவே அமைகிறது. செய்யுளியலில் கவிதையின் புறவடிவம் பற்றி அதிகளவில் தொல்காப்பியர் பேசுகிறார். கவிதையின் உள்ளியக்கம் குறித்துப் பொருளியலில்தான் பேசுகிறார். பேச்சு வழக்கிலிருந்து அல்லது உரைநடை வழக்கிலிருந்து கவிதை –

கவிதை மொழி எவ்வாறு வேறுபடுகிறது என்பதைத்தான் பொருளியலில் வகுத்துரைக்கிறார் தொல்காப்பியர். நமக்கு நாமே நெஞ்சோடு பேசுகிறோம். பறவைகளோடு தாவரங்களோடு மலர்களோடு மனத்திற்குள் பேசுகிறோம். உயிரில்லாத பொருளை அல்லது விலங்குகளை, முன்னிறுத்திப் பேசுகிறோம். முல்லை நம் பேச்சைக் கேட்காது என்று தெரிந்து முல்லையோடு பேசுகிறோம். இப்படியெல்லாம் புனைந்துரைப்பது கவிதையியல் – கவிதையியக்கம். இப்படிப் பொருளியலில் சொல்கிறார். இது நவீனகால வாசிப்பு முறை.

அறத்தொடு நிற்றல், வரைவு கடாதல், உடன்போக்கு – இப்படி எத்தனையோ சந்தர்ப்பங்களில் தலைவி பேசுகிறாள். தோழி பேசுகிறாள். இவர்கள் பேசுவது புனைந்துரை. தலைவனோடு உறவு எந்தச் சூழலில் ஏற்பட்டது என்பதை உணர்வோடு தோழி புனைந்துரைக்கிறாள். சிறிதளவு நீரினை ஆண் யானை தான் உண்ணாமல் பெண் யானையை அருந்தச் செய்தது என்கிறாள். இப்படிச் சொல்வது புனைந்துரை அன்றி வேறில்லை. பொருளியலில் தொல்காப்பியர் கூறும் கவிதையியல் புறத்திற்கும் பொருந்தும்.

4. நவீன ஆய்வியல் நோக்கு என்ற முறையில் சங்க இலக்கியத்தைப் பெண்ணியம், தலித்தியம், உளவியல் என்று பல்வேறு நோக்குகளில் பயில்கிறோம். இத்தகைய பார்வை நவீனகாலப் பார்வை என்பதில் ஐயமில்லை. இவ்வகைப் பார்வைகளின் வன்மை, மென்மைகளைக் குறித்து நமக்கு ஐயம் ஏற்படுவதில்லை. சங்க இலக்கியத்தில் இடம்பெறும் தலைவன் ஆணாதிக்க மனப்பான்மை உடையவன். அவன் தன் விருப்பம் போலப் பரத்தையரோடு உறவு கொள்ளலாம். பொருளீட்டச் சென்றவன் குறிப்பிட்ட காலத்தில் திரும்பி வராமல் காலந்தாழ்த்தலாம். களவுக் காலத்தில் தலைவியின் வருத்தம் மிகுமாறு சில நாட்கள் வராமலிருக்கலாம். என்றாலும் தலைவி அவனுக்காகக் காத்திருக்க வேண்டும். ஊடல் கொள்ளலாம். நிரந்தரப் பிரிவுக்கு வாய்ப்பில்லை. தலைவி கற்போடு வாழ்ந்தாக வேண்டும். அவனையன்றி இன்னொருவர் தலைவியின் நெஞ்சுக்குள் புக முடியாது. இது போலவே,

சங்க இலக்கியத்தில் இடம்பெறும் தலைவி தலைவன் முதலியவர் உயர் குடிப்பிறப்பினர். பண்பாடு மிக்கவர்கள். இவர்களுக்கிடையில் எழும் காதல் உன்னதமானது. தூய்மையானது. அடியவர்களும் வினைவலர்களும்

தலைவன் தலைவியருக்கு நிகரானவரில்லை. இவர்களும் காதல் செய்யலாம். அந்தக் காதல் தூய்மையானதில்லை.

சங்க இலக்கியத்தை வழிவழியாகப் பயின்றவர் பெண்ணியம் / தலித்தியம் நோக்கில் பயிலவில்லை. தலைவன் தலைவியரைக் குறைத்துப் பேசவில்லை. நம் காலத்தில்தான் தலைவன் தலைவியர் உயர் குடிப் பிறந்தோர். இவர்களின் காதல் உறவு உன்னதமானது. குடியில் தாழ்ந்தவர் காதல் தூய்மை குறைந்தது என்பதை இன்று நாம் ஏற்பதில்லை. உயர்குடியில் பிறந்ததாகச் சொல்லப்படும் தலைவியின் அளவுக்குத் தலைவன் தூய்மையானவன் இல்லை. மன உறுதியுடையவனும் இல்லை. தலைவியும் தான் தலைவனுக்கே ஆட்பட்டதாக நம்பி அவனது புறக்கணிப்பையும் தாங்கிக் கொண்டு கற்பு நெறியோடு தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்கிறாள். ஒருவகையில் இது ஆணாதிக்கத்திற்கு தன்னை ஒப்புக் கொடுக்கிற நிலை. இதில் ஆளுமை வளர்ச்சிக்கே இடமில்லை. குடியில் தாழ்ந்தவர் என்பவர்களுக்கிடையிலும் எழும் காதல் உணர்வை நாம் மதிக்கத்தான் வேண்டும். காதல் உணர்வு மனிதரை மேம்படுத்துகிறது. மனிதப் பண்பை மேம்படுத்துகிறது. காதல் என்பது உயிர்க்குணம். இப்படி நாம் இன்று மதிக்கிறோம்.

பெண்ணியம் என்றும் தலித்தியம் என்றும் இலக்கியத்தின் மீது பார்வையை செலுத்துவது தவறில்லை என்ற போதிலும் இலக்கியம் குறித்த மதிப்பீட்டை இவ்வாறு செய்வது சாத்தியமில்லை. பெண்ணியம் தலித்தியம் என்பவை சமூகவியல் சார்ந்த பார்வைகள். சமூகவியல் நோக்கில் இவை குறித்து ஆராய்வது முதற்கடமை. உண்மையில் பெண்ணியம், தலித்தியம் என்பவை தன்னளவில் முழுமுதல் பார்வையல்ல. சமூகவியலில் வேர் கொண்ட பார்வைகள். ஆணாதிக்கம் என்பது தன்னளவில் முழுமையானதல்ல. வரலாற்றுச் சூழலில் தாய்வழிச் சமூகம் தன் முதன்மையை இழந்த நிலையில் தந்தை வழிச் சமூகம் மேலுக்கு வருகிறது. தனியுடைமையும் அரசதிகாரமும் சமூகத்தில் தம்மை வலுப்படுத்திக் கொள்கிற நிலையில் இதற்காகச் செயல்படும் ஆண் மக்களும் ஆதிக்க உணர்வை இயல்பாகவே பெறுகின்றனர். சமூகத்திற்குப் பொதுவான நிலத்தை மக்களிடமிருந்து அபகரிக்க வேண்டும். அதைப்போலவே சமூகத்தின் தலைமையில் இருந்தவர் தனக்கு நெருக்கமாகச் சிலரைப் பலரைத் திரட்டிக் கொண்டு சமூக விளைச்சலில் அவர்களுக்கு கூடுதலான பங்கைக் கொடுத்து, கூடுதலான அதிகாரத்தையும் வழங்கித் தன்னை முதன்மைப்படுத்திக் கொள்கின்றனர்.

இவ்வகையில்தான் ஆண்களுக்கு அதிகாரம் சேர்கிறது. ஆதிக்க உணர்வு வளர்கிறது. வரலாற்றுக் காலத்தில் இராணுவம், தொழில், நிர்வாகம், காவல் துறையில் பணி என்று பல வகைகளிலும் ஆண்களுக்குள் ஆதிக்க உணர்வு குவிகிறது. இவர்கள் பெண்களை குடும்ப எல்லைக்குள் ஒடுக்கி வைக்கின்றனர். தொழில், நிர்வாகம் முதலியவற்றில் ஆதிக்கம் செய்த அதே ஆண் குடும்பத்திற்குள்ளும் தலைவனாக இருந்து மனைவியை ஒடுக்குகிறான். வரலாற்றுக் காலத்தில் குடும்பம், அரசு, சமூகம் ஆகியவற்றின் உருவாக்கங்கள் ஒன்றுக்கொன்று உதவுவதாகவும் ஒன்றினுள் மற்றது ஊடுருவுவதாகவும் செயல்படுகின்றன. குடும்பத்தின் எல்லைக்குள் பெண்ணின் மீது ஆதிக்கம் செய்யும் ஆணை, அவன்தான் ஆதிக்கத்திற்கு முதற்காரணம் எனக் குற்றம் சொல்ல முடியாது. ஒட்டு மொத்தமான சமூகச் சூழலில் ஆதிக்கம் நடைபெறுகிறது.

இதன் கருவியாக ஆண் செயல்படுகிறான் (இதே இடத்தில் பெண் இருந்தாலும் ஆதிக்கம் செய்வாள்). குடும்பச் சூழலில் பெண்ணைத் தனக்கு அடிமையாக்கி, அவள் மூலம் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டு அதனாலேயே உடல்திறனோடு, மனத் துணிவோடு இருக்கும் ஆண்மகன் புறஉலகத்தில் ஆதிக்க உணர்வோடு கூடுதலாகச் செயல்படுகிறான். புறஉலகத்தின் உள்ளும் தொழில் முத்லிய நிறுவனத்தில் ஊழியனாக இருந்து அங்கு மரியாதைக் குறைவு முதலியவற்றை அனுபவித்த போதிலும் குடும்பத்திற்குள் வரும்போது அதை நிறைவு செய்யும் பொருட்டுப் பெண் மீது ஆதிக்கம் செய்கிறான். இப்படித்தான் குடும்ப அமைப்பு வலுப்பெறுவதோடு அரசு முதலிய நிறுவனங்களும் வலுப்படுகின்றன. இதேபோலத்தான் சாதி அமைப்பின் உள்ளும் ஆதிக்கம் செயல்படுகிறது.

# 4. சங்க இலக்கியம் – செவ்வியல் நோக்கு

1. சங்க இலக்கியம் குறித்து மார்க்சியரின் ஆய்வுகள் மிக விரிவாக இல்லையெனினும் குறிப்பிடத்தக்க முறையில் சில ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. சங்க இலக்கியக் காலம் குறித்துப் புலமையாளர்களின் காலவரையறையிலிருந்து பெரிதும் வேறுபட்டுச் சங்க காலத்தைக் கி.பி. 400க்குப் பிறகு தள்ளுகின்றனர். புலமையாளர் நெறி மார்க்சியருக்கு உடன்பாடில்லை. தமிழின் தொன்மை குறித்து மார்க்சியர் உவப்புக் கொள்வதில்லை. வையாபுரியார் மார்க்சியர் இல்லையெனினும் அவர் வகுத்த காலவரையறை மார்க்சியருக்கு உடன்பாடு. வையாபுரியாரிடம் வடமொழிச் சார்பு அதிகம். காரணம் புரியவில்லை. வையாபுரியாரிடம் சமூக ஆய்வுமுறைக்கு அழுத்தமிருந்தது. இலக்கியத்தைக் குறிப்பிட்ட கால அடிப்படையில் வைத்து ஆராய்வது புதியதன்று. காலத்தை அடிப்படையாகக் கொள்வதும், காலம் சார்ந்த சமூகத்தை அடிப்படையாகக் கொள்வதும் வேறுவேறன்று. மார்க்சியர்தான் வரலாற்றுக்கும் சமூகத்துக்கும் அழுத்தம் தந்து தமிழிலக்கிய ஆய்வை முதன்முறையாக மேற்கொண்டனர். வரலாறு என்பதையும் வர்க்கச் சார்பு நிலையிலிருந்து வகுத்துக் கொண்டனர். இனக்குழுச் சமூகம், அதனையடுத்து உடைமைச்சமூகம் என்ற ஆய்வு மார்க்சியரிடம்தான் அழுத்தமும் தெளிவும் பெறுகிறது. இனக்குழுச் சமூக ஆய்வு என்பது மானுடவியல் மற்றும் தொல்லியல் சார்ந்த ஆய்வு. இத்தகைய ஆய்வு மார்க்சிய நோக்கில் தெளிவு பெறவில்லை. கைலாசபதி சங்ககாலத்தை வீரயுகம் என்று வகுத்துக் கொண்டதற்கும் மார்க்சிய நோக்கிலான வரலாற்றுக் கால வரையறைக்கும் உறவு சொல்லமுடியாது.

வீரயுகம் என்பதை தெ.பொ.மீ. முதலியவர் சரியாகவே மறுத்தனர். கைலாசபதிக்குப்பிறகு வீரயுகம் என்ற கருத்தை மார்க்சியர் கைவிட்டனர். வாய்மொழிப் பாடல்கள் என்பவை பாணர்களின் பாடல்கள். சங்ககாலத்திலும் பாணர், விறலியர், கூத்தர் முதலியவர்களைப் பெரியளவில் காண்கிறோம். பாணர்களின் தொடர்ச்சியாகவே புலவர்களும் புலமை நெறியும் வளர்ச்சி பெற்றது என்பதில் ஐயமில்லை. பாணர்கள் இல்லாமல் புலவர்கள் இல்லை. எந்த ஒரு சமூகத்திலும் தொடக்க நிலையில் பாட்டும் கூத்தும் இணைந்தே இருந்தன. புலமை நெறி என்று

வரும்போது பாடல் என்பது செய்யுளாகிறது. கூத்துமரபு பெரும்பாலும் தொடர்வதில்லை. சிந்தனையாளர் வளர்ச்சி உணர்வைப் பின்னுக்குத் தள்ளுகிறது. பாடல் என்பது இசை என்ற தனித் துறையாகிறது. தமிழ்ச் சமூகத்தில் பாணர், விறலியர், கூத்தர் ஆகியவர்களின் வரலாறு இலக்கிய ஆய்விலிருந்து தனியே பிரிந்த ஆய்வாகிறது. இன்றுவரை இலக்கிய ஆய்வும் இசை, கூத்து என்ற ஆய்வும் இணையவில்லை. பாணர் மரபு என்ற பெயர் தொடரவில்லையெனினும் நாட்டார்கலை என்ற பெயரில் தமிழ்மரபு வலுவாகவே தொடர்கிறது. நாட்டார் மரபிற்கு அழுத்தம் தரும் போக்கு இன்று அதிகரித்து வருகிறது. இலக்கியத்தின் மக்கட்சார்பு என்பது இதன்மூலம் இன்று ஏற்கப்படுகிறது. நாட்டார் மரபு இல்லாமல் வேறு இலக்கியங்கள் இல்லை என்ற உண்மை இன்று தெளிவாகிறது. எத்தகைய புலமையாளரும் தம் ஆழ்மனத்தில் நாட்டார் மரபோடு உறவு கொண்டிருப்பது இன்று தெளிவுபட்டிருக்கிறது. இவ்வகையில் கைலாசபதி நினைவு கூர்தற்குரியவர்.

சங்க இலக்கிய ஆய்வை நாட்டார் மரபோடு இணைத்து ஆய்வதற்கான இன்றியமையாமையை நாம் அழுத்திச் சொல்ல முடியும். இவ்வகையில் சங்க இலக்கியத்தின் உள்ளியங்கும் மானுடவியல், தொல்லியல் கூறுகள் கூர்மையான ஆய்வுக்குரியவை. மார்க்சியம் இத்தகைய ஆய்வுக்குத் தனக்குள் வழிவிட வேண்டும். மார்க்சியத்திற்கும் மானுடவியலுக்கும் நெருக்கமான உறவு தேவை. இலக்கிய ஆய்வு என்பதும் இவ்வகையில் மானுடவியலைப் புறக்கணித்துச் செய்யக்கூடியதாக இல்லை.

2. சங்க இலக்கிய ஆய்வை வரலாற்று நோக்கில் விரிவாக ஆய்வதற்கு மார்க்சியம்தான் சரியான பார்வையாக அமைய முடியும் என்பதை மார்க்சியரின் ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. வானமாமலை சங்க இலக்கியத்தில் இடம்பெற்ற பொருள் முதல்க் கூறுகளை விரிவாகத் தொகுத்துக் கொள்ள முனைந்தார். கருத்து முதல்வாதக் கூறுகளுக்குப் புலமை நெறியாளர்கள் அழுத்தம் கொடுத்த நிலையில் இவர்களோடு முரண்பட்டு ஒரு மார்க்சியர் என்ற முறையில் சங்க இலக்கியத்தில் இடம்பெற்ற பொருள்முதல்வாதக் கூறுகளைத் தொகுத்துக் கொண்டதை ஏற்க முடியும். மார்க்சியம் என்பதே வரலாற்றில் பொருள் முதல்வாத கூறுகளுக்கு அழுத்தம் தரும் போக்கு என்ற தொடக்ககால புரிதலுக்கு இது பொருத்தமானதுதான். இலக்கியம் என்பதையே பொருள் முதல்வாதமெனச் சுருக்கிப் பார்ப்பதாகவும்

இத்தகைய ஆய்வுமுறை முடிந்துவிடும். வரலாற்றில் தொடக்கக்காலத்தில் பொருள்முதல்வாதக் கூறுகள்தான் முதன்மைபெறும் என்பதில் ஐயமில்லை. கருத்துமுதல்வாதக் கூறுகளும் வரலாற்றின் தொடக்க முதலே இருந்துவரும் கூறுகள்தான். பொருள்முதல்வாதமும் கருத்துமுதல்வாதமும் தமக்குள் முரண்படுவது எனினும் எந்த மனிதனுக்குள்ளும் எந்தக் காலத்திலும் எந்த இலக்கியத்தினுள்ளும் ஒத்தும் முரண்பட்டும் இருக்கத்தான் செய்யும். இலக்கிய ஆய்வு என்பது மனிதனைப்பற்றிய ஆய்வாகவே இயங்க முடியும். பழங்காலச் சூழலில் கருத்து முதல்வாதக் கண்ணோட்டம் இல்லாமல் வரலாறு இல்லை. கருத்து முதல்வாதம் என்றவுடன் இது பிற்போக்கு என்றும் பொருள் முதல்வாதம் முற்போக்கு என்றும் கறாரான முடிவுக்கும் இடமில்லை. மார்க்சியம் இப்படித் தனக்குள் சுருங்கிவிட வேண்டாம். கருத்துமுதல்வாதம் எதனுள்ளும் பொருள் முதல்வாதக் கூறுகள் இல்லாமல் இல்லை. இதைக்கண்டறிவது மார்க்சிய ஆய்வில் ஒரு முக்கிய கூறு. கருத்துமுதல்வாதக் கண்ணோட்டம் எப்படி எதனால் அழுத்தம் பெறுகிறது என்பதையும் மார்க்சியம்தான் விளக்கியாக வேண்டும். சங்க இலக்கியத்தினுள் பொருள்முதல் கூறுகளைக் கண்டறிந்த வகையில்' வானமாமலை சங்க இலக்கிய ஆய்வில் ஒரு முன்னோடி என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

இலக்கிய ஆய்வில் பொருள்முதல்வாதக் கூறுகளுக்கு அழுத்தம் தரும் போக்கு, ஒருவகையில் புலமை நெறியை மறுக்கும் நிலையில் தொடங்கி இறுதியில் சமகால அரசியல் நோக்கி ஆய்வாளர்களையும் வாசகர்களையும் உந்துவதாகவும் இருந்தது. இருபதாம் நூற்றாண்டுச் சூழலில் கருத்துமுதல்வாதமும், பொருள்முதல்வாதமும் தமக்குள் கடுமையாகப் போராடின. அடித்தள மக்கள் வாழ்வில் முன்னேற்றம் தேவை. உழைப்பின் விளைவில் அவர்களுக்குக் கூடுதலான பங்கு தேவை.

அரசதிகாரத்தினுள்ளும் அவர்களுக்கான இடம் உறுதிபடவேண்டும். உழைக்கும் வர்க்கம்தான் வரலாற்றுப் போக்கை நிர்ணயிக்க வேண்டும். அதிகார பீடத்திலிருந்து காங்கிரசை மட்டுமல்லாமல் தி.மு.கவையும் ஒதுக்க வேண்டும். மார்க்சியரின் இத்தகைய நோக்கத்திற்குச் சமூக வாழ்விலும் சரி, இலக்கிய ஆய்விலும் சரி பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்திற்கு அழுத்தம் தருவது தேவையாகிறது. இத்தகைய கண்ணோட்டம் காந்தியத்தை மறுக்கும். அதேசமயம் பெரியாரியத்தையும் மறுக்கும். சமயவாதத்தை முற்றாகவே மறுக்கும். தமிழ்ப்பண்பாடு, நாகரிகம் என்பனவற்றை முழுமைப்படுத்தும்

போக்கையும் இது மறுக்கும். சங்ககாலத்தில் மூவேந்தர் பெருமை பற்றிய பேச்சையும் சங்ககாலம் பொற்காலம் என்ற பெருமைப்படுத்தலையும் இத்தகைய ஆய்வு மறுக்கும். சங்க காலத்தில் புலவர்கள் பாணர்கள் முதலியவர் வறுமைப்பட்டிருந்ததையும் மன்னர்களுக்கிடையில் இடைவிடாமல் போர்கள் நடந்தது பற்றியும் விரிவாக எடுத்துக்காட்டுவதற்கு இத்தகைய போக்கு உதவும். தி.மு.க.வின் அரசியலை மறுப்பதற்கும் இத்தகைய ஆய்வுமுறை பெரிதாகப் பயன்படும். நெடுங்காலத் தமிழ் மரபில் கருத்துமுதல் வாதக்கூறுகள் மேலோங்கி இருந்தன என்பதில் ஐயமில்லை. மார்க்சியர் தமிழ்ச் சமூகத்தில் நுழைந்த நிலையில்தான் மனிதவாழ்க்கை மற்றும் வரலாறு பற்றிய கண்ணோட்டம் தெளிவுபட்டது என்பதை நாம் அழுத்திச் சொல்ல வேண்டும்.

20ம் நூற்றாண்டில் தமிழகத்தின் எத்தகைய வரலாற்றுச் சூழலில் மார்க்சியம் நுழைந்தது, வளர்ச்சி பெற்றது, என்ற ஆய்வும் இங்கு தேவைப்படுகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் தமிழகச் சூழலில் செல்வாக்குப் பெற்றுவரும் சூழலில் இதற்கு எதிராக மார்க்சியம் தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. தமிழிலக்கியத்தை திமுக இயக்கம் தன் வளர்ச்சிக்குப் பெரிய அளவில் பயன்படுத்திக் கொண்டது. இதற்கு எதிரிடையாகத்தான் கலை இலக்கியப் பெருமன்றத்தை 1960 வாக்கில் ஜீவா தோற்றுவித்தார். இதற்கு முன்னரே சாதி, மதம், பார்ப்பனியம் ஆகியவற்றை எதிர்க்கும் முறையில் பெரியாரியம் செல்வாக்குப் பெற்ற சூழலில் திராவிடர் என்ற இனப்பார்வையை மறுக்கும் முறையில் மார்க்சியம் இங்கு செயல்பட்டது.

ஐரோப்பாவில் ஹிட்லர் மூலம் ஆரியர் இனம் என்ற போக்கு செய்த அழிவுகளுக்கு எதிராக ஐரோப்பியச் சூழலில் சோவியத் ஒன்றியம் செயல்பட்டது. இனப் பார்வை என்பது மார்க்சியத்திற்கு உடன்பாடான பார்வையன்று. இந்தியாவில் குறிப்பாகத் தமிழகச் சூழலில் திராவிட இயக்கம் முன்வைத்த இனப்பார்வையையும் இங்குள்ள மார்க்சிய இயக்கம் அழிவுப்பார்வையாகவே மதிப்பிட்டது. இதற்கும் ஒரு காரணம், மார்க்சிய இயக்கத்தினுள் பார்ப்பனர் பெற்றிருந்த செல்வாக்கு. இத்தகைய போக்கு இந்தியாவில் மார்க்சிய கட்சிக்குள் தொடக்கம் முதலே இருந்ததாகத்தான் நாம் கருத வேண்டும். இந்திய வரலாற்றை வேத நாகரிகத்திலிருந்து தொடங்குவது என்ற போக்கு ஏற்கனவே இங்கிருந்தது. பிரிட்டி ார் இங்கு வந்த காலத்தில் தான் இந்திய வரலாறு எழுதப்பட்டது. பிரிட்டி ாரிடம்

இத்தகைய ஆய்வு நோக்கு ஏற்பட்டதற்கு முதன்மையான காரணம் என வடக்கிலிருந்த பார்ப்பனர், மாக்ஸ்முல்லர், வில்லியம் ஜோன்ஸ் முதலியவர்களை இங்கு நினைவுப்படுத்திக் கொள்ளலாம். சமஸ்கிருதம்தான் அனைத்திந்திய மொழிகளுக்கும் மூலம் என்ற கருத்தும் தொடக்க காலத்தில் இம்முறையில்தான் ஏற்பட்டது. ஹரப்பா நாகரிகம் கண்டறிந்த பிறகும் இத்தகைய போக்கு மாறுவதாக இல்லை. ஆங்கிலேயருக்கு எதிரான விடுதலை இயக்கத்தினுள்ளும் காங்கிரஸ் கட்சியின் மூலம் பிராமணர்களின் செல்வாக்கு மேலோங்கியே இருந்தது. இத்தகைய போக்கை இந்திய கம்யூனிஸ்ட்டு இயக்கம் கேள்விக்கு உட்படுத்தவில்லை. தமிழகத்தில் செயல்பட்ட கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கும் இத்தகைய கருத்தே உடன்பாடாக இருந்தது. இந்தியா ஒரு துணைக்கண்டம் என்ற கருத்து அழுத்தம் பெறாத அன்றைய சூழலில் இந்திய தேசியம் என்ற கருத்தே நிலவியது. இந்திய தேசியம் என்ற கருத்தமைவினுள் இந்துத்துவ செல்வாக்கு இருக்கத்தான் செய்தது.

கம்யூனிஸ்ட் இயக்கத்தவரைப் பொறுத்தவரை மதம் என்ற பார்வை அவர்களுக்கு உடன்பாடு இல்லை என்ற போதிலும் சாதி, மதம் என்பனவற்றுக்கு எதிரான உணர்வு அவர்களுக்குள் பெரும்பாலும் இல்லை. அரசியல் உணர்வுதான் இவர்களிடம் மேலோங்கியிருந்தது. அம்பேத்கரை இவர்கள் ஏற்காதது போலவே பெரியாரையும் இவர்கள் ஏற்கவில்லை. பொருளியல் சக்திகளுக்கு இவர்கள் முதன்மை தந்ததன் விளைவாகச் சாதி, மதம் முதலிய உணர்வுகளின்மீது இவர்கள் கவனம் செல்லவில்லை. இன்னும் சரியாகச் சொல்வதென்றால் இவர்களுக்குள்ளும் இவர்களேயறியாமல் சாதி மத உணர்வுகள் மறைந்திருக்கவும் கூடும். இதன் காரணமாகவும் சாதி, மதம், பார்ப்பனியம் என்பன பற்றிப் பெரியார் சாடிய பொழுது பெரியாருக்கு எதிராகவே இவர்கள் இருந்தனர். வரலாற்றைத் தீர்மானிப்பது பொருளியல் சக்திகள் என்பதுதான் மார்க்சியம் என்ற புரிதலோடு இவர்கள் இருந்தார்கள். வர்க்கப்பார்வைதான் இவர்களுக்குரிய ஆய்வுமுறை.

பெரியாரும் சிங்காரவேலரும் ஒரு கட்டம் வரையிலும் இணைந்தேயிருந்தனர். இன்னொரு கட்டத்தில் பெரியார் தனி இயக்கத்தைப் படைத்துக் கொண்டார். காந்தியத்திற்கு எதிராக விடுதலை இயக்கத்திற்கு எதிராகப் பெரியார் தீவிரமாக இயங்கினார். விடுதலை இயக்கம் என்பது அரசியல் விடுதலை, பொருளியல் விடுதலை, சாதிமதம் முதலியவற்றிலிருந்து

விடுதலை என்று பலவற்றை உள்ளடக்கிய ஒருமை இயக்கமாகவுமில்லை. தொடக்கத்திலிருந்த இத்தகைய நிலை பிறகு மாறிவிட்டது. விடுதலை இயக்கம் ஒருங்கிணைந்த பார்வையோடு செயல்பட்டிருந்தால் மார்க்சியத்திற்குள்ளும் இவ்வகைப் பார்வை அழுத்தம் பெற்றிருக்கக்கூடும். ஆனாலும் மேற்கு/வடக்கிலிருந்து வந்த மார்க்சியம் பொருளியல் தளத்திற்கே அழுத்தம் தந்ததன் விளைவாக விடுதலை இயக்கத்தின் ஒருமைப் பார்வையிலிருந்து மார்க்சியர் தம்மை விலக்கிக் கொள்வதும் சாத்தியம்தான். எப்படி இருந்தபோதிலும் மார்க்சியரின் வர்க்கப்பார்வையும் திராவிட இயக்கத்தின் இனப்பார்வையும் தமக்குள் முற்றாகவே முரண்பட்டன. இணைந்து செல்வதற்கான இடமே இல்லை என்று ஆனநிலையில் திராவிட இயக்கத்தோடு மார்க்சியர் முரண்பட்டதில் வியப்பில்லை.

பெரியாருக்குள்ளும் சமதர்ம உணர்வு இல்லாமலும் இல்லை. பொதுவுடமை இயக்கம் அரசின் அடக்குமுறைக்கு உள்ளாகிய போது பெரியார் இவர்களுக்குத் தன்னால் இயன்றவரை அனுசரணையாகவேயிருந்தார். இன்று வரையிலும் கூட திராவிட இயக்கத்தின் இனம் என்ற பார்வையோடு மார்க்சியர் முரண்படுகின்றனர். உண்மையில் திராவிட இயக்கத்தினுள் செயல்பட்ட இனப்பார்வை என்பது தமிழ்த் தேசியம் என்ற இனப்பார்வைதான் என்பதை சம்பத் முதற்கொண்டு பலரும் புரிந்து கொண்டபோது அறிஞர் அண்ணாவைப்போலவே மார்க்சியரும் இப்பார்வையை ஏற்க முடியாமல்தான் இருந்தனர். அன்றியும் தமிழ்த்தேசியம் என்பதைக்கூட மார்க்சிய இயக்கத்திலுள்ள பெரும்பாலானவர்களால் ஏற்க முடியவில்லை. இனப்பார்வை என்பது பிரிவினைப் பார்வை என்றே இவர்கள் பொருள்படுத்திக் கூறுகின்றனர். பிரிவினை என்பதை மாபெரும் தவறாகவும் மதிப்பிடுகின்றனர். இப்படி மார்க்சியர் தம்மையே முடக்கிக் கொள்ளவும் செய்கின்றனர்.

ஒன்றை உறுதியாகச் சொல்லமுடியும். தமிழ்த் தேசியம் என்ற பார்வை மார்க்சியருக்குள் அழுத்தமாக இடம் பெறாததன் ஒரு விளைவு சங்க இலக்கியம் உள்பட நெடுங்காலத் தமிழ் இலக்கியத்தை இவர்களால் நேசிக்கவே இயலவில்லை. இவர்களுக்குள் ஜீவா, ரகுநாதன் முதலியவர் விதிவிலக்கென்று சொல்லலாம்.

4. மார்க்சியம் உள்நுழைந்ததின் விளைவாகத் தமிழிலக்கிய ஆய்வுகளில் வரலாறு, பொருளியல், சமூகம், பண்பாடு குறித்த கூறுகள் அன்று தொடங்கி இன்றுவரை தெளிவுபட்டு வருகின்றன.

இத்தகைய முறையில் மார்க்சிய ஆய்வுகள் தொடங்கியதன் விளைவாகவே தமிழிலக்கியம், மட்டுமல்லாமல் தமிழக வரலாறு, பொருளியல் முதலியனவும் இந்திய வரலாறு முதலியவற்றின் கூறுகள் என்று மட்டுமல்லாமல் உலக வரலாற்றினுள் தமிழிலக்கிய வரலாறு, பொருளியல் முதலியவற்றையும் வைத்துப் பார்க்கின்ற பார்வை நமக்கு வசப்படுகிறது. அதாவது தமிழக வரலாற்றோடு மட்டும் நாமில்லை இந்திய வரலாற்றுக்குள்ளும் உலகளவிலான வரலாற்றினுள்ளும் நாம் இருக்கிறோம், இயங்குகிறோம் என்பது புரிகிறது. தமிழ் இலக்கியம் என்பதும் தமிழ்ப் பண்பாடு முதலியனவும் உலக இலக்கியத்தின் பகுதியாகின்றன. செம்மொழி என்று நாம் இன்று உணர்வோடு பேசுகிறோம். செம்மொழி என்று பேசுவதற்கும் இதுவே பொருளாகிறது. உலகிற்குள் நாம் எங்கிருக்கிறோம்? உலக வரலாற்றினுள் நமக்குரிய இடம் என்ன? உலகத்திற்கு நாம் தருவதென்ன? உலகிலிருந்து நாம் பெறுவதென்ன என்றெல்லாம் நாம் இத்தகைய பார்வையிலிருந்தே புரிந்து கொள்கிறோம்.

இத்துடன் இன்னும் ஒன்றையும் அழுத்திச் சொல்லலாம். இத்தகைய விரிவான பார்வையை நாம் பெறுவதற்கான கருவி என்பது மார்க்சியம் தான். வரலாறு, பொருளியல் முதலியன எல்லாம் என்ன என்பதற்கான வெளிச்சத்தைத் தருவது மார்க்சியம்தான். தமிழர்களாகிய நமக்கு மட்டுமல்லாமல் உலகில் உள்ள எந்த சமூகத்தினருக்கும், அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் இப்படி உலகம் ஒன்று, வரலாறு ஒன்று, மனித சமூகம் ஒன்று என்ற உணர்வை தருவது மார்க்சியம்தான். 19ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற மார்க்சியம்தான் இப்படி ஒரு விரிவான பார்வையில் உலகை இணைக்கிறது.

மேலும் ஒன்று இலக்கியத்தை இலக்கியமாகவே நாம் பயிலமுடியாது. வரலாற்றினுள் வைத்து இலக்கியத்தை நாம் பயில வேண்டும். வரலாற்று இயக்கம் என்பதனுள் பொருளியல் முதலிய எத்தனையோ இயக்கங்கள் உள்ளன. இலக்கியம் கூட ஒரு இயக்கம்தான். மொழி என்பதற்கும் ஒரு இயக்கம் உண்டு. இப்படி இலக்கியத்தைப் பயில்வதன் மூலம் வரலாற்றை, உலகளாவிய வளங்களை நமக்குள் செரித்துக் கொள்வதன் மூலம் நாம் மேலும் சிறந்த மனிதராய் ஆகிறோம். இத்தகைய விரிந்த பார்வையின் மூலமே சாதி, மதம், தேசம், இனம், மொழி என்பனவற்றைக் கடந்து மெய், மெய்யியல் பார்வையை நாம் பெறுகிறோம். இத்தகைய மனிதவாழ்வுக்கு விரிவான அர்த்தம் சொல்கிற

மெய்யியல் பார்வையைத் தமிழிலக்கியம் குறிப்பாக சங்க இலக்கியத்தினுள்ளிருந்து நாம் பெறுகிறோம்.

இலக்கியத்தை இலக்கியமாகப் பயில்வதற்கு மார்க்சியம் உதவியாக இருக்குமா? இலக்கியத்தில் அழகியல் பற்றிப்புரிந்து கொள்வதற்கு மார்க்சியம் எவ்வகையில் உதவும். ஓர் இலக்கிய ஆக்கத்திலிருந்து வரலாறு, பொருளியல் வர்க்கம், பண்பாடு என்றெல்லாம் பிரித்து தனிப்படுத்தி பார்ப்பதன் மூலம் இலக்கியம் என்பதன் முழுமைச் சிதையத்தானே செய்யும். ஆனால் இவ்வகைக் கூறுகளை பகுத்த பின்னர் தொகுத்துப் பார்ப்பதன் வழியே இலக்கியம் கூடுதல் அழகைப் பெறுமா? பெண்ணியம் தலித்தியம் என்றெல்லாம் பிரித்துப் பார்ப்பது மார்க்சிய நெறியாகுமா? அதேபோல மார்க்சியத்திற்கு என மெய்யியல் உண்டா?

சங்க இலக்கிய ஆய்வின் வழியே தமிழ்ச் சமூகத்தின் அரசுருவாக்கம் பற்றியும் சமூக உருவாக்கம் குறித்தும் தற்காலத்தில் ஆய்வுகள் முன்வந்திருக்கின்றன. சிக்கலானவை எனினும் இவ்வகை ஆய்வுகள் தேவையானவை. சங்க இலக்கியத்தின் கூறுகளைத் தனித்தனியே வகைப்படுத்திப் பார்க்கும் முறையில் இலக்கிய நயம் முதலியவை நமக்குத் தெளிவுபடலாம். சங்க இலக்கியம் ஒரு காலத்தின் தொகுப்பிலக்கியம் — காலத்தின் தேவைக்காகத் தொகுக்கப்பட்ட இலக்கியம். ஏன் இவை தொகுக்கப்பட்டன? தொகுக்கும் பொழுதே தொகுத்தவர்க்குள் ஒரு நோக்கம் செயல்பட்டிருக்க வேண்டும். அந்த நோக்கம் என்னவாக இருக்கமுடியும் என்ற முறையில் கடந்த சில ஆண்டுகளுக்குள் சங்க இலக்கியம் குறித்த ஆய்வுகள் செய்யப்படுகின்றன. அரசுருவாக்கத்திற்கு அல்லது சமூக உருவாக்கத்திற்கு இவ்வகைத் தொகுப்பு முயற்சி பயன்பட்டிருக்க வேண்டும் என்ற நோக்கில் இவ்வகை ஆய்வுகள் எழுந்துள்ளன.

இனக்குழுக்களாக பல்வேறு வட்டாரங்களில் பிரிந்து கிடக்கிறவற்றை ஒரு தேவை கருதி இணைக்கும் முறையில்தான் அரசுருவாக்கம், சமூக உருவாக்கம் நடைபெற வேண்டும். என்ன தேவை? யாருக்கான தேவை? பிரிந்தே கிடந்திருக்க முடியுமா? இணைப்பதன் மூலம் தோன்றும் ஒரு புதிய சமூகம் எத்தகைய புதுமையை, ஆக்கத்தை தனக்குள் கொண்டிருக்கக் கூடும்? முன்னையவற்றில் எவற்றை இழந்தபிறகு எவற்றை ஒன்று திரட்டி எப்படி இணைத்துச் செய்திருக்க முடியும் என்ற கேள்வியோடு இவ்வகை ஆய்வுகள் தொடர்கின்றன.

ஒரு அரசன்தான் இதைச் செய்கிறானா? சான்றோர்க்கு, கவிஞர்க்கு, கலைஞர்க்கு இதில் என்ன பங்கு என்றும் கேள்விகள் எழுகின்றன. முன்னைய கால வரலாற்றை எப்படிப் பார்ப்பது என்றும் நமக்குள் கேட்டுக் கொள்கிறோம். வரலாற்றின் உள்இயக்கம் என்ன? (அ) வரலாறு எப்படிக் கட்டமைக்கப்படுகிறது? சமூகத்தில் தொழிற்பிரிவினைகள் ஏற்படுகின்றன. தொழில் வளர்ச்சி ஏற்படுகிறது. வெவ்வேறு இடத்திலிருந்து மக்கள் கூடுகிறார்கள், நகரங்கள், நாகரிகங்கள், அறிவு வளர்ச்சி, மொழிவளர்ச்சி என்பனவும் ஏற்படுகின்றன. இலக்கண உருவாக்கம் என்பதும் இவ்வகையில்தான் நடைபெறுகின்றது. இலக்கணம் தொகுக்கப்படுகிறது. இலக்கியம் என்பது கூட இப்படித்தான் உருவாகிறது. ஒரு சமூகப் பிரிவுக்கு என உள்ள பாடல், கவிதை தொகுக்கப்படும் ஒரு பெரிய சமூகத்திற்கு உரியதாகிறது. மனிதனுக்குள்ளும் ஒருங்கிணைப்பும் புத்தாக்கமும் நடைபெறுகின்றன. மனிதன் புதியவனாகிறான். புதிய பாடல்கள் எழுகின்றன. பலவகை இசை, பாடல்கள், கலைகள் ஒன்றிணைகின்றன. சமூகம் எப்படி உருவாகிறது? தனித்தனிப்பாடல்களை மட்டும் பார்த்தால் இந்த உண்மை புலப்படாது. பல பாடல்களைத் தொகுத்து இணைத்துப் பார்க்கும்பொழுது புதுமை, பொதுமை தெரியும். இவ்வகைப்பார்வையும் மார்க்சியருக்குரியவை. வரலாற்றில் வரலாற்றின் போக்கில் எவையெல்லாம் இணைகின்றன என்று மார்க்சியன்தான் கவனிக்க முடியும். இவ்வகை ஆய்வும் நம்கால வரலாறு/சமூகம் பற்றிய புரிதலோடு கூடிய ஆய்வு. வர்க்க முரண்பற்றிய ஆய்வுமாகும்.

குறிப்பு: தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகமும் செம்மொழி உயராய்வு நிறுவனமும் இணைந்து நடத்திய கருத்தரங்கில் ஞானியின் தொடக்கவுரை.

# 5. பேராசிரியர் ராஜ்கவுதமனின் சங்க இலக்கிய ஆய்வுகள்

- திறனாய்வு

1. புதுவையில் காஞ்சிமாமுனிவர் பட்டமேற்படிப்பு மையத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றிவரும் பேராசிரியர். ராஜ்கவுதமன் தமிழிலக்கியத் துறையில் தற்காலச் சூழலில் தலைசிறந்த பேராசிரியராகவும் ஆய்வாளராகவும் பணிபுரிந்து வருகிறார். இலக்கிய 'வெளிவட்டம்' இதழைத் தோற்றுவித்து திரு. நடராசனோடு இணைந்து ராஜ்கவுதமன் பணியாற்றிய தொடக்கக்காலத்தில் மார்க்சியராகத் தமிழகத்திற்கு அறிமுகமானார். பேராசிரியர். தமிழவனின் மாணவராகவும் இருந்த காலம் முதற்கொண்டே அவரது பாதிப்புக்கு உள்ளானவர். தமிழவன் அமைப்பியல், பின்நவீனத்துவம் என்ற நோக்கில் பயணம் செய்த பொழுது அவரோடு தன்னையும் இணைத்துக் கொண்டார். அம்பேத்கரின் நூற்றாண்டு விழாவை அடுத்து தமிழகத்திலும் தலித்தியச் சிந்தனைகள் எழுச்சி பெற்றன. தலித்தியச் சிந்தனையாளர்கள் பெரியாரியத்தோடு உடன்பாடும் முரண்பாடும் கொண்டனர். இத்தகைய சூழலில் ராஜ்கவுதமனும் தமிழிலக்கிய ஆய்வைத் தலித்தியம் நோக்கில் தீவிரமாகச் செய்தார். உண்மையில் தமிழிலக்கிய ஆய்வைத் தலித்திய நோக்கில் அழுத்தம் திருத்தமாகவும் தொடர்ச்சியாகவும் விடாப்பிடியாகவும் செய்தவர் என்ற முறையில் ராஜ்கவுதமன் நம் மரியாதைக்குரியவராகிறார்.

தமிழர் பண்பாடு என்ற நூலில் பெரியபுராணம் குறித்து அவர் முன்வைத்த திறனாய்வுரைகளைத் திராவிட இயக்கத்தினர் பெரிதும் பாராட்டியதாக குறிப்பிடும் ராஜ்கவுதமன், அதே சமயத்தில் தமிழின உணர்வாளர்களும் பொருளாதாரத்திற்கும் அரசியலுக்கும் அழுத்தம் தரும் முற்போக்காளர்களும் தன் திறனாய்வை விருப்பத்தோடு எதிர்கொள்ளவில்லை என்று குறிப்பிடுகிறார். தமிழர் பண்பாடு என்று பெரிதாகப் போற்றும் தமிழின இன உணர்வாளர்களில் பெரும் பகுதியினர் வேளாளர் சாதியினர் என்று இனங்காட்டுகிறார். வேளாளர் என்று இவர் பொதுப்படையாகக் குறிப்பிட்டாலும் பார்ப்பனர் அல்லாத உயர்சாதியினர் அனைவரையும் இவர் உள்ளடக்கிப் பேசுகின்றார் என்று புரிந்து கொள்ள முடியும். மனோன்மணியம் சுந்தரனார், மறைமலையடிகள், கா.சு.பிள்ளை

விறலி போன்ற கலைஞர்கள் இழிசினராகக் கருதப்படவில்லை. மயானத்தில் சடங்கு செய்த புலையர்களும், பசை தோய்த்துத் துணியைத் தூய்மை செய்தவர்களும் தனிமனிதர் என்ற முறையில் இழிசினராகக் கருதப்பட்டனரே ஒழிய இவர்கள் சார்ந்த சமூகத்தினர் இழிசினராகக் கருதப்படவில்லை. போர்க்களத்தில் வீரர்களுக்கு உற்சாகம் தரும் முறையில் துடியை முழக்கிய துடியர்களும் தொடக்கத்தில் இழிசினராக இல்லை. இவர்களைப் போலத்தான் பாணர் முதலியவர்களும். இவர்களைப் பற்றி விரிவான விளக்கங்களைத் தொகுத்துத்தரும் ராஜ்கவுதமன், இனக்குழுச் சமூகத்தின் தலைவர்களாக இருந்து எல்லாவற்றையும் மக்களோடு பகிர்ந்து கொண்ட பாரி, காரி, ஓரி, நாஞ்சில் வள்ளுவன் முதலிய இனக்குழுத் தலைவர்களையும் பாராட்டியே பேசுகிறார்.

துடியர், பாணர், புலையர் ஆகியவர்களோடு ஐவகை நிலங்களிலும் வாழ்ந்த வேடர் முதலியவர்களையும் வேந்தரை முதன்மையாகக் கொண்ட உடைமைச் சமூகம் தொடக்க நிலையில் தாழ்த்தியது என்று ராஜ்கவுதமன் கருதவில்லை. உடைமைச்சமூகத்தின் ஆதிக்கத்திற்கு பார்ப்பனர் தேவைப்பட்டனர். சங்க காலத்தில் வடக்கிலிருந்து தமிழகத்திற்குள் நுழைந்த வைதீகப் பார்ப்பனர் வேந்தர்களை நெருங்கி இருந்ததோடு அவர்கள் ஆதரவையும் விரிவாகப் பெற்றனர். வேந்தர்களை தெய்வத்திற்கு நிகரானவர் எனப் போற்றினர். நாடு நலம் பெறவும் மழை வளம் சிறக்கவும் வேந்தர்கள் போரில் வெற்றி பெறவும் வேந்தர்களின் பொருட்டு வேள்விகளைச் செய்தனர். இத்தகைய போக்கை ராஜ்கவுதமன் விரிவாக விளக்குகிறார். தொல்காப்பியத்தில் கூறப்பட்ட நிலத்தெய்வங்கள் பார்ப்பனக் கடவுளரோடு உறவுபடுத்தப்பட்டனர். 'முருகு' முருகனான். புராணக்கதைகள் தமிழ்ச் சமூகத்திற்குள் இடம் பெற்றன. இனக்குழுச் சமூகத்தின் பொதுமை அறம் அடுத்து வந்த உடைமைச் சமூகத்திற்குத் தேவையில்லை. இந்நிலையில் வேந்தரின் ஆதிக்கத்திற்கு தேவையான கருத்தியலைப் பார்ப்பனர் தமிழ்ச் சமூகத்தில் விதைத்தனர். வரலாற்றில் நிகழ்ந்த இப்போக்கைக் கீழ்க்கண்டவாறு ராஜ்கவுதமன் தொகுத்துத் தருகிறார். வேந்தரைத் தலைமையில் கொண்ட உடைமை முறை, வர்க்கச் சமூகம் என்பதற்கு ஆதரவாக பார்ப்பனரின் வைதீகம் இணைந்ததன் விளைவாகவே, உழைப்பாளிகள் தாழ்த்தப்பட்டவர்கள் ஆனார்கள் என்பதை ராஜ்கவுதமன் சிறப்பாகப் புலப்படுத்துகிறார்.

'மலைப்பகுதியில் முருகனும், மேய்ச்சல் பகுதியில் கிருஷ்ணனும், கடல் பக்கம் வருணபகவானும், வயல் பகுதிகளில்

இந்திரனும் உறைவதாக இலக்கணம் உள்ளது. இவ்வாறு தமிழக மலைகள், குன்றுகள், ஊர்கள், வானம், கடல், நகரம் அனைத்தும் வைதீக நிறம் பெற்றன. கானக்குறவர்கள் பலிகொடுத்துக் கும்பிட்ட 'முருகு' என்ற தெய்வம் மலைகளில் தங்குவதாக நம்பினார்கள். பார்ப்பனியக் கைவண்ணத்தால் ஆணுமற்ற பெண்ணுமற்ற அந்த 'முருகு', ஆறுமுகமும் பன்னிரு கைகளும், வேலும் மயிலும் கொண்ட கந்தனாக ஆன பிறகு மலைகள் தலங்களாயின' (பக்.103,104) (தலித் பார்வையில் தமிழ்ப்பண்பாடு 1994)

'வளர்ந்து விரிவடைந்து கொண்டிருந்த பேரரசுகளின் அதிகாரத்திற்கும், ஆணாதிக்கத்திற்கும் புதிய பார்ப்பன வைதீகக் கருத்தியல் தேவைப்பட்டது. தனி உடைமை நாகரீகத்திற்கும், ஆணாதிக்கக் குடும்பத்திற்கும், வர்க்க அடிப்படையில் நிலைபெற்றுவிட்ட புதிய ஏற்றத் தாழ்வான பொருளாதார அமைப்பை நியாயப்படுத்துவதற்கும் இது தேவைப்பட்டது. கூட்டு வாழ்க்கை, சமத்துவநிலை, புராதன பொதுவுடைமை, கூட்டுண்ணும் வாழ்க்கை முறை, வேறுபாடுகளும் தனித்துவங்களும் அதிகமில்லாத அமைப்புமுறை, இன்னார்க்கு இந்த வேலை என்று இல்லாமல் அனைவரும் அனைத்து வேலைகளையும் கூட்டாகச் செய்து பயனைப் பகிர்ந்து கொள்ளும் வாழ்க்கை முறை ஆகியவற்றிற்கும் பார்ப்பன வைதீகத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இருக்க முடியாது. அடிப்படையிலேயே பார்ப்பனிய வைதீகப் பண்பாடானது சமத்துவத்திற்கு எதிரானது. மாந்தரிடையே பிறப்பு, சொத்து, பால், கர்மம் முதலியவற்றின் பேரால் ஏற்றத்தாழ்வான பாகுபாடுகளை ஏற்படுத்தி அவற்றை மதத்தின் பேரால் கட்டிக்காப்பதாகும். உடைமையாளர்களுக்கும், ஆதிக்க நிலை பெற்றவர்களுக்கும், சாதகமான கருத்தியலை வழங்கக் கூடியது பார்ப்பன வைதீகமாகும். (பக் 92,93) (மேலது)

(2)

சங்க இலக்கியம் கூறும் தமிழ்ச் சமூகத்தில் புலவர் போற்றும் அறம் என்பது எவ்வாறு அரசதிகாரத்தை உள்ளடக்கமாகக் கொண்டிருந்தது என்பதை ராஜ்கவுதமன் தனது அடுத்த நூலாகிய 'அறம்/அதிகாரம் – 1997' என்ற நூலில் விவரிக்கிறார். இந்த நூல்கருத்துக்களை மேலும் விரிவுபடுத்தி 'தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும்' - 2008 என்ற நூலை எழுதுகிறார்.

அறிவு என்பதே அதிகாரம்தான் என்பதை நீட்சே விளக்கியிருப்பதை இந்த நூலில் ராஜ்கவுதமன் மேற்கோள் காட்டுகிறார். உயிர் வாழ்வுக்கு எவை தேவையோ அவற்றையே நாம் அறிகிறோம். அதுவே நமக்குள்

அதிகாரமாகச் செயல்படுகிறது. இயற்கையில் ஒழுங்கில்லாதவை மீது நாம் ஒழுங்கை ஏற்படுத்துகிறோம். அதையே அறிவு என்று கூறுகிறோம். இவ்வாறு கூறும் நீட்சே அறிவையும் இருவகைப்படுத்துகிறார். உழவு, தச்சு, முதலிய தொழில்களைச் செய்யக் கருவிகளைப் பயன்படுத்துகிறோம். இவை ஒருவகை அறிவு. இந்த அறிவு கீழான அறிவு. இன்னொரு வகை அறிவு, ஞானம் என்று சொல்லப்படும் அறிவு. இது மேலான அறிவு. மேலான அறிவு மேன்மக்கள் அறிவு. கீழான அறிவு உழைக்கும் மக்களின் அறிவு. இது தூய்மையற்றது. புனிதமில்லாதது. இப்படித்தான் வரலாற்றுக் காலத்தில் அறிவு எப்படி அதிகாரமாகச் செயல்பட்டது என்பதை நீட்சே விளக்கியுள்ளார். சங்க இலக்கியத்தில் மட்டுமல்லாமல் அடுத்து எழுந்த திருக்குறள், நாலடியார் முதலிய அறநூல்களிலும் இடம் பெறும் அறிவு, ஒழுக்கம், கல்வி, உண்மை முதலியவை தமிழ்ச் சமூகத்தில் அதிகாரம் எவ்வாறு செயல்பட்டது என்பதைப் புரிந்து கொள்வதற்கான வழிமுறை என்பது, ராஜ்கவுதமன் கருத்து.

சங்க காலத்தில் குறிஞ்சி நிலத் தலைவர்கள் முதலியவர்கள் மீது போர் தொடுத்து வன்முறையைப் பயன்படுத்தி மூவேந்தர் வென்றதை சங்க இலக்கியத்திலிருந்து நாம் விரிவாக அறிகிறோம். இனக்குழுச் சமூகத்தை உள்வாங்கிக் கொள்ள இயலாத நிலையில் உடைமைச் சமூகம் வன்முறையால் அதை ஒழித்து அதன்மேல் தன்னை நிறுவிக் கொண்டது. வன்முறை இல்லாமல் வரலாற்றில் வளர்ச்சி இல்லை. மருதநில நாகரிகம் என்பது ஒருவகையில் வளர்ச்சி. வரலாற்றில் வன்முறையின் தேவையை நீட்சேயைக் கொண்டு ராஜ்கவுதமன் நியாயப்படுத்துகிறார். அன்றியும் சங்ககாலப் புலவர்கள் வேந்தர்களின் படையெடுப்பு முதலியவற்றைப் பாராட்டியதையும் ராஜ்கவுதமன் தொகுத்துச் சொல்லுகிறார்.

போர்க்களத்தில் மன்னனுக்காகப் போரிட்டு மடிந்தவன் மேலுலகம் போவான். வஞ்சிப் போரில் பிறநாட்டு அரசன் மீது வெற்றி கொள்வது வேந்தனுக்குப் பெரும் புகழ்தரும். உள்நாட்டிலும் தன் அதிகாரத்தை ஒப்புக் கொள்ளாதவர்களை அரசன் ஒடுக்குவதில் தவறில்லை. இது அரச நீதி. போரின் போதும் அரசன் சில நீதிகளைக் கடைப்பிடிப்பான். இரவில், அவன் போரிடுவதில்லை, பார்ப்பனரைக் கொல்லமாட்டான், போர் தொடங்குவதற்கு முன்பு பார்ப்பார், பசு, பத்தினிப்பெண்டிர், மூத்தோர் முதலியவர்களைப் போர்க்களப் பகுதியை விட்டு விலகிச் செல்ல பறை அறிவிப்பான். இவ்வகைச் செய்திகளைச் சொல்லும் புறநானூற்றுப்

பாடல்களை ராஜ்கவுதமன் எடுத்துக்காட்டுகிறார். அரசனின் வன்முறையும் அரச நீதியும் தேவையானவை. இவை தவறானவையல்ல என்பது புலவர்கள் கருத்து. பார்ப்பனரும் இத்தகைய வேந்தர்களைப் பாராட்டத் தவறுவதில்லை. இவ்வகையில் அரசநீதி புனிதப்படுத்தப்படுகிறது. இப்படியெல்லாம் ராஜ்கவுதமன் விளக்கம் தருகிறார்.

வன்முறையால் மட்டும் அரசன் தன் அதிகாரத்தை மக்கள் மீது நிறுவ முடியாது. வன்முறையோடு கருத்தியலும் அரசனைப் புனிதப்படுத்த வேண்டும் போற்ற வேண்டும். மன்னனின் தோற்றப் பொலிவு, கொடைச்சிறப்பு, அவனது வீரம் முதலியவற்றையும் பெருமைபடுத்த வேண்டும். அரசன் அஞ்சத்தக்கவன் மட்டுமல்ல, அரசன் நீதி தவறாதவன், மக்களை நேசிப்பவன் என்றெல்லாம், பாராட்டப்படவும் வேண்டும். அரசனின் முன்னோர் மரபை முனிவர் மரபோடு தெய்வ மரபோடு தொடர்புபடுத்துவது பார்ப்பனர் மரபு.

சங்க காலத்தில் தமிழ்ச் சமூகத்தில் வைதீக மரபு தன்னை நிறுவிக் கொண்டது பற்றி ராஜ்கவுதமன் விரிவாகக் கூறுகிறார். வேந்தர் அவையில் பார்ப்பனர் இடம் பெற்றனர். அந்தணர்களை அரசர் வழிபட வேண்டும். அந்தணர் மனம் நோகுமாறு அரசன் நடந்து கொள்ளக்கூடாது. பிராமணர்களுக்கு இன்னல் விளைவிப்பது பெரும் பாவம். ஒரு மன்னன் சதுரங்க விளையாட்டின் போது ஆத்திரமுற்றுச் சதுரங்கக் காய்களைப் பார்ப்பனன் மீது வீசியதால் பார்ப்பனன் மனம் நொந்தது பற்றிச் சொல்லும் பாடலை ராஜ்கவுதமன் எடுத்துக் காட்டுகிறார். பார்ப்பனன் மனம் நோக அரசன் இதுவரை எதுவும் செய்யவில்லை என்கிறது பாடல். வைதீகம் தமிழ்ச் சமூகத்தில் நிலைபெற்றதை விளக்கும் ராஜ்கவுதமன் இறந்தவர்களைப் புதைப்பதற்குப் பதிலாக பார்ப்பனர் நெறிப்படி எரிப்பது பற்றிப் பாடல் குறிப்பிடுவதை எடுத்துக்காட்டுகிறார்.

இனக்குழுச் சமூகக்கூறுகளை ஒடுக்கும் முறையில் தனியுடைமை, அரசதிகாரம் ஆகியவற்றை முதன்மையாகக் கொண்ட உடைமைச் சமூகம் செயல்பட்டது என்று ராஜ்கவுதமன் கூறுவதை நாம் ஏற்கிறோம். வேந்தர்களின் தலைமையில் அமைந்த உடைமைச் சமூகம் தன்னை நிறுவிக் கொள்வதற்கு வன்முறையோடு பார்ப்பனரின் கருத்தியலைப் பயன்படுத்திக் கொண்டது என்பதையும் நாம் ஏற்கிறோம். அதேசமயம் சங்ககாலப் புலவர் அனைவருமே அரசதிகாரத்தை ஏற்றுக்கொண்டவர் என்பது போலவும் வைதீகத்தை மறுக்காதவர் என்பது போலவும்

ராஜ்கவுதமன் தரும் விளக்கத்தை அதே வடிவில் நாம் ஏற்பதற்கில்லை. பாரி முதலிய இனக்குழுத் தலைவர்களைக் கபிலர், அவ்வையார் முதலிய புலவர்கள் பாராட்டியதோடு இவர்களை வென்ற மன்னர்களை இவர்கள் சாடவும் செய்தனர். சேரலாதனை வென்ற கரிகாலனை வெண்ணிக்குயத்தியார் பாராட்டவில்லை. காரி, ஓரி முதலியவர்களின் கொடைச்சிறப்பை, பாணரும் புலவரும் பெரிதும் போற்றினர். கோப்பெருஞ்சோழனோடு உயிர்துறந்த புலவர்களை எப்படிப் பாராட்டாமல் இருக்க முடியும்? சங்கப் புலவர்களில் பலர் சான்றோர். மன்னரிடம் பரிசு பெறுவதற்காக இவர்கள் மன்னரைப் போற்றிப் பாடவில்லை. அரசன் தந்தப் பரிசுகளை மறுத்தவர்களும் இவர்களில் உண்டு. புலவர் என்ற உடனே அரசதிகாரத்திற்குச் சேவை செய்பவர் என்ற பழிச்சொல்லை சில இடதுசாரிகள் சொல்லலாம். இடது சாரிகளை மறுக்கும் ராஜ்கவுதமன் ஏன் இப்படிப் புலவர்களை இகழ்ந்துரைக்க வேண்டும்?

இன்னும் ஒன்று. இனக்குழுச் சமூகத்தின் கூறுகள் பொதுமையறத்தை உள்ளடக்கியவை என்றே ராஜ்கவுதமனும் கூறுகிறார். சங்கச் சான்றோர் பலர் இம்மரபை தமக்குள் தாங்கியிருந்தவர். இவர்கள் இன்றும் நம் மரியாதைக்குரியவர்கள். இன்றும் சங்க இலக்கியத்தை நாம் போற்றுவதற்கு இது முதன்மையான காரணம். ஆதிக்கத்திற்குச் சேவை செய்வது ஒருவகை அறம். ஆதிக்கத்திற்குச் சேவை செய்ய மறுப்பதும் இன்னொரு வகை அறம். இன்றும் நமக்குள் இயங்குவது இந்த அறம்.

(3)

ராஜ்கவுதமனின் பாட்டும் தொகையும் (2006) என்ற நூல் சங்க இலக்கியம் குறித்தும் தொல்காப்பியம் குறித்தும் அவரது ஆய்வில் குறிப்பிடத்தக்க ஒரு நூல். இந்த நூலுக்குத் துணைத் தலைப்பாகத் 'தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும்' என்பதைக் குறிப்பிடுகிறார். நூலில் அடங்கியுள்ள பல கட்டுரைகளில் இரண்டாவது கட்டுரை 'அறிவு பொதுமையாக்கத்தில் தொல்காப்பியக் கொடை' என்பது முக்கியமான கட்டுரை. ராஜ்கவுதமனைப் பொறுத்தவரை 'சங்க இலக்கியம்' என்ற சொல் தவறான சொல். பாட்டும் தொகையும் என்பதே பொருத்தமான சொல் என்பது அவர் கருத்தாகலாம். என்றாலும் பலரும் குறிப்பிடும் சங்க இலக்கியம் என்ற சொல்லை அவர் பயன்படுத்திக் கொள்கிறார். சங்க இலக்கியத்தைத் தொகுத்தவர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட

கோட்பாட்டைக் கொண்டிருக்கலாம். ஆனால் சங்க இலக்கியத்திற்கு விரிவான கோட்பாட்டு அடிப்படையைத் தந்தவர் தொல்காப்பியர் என்றுதான் நாம் அறிகிறோம். கோட்பாட்டு உருவாக்கம் என்பது ஒருவரே செய்து முடிக்கக் கூடியதுமன்று. தொல்காப்பியருக்கு முன்பும் குறைந்த அளவுக்கேனும் கோட்பாட்டு உருவாக்கத்தில் சிலர் ஈடுபட்டிருக்கக் கூடும். சங்க இலக்கியத்திலிருந்தே முன்னர் நிலவிய இனக்குழுச் சமூகம் பற்றி நம்மால் விரிவாக அறிந்து கொள்ளமுடியும்.

சங்க காலத்திலேயே வடக்கிலிருந்து வந்த வைதீக மரபு அழுத்தமாக இடம் பெற்றது. சமண, பவுத்த மரபுகளும் சங்க காலத்தில் தமிழ்ச் சமூகத்திற்குள் நுழைந்தன. சங்க காலத்திற்குப் பிறகு தமிழ்ச் சமூகத்தில் இவற்றின் ஆக்கங்கள் மிக விரிவானவை. சங்க இலக்கிய உருவாக்கம் என்பதையும் தமிழ்ச் சமூக உருவாக்கம், அரசு உருவாக்கம் ஆகியவற்றையும் நாம் இணைத்தே பேசுகிறோம். இலக்கண உருவாக்கம் என்பதும் இவற்றுடன் சேர்ந்தே நிகழ்ந்தது என்பதில் ஐயமில்லை. இவை அனைத்தையும் உள்ளடக்கிய சமூகம் மற்றும் இலக்கிய உருவாக்கம் குறித்த விரிவான கோட்பாட்டு ஆக்கத்தைத் தொல்காப்பியம்தான் முதன்முறை முன்வைக்கிறது.

தொல்காப்பியரில் தொடங்கிய கோட்பாட்டாக்கம் உரையாசிரியர் காலத்திலும் இலக்கண உரைகாரர் காலத்திலும் தொடர்ந்தது என்பதையும் நாம் கவனிக்க முடியும். சங்க இலக்கியத்தின் கோட்பாட்டாக்கம் குறித்து விரிவான ஒரு ஆய்வை முதன்முதலாக ராஜ்கவுதமன் முன்வைக்கிறார். சங்க இலக்கியத்தினுள்ளும் அதன் பிறகான பிற அற இலக்கியம், பக்தி இலக்கியங்களினுள்ளும் வைதீக தாக்கத்தையும் சமண, பவுத்த சமயச்செல்வாக்கையும் அறிஞர் பலர் கண்டு உரைத்துள்ளனர். தமிழிலக்கியம் தானே தனித்து இயங்கியது என்பது போன்ற தோற்றத்தை அறிஞர்கள் நமக்குத் தந்துள்ளனர். வைதீக தாக்கத்தால் தமிழ்ச் சமூகம் சீர்குலைந்தது என்றும் இவர்கள் நம்புகின்றனர். சமண, பவுத்தத் தாக்கம் கூட, சில அறிஞர்களுக்கு உவப்பாக இல்லை. ராஜ்கவுதமனின் ஆய்வுமுறை மிக மாறுபட்டது என்பதோடு மிகச் சிறப்பானது என்பதையும் குறிப்பிட வேண்டும். வைதீகம், பவுத்தம், சமணம், தமிழ் மரபு ஆகிய மூன்றும் இந்திய துணைக்கண்டத்தில் குறிப்பாக தென் இந்தியச் சூழலில் ஒன்றோடொன்று ஊடுருவி, இதன் விளைவாக இலக்கண உருவாக்கம் மட்டுமல்லாமல் தமிழ்ச் சமூக உருவாக்கமும் நடைபெற்றது என்பதை ராஜ்கவுதமன் விளக்குகிறார். வரலாறு மற்றும் சமூகவியல் பார்வை

என்பது இத்தகைய நடுநிலையோடு விருப்பு வெறுப்பின்றி செய்வதற்குரியது என்பதை நாம் ஏற்கிறோம்.

தமிழ்ச் சமூகம் (அ) தமிழர் சமூகம் என்றவுடன் ராஜ்கவுதமனுக்குள் வேறு ஒரு வகையான உணர்வு தீவிரமாகச் செயல்படுகிறது. இருபதாம் நூற்றாண்டுச் சூழலில் தமிழ்ச் சமூக மேன்மை குறித்து விரிவான ஆய்வு செய்தவர்களில் பலர் வேளாள சமூகம் சார்ந்தவர். சங்க காலம் என்பது இவர்களைப் பொறுத்தவரைப் பொற்காலம் எனத் தோன்றியது. சங்க இலக்கியத்தில் இருந்து மூவேந்தர்களின் போர் வெற்றிகள், கொடைச்சிறப்பு, வீர உணர்வு முதலியவற்றை இவர்கள் பெரிதும் போற்றினர். சமகாலச் சமூகத்திற்கு இவர்களைப் பொறுத்தவரை சங்க காலம் முன்மாதிரியாக இருந்தது. தமிழர் நாகரிகம் அற்புதமானது. தமிழர் பண்பாடு வியக்கத்தக்கது. தமிழ்ப் பெண்கள் மேன்மையானவர்கள். சங்க காலத்தில் கலைகள் சிறப்புப் பெற்றிருந்தன. தமிழ் மக்களுக்குத் தனி வரலாறு, தனி நாடு முதலியவை இருந்தன. இப்படிப் பழங்கால தமிழ்ச் சமூகத்தின் மேன்மைகளுக்கு இவர்கள் தம்மை வாரிசுகள் எனக் கருதிக் கொண்டனர். தமிழியக்கங்கள் பலவற்றைத் தோற்றுவித்தனர். இவ்வகையில் வேளாளர் தம்மைத் தமிழ்ச் சமூகத்தின் முன் வரிசையில் நிறுத்திக் கொண்டனர். இடைக்காலச் சோழப் பேரரசு முதலியவற்றை இவர்கள் பெருமைபடப் பேசினர். பார்ப்பனியத்தோடு உறவு கொள்வதில் இவர்களுக்குத் தடை எதுவுமில்லை. இவர்கள் சமூகத்தின் மேல்நிலையில் இருப்பவர்கள். இவர்களுக்குக் கீழே இருப்பது இன்னொரு சமூகம். சமூகத்தின் அடித்தட்டில் இருக்கிற உழைக்கும் மக்கள் இவர்கள். காலங்காலமாக இவர்களை அடக்கி ஒடுக்கி உழைக்க வைத்து, இவர்கள் உரிமைகளைப் பறித்து இவர்களை உடைமையற்றவர்களாக, தன்மானமற்றவர்களாகச் செய்து, இவர்கள் குரலையும் ஒடுக்கி இவர்களைக் கொண்டு தம் வாழ்வின் மேன்மையைச் செய்து கொண்டவர்கள் இந்த மேட்டுக் குடியினர். உயர்சாதியினரின் இலக்கியக்குரல், புலமைக்குரல் ராஜ்கவுதமனுக்கு உடன்பாடில்லை. இந்த நோக்கத்தோடுதான் சங்க இலக்கிய ஆய்வையும் இவர் செய்கிறார்.

4. கி.மு.3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 2ம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சங்க இலக்கியம் உருப்பெற்ற காலம் என நாம் கருதுகிறோம். இதே கால அளவில் வட இந்தியாவில் வைதீகம், சமணம், பவுத்தம் ஆகியனவும் எழுச்சிபெற்றன. தென் இந்தியாவிற்குள் இவை ஊடுருவின.

சங்க இலக்கியம் தொகுக்கப்பட்டது கி.பி. 5ஆம் நூற்றாண்டு என்றும் கருதுகிறோம். கி.பி. 5ஆம் நூற்றாண்டு முதல் 850 வரையிலான காலம் தமிழகத்தில் வைதீகத்தோடு சமண பௌத்த மதங்களும் செல்வாக்குப் பெற்ற காலம். திருக்குறள், நாலடியார் முதலியனவும் இக்காலச் சூழலில் சமணம், பௌத்தம், வைதீகம் ஆகியவற்றின் ஊடுருவலோடு பொருள்படுத்தப்பட்டிருக்கக் கூடும். வைதீகம், சமணம், பவுத்தம் பற்றிய ஊடுருவலோடுதான் சங்க இலக்கியத்தொகுப்பும் ஆய்வுகளும் கோட்பாட்டு உருவாக்கமும் நடைபெற்றிருக்க வேண்டும். ராஜ்கவுதமனைப் பொறுத்தவரை தொல்காப்பியத்தில் காணப்படும் சங்க இலக்கியம் குறித்த கோட்பாட்டு உருவாக்கங்களுக்கு உரிய சூழல் இக்காலத்திற்குரியது என்று கருதுகிறார்.

இனக்குழுச் சமூகத்தின் தனிப்பண்புகளும் சங்க இலக்கியத்திற்குள் விரிவாக இடம் பெற்றிருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார். மூவகை மரபின் ஆக்கங்கள் பதினென்கீழ்க்கணக்கு நூல்களில் கூடுதலாகத் தெரிவதை ராஜ்கவுதமன் சுட்டிக் காட்டுகிறார். இனக்குழுச் சமூகத்தின் களவு மணம் பரிபாடல் வழியாக பக்தி இயக்கத்தினுள் விரிவு பெற்றதைக் குறிப்பிடுகிறார்.

*(4)*

கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதற்கொண்டே இந்தியத் துணைக்கண்டத்தில் வைதீக மரபும் சமண பவுத்த மரபுகளும் இவற்றைப்போலவே தமிழகத்தில் செயல்பட்ட திணை மரபும் ஒன்றோடொன்று முரண்பட்டதோடு இவற்றுக்கிடையிலான பெருஞ்சொல்லாடலும் இடையறாமல் நடைபெற்றது. இவை மூன்றனுள் எது பெரியது? அல்லது எது சிறியது? என்ற மதிப்பீட்டிற்கு இடமில்லை. வழக்கமாகத் தமிழ் மரபினுள் வைதீகம் அழுத்தமாக இடம்பெற்றது பற்றி நாம் பேசுகிறோம். சமணம், பவுத்தம் ஆகியவற்றின் மரபுகள் தமிழ்ச்சூழலுக்குள் ஆக்கமுறையில் ஊடுருவியதை சிலர் விமர்சனம் செய்வதைப் போல நம்மால் செய்ய முடியாது. சமணம், பவுத்தம் ஆகிய மரபுகள் தமிழ்ச் சூழலுக்குள் பெரும் பகுதி நன்மைகளையே விளைவித்தன. தொல்காப்பியர் காலம் பற்றி ராஜ்கவுதமன் உறுதியாக எதையும் குறிப்பிடவில்லை. எனினும் வையாபுரியார் முதலியவர்களை போன்று கி.பி. 5ஆம் நூற்றாண்டு கால அளவில் தொல்காப்பியரை ராஜ்கவுதமன் வைப்பதாக நாம் கருதலாம். இது பற்றிய விவாதம் இப்பொழுது தேவையில்லை.

காரணம் ராஜ்கவுதமன் கவனம் முழுவதும் மேற்குறிப்பிட்ட மூவகை இயக்கங்களின் ஊடுருவலோடு நடைபெற்ற பெருங்கோட்பாட்டாக்கத்தில்தான் குவிந்திருக்கிறது. வைதீகத்தின் சாஸ்திர நெறியும் சமண பவுத்தர்களின் தர்க்க நெறியும் தமிழிலக்கியச் சூழலில் அழுத்தம் பெற்றிருப்பதை ராஜ்கவுதமன் சுட்டிக் காட்டுகிறார்.

இனி ராஜ்கவுதமன் தன் ஆய்வில் முன்வைக்கிற தொல்காப்பியரின் கோட்பாட்டாக்கம் குறித்தக் கூறுகளை இங்குத் தொகுத்துக் கொள்ளலாம்.

1. தொல்காப்பியத்தின் பாயிரத்தில், தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. சங்க காலத்தில் நூல் அரங்கேற்றம் பற்றி செய்தி எதுவுமில்லை.

2. சமணம் பவுத்தம் ஆகிய நூல்களின் கருத்துக்கள் அனைத்தும் தருக்க முறையில் நிரல்படத் தொகுத்துத் தரப்படுகின்றன. தொல்காப்பியத்திலும் இதே செயல் முறையை நாம் காண்கிறோம். இது சாத்திர முறை.

3. மனு முதலிய சாஸ்திர நூல்களில் உலகில் காணப்படும் உயிர் வகைகள், தொகுத்துத் தரப்படுவதைப் போலவே தொல்காப்பியத்திலும் உயிரினங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

4. வடமொழியில் உள்ள நிருத்த நூல் சொற்களுக்கு பொருள் தருவது போல தொல்காப்பியரும் மரபியலில் சில குறிப்பிட்ட சொற்களுக்குப் பொருள் தருகிறார்.

5. தொல்காப்பியர் உயிர்களை 'திணை' என்ற முறையில் வகைப்படுத்துகிறார். உயர்திணையிலும் பல வகைகள். இதேபோல சொற்களிலும் பல வகைகள். இவையெல்லாம் வடமொழியில் உள்ள வியாகரண நூலில் உள்ளபடி அமைகின்றன. நூல்வகை பற்றியும் மொழிபெயர்ப்பு நெறி பற்றியும் தொல்காப்பியர் தன்நூலில் குறிப்பிடுகிறார். மொழிகள் பலவற்றோடு தொல்காப்பியர் உறவு கொண்டிருந்ததை நாம் புரிந்து கொள்கிறோம்.

6. தொல்காப்பியத்தில் இடம் பெறும் பெருந்தெய்வங்கள், வருண முறைகள் முதலியவை இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் வழக்கிலிருந்தவை.

7. சங்க இலக்கியத்தில் குறிஞ்சி முதலிய ஐவகை நிலங்களின் தெய்வங்கள் கூறப்பட்டுள்ளன. இந்தத் தெய்வங்கள் வைதீக முறையில் பின்னர் பெருந்தெய்வங்களோடு இணைக்கப்பட்டன. இவ்வகை இணக்கத்தை தொல்காப்பியத்திலிருந்தும் அறிகிறோம். இவ்வகை இணக்கப்பாட்டின் விளைவாகப் பின்னர் விரிவு பெற்ற பக்தி இயக்கம், சமண பவுத்த சமயங்களின் தளர்ச்சிக்கும் காரணமாயிற்று என்பதை ராஜ்கவுதமன் சுட்டிக்காட்டுகிறார்.

8. தொல்காப்பியர் முதல், கரு, உரி எனக் கறாராகச் செய்துள்ள வரையறையை சங்க இலக்கியத்தில் காண முடியாது என்கிறார் ராஜ்கவுதமன். அகம், புறம் என தொல்காப்பியத்தில் காணப்படும் வகைப்பாட்டிற்கு முன்னரே மூலமரபு என ஒன்றிருந்திருக்க வேண்டும் என்கிறார் ராஜ்கவுதமன்.

9. தொல்காப்பியர் கைக்கிளை, பெருந்திணை என்பனவற்றை உள்ளடக்கி அகத்திணைகள் ஏழு என வகுத்தார். கலித்தொகை தவிர பிறதிணை இலக்கியங்களில் கைக்கிளை, பெருந்திணை ஆகியவை வெளிப்படையாக இடம் பெறவில்லை. பரியாடலிலும் இவை வெளிப்படையாக இடம் பெறுகின்றன. ஒருதலைக் காமமாகிய கைக்கிளையும், மிக்கக் காமமாகிய பெருந்திணையும் கலித்தொகையிலும், பரிபாடலிலும் வெளிப்படையாக இடம் பெறுவது, வடமொழி நூலில் சொல்லப்படும் காமவியலோடு ஒத்தவை. கைக்கிளை, பெருந்திணை சார்ந்த மரபுகள் துணைக்கண்டம் முழுவதும் நிலவிய பெருஞ்சொல்லாடலின் கூறுகள்.

10. அகத்திணை ஏழு என்றும் இதற்கு ஒத்த முறையில் புறத்திணை ஏழு என்றும், அகத்திணை ஒவ்வொன்றினோடும் ஒவ்வொரு புறத்திணையும் இணைந்திருப்பது பற்றித் தொல்காப்பியர் கோட்பாடு வகுத்துள்ளார். இதுவும் ஒரு பெருஞ்சொல்லாடல் மரபின் கூறு. தருக்க முறையில் அமைவது இந்தக் கூட்டமைப்பு. இங்கு ராஜ்கவுதமன் இன்னொன்றையும் சுட்டிக் காட்டுகிறார். அகத்திணை ஏழு, புறத்திணை ஏழு எனத் தொல்காப்பியர் வகுத்துள்ள முறைக்குச் சங்க இலக்கியத்தில் ஆதாரம் இல்லை என்கிறார். இத்தகைய கட்டுக்கோப்பை வகுத்தவர் தொல்காப்பியர். வாகைத்திணையில் பார்ப்பனவாகை, அரசர்வாகை, வணிகர்வாகை, வேளாளர்வாகை எனத் தொல்காப்பியர் கூறுவதற்கும் சங்க இலக்கியத்தில் ஆதாரமில்லை. தொல்காப்பியத்தில் வைதீகத் தாக்கம்

உண்டு என்பதற்கு இதுவும் ஒரு சான்று. பாடாண்திணையில் ஒருதலைக் காமத்தை தொல்காப்பியர் வைத்திருப்பதோடு தெய்வத்தின்மீது ஒருதலைக் காமத்தையும் வைத்துள்ளார். 'ஊரொடு தோற்றம்' என்பதில் உலாவரும் அரசனைக் கண்ட பருவ மகளிரின் காதல் உணர்வு பற்றியும் குறிப்பிடுகிறார். இவை சங்க இலக்கியத்தில் இடம் பெறவில்லை. பக்தி இலக்கியத்திலேயே இவை கூறப்படுகின்றன. இவையும் காமவியல் சார்ந்தவை. பெருஞ்சொல்லாடலின் தாக்கத்தை இங்கும் பார்க்கலாம்.

11. வடவர் வகுத்த எண்வகைத் திருமணம் குறித்துத் தொல்காப்பியரும் பேசுகிறார். இவற்றில் கந்தருவ மணத்தோடு ஒத்தது களவு மணம் என்கிறார் தொல்காப்பியர். பார்ப்பன மரபில் வைத்துத் தமிழ் மரபை தொல்காப்பியர் ஏன் பேசவேண்டும்? பெருஞ்சொல்லாடலில் தொல்காப்பியர் இப்படித் தமிழ் மரபைக் காண்கிறார். இது பார்ப்பனருக்கு வெற்றி. வள்ளுவருக்கும் சமணருக்கும் தோல்வி என்கிறார் ராஜ்கவுதமன். கந்தருவம் தவிர வடவரின் பிற திருமண முறைகள் தமிழரின் கற்பு மணத்தோடு எவ்வகையிலும் பொருந்தாது.

12. குறிஞ்சி முதலிய ஐந்திணைகளையும் புறத்திணைகள் பலவற்றையும் பூப்பெயர்களோடு தொல்காப்பியர் இணைத்துச் சொல்கிறார். இது தொன்மரபாக இருக்கக்கூடும். சங்க இலக்கியத்தில் இதற்கு ஆதாரம் இல்லை என்கிறார் ராஜ்கவுதமன்.

13. தலைவன் இற்பரத்தை, காமக்கிழத்தி முதலியவர்களோடு கொள்ளும் உறவு பற்றியும் பெருந்திணை பற்றிய விரித்துரைப்பும் வடவரின் காமவியலுக்குப் பொருந்தியவை. தமிழரின் பாலியல் உறவை இவ்வாறு வடவரின் காமவியலோடு இணைக்கிறார் தொல்காப்பியர். தொல்காப்பியருக்குப் பிற்பட்ட இலக்கணக்காரர்களும் இந்தப் போக்கைத் தொடர்ந்தனர். தமிழரின் காமவியல் இதனால் குறைபடவில்லையா?

14. களவு மணம் என்பது இனக்குழுச் சமூகத்தின் இயல்பு மண முறை. பெற்றோர் கொடுப்பக் கொள்வதற்கும் சங்க இலக்கியத்தில் சான்று உண்டு. எனினும் இது பெருவழக்காக இல்லை. பின்னர் கரணம் முறைத்திருமணம், தமிழ்ச் சூழலில் இடம் பெறுவதற்கு காரணம் வைதீகத்தின் தாக்கம்.

15. மக்களோடு கலந்து மனையறம் காத்துப் பின்னர் சிறந்தது பயிற்றல் பற்றித் தொல்காப்பியர் கூறுகிறார். இல்லறம் முடிந்தபிறகு

சமண முனிவர்களோடு இணைந்தோ அல்லது வானப்பிரஸ்தம் என்ற முறையில் வாழ்வது பற்றியோ தொல்காப்பியர் கூறுவது சமணம் அல்லது வைதீகத்தின் தாக்கம். சங்க காலத்தில் இவ்வகைப் போக்கு இல்லை.

ட!அன்ற்ர் 1கஜ2! ஆ°° -னுட்ஈதுநிஹனுகாப்பியத்தில் இடம் பெறும் பெருந்தெய்வங்கள், வருண முறைகள் முதலியவை இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் வழக்கிலிருந்தவை.

7. சங்க இலக்கியத்தில் குறிஞ்சி முதலிய ஐவகை நிலங்களின் தெய்வங்கள் கூறப்பட்டுள்ளன. இந்தத் தெய்வங்கள் வைதீக முறையில் பின்னர் பெருந்தெய்வங்களோடு இணைக்கப்பட்டன. இவ்வகை இணக்கத்தை தொல்காப்பியத்திலிருந்தும் அறிகிறோம். இவ்வகை இணக்கப்பாட்டின் விளைவாகப் பின்னர் விரிவு பெற்ற பக்தி இயக்கம், சமண பவுத்த சமயங்களின் தளர்ச்சிக்கும் காரணமாயிற்று என்பதை ராஜ்கவுதமன் சுட்டிக்காட்டுகிறார்.

8. தொல்காப்பியர் முதல், கரு, உரி எனக் கறாராகச் செய்துள்ள வரையறையை சங்க இலக்கியத்தில் காண முடியாது என்கிறார் ராஜ்கவுதமன். அகம், புறம் என தொல்காப்பியத்தில் காணப்படும் வகைப்பாட்டிற்கு முன்னரே மூலமரபு என ஒன்றிருந்திருக்க வேண்டும் என்கிறார் ராஜ்கவுதமன்.

9. தொல்காப்பியர் கைக்கிளை, பெருந்திணை என்பனவற்றை உள்ளடக்கி அகத்திணைகள் ஏழு என வகுத்தார். கலித்தொகை தவிர பிறதிணை இலக்கியங்களில் கைக்கிளை, பெருந்திணை ஆகியவை வெளிப்படையாக இடம் பெறவில்லை. பரியாடலிலும் இவை வெளிப்படையாக இடம் பெறுகின்றன. ஒருதலைக் காமமாகிய கைக்கிளையும், மிக்கக் காமமாகிய பெருந்திணையும் கலித்தொகையிலும், பரிபாடலிலும் வெளிப்படையாக இடம் பெறுவது, வடமொழி நூலில் சொல்லப்படும் காமவியலோடு ஒத்தவை. கைக்கிளை, பெருந்திணை சார்ந்த மரபுகள் துணைக்கண்டம் முழுவதும் நிலவிய பெருஞ்சொல்லாடலின் கூறுகள்.

10. அகத்திணை ஏழு என்றும் இதற்கு ஒத்த முறையில் புறத்திணை ஏழு என்றும், அகத்திணை ஒவ்வொன்றினோடும் ஒவ்வொரு புறத்திணையும் இணைந்திருப்பது பற்றித் தொல்காப்பியர் கோட்பாடு வகுத்துள்ளார். இதுவும் ஒரு பெருஞ்சொல்லாடல் மரபின் கூறு. தருக்க

முறையில் அமைவது இந்தக் கூட்டமைப்பு. இங்கு ராஜ்கவுதமன் இன்னொன்றையும் சுட்டிக் காட்டுகிறார். அகத்திணை ஏழு, புறத்திணை ஏழு எனத் தொல்காப்பியர் வகுத்துள்ள முறைக்குச் சங்க இலக்கியத்தில் ஆதாரம் இல்லை என்கிறார். இத்தகைய கட்டுக்கோப்பை வகுத்தவர் தொல்காப்பியர். வாகைத்திணையில் பார்ப்பனவாகை, அரசர்வாகை, வணிகர்வாகை, வேளாளர்வாகை எனத் தொல்காப்பியர் கூறுவதற்கும் சங்க இலக்கியத்தில் ஆதாரமில்லை. தொல்காப்பியத்தில் வைதீகத் தாக்கம் உண்டு என்பதற்கு இதுவும் ஒரு சான்று. பாடாண்திணையில் ஒருதலைக் காமத்தை தொல்காப்பியர் வைத்திருப்பதோடு தெய்வத்தின்மீது ஒருதலைக் காமத்தையும் வைத்துள்ளார். 'ஊரொடு தோற்றம்' ' என்பதில் உலாவரும் அரசனைக் கண்ட பருவ மகளிரின் காதல் உணர்வு பற்றியும் குறிப்பிடுகிறார். இவை சங்க இலக்கியத்தில் இடம் பெறவில்லை. பக்தி இலக்கியத்திலேயே இவை கூறப்படுகின்றன. இவையும் காமவியல் சார்ந்தவை. பெருஞ்சொல்லாடலின் தாக்கத்தை இங்கும் பார்க்கலாம்.

11. வடவர் வகுத்த எண்வகைத் திருமணம் குறித்துத் தொல்காப்பியரும் பேசுகிறார். இவற்றில் கந்தருவ மணத்தோடு ஒத்தது களவு மணம் என்கிறார் தொல்காப்பியர். பார்ப்பன மரபில் வைத்துத் தமிழ் மரபை தொல்காப்பியர் ஏன் பேசவேண்டும்? பெருஞ்சொல்லாடலில் தொல்காப்பியர் இப்படித் தமிழ் மரபைக் காண்கிறார். இது பார்ப்பனருக்கு வெற்றி. வள்ளுவருக்கும் சமணருக்கும் தோல்வி என்கிறார் ராஜ்கவுதமன். கந்தருவம் தவிர வடவரின் பிற திருமண முறைகள் தமிழரின் கற்பு மணத்தோடு எவ்வகையிலும் பொருந்தாது.

12. குறிஞ்சி முதலிய ஐந்திணைகளையும் புறத்திணைகள் பலவற்றையும் பூப்பெயர்களோடு தொல்காப்பியர் இணைத்துச் சொல்கிறார். இது தொன்மரபாக இருக்கக்கூடும். சங்க இலக்கியத்தில் இதற்கு ஆதாரம் இல்லை என்கிறார் ராஜ்கவுதமன்.

13. தலைவன் இற்பரத்தை, காமக்கிழத்தி முதலியவர்களோடு கொள்ளும் உறவு பற்றியும் பெருந்திணை பற்றிய விரித்துரைப்பும் வடவரின் காமவியலுக்குப் பொருந்தியவை. தமிழரின் பாலியல் உறவை இவ்வாறு வடவரின் காமவியலோடு இணைக்கிறார் தொல்காப்பியர். தொல்காப்பியருக்குப் பிற்பட்ட இலக்கணக்காரர்களும் இந்தப் போக்கைத் தொடர்ந்தனர். தமிழரின் காமவியல் இதனால் குறைபடவில்லையா?

14. களவு மணம் என்பது இனக்குழுச் சமூகத்தின் இயல்பு மண முறை. பெற்றோர் கொடுப்பக் கொள்வதற்கும் சங்க இலக்கியத்தில் சான்று உண்டு. எனினும் இது பெருவழக்காக இல்லை. பின்னர் கரணம் முறைத்திருமணம், தமிழ்ச் சூழலில் இடம் பெறுவதற்கு காரணம் வைதீகத்தின் தாக்கம்.

15. மக்களோடு கலந்து மனையறம் காத்துப் பின்னர் சிறந்தது பயிற்றல் பற்றித் தொல்காப்பியர் கூறுகிறார். இல்லறம் முடிந்தபிறகு சமண முனிவர்களோடு இணைந்தோ அல்லது வானப்பிரஸ்தம் என்ற முறையில் வாழ்வது பற்றியோ தொல்காப்பியர் கூறுவது சமணம் அல்லது வைதீகத்தின் தாக்கம். சங்க காலத்தில் இவ்வகைப் போக்கு இல்லை.

16. தொல்காப்பியர் கருத்தின்படி தலைவன் தலைவியர் உயர்ந்தோர் எனினும் அறக்கழிவுடையவை என்று கருதப்பட்ட கைக்கிளை, பெருந்திணைக் கூறுகள் ஐந்திணை வாழ்விலும் இடம் பெறுவதைத் தொல்காப்பியர் குறிப்பிடத் தவறவில்லை.

17. எண் வகை மெய்ப்பாடுகள் பற்றித் தொல்காப்பியரின் கூற்றுகள் நாட்டிய சாஸ்திரத்தில் இடம் பெற்ற இரசங்கள். சங்க காலத்தில் இடம் பெற்ற கூத்து மரபுகளுக்கு ஒத்த போக்கு இது என்று கூறமுடியாது. துணங்கை, வள்ளைப் பாட்டு முதலியவை சங்க கால கூத்து மரபுகள். நாட்டிய சாத்திர மரபைச் சங்கப்புலவர் அறியமாட்டார். களவுக்காலத்து தலைவியின் அவத்தைகள் எனத் தொல்காப்பியர் குறிப்பிடும் கூற்றுகள் நாட்டிய சாஸ்திரத்தில் கூறப்படுபவை. இப்படியும் இந்திய துணைக் கண்டத்தில் நிலவிய பெருங்கோட்பாட்டு மரபுக்குள் தமிழ் வாழ்வை இணைக்கிறார் தொல்காப்பியர்.

18. பல்லவர் அரசவையிலிருந்த தண்டி வகுத்த அணிவகைகள் தொல்காப்பியத்தில் இல்லை. தொல்காப்பியருக்கு உவமை மட்டுமே போதுமானதாக இருந்திருக்க வேண்டும். காவிய ஆக்கத்திற்கு அணிவகைகள் தேவைப்படலாம். சங்க இலக்கியத்திற்குள் தண்டி கூறும் அணிவகைகளை காண்பதற்கில்லை. தொல்காப்பியர் குறிப்பிடும் பிசி, அங்கதம், வாய்மொழி, பண்ணத்தி ஆகியவை நாட்டுப்புறக் கூறுகள்.

இறுதியாக, இந்தக் கட்டுரையை முடிக்கும்பொழுது வைதீக மரபிற்கு வள்ளுவர் முதலியவர்களும் தம்மை இழந்தது தமிழரின் சோக வரலாறு என்று முடிக்கிறார் ராஜ்கவுதமன்.

(5)

தொல்காப்பியத்தின் கோட்பாட்டாக்கம் குறித்து ராஜ்கவுதமன் தரும் விவரங்களிலிருந்து நமக்குத் தேவையான புரிதலாகச் சிலவற்றைக் கூறலாம்.

1. சங்க இலக்கியத்திற்குப் பிற்பட்ட ஒரு காலத்தைச் சேர்ந்ததாகத் தொல்காப்பியத்தைக் கருதலாம். கலித்தொகை பரிபாடல் ஆகியவற்றினுள் வைதீகத்தின் புராணக் கூறுகள் முதலியவை விரிவானவை. குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு ஆகியவற்றினுள் வைதீகத்தாக்கம் மிகமிகக் குறைவு. இனக்குழுச் சமூகத்தின் கூறுகள் என்று இவற்றினுள் நிறையக் காணமுடியும். புறநானூற்றில் வேள்வி முதலியவற்றோடு தொடர்புபடுத்தி வைதீகம் ஓரளவுக்கேனும் அழுத்தமாக இடம் பெறுகிறது. சங்க இலக்கியத்தில் இவ்வாறு இடம் பெறுகின்ற வைதீகத்தின் தொடர்ச்சியைத் தொல்காப்பியத்தில் காணமுடியும். கி.பி. 5ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது தொல்காப்பியம் என்பதற்கான ஆதாரங்களாகவும் இவற்றை மதிப்பிடலாம்.

2. கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்தே வைதீகம் தமிழ்ச் சமூகத்தினுள் நுழைந்தது என்பதை மறுப்பதற்கில்லை. தொல்காப்பியத்திற்கு முன்னரும் சங்க இலக்கியம் குறித்து ஏதோ ஒரு வகையில் கோட்பாட்டாக்கம் இல்லாமல் முடியாது. அகம், புறம் என்ற பிரிவு, குறிஞ்சி முதலிய திணைகள், களவு கற்பு என்ற வகை, திணை துறை என்ற ஆக்கம், களவு, கற்பியல், அறம் இவையும் கோட்பாட்டாக்கத்தின் கூறுகள். தொல்காப்பியர் குறிப்பிடும் செய்யுளியலின் கூறுகள் பலவும் சங்க இலக்கியத்தில் காணப்படுபவை. ராஜ்கவுதமனும் சுட்டிக்காட்டுவது போலக் கூத்து மரபுகள், உவமைக்கு முதன்மை என்பன சங்க இலக்கியத்தின் கூறுகள். இவையனைத்தையும் உள்ளடக்கி ஒரு பெருங்கோட்பாட்டை உருவாக்க முனைந்தால் ஒன்றுக்கு மேற்பட்ட கோட்பாடுகள் உருவாகும்.

3. வைதீகம், சமணம் பவுத்தம், தமிழின் திணை மரபு என்ற மூவகை மரபுகளும் ஒன்றோடொன்று ஊடுருவியதன் விளைவாகத் தொல்காப்பியரின் பெருங்கோட்பாடு உருவாகிற்று என்பது குறித்து ராஜ்கவுதமனின் விளக்கம் ஒரு பெரும் முயற்சியே அன்றி முடிவானதெனச் சொல்லமுடியாது. அகத்திணை ஏழு, அதற்கு ஒத்தவாறு புறத்திணை ஏழு என்ற வரையறை கோட்பாட்டு உருவாக்கத்தின் ஒரு கூறு ஆகலாம். மற்றபடி

இதில் உண்மையில்லை. கைக்கிளை, பெருந்திணை என்பதன் சில கூறுகள் சங்க இலக்கியத்தில் இருந்த போதிலும் ராஜ்கவுதமன் சொல்வது போல வடமரபின் காமியத்தின் தாக்கத்தை இதனுள் காணமுடியும். களவுக்காலத்தில் தலைவியரின் அவத்தைகள், காமியத்தின் ஒரு கூறு. இற்பரத்தை, காமக்கிழத்தி வகைகள், தமிழ்ச் சமூகத்திலேயே இருந்தவை. பரத்தமையும் இது போன்றதே. வைதீகத்தின் நுழைவை இவற்றினுள் காண்பதற்கில்லை. கரணம் முறைத்திருமணம் தமிழ்ச் சமூகத்திற்கும் தேவையாகத்தான் இருந்திருக்க வேண்டும். கற்பு தமிழ் மரபின் ஒரு முக்கியமான கூறு. எண் வகைத் திருமணம் வடவர் மரபினுள்ளும் மரியாதை பெற்றதாக இருந்திருக்க முடியுமா? தொகுத்துப் பார்க்கும் போது சங்க இலக்கியம் குறித்து தொல்காப்பியரின் கோட்பாட்டு உருவாக்கத்தினுள் வைதீகத்தாக்கம் வெளிப்படையாகத் தெரிகிறதேயன்றி சங்க இலக்கியம் குறித்த ஆய்வு விளக்கம் பெறவில்லை. சங்க இலக்கியம் என்பதனுள்ளிருந்து கலித்தொகை, பரிபாடல், முதலியவற்றைக் கூட பிரித்துப் பார்ப்பது பின்னர் கோட்பாட்டுருவாக்கம் செய்வது நமக்குப் பெரிதும் பயன்படலாம்.

4. வைதீகத்தினுள்ளும் சமணம் பவுத்தத்தினுள்ளும் தர்க்கம், சாஸ்திரம் என்ற முறையில் கருத்தினங்களை நிரல்படத் தொகுத்தல், வடமொழியில் காணப்படும் நிருத்தம், வியாகரணம் என்ற முறை இவ்வகையான ஆய்வு முறை மூவகை மரபுகளுக்கும் உரியவை. குறுந்தொகை, நானூறு என்ற முறையில் சங்க இலக்கியத் தொகுப்புக்கள் பதினென் கீழ்க்கணக்கு நூல்களின் தொகுப்புமுறை. திருக்குறள் முதலிய நூல்களில் அறங்களின் தொகுப்பு. இவையெல்லாம் தர்க்க நெறியோடு கூடிய சாத்திரத் தொகுப்பு. அறநூல்களைப் பொறுத்தவரை சமண பவுத்தத்தின் தாக்கம் முதன்மையானது. சங்க இலக்கியத்திலிருந்தே சில அறக்கருத்துக்களைத் தொகுக்க முடியும். கள், சூது, பரத்தமை ஆகியவற்றை சமண மரபு கண்டித்ததன் மூலம் தமிழ் மரபு செழுமை பெற்றது.

5. முதல், கரு, உரி என்ற நெறியும் நாடக வழக்கு, உலகியல் வழக்கு ஆகியவற்றை உள்ளடக்கிய புலநெறியும் தொல்காப்பியரின் அசலான கோட்பாட்டாக்கம். திணைத்துறை வகை, கூற்று முதலிய வகைகள், பொருளியலில் இடம் பெறும் கவிதையாக்கம் உவமை, உள்ளுறை, இறைச்சி, குறிப்பு முதலியவை, களவியல், கற்பியல், அறத்தொடு நிற்றல் முதலிய கூறுகள் இவையனைத்தும் அசலான தமிழ் மரபுகள். இவையனைத்தையும் உள்ளடக்கி ஓர் அசலான

திணைக்கோட்பாட்டை நாம் வகுக்க முடியும். இத்தகைய கோட்பாட்டாக்கத்திற்கு வைதீகம் தருவதற்கு எதுவுமில்லை. சமணமும் பவுத்தமும் தமிழ் மரபின் அறஉணர்வை மேம்படுத்த முடியும். வடவரின் இலக்கிய மரபுக்குத் தமிழரின் நன்கொடை எது என ஆய்வு தேவை. தமிழ் மரபுக்கு எதிரானது வைதீக மரபு.

6. இந்தியா என்ற துணைக்கண்டத்தில் மூவகை மரபும் ஒன்றோடொன்று ஊடுருவி, கூடவே முரண்பட்டு மேலும் எவ்வளவோ நிகழ்ந்திருக்கக் கூடும். இவை பற்றிய விரிவான ஆய்வின் ஒரு பகுதி என ராஜ்கவுதமனின் ஆய்வைக் கருதலாம். மெய்யியல், பொருளியல், கல்வியியல், அரசியல், இசையியல் என்பனவற்றினுள்ளும் இத்தகைய ஆய்வுகள் தொடரவேண்டும்.

(6)

நிறைவாகச் சிலவற்றை இங்கு தொகுத்துக் கூறலாம். பேரா. ராஜ்கவுதமன் தமிழ்ச் சூழலில் தொடர்ந்து அவ்வப்பொழுது சில அதிர்வுகளைத் தந்து நம்மைப் புதுப்பிக்கிறார். தமிழிலக்கிய ஆய்வில் தலித்தியத்தை முன்னிறுத்தியதில் ராஜ்கவுதமன் முதன்மையானவர் என்பதில் ஐயமில்லை. தலித்தியமும் மார்க்சியமும் இவருக்குள் சில கூறுகளில் சிறப்பாக இணைந்து ஒன்று மற்றதை வளப்படுத்துகின்றன. தமிழ்ச் சமூகத்தின் தொன்மையான இனச் சமூகக் கூறுகளை விரிவாகத் தொகுத்துத் தருவதோடு அடுத்து வந்த உடைமைச் சமூகம் முன்னைய இனக்குழுச் சமூகத்தினரை எப்படி ஆதிக்கத்திற்கும் அடிமைத்தனத்திற்கும் உள்ளாக்கியது என்பதை விளக்கும் போது மார்க்சியம் இவருக்கு கைகொடுக்கிறது. இனக்குழுச் சமூகத்தின் கூறுகள் பல வர்க்கச் சமூகத்தினுள்ளும் ஆக்க முறையில் தொடர்வதை இவர் கண்டுகொள்ளாததற்கு இவரிடம் தலித்திய உணர்வு மேலோங்கியிருப்பதையே காரணமாகக் கூறலாம். பொருளியலுக்கும் அரசியலுக்கும் முதன்மைதரும் இடதுசாரிகளைப் போலவே இவரது பார்வையும் அமைகிறது. சங்ககாலப் புலவர் அனைவரும் ஆதிக்கத்தோடு இணைந்து செயல்பட்டவர் என்று ராஜ்கவுதமன் திரும்பத்திரும்பச் சொல்வதிலும் கட்சி மார்க்சியரின் பொருளியல் பார்வையே மேலோங்கித் தெரிகிறது. சங்க காலத்தில் தனியுடைமை, அரசதிகாரத்தோடு செயல்பட்ட ஆதிக்க வர்க்கத்தினரின் வன்முறையையும் அதற்கு ஒத்த கருத்தியலையும் சிறப்பாக விளக்குகிறார் ராஜ்கவுதமன். தமிழ்ச் சமூகம் எப்படி வைதீக

மரபுகளுக்கு விரிவாக இடம் தந்தது என்பது குறித்து ராஜ்கவுதமனின் விளக்கங்கள் மிகச் சிறப்பானவை. வன்முறையும் கருத்தியலும் இணைந்து சென்றதை விளக்கும்போது நீட்சே முதலியவர்களைச் சிறப்பாக மேற்கோள் காட்டுகிறார். இத்தகைய விளக்கம் மார்க்சியத்திற்கும் உரிய விளக்கம். சங்க இலக்கியத்தை அடுத்து வந்த அற இலக்கியங்களைப் பாட்டும் தொகையும் என்ற தொகுப்பினுள் நாம் வைப்பதில்லை. என்றாலும் இவ்வகை அற இலக்கியங்களில் செயல்படும் நீதிக்கருத்துக்கள் எவ்வகையில் ஆதிக்கத்தை உள்வாங்கிக் கொண்டவையாக இருக்கின்றன என்பதை பூக்கோ முதலியவர்களைப் பயன்படுத்திச் சிறப்பாக விளக்குகிறார்.

அறம் என்பது எப்பொழுதும் ஆதிக்கத்தோடு ஒத்தே இயங்கும் என்ற முறையில் மார்க்சியர் கூறுவதையும் நாம் இங்கு மறுக்கவில்லை. ஆனால் ஆதிக்கத்தை ஒப்புக்கொள்ள முடியாமல் அதற்கு எதிராக காலந்தோறும் கலகக்குரல்கள் வெடித்துக்கொண்டே இருக்கின்றன. இத்தகைய கலகக் குரலினுள் செயல்படும் அறம் பற்றி நமக்கு ஏன் அக்கறை இல்லை? இவ்வகை அறவியலை மார்க்சியம் கண்டறிய இயலாதா?

இறுதியாக இப்படிச் சொல்லலாம். தலித்தியத்தையும் மார்க்சியத்தையும் எதிர் எதிர் நிறுத்துவதில் பயனில்லை. தலித்தியமும் மார்க்சியமும் தம்மைத் தொடர்ந்து புதுப்பித்துக் கொள்ள முடியும். எவ்வகை ஆதிக்கத்தையும் மார்க்சியத்தால் ஏற்க முடியாது. மனித விடுதலைதான் மார்க்சியத்தின் இலக்கு. தலித் மக்களுக்கும் விடுதலை இல்லாமல் வாழ்க்கையில்லை. தலித்தியரும் மார்க்சியரும் இணைந்து செயல்படுவதன் மூலமே விடுதலை சாத்தியம். உலகமயமாதல் சூழலில் ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரும் இணைந்து செயல்படுவது தவிர விடுதலைக்கு வேறு வழியில்லை. வைதீகம் எந்த வகையிலும் நமக்குப் பயன்படாது. அடிமைப்பட்ட மக்களின் நெஞ்சில் உலக மக்களின் விடுதலைக்கான அறவுணர்வு மேலோங்கத்தான் வேண்டும். சமணம் பவுத்தம் ஆகியவற்றையும் நம் கால நோக்கில் கூர்மையான திறனாய்வுக்கு உட்படுத்தத்தான் வேண்டும். சங்க இலக்கியத்தினுள்ளிருந்தும் நமக்கு இன்றும் தேவையான கூறுகளைத் தொகுக்க முடியும். தொல்காப்பியரின் கோட்பாட்டாக்கம் அவரோடு நின்று விடவில்லை. நம் காலத்திலும் தொடரமுடியும். அசலான மார்க்சியனுக்குத்தான் இது சாத்தியம். ஆனால்

அதேசமயம் ராஜ்கவுதமனைப் போன்ற விரிவான படிப்பும், கூர்மையான புத்தியும் நமக்கு இல்லாமல் முடியாது. தமிழ்ப் பேராசிரியர்கள் ராஜ்கவுதமனிடமிருந்து கற்றுக் கொள்வதற்கு நிறையவே இருக்கிறது.

(7)

பாட்டும் தொகையும் என்ற நூலின் துணைத்தலைப்பாகத் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும் என்று ராஜ்கவுதமன் தருகிறார். தொல்காப்பியர் ஒருவகையான தமிழ்ச் சமூக உருவாக்கத்தோடு சங்க இலக்கியத்திற்கான கோட்பாடு வகுத்திருக்கிறார் என்பது ராஜ்கவுதமன் கருத்து என்று நாம் புரிந்து கொள்கிறோம். அவர் கருத்துப்படி வேளாளர் தலைமையில் தமிழ்ச் சமூகம் தொல்காப்பியர் வழியே உருவாக்கம் பெற்றிருப்பதாக நாம் கருதமுடியும். பார்ப்பனியம் அல்லது வருணமுறையை உள்வாங்கிக் கொண்டது வேளாளர் தலைமையில் அமைந்த தமிழ்ச்சமூகம். இந்த சமூகம் துடியர், பாணர் முதலியவர்களோடு வேடர், ஆயர் முதலியவர்களையும் தன் ஆதிக்கத்திற்கு கீழ்ப்படுத்திக் கொண்டது. தமிழ் வேந்தருடன் ஒருபக்கம் பார்ப்பனரும் இன்னொரு பக்கம் வேளாளரும் இணைந்திருந்தனர் என்பதாக நாம் கருதமுடியும்.

இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் வேளாளர் முதலியவர்கள் ஒருங்கிணைந்து பார்ப்பனருக்கு எதிராக உருவாக்கிய நீதிக்கட்சியை இங்கு நினைவு கூரலாம். தமிழ்ச் சமூகத்தின் தலைமையில் இருந்தவர் வேளாளர் முதலிய சத்சூத்திரர்கள். தலித் மக்களை இவர்கள் தமக்குக் கீழ்ப்படுத்தினார்கள். வேளாளர் முதலிய உயர்சாதியினர்தான் தம்மைத் தமிழர் என அழைத்துக் கொண்டனர். தலித்மக்கள் தமிழர் இல்லை. தொல்காப்பியரும் வைதீகத்தை உள்வாங்கிக் கொண்டு ஒருவகையான தமிழ்ச்சமூக உருவாக்கத்திற்கு கோட்பாடு வகுத்தார். ராஜ்கவுதமனுடைய கருத்தை இப்படி நாம் புரிந்து கொள்வதில் தவறில்லை. 'இத்தகைய தமிழ்ச்சமூகத்திற்கு எதிராக தலித்மக்கள் கலகம் செய்ய வேண்டும். தமிழ்ச்சமூகத்தின் உண்மையான வடிவத்தை இப்படி வெளிப்படுத்த வேண்டும். தமிழர் என்ற பெயரீடு தலித் மக்களுக்குப் பொருந்தாது. தமிழர் என்பவர் உயர்சாதியினர். பார்ப்பனியத்தை உள்வாங்கிக் கொண்டவர். இத்தகைய தமிழ்ச்சமூக உருவாக்கம் தொல்காப்பியரிலிருந்தே தொடருகிறது. சங்க காலத்தில் காணப்படும் வேந்தர்கள் இத்தகைய தமிழ்ச் சமூகத்தை உருவாக்க முற்பட்டனர். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் அறிஞர்களில் சிலர் தொல்காப்பியத்தில் காணப்படும் வைதீகத் தாக்கம்

என்பதை இடைச்செருகல் என்று குறிப்பிடுவதையும் நாம் இங்கு நினைவு கூரலாம். தமிழ்ச் சமூகத்தில் சாதியத்தோடு கூடிய வருணமுறை தகர்க்க இயலாதபடி நிலைபெற்று விட்டது என்ற கருத்தையும் இத்தோடு இணைத்துப் பார்க்கலாம்'.

தமிழ்ச் சமூகத்திலிருந்து சாதியக் கூறுகளை, வைதீகக் கூறுகளை முற்றாக களைந்தாக வேண்டும் என்பது நம் கருத்து. சாதியத்தை தகர்த்தாலொழிய தமிழ் மக்களைத் தமிழர் என்ற அடிப்படையில் ஒன்றிணைக்க முடியாது என்றும் நாம் கருதுகிறோம். வருண முறையைத் தனக்கு ஆதாரமாகக் கொண்ட இந்துத்துவத்தோடும் இந்திய தேசியத்தோடும் நாம் போராடுகிறோம். இந்திய வரலாற்றிலிருந்து தமிழ் வரலாற்றை மீட்டுக் கொள்ள விரும்புகிறோம். தமிழ்ச் சமூகத்தின் தொடக்க காலத்தில் சாதிகள் இல்லை. மத ஆதிக்கம் இல்லை. இனக்குழுச் சமூகத்திலிருந்த பொதுமையறம் தமிழ்ச் சமூகத்தில் நிலத்தடி நீர் போலத் தொடர்ந்தது என்பதை நாம் புரிந்து கொள்கிறோம். சித்தர் இலக்கியம் தமிழ் இலக்கியத்தின் மையம். வள்ளுவர் இளங்கோ முதலியவர்களையும் அசலான தமிழர் என்று நாம் மதிப்பிடுகிறோம். அவர்கள் போற்றிய ஒப்புரவு என்பது இன்றும் நமக்குத் தேவைப்படுகிற சமதர்மம். வள்ளலார், பெரியார் முதலியவர்கள் மூலம் இந்த நீருற்று இன்றும் நமக்குள் தொடர்கிறது. தலித் மக்கள் எனப்படுவோர் உழைக்கும் மக்களின் ஆற்றல் மிக்க ஒரு பகுதியினர். இவர்கள் தமிழ்ச் சமூகத்தின் பிரிக்க முடியாத பகுதியினர். இவர்களும் தமிழ்ச் சமூகத்தை தாங்குபவர்கள். இவர்கள் இல்லாமல் தமிழ்ச்சமூகம் இல்லை. வீட்டு மொழி வேறு எனினும் இவர்களின் கல்விமொழி தமிழன்றி வேறில்லை. இவர்களை ராஜ்கவுதமன் ஆதித்தமிழர் என்று குறிப்பிடுவதில் பொருளுண்டு.

இவர்களையும் உள்ளடக்கிய தமிழ்ச் சமூகத்திற்கு இன்றியமையாது தேவைப்படுவது சமத்துவமும் சமதர்மமும். பெரியாரியத்திலும் மார்க்சியத்திலும் மையத்தில் இருப்பது சமதர்மம். பெரியாரியத்தையும் மார்க்சியத்தையும் அதேபோலவே அம்பேத்கரியத்தையும் இன்று வேறுபடுத்தி அல்லது முரண்படுத்திப் பார்ப்பதில் பொருளில்லை. தமிழ்ச் சமூகத்தைப் பிளவுபடுத்துவது ஆதிக்கவாதிகளுக்கே சாதகமாகி விடும். தமிழ் மக்களின் விடுதலையை வேண்டுவோர் இதைச் செய்ய முடியாது. உலகமயமாதல் முதலிய சூழலில் தமிழ் மக்கள் தமக்குள் பிளவுபட்டு விடக்கூடாது.

தமிழ்த் தேசியம் என்று இன்று நாம் அழுத்தம் திருத்தமாகப் பேசுகிறோம். இந்திய தேசியத்தோடு, வருணமுறையோடு, சாதி ஆதிக்கத்தோடு நாம் முற்றாக முரண்படுகிறோம். சமதர்மமன்றி நமக்கு முதன்மை இலக்காக வேறு எதுவுமில்லை. இனக்குழுச் சமூகத்திலிருந்து வரலாற்றுக் காலம் முழுவதும் நமக்குள் தொடருகிற பொதுமை அறம் தவிர வேறு நெறியில்லை. சங்க இலக்கியம் தமிழையும் தமிழ் மக்களையும் வாழவைக்கும். ராஜகவுதமனும் மறுத்துப் பேசுகிற உடைமைச் சமூகம், ஆதிக்கச் சமூகம் நமக்கு வேண்டாம். இன்றைய ஆதிக்கச் சூழலில் நாம் அனைவருமே ஒருவகையில் தலித்துகளாகத்தான் இருக்கிறோம். அடிமைத் தனத்திலிருந்து நமக்கு விடுதலை பெறமுடியும்.

குறிப்பு:

உதகை அரசுக்கலைக்கல்லூரித் தமிழ்த்துறையும் செம்மொழி உயராய்வு நிறுவனமும் இணைந்து 'மார்க்சிய நோக்கில் சங்க இலக்கியம்' என்னும் பொருளில் 25-2-2010, 26-2-2010இல் நடத்திய கருத்தரங்கில் ஞானியின் கட்டுரை.

# 6. சங்க இலக்கியத்தில் சமுதாயப் பிரச்சனைகள்

சங்க காலம் ஒரு மாறுதல் காலம். குறிஞ்சி, முல்லை, நெய்தல் நில நாகரீகங்களை மீறி மருத நில நாகரீகம் வளர்ந்து, அவற்றை வெற்றி கொண்ட காலம். குறிஞ்சி, முல்லை நிலங்களில் வாழ்ந்து வந்த குலச் சமுதாயத் தலைவர்களை, மருத நில வேந்தர்கள் வென்று தமது அரசை நிலை நிறுத்திய காலம்.

நால்வகைப் படைகளின் இறுமாந்த தோற்றத்தோடும், மருத நில விளைச்சலின் ஆற்றலோடும் வந்து மோதிய வேந்தர்களுக்கு முன், இயற்கைப் பொருளாதாரத்தையும் தம்மையும் மட்டுமே நம்பி வாழ்ந்த பாரி முதலிய குறுநிலத் தலைவர்கள் நிற்க இயலாமல் அழிந்ததில் வியப்பில்லை. இயற்கையின் விளைவை முழுமையாகத் தமக்குள் பங்கிட்டுத் துய்த்து வாழ்ந்த குறுநிலத்தலைவர்கள், நகரங்களையும் நால்வகைப் படைகளையும் உடைமைகளையும் தொகுத்துக் கொண்ட வேந்தர்கள் முன்நிற்க இயலாது அழிந்தனர். குமணனுக்கு எதிராக இளங்குமணனும், கோப்பெருஞ்சோழனுக்கு எதிராக அவனது புதல்வரும் கொண்ட பகைமைக்குக் காரணம், தற்செயலானது அல்ல.

ஒரு மாங்கனியை உண்டமைக்காக நன்னன் புரிந்த பெண்கொலையும் இத்தகையதே. உடைமை பற்றிய பற்றும் அதைக் காப்பாற்றுவதற்கான தவிர்க்க இயலாத பகைமையும் கொடுங்கோன்மையும் சமுதாயத்தில் தோன்றிப் பெருகி வருவதன் விளைவுகள் இவை. முன்னைய சமுதாயத்தில் சமுதாயத்தின் உற்பத்தியில், அந்தச் சமுதாயத்தை இன்புறுத்துபவர், ஊக்கப்படுத்துபவர் என்ற வகையில் பாணர்கள், விறலியர், கூத்தர்கள் ஆகிய கலைஞர்கள் பெற்ற நியாயமான, உரிமையான பங்கு, உடமைப்பற்று பெருகி வரும் சமுதாயத்தில் மறுக்கப்பட்டதன் விளைவாகத்தான், அவர்கள் தமது வேரை இழந்து தம்மை ஆதரிக்கும் குறு நிலத்தலைவர்கள், மன்னர்களைத் தேடி பழுத்த மரங்களைத் தேடி அலையும் பறவைகளைப் போல நாடு முழுவதும் அலைந்து திரிந்தார்கள். அந்தப் பெருமைக்குரிய பழஞ்சமுதாயம் மறைந்து விட்டதைத்தான் "இனி பாடுநரும் இல்லை பாடுநர்க்கொன்று ஈகுநரும் இல்லை" என்ற கையறுநிலை ஔவையின் மூலமாகத் தெரிவிக்கிறது. வேந்தர்களை எதிர்த்து நின்று, தமக்கே சொந்தமாகியிருந்த அந்தச் சமுதாயத்தை காக்கும்

முறையில், வாழ்வதை துச்சமாகக் கருதி வீரத்தையே ஆயுதமாகக் கொண்டு போரிட்ட அந்த வீரர்களின் யுகம் மறைந்து புதிய சமுதாயம் நிலை பெறலாயிற்று.

சங்க காலம் என்று கூறப்படும் ஏறக்குறைய 200 ஆண்டுக்கால வரலாறு இது. இந்தக் காலத்தில் குறுநிலத் தலைவர்களுக்கிடையில், குறுநிலத்தலைவர்களுக்கும் வேந்தர்களுக்கும் இடையில் நடைபெற்ற போர்கள் மிகப் பல. இப்போர்களில் நகரங்கள் எரிக்கப்பட்டன. விளைநிலங்கள் பாழாக்கப்பட்டன. ஏரி குளங்கள் தூர்க்கப்பட்டன. எண்ணற்ற மக்கள் கொல்லப்பட்டனர். இவற்றின் விளைவாக சங்க காலத்தின் இறுதியிலும் சங்கப் பிற்காலமாகிய சிலப்பதிகாரம், மணிமேகலை காலத்திலும் தமிழகத்தில் பெருகி இருந்த வறுமைக் கொடுமையை நாம் பார்க்கின்றோம். திருக்குறள் முதலிய அற நூல்களில் வறுமையின் குரல் ஓங்கி ஒலிப்பதைக் கேட்கிறோம்.

ஒரு சமுதாயம் மாறி இன்னொரு வகைச் சமுதாயம் உருவாகும் போது, தவிர்க்க இயலாமல் ஏற்படும் அவலங்களுள் இவை சேர்கின்றன.

முன்னைய சமுதாயத்தில் வாழ்க்கை, குறிஞ்சிக்குள் அல்லது முல்லைக்குள் அல்லது நெய்தலுக்குள் பெரும்பகுதி அடங்கி விடுகிறது. பிற நிலங்களுடன் கொண்ட தொடர்பு மிகச்சிறிய அளவினதாகவே உள்ளது. அந்நிலையில் மருத நில நாகரிகம் வளர்ந்து மேலோங்கி வரும்போது, பிற நில நாகரிகங்களை இது பாதிக்கவே செய்கிறது.

ஆற்றுத்தண்ணீரைத் தேக்குவதற்காக, கால்வாய்களை நெடுந்தொலைவு அமைப்பதற்காக, விளைநிலங்களை உண்டாக்குவதற்காக, நகரங்களில் பெருகி வரும் தொழிற் பொருட்களை விற்பதற்காக மருத நில நாகரீகம் தன் எல்லையை விரிவாக்க வேண்டியதாகிறது. தவிர்க்க இயலாதபடி பிற நில மக்களுடன் உறவு கொள்வது தேவையாகிறது. சில சமயங்களில் இவ்வுறவு வஞ்சிப் போரின் மூலம் சாதிக்கப்படுகிறது. இவ்வகையில் தொடக்கத்தில் திணைமயக்கமாகத் தோன்றிய நிகழ்ச்சி நாளடைவில் வரலாற்று நிகழ்ச்சியாகி, இறுதியில் புதிய நாகரிகத்தின் வெற்றியாகி விடுகிறது. இந்நிலையில் பழைய சமுதாயம் மறைந்து புதிய சமுதாயம் தோன்றிவிடுகிறது. இந்தச் சமுதாயத்தில் புதிய தொழில்கள், புதிய பொருட்கள், புதிய கருத்துக்கள் தோன்றுகின்றன. முன்னைய சமுதாயத்தில் விளைவு முழுவதும் துய்க்கப்பட்டது. விளைவென்பதும்,

மலைபடு பொருட்களாக, மாடுகளின் பயன்களாக, கடல்படு பொருட்களாக, பெரும் பகுதி இயற்கைப் பொருட்களாகவே இருந்தன. புதிய சமுதாயத்தில் மனிதனின் உழைப்பின் விளைவாக, புதிய கருவிகளின் விளைவாக, பொருட்கள் உண்டாக்கப்படுகின்றன. இருப்பதை தின்று தீர்க்கும் முறை மாறி, இருப்பதை வைத்து வளர்த்துப் பெருக்கி அனுபவிக்கும் முறை ஏற்படுகிறது. புதிய சமுதாயத்தில் கல்வி, தொழில்முறைகள் ஏற்படுகின்றன. அறிவு பெருகுகிறது.

முன்னையை சமுதாயத்தில் ஓரிடத்தில் மட்டுமே குறுகிக் குவிந்து கிடந்த மக்கள் அந்தச் சமுதாயத்தின் வேர்கள் பிடுங்கப்பட்டுவிட்டதால், இருந்த இடத்தை விட்டு வெவ்வேறிடங்களுக்கு வெவ்வேறு தொழில்களை நாடிச்செல்ல வேண்டியவர்களாகிவிட்டனர். முன்னைய சமுதாயத்தின் பாதுகாப்பு இவர்களுக்கு இல்லை. அதுபோலவே முன்னைய சமுதாயத்தின் பழமையும் இவர்களிடம் இப்போது இல்லை. முன்னைய சமுதாயம், பொதுமைச் சமுதாயம். இச்சமுதாயம் உடைமைச் சமுதாயம். முன்னைய சமுதாயம் பண்பாட்டைக் கொண்டிருந்த சமுதாயம். இச்சமுதாயம் உடைமையை மதிக்கும், போட்டி, பொறாமை தற்பெருமை முதலிய பண்புகளை வளர்க்கும் சமுதாயம். இந்தச் சமுதாயத்தின் வேந்தர்கள், தலைவர்கள் பழஞ்சமுதாயத்தின் ஆதரவைத் தேடுவதற்காக பழஞ்சமுதாயத் தலைவர்களிடம் பெண் வேண்டும்போது, அந்த மறவர்கள் இந்த 'அநாகரிக' மனிதர்களுக்குத் தம் பெண்களைத் தர மறுக்கவே செய்தார்கள். உன்னதமான அந்த பொதுமைச் சமுதாயத்தோடு சேர்ந்து போரிட்டோ, வடக்கிருந்தோ, தீப்புகுந்தோ மடிவார்களே அல்லாமல், இந்தப் புதிய சமுதாயத்தின் புன்மையை ஏற்று இதற்குள் வரமாட்டார்கள். பழைய சமுதாயத்தின் பொதுமையை மேலும் வெறித்தனமாகக் கடைப்பிடித்துத் தம் தலைகளைக்கூடக் குமணனைப் போல் கொடுத்துவிட்டு மடிவதையே அவர்கள் விரும்பினார்கள். தம் தலைவர் மடியும்போது அவரோடு புலவர்களும் சான்றோர்களும் மடியவே விரும்பினார்கள்.

'கல்பொருதிரங்கும் மல்லற் பேரியாற்று வெள்ளம்' போலப் பேராற்றலோடு வந்தது இந்தப் புதிய சமுதாயம். இந்தச் சமுதாய வெள்ளத்தில் அகப்பட்டவர்கள் புணைகளைப் போல, புதிய சமுதாயத்தின் விதி வழியே சென்றாக வேண்டும். இதன் வேகத்தை எதிர்த்து நிற்கமுடியாது. கண்ணுக்குப் புலப்படாமல், ஆனால் வெறித்தனமாக வரும் இந்தச் சமுதாயத்தில் சிலர் திடீரென உயர்ந்த இடத்திற்கேறிப்

பெரியவராகின்றனர். சிலர் காரணம் இல்லாமல், தெரியாமல் சிறியவராகின்றனர். இதற்காக ஒருவரைப் பாராட்டுவதோ, மற்றவரை இகழ்வதோ அர்த்தமற்றதாகி விடுகிறது. குறுகிய முன்னைய நில எல்லைகளைக் கடந்து, உருவாகி வரும் இந்த விரிந்த சமுதாயத்தில், தனது ஊர் என்று, உறவினர் என்று எவரும் இல்லை. யாதும் ஊர் யாவரும் கேளிராகின்றனர். புதிய சமுதாயத்தை இவ்வாறு கணிக்கின்றனர் பூங்குன்றனார்கள். முன்னைய சமுதாய மண உறவுகள் மாறி, எங்கிருந்தோ வருபவர், யார் யாரையோ சந்தித்து உறவு கொள்கின்றனர். 'யாயும் ஞாயும் யாராகியரோ; எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்' என்ற வியப்பு இவர்களுக்குள் ஏற்படுகிறது. புதுமைகள் சந்திக்கும் நிலையிலேயே, காதற்பரவசம் பெரிதாக எழுகிறது. இவர்கள், எப்படிச் சேர்ந்தார்கள் என்று புரியாத நிலையில்தான் ஊழ் இவர்களைக் கூட்டுவித்ததாக இலக்கணம் எழுதலாயினர்.

சங்க காலத்தில் குறுகிய நில எல்லைகளைக் கடந்து மக்கள் வாழ்க்கை விரிந்து வருவதை இலக்கியத்தில் விரிவாகப் பார்க்கிறோம். போருக்காக, பொருளீட்டுவதற்காக ஆடவர்கள் பெருமளவில் தமது ஊரைவிட்டு, தமது நில எல்லையைக் கடந்து நகரங்கள் நோக்கி நாடு கடந்து செல்வதை, அகப்பாடல்களில் பெரும்பான்மையாக உள்ள பாலைப்பாடல்கள் தெரிவிக்கின்றன. தமது குறுகிய நில எல்லைக்குள் வாழ முடியவில்லை என்பதையும் பொருளின் தேவை இன்றியமையாது பெருகிவிட்டதையும் இப்பாடல்கள் புலப்படுத்துகின்றன. ஏற்கனவே நாம் கூறியவாறு போர்கள் விரிந்த அளவில் நடைபெறுவதையும், வறுமை சமுதாயத்தினுள் விரைந்து வருவதையும் இப்பாடல்கள் தெரிவிக்கின்றன. வாழ்க்கை ஒருவகையில் விரிந்து வரும் அதே சமயத்தில், வாழ்க்கையில் பெருகிவரும் பிரிவு-பாலைத் தன்மையையும் நாம் மறுத்துவிட இயலாது. தலைவனைப் பிரிந்த நிலையில் குறிப்பிட்ட காலத்திற்குத் தன் மனத்தை ஆற்றியிருக்கும் தலைவியின் துன்ப நிலை பற்றி முல்லைப்பாடல்களும், ஒருவகையில் சமுதாயத்தில் தவிர்க்க இயலாதவாறு பெருகிவரும் போர்-பொருளீட்டம்-உடைமையாதிக்கம்-பிரிவு-பாலைத்தன்மையின் பகுதியாகி விடுகின்றன. அது போலவே குறிப்பிட்ட கால அளவுக்குள் பொருள் தேட்டம் முடியாமையையும், போர் மிக்க சூழலில் வழிப்பறி, கள்வர் பெருகிய சூழலில், தலைவன் குறிப்பிட்ட காலங்கடந்தும் கூடத் தன் வீட்டிற்குத் திரும்ப இயலாத நிலையையும் நெய்தல் பாடல்கள்

புலப்படுத்துகின்றன. போர்கள் பெருகிய சூழலில் பொருளீட்டத்துக்கான வழிகள் சிக்கலான நிலையில், தலைவனது சாவு எதிர்பார்க்கத்தக்கதே. இந்நிலையில் கையறு நிலை (இரங்குதல் நிலை) பெருகுவதில் வியப்பில்லை. இவ்வகையில் நெய்தற் பாடல்களும் ஒருவகையில், பாலையின் – பாலைத்தன்மையின் தொடர்ச்சியாகின்றன.

இவ்வளவும் மருதநில நாகரீகத்தின் பரிசுகள். நிலத்தில் விளைச்சலும் நகரங்களில் தொழில்களும் பெருகிவரும் சூழலில் உடைமை வளர்ந்து வருகிறது. செல்வம் தனக்கேற்ற தனது இன்பத்துய்ப்புக்கான சூழலை ஏற்படுத்துகிறது. செல்வாக்கான வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களை சங்க இலக்கியத்தில் காணப்படும் நகர வர்ணனைகளிலிருந்து அறிகிறோம். பரத்தைகள் நகர வாழ்வின் செல்வச்செழிப்பின் பகுதியாகி விட்டனர். சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு பெருகிவரும் நிலையில் வேந்தர்களின் படையெடுப்பும் குறுநிலத் தலைவர்களின் அழிவும் பெருகிய நிலையில் பூசல், ஊடல் அதிகரிக்கின்றன. பொருள் உற்பத்தியில் பொருளீட்டத்தில் ஆடவர்களின் பங்கு அதிகரிப்பதற்கேற்ப, மகளிர்க்குக் கற்பு அணிகலன் சிறப்பாக வலியுறுத்தப்படுகிறது.

இப்புதிய சமுதாயம் வேளாண்மை, தொழில் வளர்ச்சியைப் பெருக்கி - நகரங்கள், நாகரிகம், கல்வி முதலியவற்றை ஊக்குவித்ததன் மூலம் முன்னைய சமுதாயத்தைவிட வளர்ச்சி பெற்ற சமுதாயமாகிறது. குறுகிய நிலங்களிலிருந்தும் குறுகிய வாழ்க்கை முறையிலிருந்தும் மக்களை விடுவித்து, மக்களிடம் புதிய உறவு முறைகளை இது வளர்த்து வருகிறது. பண்டைச் சமுதாயத்திலிருந்த பொதுமை, நீதி ஆகியவை, தனது சமுதாய அடிப்படையோடு அழிந்துவிடுவன அல்ல. அவை புதிய சமுதாயத்தின் கட்டுமானத்திற்குள்ளும், இக்கட்டுமானத்திற்கேற்பத் தன்னை உருமாற்றிக் கொண்டு வாழ்கின்றன. இப்புதிய சமுதாயமும் தனக்குத் தேவையான கலாச்சாரத்தை பழைய சமுதாயத்திலிருந்து தேவையான அளவு ஏற்றுக் கொள்கிறது. பொருளாதார அடிப்படை மாறினாலும் தான் அழியாமல் புதிய நிலைகளுக்கேற்ப தன்னை உருமாற்றிக் கொள்ளும் கலாச்சாரத்தின் தன்மை இது.

இவ்வகையில் பழஞ்சமுதாயத்தின் பொதுமை, புதிய சமுதாயத்தில் கொடையாக – ஈகையாக - விருந்தோம்பலாக இடம் பெறுகிறது. பழஞ்சமுதாயத்தில் மக்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வற்ற தன்மை, புதிய சமுதாயத்தில் அன்பாக, காதலாக, அருளாக மாறுகிறது.

பழஞ்சமுதாயத்தின் தொடர்ச்சியாகவே புதிய சமுதாயத்தில் புலவர்கள், சான்றோர்கள் நீதியை விளக்குகிறார்கள்.

சங்ககாலத்திற்கு முற்பட்டதொரு காலத்தில் வரையறையற்ற புணர்ச்சி முறை இருந்திருக்கக்கூடும். கைக்கிளை, பெருந்திணை என்று கூறப்படும் உறவுமுறைகள், அக்காலத்தில் இயல்பான உறவுமுறைகளாக இருந்திருக்க முடியும். நாளடைவில் புலவர்கள், சான்றோர்கள் நோக்கில் இவை தவறாகிவிடுகின்றன. இவர்கள்தான் ஐந்திணை முறைக்குப் பெருமை தருகிறார்கள். ஆணும் பெண்ணும் தாமே இணைந்துவிடும் முறை, முன்னைய சமுதாயத்தின் தொடர்ச்சிதான். குலம், செல்வம், நிலம் முதலியவை பார்க்கும் தனி உடைமைச் சமுதாயத்தில் பெருந்திணை உறவுக்கே பெரும் இடம் இருக்கமுடியும். களவில் புணரும் முன்னைய சமுதாய உரிமைமுறையும் சான்றோர்களின் உடன்பாடு பெற்ற புதிய சமுதாயத்தின் மணமுறையும் கற்பு முறையும் – இங்கே இணையும் நிலைமை தோன்றுகிறது. சான்றோர்கள் இதனைப் பெரிதும் வரவேற்கவே செய்கிறார்கள். நிலம் கடந்து, முன்னைய உறவு கடந்து, உடைமை கடந்து இவர்கள் கொள்ளும் காதல் அவர்களால் வரவேற்கப்படுகிறது. இது சான்றோர் முறை; புலனெறி வழக்கு. இதை உலகம் – சமுதாயம் ஏற்பதில்லை. இவர்கள் காதலுக்குத் தடையாக இருக்கின்றனர். அம்பலும் அலரும் கிளப்புபவர்கள் இவர்கள். தாய் தந்தையர் இவ்வுறவை ஏற்பதில்லை. இற்செறிப்பு முதலிய வகைகளில் தடை ஏற்படுத்துகின்றனர். தலைவன், தலைவியர் உடன்போக்கின் போது பின்தொடர்கின்றனர். தலைவியைப் பிரித்துக் கூட அழைத்து வந்துவிடுகின்றனர். நல்ல குலத்தில் பிறந்தவனுக்கு செல்வம் மிக்கவனுக்குத் தம் மகளை ஊரறிய மணம் முடித்து வைப்பதையே பெற்றோர் விரும்புகின்றனர். பொய்யும், வழுவும் தோன்றிய நிலையில், மணமுறை இவ்வாறு தோன்றியது. தமது பெண்ணின் திருமணத்தை தாம் தீர்மானிக்கவே பெற்றோர் விரும்புகின்றனர். தனியுடைமை தோன்றிவிட்டதன் தவிர்க்க இயலாத போக்கு இது. குலம், செல்வம் முதலியவற்றை பார்த்து நடைபெறும் திருமணமே நடைமுறையாகிறது. அதாவது சான்றோர்கள் அன்பின் ஐந்திணையைப் பாராட்டிக்கொண்டிருந்த போதிலும் சமுதாய நடைமுறை வேறு வகையாக இருப்பதைத் தான் இலக்கியம் தெரிவிக்கிறது. காதலித்தவன் கைவிட்டு விடுவானோ, பொருளுக்காகப் பிரிந்தவன் தன்னை மறந்து விட்டானோ? என்றெல்லாம் தலைவியரும், தோழியரும் செவிலித் தாயாரும் ஐயுற்றதில்

அவலம் கொண்டதில் பொருள் இல்லாமல் இல்லை. ஒருவகையில் காதலர்க்கும் சமுதாயத்தில் உள்ள பெற்றோர் முதலியவர்க்கும் கடுமையான பகை இருக்கவே செய்கிறது. காதலைச் சான்றோர்கள் எவ்வளவு பாராட்டிய போதிலும் சமுதாயத்தில் பெருகி நடைமுறையாகவில்லை. தனியுடைமை தன் ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்வதில் வெற்றி பெற்றவுடன் காதல் புதைக்கப்பட்டது. சான்றோர்கள் ஐந்திணைப் பாடல்கள் பாடும் வழக்கத்தைக் கைவிட்டனர். முன்னைய சமுதாயத்திற்கும் புதிய சமுதாயத்திற்கும் ஏற்பட்ட மோதலில் பிறந்தது சங்க இலக்கியம். மோதல் வளர்ந்து பெருகி வெடித்து முடிந்தவுடன் சங்க இலக்கியமும் முடிந்துவிடுகிறது. குறிப்பிட்ட நில எல்லைக்குள் நடைபெற்ற வாழ்க்கை முடிந்துவிட்டது. வாழ்க்கைக்கும் இயற்கைச் சூழலுக்கும் இருந்த இயற்கைத் தன்மை மாறி இயற்கையை மாற்றியமைப்பதன் மூலம் வாழ்க்கையை மாற்றியமைக்கும் முறை வந்துவிட்டது. இதன் மூலம் உரிப் பொருளுக்கும் – கரு, முதற்பொருளுக்கும் கூறப்பட்ட உறவுமுறை சிதைந்துவிட்டது.

பாரி முதலிய வள்ளல்கள் வாழ்ந்த குலச்சமுதாயம் தான் வாழ்வதற்காக நடத்திய வீரயுகப் போராட்டம் முடிவடைந்ததன் மூலம், இடைக்காலம் முழுவதும் முன்னைய குலச் சமுதாயத்தின் மீது மக்களும் புலவர்களும் கொண்டிருந்த மயக்கம் தீர்ந்துவிட்டது. சமுதாயத்தில் புதிய விதி ஆதிக்கம் பெறத் தொடங்கிவிட்டது. ஒரு வீட்டில் சாவுப்பறையும், இன்னொரு வீட்டில் மணமுரசும் முழங்குவதை ஏற்றுக் கொள்ளும் பண்பற்ற உலகம் தோன்றிவிட்டது. காதலுக்குக் கிடைத்த எழுச்சி கருகிவிட்டது. பொருள் பலம் உலகாளத் தொடங்கிவிட்டது. நெல்லும் நீரும் மன்னன் இல்லாமல் இனிப் பெறமுடியாது. ஆகவே இனி நெல்லோ நீரோ மக்களுக்கு உயிர் தர முடியாது. மன்னன்தான் இனி மக்களுக்கு உயிர் தருபவனாகிவிட்டான். முன்னைய சமுதாயத்தின் பாதுகாப்பு, இனி கலைஞர்களுக்கு இல்லை. பாணர்கள் இனி பரத்தையர்கள் வீட்டில் சேவகம் பார்த்தாக வேண்டும். மக்களுக்கு இனி நம்பிக்கை தருவதற்குரிய பாரிகள் இல்லை. இவ்வுலகம், இனி அவர்களை விட்டுப் போகிறது. இனி அவர்கள் மறு உலகைத்தான் நம்பியாக வேண்டும். தம்மை இவர்கள் இனி வாழ வைத்துக்கொள்ள முடியாது. இவர்களைக் காப்பாற்ற இனி கடவுளர் வேண்டும். தமது வாழ்விலிருந்து நீதி நழுவிவிட்டது. இனி இவர்கள் நீதியைத் தேடிக் கண்டடைய வேண்டும். இந்த உடலியல் வாழ்க்கை

இவர்களுக்கு அவலமாகிவிட்டது. கேவலமாகிவிட்டது. இனி இவர்கள் ஆன்மாவைத் தேடிப் பெற்றதாக வேண்டும். வாழ்க்கையின் இலக்கணத்தை ஆராயும் பொருள் இலக்கணம் இனி இவர்களுக்கு வேண்டாம். இயற்கையை ஆராய்ந்தும் முதற் பொருள், கருப்பொருள் வகுக்கும் முறை இனி வேண்டாம். இனி இவர்களுக்குத் தேவை நீதிகள், சமயங்கள்.

இவ்வாறாகச் சங்க காலமும், சங்க இலக்கியமும், இனித் தொடர்ந்து வாழ்வதற்குத் தேவையில்லாமல், சமயத்திற்கு இடம் கொடுத்து மறைகின்றன.

# 7. சங்க இலக்கியத்தில் படைப்பியக்கம்

1. "தன்னை அறிதல்" என்பது குழந்தைப்பருவத்தில் தொடங்கி வாழ்வின் பெரும்பகுதி முழுவதும் நிகழ்கிறது. புறச்சூழலைப் புரிந்து கொள்வதில் தொடங்கிப் புறச்சூழலோடு ஒத்தும் முரண்பட்டும் இயங்குவதன் வழியே தன்னை அறிதல் தொடர்கிறது. நான் யார் என்று கேட்டுக்கொள்வதாகிய மெய்யியல் வகைப்பட்ட கேள்வியும் தன்னை அறிதல் என்ற நிகழ்வுப் போக்கும் வேறுவேறு அல்ல. தன் உடம்பை ஆராய்வதில் தொடங்கிப் புறச்சூழல் என்ற முறையில் தன் குடும்பம், தன் ஊர், தன் உறவு, நாடு, உலகம் என்பது வரை தன்னை அறிதல் தொடர்கிறது. உலகம், இயற்கை, சமூகம், வரலாறு ஆகியவற்றை அறிதலோடு இந்த நிகழ்வுப் போக்கு நிற்பதில்லை. பேரண்டத்தை அறிதல் என்பது வரையிலும் இது தொடரத்தான் செய்கிறது. தன்னை அறிதல் மூலம்தான் பிரபஞ்சம் வரையிலான புறத்தை உள்வாங்கிக் கொள்கிறோம். வரலாறு, சமூகம், இயற்கை முதலியவற்றை உள்வாங்கிக் கொள்கிறோம். இவையில்லாமல் நாம் இல்லை என்பதையும் உணர்கிறோம். இவைதான் நம் ஆக்கத்திற்கும் காரணம் என்பதை உணர்கிறோம். இவற்றின் இயக்கம் மற்றும் முரண்கள் நமக்குள்ளும் தொடர்வதை உணர்கிறோம். இவற்றின் காலம், வெளி ஆகியவற்றை உள்ளடக்கிய பெரும்பரப்பில் எந்தப் புள்ளியில் நாம் இருக்கிறோம் என்பதையும் நாம் உணர்கிறோம். எந்தப் புள்ளியும் தனித்ததான புள்ளியும் அல்ல. அனைத்துவகை இயக்கங்களும் இந்தப் புள்ளிக்குள்ளும் ஊடுருவிச் செல்கின்றன. நான் யார் என்ற கேள்வியைக் குடும்ப எல்லையோடு நிறுத்த முடியாது. தொடர்ந்து கேள்விகள் எழுகின்றன. எல்லைகள் தகர்கின்றன. நான் குழந்தை என்பது ஒரு விடை. நான் தமிழன், இந்தியன், மனிதன் என்பதும் சில விடைகள். நான் பிரம்மம், கடவுள், சூன்யம், என்பனவும் விடைகள். இவற்றின் வழியே நம்மைக் காண்கிறோம். நம்மைப் புரிந்து கொள்கிறோம். நமக்குள் காலம் / வெளி ஆகியவற்றைத் திரட்டிக் கொள்கிறோம். இவற்றோடு ஒத்தும் முரண்பட்டும் நம்மை நாமே படைத்துக் கொள்கிறோம்.

நான் யார் என்ற கேள்வியை மனிதன் மட்டுமே கேட்டுக் கொள்கிறான். நான் என்ற தன்னுணர்வு மனிதனுக்கு மட்டுமே உண்டு. விலங்குகளுக்கோ, பறவைகளுக்கோ தன்னுணர்வு இல்லை. இயல்பூக்கம்

என்று சொல்லத்தக்க INSTINCT என்ற உணர்வு மட்டுமே அவற்றிற்கு உண்டு. பறவை தன் அழகை, தன் பாடலைத் தானே இரசிப்பதாகச் சொல்ல முடியாது. சிங்கம் தன் பெருமிதத்தை அறிய முடியாது. தூக்கணாங்குருவிக்கு அற்புதமாகக் கூடுகட்டத் தெரியும் என்பது தெரியாது. இப்படி விலங்குகளும் பறவைகளும் பிறவகை உயிரினங்களும் தமக்குள்ளே முடங்கிக் கிடக்கின்றன. பரிணாமம் என்ற உள்ளுறையாற்றல் இவற்றின் வழியே செயல்பட்டிருக்கிறது. இந்த ஆற்றல்தான் இறுதியில் மனிதனைத் தோற்றுவித்திருக்கிறது. இந்த ஆற்றலை இயற்கை என்றோ சக்தி என்றோ இறைவன் என்றோ சொல்வதில் தவறு காணவும் முடியாது. இந்த உள்ளுறை ஆற்றல் மனிதனைப் பொறுத்தவரை சமூகத்தோடும் வரலாற்றோடும் தொடர்புடையவை. நான் யார் என்ற கேள்வி, தன்னுணர்வு உடையவனது கேள்வி. நான் யார் என்ற கேள்விக்குரிய விடையை வரலாற்றிற்கு அப்பாலும் கொண்டு செல்ல வேண்டும். பிரபஞ்ச இயக்கம் என்பது வரை இந்தக் கேள்விக்கான பதிலைத் தொடரமுடியும். சமயங்கள் இறைவன் என்றும் ஆன்மா என்றும் இந்தக் கேள்விக்கான பதிலைச் சுருக்கி விடுகின்றன. இறைவன் என மனிதன் தன்னைக் காணும் பொழுதே தனக்குள் பெரும் விரிவு கொள்கிறான். பேரறிவு முதல் பேருணர்வுகளைப் பெறுகிறான் என்பது உண்மைதான். மனிதனை மயக்கவல்லது இந்தப் பேருணர்வு. இந்தப் பேருணர்வைத் தனக்குள் படைத்துக் கொண்டவன் மனிதன்தான். தன்னை அறிந்து கொள்ளுதல் என்ற தீராத பயணத்தில் ஒரு இடைக்கட்டம் இந்தப் பேருணர்வு.

தன்னை அறிதல் என்பது புறத்தை உள்வாங்கிக் கொள்வதில் தொடங்குவது மட்டுமல்ல, தன் அகத்தை அறிந்து கொள்வதுமாக இது தொடர்கிறது. என்னை உருவாக்கியதில் எத்தனை மனிதர்களுக்கு எத்தனை சக்திகளுக்குப் பங்கு உண்டு என்று அறிகிறபோது என்னை, என் மனத்தைத் திறந்து கொள்கிறேன். எல்லாவற்றிற்கும் இடம் தருகிறேன். இறுதியில் என்னை நானே இழந்துவிடும் அளவிற்கு என்னைத் திறந்து விடுகிறேன். எல்லைகளற்ற காலத்தில், வெளியில் என்னை நானே இழந்து போகிறேன். குருச்சேத்திரப் போரில் அருச்சுனன், பிரபஞ்சம் முதலிய எல்லாவற்றையும் உள்ளடக்கிய மாபெரும் காட்சியைத் தனக்குள் கண்டான் என்று பாரதம் கூறுகிறது. வரலாறு, சமூகம், இயற்கை முதலியவற்றினுள்ளே தன்னைக் காண்பவனுக்குத் தான் இந்தப் பெருங்காட்சி அல்லது தரிசனம் சாத்தியப்படும். இயற்கையின் வழியே இயங்கும் படைப்பியக்கத்தின்

உச்சம் என இந்தப் பெருங்காட்சியைச் சொல்லமுடியும். இத்தகைய பெருங்காட்சி எல்லா மனிதர்களுக்கும் உரிய மற்றும் சாத்தியமான காட்சிதான் இது. குன்று ஏறி யானைப்போர் கண்டதைப் போன்ற காட்சி. இந்தக் காட்சியைத் தனக்குள் கண்டவன் எல்லா உயிர்களையும் நேசிப்பான். எத்துணையும் பேதமுறாது என்று வள்ளலார் பாடியது இந்தக் காட்சியைத்தான். எல்லா உயிர்களோடும் தன்னையும் வைத்து இவன் காண்பான். மனிதர்களுக்கிடையே இவன் ஏற்றத்தாழ்வு பார்க்க மாட்டான். சமத்துவத்தில் இவன் தன் உயிரை வைத்திருப்பான். சமதர்மம் இவனது உயிர்க்குணம்; தன்னை அறிதல் என்பது இந்த எல்லை வரை தொடர்கிறது. இங்கு புத்தனும், விவேகானந்தனும், காரல்மார்க்சும், பாரதியும் வள்ளுவரும் கைகோர்த்துக் கொள்ள முடியும். படைப்பியக்கம், என்ற ஊற்று இவர்களுக்குள் பொங்கி வழிகிறது.

தன்னலத்தில் சுருங்கியவனுக்குள்ளும் படைப்பியக்கம் உண்டு. எனினும் அதில் அவன் தன்னை அழித்துக் கொள்வதோடு தன்னைச் சூழ உள்ளவர்களையும் அழிக்கிறான். தன்னைத்தன் உடலுக்குள், தன் உறவிற்குள், தன் இன்பத்திற்குள், தனது பெருமைக்குள், தன் ஆதிக்கத்திற்குள் மட்டும் காண்பவனுக்குள் படைப்பியக்கம் அழிவையே செய்கிறது. தன்னலத்திலிருந்து விலகித் தனக்குள் ஊரையும், உலகையும், இயற்கை, வரலாறு, சமூகம் முதலியவற்றையும் காண்பவனுக்குள் பேரழகுகள், பேராற்றல்கள் விரிகின்றன, வெடிக்கின்றன, பொங்குகின்றன. தனக்குள் படைப்பியக்கத்தைக் கண்டவன் பணத்திற்குள், அதிகாரத்திற்குள் தன்னை முடக்கிக் கொள்ள மாட்டான். நாடு, மொழி என இவன் அலைவான். தனது நாட்டின், தனது மொழியின் ஆக்கத்திற்காகப் பிற நாடுகளை இவன் அழிக்க மாட்டான். படைப்பியக்கம் என்பது ஒரு பேராறு; பெரும் ஊற்று; முன்னைய எல்லைகளைத் தகர்த்துக் கொள்வது இந்தப் பேரியக்கம். தகர்த்துக் கொள்ளும் பொழுதே பேராற்றலைத் தனக்குள்ளிருந்தே படைத்துக் கொள்வது இந்த இயக்கம். முன்னையதின் தொடர்ச்சியல்ல இந்த இயக்கம். முன்னையதிலிருந்து ஒரு பாய்ச்சலாக முன் செல்வது இந்த இயக்கம். இந்த இயக்கத்தைப் புரிந்து கொள்வதற்கு ஒரு சான்று இங்கு சொல்லலாம். மணலையும் சுண்ணாம்பையும் கொண்டுதான் கண்ணாடி செய்கிறார்கள். சுண்ணாம்பும் மணலும் ஒரு உயர்ந்த கொதிநிலையில் உருகிக் கண்ணாடி ஆகிறது. இரண்டு பொருட்கள் மூன்றாவது பொருளாகிறது. இனிக் கண்ணாடியிலிருந்து சுண்ணாம்பையோ மணலையோ பிரித்தெடுக்க முடியாது. இது தனிப்பொருள், இது ஒரு அற்புதம், இது ஒரு

பாய்ச்சல். இயற்கைக்குள்ளும் இந்தப் பாய்ச்சல் உண்டு. மனிதனுக்குள்ளும் பாய்ச்சல் உண்டு. விஞ்ஞானிகள், மெய்யியலாளர்கள், பெரும் கலைஞர்கள் முதலிய அனைவருக்குள்ளும் இத்தகைய பாய்ச்சல் நிகழ்ந்திருக்கிறது. இசையும் இலக்கியமும், கலைகளும் இத்தகைய பாய்ச்சலின் விளைவுகள். இத்தகைய பாய்ச்சலைக் கொண்டுதான் மனிதத் தோற்றத்தை மனிதனின் வரலாற்றைப் புரிந்து கொள்ள முடியும். மூலப்பொருள்களின் தொகுப்பு என்று இதை சொல்ல முடியாது. மூலப்பொருட்களின் சேர்க்கையல்ல இந்தப் பாய்ச்சல்; மூலப்பொருட்களின் இணைவில் நிகழ்வது இந்தப் பாய்ச்சல். உற்பத்தி என்று சொல்லி இதைச்சுருக்கிவிட இயலாது. படைப்பு என்பதுதான் இதற்குரிய பொருள். தன்னைத்தானே படைத்துக் கொள்பவன் மனிதன். கருவிகள், கருத்துக்கள் முதலியவற்றைப் படைக்கும்பொழுதே இவன் தன்னையும் படைத்துக் கொள்கிறான். நாடு, மொழி முதலியனவும் இவன் படைத்துக் கொண்டவை. எல்லைகளுக்குள் இவன் அடங்க மாட்டான். எல்லைகளை விரித்துக் கொண்டே செல்பவன் மனிதன். இறைவனும்கூட இவனது படைப்புதான்; இறைவன் வழியிலும் இவன் தன்னைப் படைத்துக் கொள்கிறான். ஒரு கட்டத்தில் இறைவனைத் தனக்குள் உள்வாங்கிக் கொண்டு இறைவனையும் கடந்து செல்பவன் மனிதன். பரிணாமம் மனிதனோடு நின்றுவிடுவது இல்லை. மனிதனையும் கடந்து செல்வது பரிணாமம். படைப்பின் உச்சம் தான்தான் என்று மனிதன் தனக்குள் சுருங்கிவிட இயலாது. இந்த உலகில் வாழ எந்த உயிருக்கும் உரிமை உண்டு. உயிரியக்கம் ஒரு உன்னதமான சக்தி. படைப்பியக்கத்தைத் தனக்குள் கண்டவன் எந்த ஆதிக்கத்திற்கும் தனக்குள்ளும் வெளியிலும் இடம் தர மாட்டான்.

தமிழில் படைப்பியக்கத்தின் முதல் பெரும்வீச்சு எனச் சங்க இலக்கியத்தைக் குறிப்பிடலாம். தனி மனிதர்களாகிய புலவர்கள் வழியே சங்கக்கவிதைகள் வெளிப்பட்டன என்றாலும் இக்கவிதைகளுக்கான ஊற்று எனச் சங்க காலச் சமூக வாழ்வில் அடியில் நிகழ்ந்த பெரும் மாற்றம் ஒன்றைக் குறிப்பிட முடியும். சங்ககாலம் ஒரு மாறுதல் காலம். இதைப் பற்றி கூறுவதற்கு முன்னர், சங்கம் பற்றியும் இலக்கியம் பற்றியும் சிலவற்றைக் கூறவேண்டும்.

2. சங்க இலக்கியம் என்பது தொகுப்பு இலக்கியம். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனக் கவிதைகள் தொகுக்கப்பட்டன. சங்கம் என ஒன்றோ பலவோ இருந்து இத்தகைய தொகுப்புப்பணிகள் செய்தன என்ற கருத்தில் ஆய்வுக்கு இடமுண்டு. திராவிடச் சங்கம் எனச் சமணர்கள் நிறுவிய சங்கம் பற்றி

ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இறையனார் களவியல் உரையும் தமிழ்ச்சங்கம் பற்றிக் கூறுகிறது. சிவபெருமானும் முருகனும் சங்கத்தின் தலைவர்களாக இருந்து இருக்கின்றனர். இக்குறிப்பு களவியல் உரையின் சைவச் சார்பைக் காண்பிக்கிறது. தொல்காப்பியர் வகுத்த பொருள் இலக்கணம் இல்லாததுபோலவும், பொருள் இலக்கணம் ஒன்றைத் தேடித் தொகுக்க வேண்டும் என்பது போலவும் களவியல் உரை குறிப்பிடுகிறது. இறையனார், களவியல் சூத்திரங்களைத் தந்தார் என்றும் கூறுகிறது. இந்த குறிப்பும் சைவச் சார்பையே மெய்யிப்பிக்கிறது. தொல்காப்பியரான சமணரின் பொருள் இலக்கணம், சைவருக்கு உடன்பாடு இல்லை. சமணர் எல்லாவற்றிற்கும் மூலமென இறைவனைக் கருதுவதில்லை. சைவர்களைப் பொருத்தவரையில் இறைவன்தான் எல்லாவற்றிற்கும் மூலம். உண்மையில் களவியல் நூற்பாக்களைத் தந்த இறையனார் என்பவர் ஒரு பெரும் புலவராகத்தான் இருந்திருக்க முடியும். இவரை இறைவனாக்க வேண்டியது இல்லை. இறைவனோடு நக்கீரன் நடத்திய விவாதமும் இத்தகைய கதையாகத்தான் இருக்க முடியும்.

சங்க இலக்கியம், தொகுப்பு இலக்கியம் என்று குறிப்பிட்டோம். தொகுப்பதற்கான தேவை இருந்திருக்க வேண்டும். சங்க இலக்கியத்தின் ஆக்கம் முற்றுப்பெற்ற நிலையில்தான் தொகுக்கும் முயற்சிகள் நடைபெற்றிருக்கும். பழமையைப் பாதுகாக்க வேண்டும். சமூகச் சூழல் மாறிக்கொண்டிருக்கிறது. பழமையின் உரத்தை நாம் இழந்துவிடக் கூடாது. முன்னைய காலம் இனி இல்லை. இத்தகையதொரு நிலையில்தான் சங்க இலக்கியத்தைத் தேடுவதும் தொகுப்பதும் இலக்கணம் வகுப்பதும் உரை சொல்வதும் ஆகிய முயற்சிகள் நடைபெற்றிருக்க வேண்டும்.

சங்க இலக்கியம் குறித்த பொருள் இலக்கண நூல் எனத் தொல்காப்பியத்தைக் குறிப்பிடுகிறோம். எழுத்து, சொல், பொருள் ஆகியவற்றின் இலக்கணம் கூறுவது தொல்காப்பியம். எழுத்தைக் காட்டிலும் சொல்லும், சொல்லைக் காட்டிலும் பொருளும் கால அளவில் ஒன்றைக் காட்டிலும் மற்றது சற்று விரைவோடு மாறக்கூடியது. சங்க இலக்கியத்திற்குத் தொல்காப்பியர் வகுத்த பொருள் இலக்கணம் என ஒரு வரையறையினுள் இலக்கியத்தின் இலக்கணம் முழுமையாக அடைபடாது. தொல்காப்பியத்தை வரைந்தவர் என ஒருவரைக் கூறவும் இயலாது. இலக்கணத் தொகுப்பு முயற்சிகள் சில தலைமுறைக்கேனும் தொடர்ந்து நடைபெறவேண்டிய முயற்சி. இம்முறையில் தொல்காப்பியர் என்பவர் பலர் எனக் கூறுவதில் தவறில்லை.

ஒருவரது பார்வைக்குள் ஒரு பேரிலக்கியத்தை வரையறுத்துவிடவும் முடியாது. சங்க காலம் எனக் குறிப்பிடும் காலம் மூன்று அல்லது ஐந்து நூற்றாண்டுகள் நிலவிய காலம். இக்கால எல்லைக்குள் இலக்கியம் அமைப்பு மாறிக்கொண்டுதான் இருந்திருக்க முடியும்.

படைப்பியக்கம் என்பது, ஒரு திசையில் ஒருவரின் வழியில் செல்லக் கூடியதுமன்று. பல களங்களில் பல திசைகளில் பலரின் வழியே இயக்கம் பெறுவது. சங்க இலக்கியம் என்ற பெருந்தொகுப்பினுள் இடம் பெற்றிருக்கக் கூடிய படைப்பியக்கத்தைத் தொல்காப்பியம் என்ற ஒரு இலக்கண நூலினுள் அடக்கிவிடவும் இயலாது. ஆனால் தொல்காப்பியருக்குப் பின் பொருளிலக்கண ஆய்வு தமிழ்ச் சமூகத்தினுள் விரிவாக நடைபெறவுமில்லை. ஆகவே சங்க இலக்கியத்தை மீண்டும் கலைப்பதோடு தொல்காப்பியர் கூறிய இலக்கண வரையறைகளின் மீதும் ஒரு மீள்பார்வையைச் செலுத்துவதற்குத் தேவையிருக்கிறது. ஆற்றல் மிகுந்த படைப்பியக்கத்தைப் புரிந்துகொள்வதற்கான முயற்சி என்று இதனைக் கூறலாம்.

தொல்காப்பியத்தின் காலம் குறித்த ஆய்வுகள் இன்றும் முற்றுப்பெறவில்லை. நூற்றாண்டு என்ற கால எண்ணிக்கையில் தொல்காப்பியத்தை வரையறுக்க இயலவில்லை. வரலாற்றுச் சூழல் என்ற முறையில் சிலவற்றைச் சொல்ல முடியும். ஐந்திணை அக ஒழுக்கம் பற்றித் தொல்காப்பியம் விரித்துரைத்தாலும் மருதத்திணையும் மருதநில நாகரிகமும் முன்னணிக்கு வந்துள்ளதை கவனிக்க முடியும். மூவேந்தர்கள் முன்னணிக்கு வந்துவிட்டனர். பாரி முதலிய வேளிர்கள் இப்பொழுது பெரும்பாலும் இல்லை. வஞ்சித்திணை என்ற நாற்படைகளோடு நடத்தக்கூடியப் போர்நெறி முன்னுக்கு வந்திருக்கிறது. வெட்சி, கரந்தை முதலிய போர் நெறிகள் வஞ்சிப்போரின் பகுதிகளாகிவிட்டன. புறத்திணைகளுள் போர்த்திணைகளுக்கே அதிக இடம் தரப்பட்டிருப்பதையும் நாம் இங்கே கவனிக்க வேண்டும். காஞ்சி, பாடாண் ஆகிய திணைகளில்தான் போர் நெறியோடு வாழ்வியல் நெறிகளும் பேசப்படுகின்றன. வாழ்வியலினுள்ளும் வருணம் இடம் பெறவும் செய்கிறது.

மருதத்திணை முன்னுக்கு வந்த நிலையில் திணைமயக்கம்தான் கூடுதலாகிவருகிறது. முன்னர் நிலவியதாகக் கருதப்படுகிற களவுமணம்,

கற்பு மரணத்திற்கு இடம் கொடுக்கிறது. குறிஞ்சி நிலத்தைப் பொருத்தவரை களவுமணமே கற்புமணமாவதில் பெரும்பாலும் சிக்கல்கள் இல்லை. அடுத்த நிலத்தைச் சேர்ந்தவர் உட்புகும்போது சிக்கல் எழலாம். குறிஞ்சி நிலத்தில் பிரிவுக்குத் தேவையில்லை. ஆகவே, புணர்தல் என்ற உரிப்பொருள் தவிர வேறு உரிப்பொருள் இங்கு இடம்பெறாது. முல்லை நிலத்தில் புணர்தலோடு பிரிவுக்கு இடம் இருக்கிறது. ஆடு, மாடுகளை ஓட்டிக்கொண்டு செல்லும் ஆயர்கள் மழைக்காலம் வரை வேறு இடங்களில் அலைந்து திரிய வேண்டிவரும். நெய்தல் நிலத்தில் புணர்தலோடு கடலில் மீன் பிடிக்கச் செல்லும்போது எதுவும் நேரலாம். ஆகவே இரங்கல் என்ற உரிப்பொருளுக்கு இங்கு அதிக இடமிருக்கிறது. மருதம் தவிர பிற நிலங்களில் பரத்தையர்கள் இருக்க மாட்டார்கள். மருத நிலத்தில் மட்டும் பரத்தையர் பிரிவு காரணமாகக் கணவன் மனைவிக்கிடையில் கலவரம் / ஊடல் நிகழ்வதற்கான வாய்ப்புகள் அதிகம். இல்லத்தைக் கட்டிக் காப்பவள் மனைவி, பெண் தான். கற்பு என்ற பண்பை ஆடவர் பெண்ணின் மீது திணித்தனர் என்பதைக் காட்டிலும் ஆண்மகனை இல்லத்தோடு இருத்திவைக்க பெண் தன்னைக் கற்பு என்ற ஒழுக்கத்தினுள் அடக்கிக் கொண்டாள் என்று சொல்வது பொருந்தும்.

குறிஞ்சியிலோ முல்லை மற்றும் நெய்தல் நிலத்திலோ ஊடல் நிகழாதென்று சொல்வதற்கில்லை. மருதத்திணையின் ஆளுகைக்குள் நெய்தல்நிலம் எளிதாக வந்துவிடும். புகார் முதலிய நகரங்கள் நெய்தலில் இருக்கின்றன. முல்லை நிலம் மற்றும் குறிஞ்சி நிலத்தினுள்ளும் வேந்தரின் ஆட்சி விரிவடைகிறது. வணிகம் பரவாத இடமும் இருக்க முடியாது. நகர நாகரிகம் பிற அனைத்து நிலங்களையும் தன் எல்லைக்குள் இழுத்துக்கொள்ளும். மருத நிலத்தில் தான் தனியுடைமையோடு அரசதிகாரமும் பெருகுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

இவற்றையெல்லாம் இங்கு விரித்துச் சொல்லுவதற்குக் காரணம் இருக்கிறது. குறிஞ்சி, முல்லை, நெய்தல் எனக் கூறப்படும் தனித்திணைகள் திணை மயக்கத்திற்கு இடம் கொடுத்து வருகின்றன. திணைமயக்கத்திற்குத்தான் முதன்மையான இடம் கொடுத்துப் பொருளிலக்கணம் வகுத்திருக்க வேண்டும். போர்த்திணைகளினுள்ளும் வஞ்சித் திணைக்கே கூடுதலான இடம் கிடைத்துவரும் நிலையில் வாழ்வியல் சிக்கல்களைக் கூடுதலாகப் பார்த்திருக்க வேண்டும். முதல், கரு, உரி ஆகிய முப்பொருள்களில் எப்பொருளுக்கு முதன்மை என்பது

பற்றிச் சொல்லும்போது தொல்காப்பியர் இருவகைப் பொருள்படும்படி நூற்பா இயற்றியுள்ளார். ஒரு கவிதையை எந்தத் திணையில் சேர்ப்பது என்ற கேள்வி எழும்போது உரிப்பொருளுக்கு முதன்மை தருவதுதான் சரியாக இருக்க முடியும். முதற்பொருள் அல்லது கருப்பொருளுக்கு முதன்மை தந்து கவிதைக்குரிய திணையைத் தீர்மானிப்பதும் உரையாசிரியர்களுக்கு உடன்பாடு. சங்க இலக்கியப் பாடல்களுக்கு இப்படித் திணை வகுக்கும்போது இருவகை முறையிலான பகுப்பாய்வு செயற்பட்டிருப்பதனை நாம் காண முடியும். கவிதையை உரிப்பொருள்தான் தீர்மானிக்க முடியும்.

வரலாற்று முறையில் வரிசைப்படுத்துவதென்றால் முதலில் குறிஞ்சி நில நாகரிகம். பிறகு முல்லை நில நாகரிகம். இதே கால அளவில் நெய்தல் நில நாகரிகத்தையும் சொல்ல முடியும். நிலத்திற்கொத்த வாழ்வியல் முறை - தொழில், கருவிகள், உணவு, பாடல்கள் என்றெல்லாம் இந்த நிலங்களில் வளர்ச்சி பெற்றிருக்க முடியும். இங்கும் இனக்குழுக்களின் இடையில் மோதல் இருந்திருக்கும். மாடுகளைக் கவர்ந்து செல்வது மோதல்களின் ஒரு பகுதி. அடுத்து வருவது மருதநில நாகரீகம். மருதநிலம் பிற வகைநிலங்களைத் தன் ஆளுகைக்குள் இழுத்துக் கொள்வதற்கும் பல நூற்றாண்டுகள் ஆகலாம். மருதநில நாகரிகம் மேலோங்கி வரும் சூழலிலும் குறிஞ்சி முதலிய நாகரிகங்களின் எச்சங்கள் இருக்கத்தான் செய்யும். இந்த எச்சங்களை உள்வாங்கித்தான் மருதநில நாகரிகத்தைத் தொல்காப்பியர் பேசுகிறார் என்று நாம் கருதலாம். தொல்காப்பியரைப் பொருத்தவரையில் இத்தகைய கருத்தியல் தெளிவு இல்லையென்று நாம் சொல்லமுடியும். மேலும் ஒன்றை இங்குக் குறிப்பிட வேண்டும். பொருளிலக்கணத்தை அகம் என்றும் புறம் என்றும் பிரிப்பதில் உள்ள நுட்பம் குறித்து உரையாசிரியர்கள் முதற்கொண்டு இன்றைய அறிஞர் வரை நிறையவே பேசியிருக்கிறார்கள். இத்தகைய பிரிவினையை நாம் போற்றத்தான் வேண்டும். ஆனால் இதுபோதாது. அகம் இல்லாமல் புறமோ புறமில்லாமல் அகமோ தனியியக்கம் கொள்வதில்லை. என்னதான் இவை ஒவ்வொன்றிற்குரிய தனிக்கூறுகள் பற்றி நாம் பேச முனைந்தாலும் இவை ஒன்றோடொன்று ஊடாடுவது குறித்தே நாம் அதிகம் கவனிக்க முடியும்.

ஒவ்வொரு அகத்திணைக்கும் உரியது எனப் புறத்திணை ஒன்றைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இவற்றின் பொருத்தப்பாடு குறித்துத் தொல்காப்பியர் எதுவும் சொல்லவில்லை எனினும் உரையாசிரியர்கள்

சிலர் இதன் பொருத்தப்பாடுகளைக் குறித்து சில விளக்கங்களைத் தருகின்றனர். நம் காலத்தில் இளவழகனார் போன்றோர் மேலும் சில விளக்கங்களைத் தந்துள்ளனர். என்னதான் விளக்கம் தந்தாலும் இவை முற்றாகப் பொருந்துவதில்லை என்பதுதான் உண்மை. நெடுநல்வாடையில் இடம்பெறும் 'வேம்பு' என்ற ஒரு குறிப்புக் கொண்டு இப்பாடலைப் புறத்திணையில் சேர்ப்பதற்கான முயற்சி நடைபெற்றது. ஒருவர் பெயரைச் சுட்டிச் சொன்னால் அது அகத்திணைப் பாடல் ஆகாது என்ற விதி தொல்காப்பியரால் வகுக்கப்பட்டிருக்கிறது. இதற்கான இலக்கிய நியாயத்தை நாம் புரிந்து கொள்கிறோம். ஆனால் இது மட்டுமே போதாது என்பது நம் கருத்து. பிற்காலத்தில் அகப்புறம் என்றும் சமயத்துறையில் சில வகைப்பாடுகள் எழுந்தது என்பதையும் இங்கு முன்னிறுத்திப் பார்க்க வேண்டும்.

இதன் தொடர்பான இன்னொரு சிக்கலையும் இங்கு சுட்டுவது பொருந்தும். தலைமக்களுக்கு உரியவை குறிஞ்சி முதலிய ஐந்து திணைகள். இவர்களுக்குள்ளும் கைக்கிளை மற்றும் பெருந்திணைக் கூறுகளை உள்ளடக்கித்தான் தொல்காப்பியர் பேசுகிறார். அரிதாக இவை நிகழ்கின்றன. தலைமக்களின் பெருமைக்கு இவை இழுக்குச் செய்வதில்லை என்பது ஆசிரியர் கருத்து. தலைமக்கள் என்பவர்கள் உயர்ந்தோர்; நல்லொழுக்கத்திலிருந்து தவறாதவர்கள் என்பதும் தொல்காப்பியர் கருத்து. அகத்திணை ஒழுக்கத்தின் உயர்வு குறித்து நம்மவர் பெருமையோடு பேசுகிறார்கள். சமுதாயத்தில் உயர்ந்தவரையே முதன்மைப்படுத்தி இலக்கியத்தை வரையறுப்பது பொருத்தமில்லை. சங்க இலக்கியத்தைச் "சான்றோர் இலக்கியம்" எனப் பெருமைப்படுத்துவது ஒரு வகையில் புலமைக்குரிய நெறி. சங்ககாலத்தில் நிலவிய கவிதைகளைச் சேகரித்துத் தொகுப்பு முயற்சிகளையும் இலக்கண வரையரைகளையும் செய்த போது, கைக்கிளை, பெருந்திணை ஆகிய போக்குகள் மேலோங்கித் தெரிந்த கவிதைகளைத் தமிழ்ச் சான்றோர் விலக்கி வைத்தனர் என்று கருதுவதற்கு இடம் உண்டு. தமிழகத்தில் சங்க காலம் என்று சொல்லப்படுகிற அதே கால அளவில் ஆந்திர நாட்டில் பாலி, பிராகிருத மொழியில் வழங்கிய பாடல்களின் தொகுப்பான "கதா சப்தகதி" என்பதோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்த உண்மை உறுதிப்படுகிறது. பண்பாட்டுச் செழுமைக்குத் தமிழ்ச் சான்றோர் அழுத்தம் தந்ததன் மூலம் வாழ்வியல் சார்ந்த இலக்கியத்தின் ஒரு பெரும் பகுதியை இழந்திருக்கிறோம்.

தமிழில் அகத்திணைப் பாடல்கள், புறத்திணைப் பாடல்களைக் காட்டிலும் எண்ணிக்கையில் மிக அதிகமாக உள்ளன என்பதையும் நாம் இங்கு கவனிக்க வேண்டும். அகத்திணையைத்தான் இலக்கியம் என தமிழ்ச் சான்றோர் கருதினர் என்ற உண்மையைச் சில அறிஞர்கள் எடுத்துக் கூறியுள்ளனர். அகத்திணைப்பாடல்களின் ஆய்வு குறித்துத்தான் தொல்காப்பியம் விரித்துரைக்கிறது. உவமை என்றும் மெய்ப்பாடு என்றும் தொல்காப்பியம் விரித்துரைக்கிறது. உவமை என்றும் மெய்ப்பாடு என்றும் தொல்காப்பியர் பேசுவது அகத்திணைப் பாடல்கள் குறித்துத்தான். முதல், கரு, உரி என்ற இலக்கணப் பகுப்பும் அகத்திணைப் பாடல்கள் குறித்த ஆய்வைத்தான் குறிக்கிறது. காதலை உள்ளடக்கியதான வாழ்வின் பரந்த எல்லைக்குள் இடம் பெறும் அனைத்து உரிப்பொருள்கள் குறித்தும் தொல்காப்பியர் சொல்லவில்லை. முதற்பொருள், கருப்பொருள் ஆகியவை தொடர்ந்து காலம்தோறும் மாறுதலுக்கு உள்ளாகக் கூடியவை. முதற்பொருளைக் காட்டிலும் கருப்பொருள்கள் காலந்தோறும் பெருமளவில் மாறக்கூடியவை. இவை பற்றியெல்லாம் உரையாசிரியர்கள் ஆய்வு செய்யவில்லை. காதல், வீரம் ஆகியவை மட்டுமல்லாமல் அறம், பொருள், இன்பம், வீடு என விரித்துரைக்கப்படுவனவும் வாழ்விற்குரிய உரிப்பொருள்கள். கருப்பொருள்கள் முதலியவற்றினுள் வரலாற்றுச் சூழலின் எல்லா வகை இயக்கங்களும் இடம் பெற முடியும். நிலயியலும் தொடர்ந்து மாறக்கூடியது தான். அற உணர்வு, பக்தி உணர்வு, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, விடுதலை முதலிய பேருணர்வுகளும் இலக்கியத்தின் உரிப்பொருட்கள். அகத்திணைக்கு மட்டுமே உரிப்பொருளை உரிமைப்படுத்தியதன் மூலம் இலக்கியத்தின் எல்லையை இலக்கண ஆசிரியர்கள் குறைக்கத்தான் செய்தனர். புறத்திணைகளையும் உள்ளடக்கி உரிப்பொருள் குறித்து இலக்கணக்காரர்கள் ஆய்ந்திருக்க வேண்டும். திருக்குறள் முதலிய அறநூல்கள், சிலப்பதிகாரம் முதலிய காப்பியங்கள், தேவாரம் முதலிய பக்தி இலக்கியங்கள் மற்றும் புராணங்கள் முதலியவை இலக்கணக்காரர்களை மீறித்தமிழில் எழத்தான் செய்தன. தொல்காப்பியத்தில் இங்கொன்றும் அங்கொன்றுமாக சில கூற்றுக்களை வைத்துப் பிற்காலப் பேரிலக்கியங்களுக்கு உரையாசிரியர்கள் இலக்கணம் கூறியதை இன்று எண்ணிப் பார்க்கும்போது வருத்தம்தான் மேலிடுகிறது.

3. தமிழில் படைப்பியக்கத்தின் முதல் பெரும் வீச்சு சங்க இலக்கியம் என்று குறிப்பிட்டோம். சங்க காலம் எனக் குறிப்பிடும்

காலத்தின் தொடக்க நிலையில் தமிழ்ச் சமூகத்தினுள் நேர்ந்ததை ஒரு பிரளயம் என்று சொல்வது தகும். இந்தத் தொடக்கக் காலத்தைத்தான் வீரயுகம் என்று கலாநிதி கைலாசபதி வரையறை செய்தார். இதற்கு முன்னர் நிலவிய ஆதிப்பொதுமைச் சமூகத்தில் தனியுடைமை இல்லை. அரசதிகாரம் இல்லை. இனக்குழுக்கள் எனச் சொல்லப்படும் சமூகத்தில் தலைவர்கள் இருந்தனர். எல்லோரும் கூடி உழைத்தனர். உழைப்பின் விளைவைக் கூடிப்பகிர்ந்து கொண்டனர். சமூகத்தில் குறைந்த அளவிற்கே வேலைப்பிரிவினைகள் இருந்த போதிலும் சமூகம் பிளவுபடவில்லை. இயற்கையோடு இவர்கள் இணைந்திருந்தனர்.

தனியுடைமை, அரசதிகாரம் என்பதன் அடிப்படையில் மருதநிலத்தில் நகர நாகரிகத்தோடும் தொழில் வளர்ச்சி மற்றும் வணிகத்தோடும் ஒரு புதிய நாகரிகம் தோன்றியது. மூவேந்தர்கள் எனப்படுவோர் நால்வகைப் படைகளோடு குறிஞ்சி, முல்லை நிலங்களிலிருந்த இனக்குழுத் தலைவர்கள் மீது படையெடுத்தனர். பொதுமைச் சமூகம் இவர்களுக்கு உடன்பாடில்லை. நெடுங்கால மரபுரிமையோடும் சமதருமம் என்று இணங்கானத்தக்க அறப்பண்புகளோடும் வாழ்ந்த இனக்குழுச் சமூகத்தினர் வேந்தர்களின் ஆதிக்கத்தை அறவே ஒத்துக்கொள்ள முடியாது தம்மை இழந்தேனும் தம் சமூகத்தின் அறநெறியைக் காப்பாற்ற வேண்டுமென்ற உயிர்த்துடிப்போடு போரிட்டனர். நிலத்தோடும், நீரோடும் இயற்கையோடும் தம் சமூகத்தோடும் ஒன்றி வாழ்ந்த இவர்கள் மூலம் இவர்களின் படைப்பியக்கம் ஆற்றலோடு செயற்பட்டது. இந்த வீரர்களின் காலத்தைத்தான் 'வீரயுகம்' என்று அறிஞர் குறிப்பிடுகின்றனர். இந்த வீரர்களிடம் நிலவியது வீரம் மட்டுமல்ல, சான்றாண்மைக்கும் இவர்கள் தூண்களென நின்றவர்கள். இவர்கள் தான் பெரும் புலவர்களின் பாராட்டுகளுக்கு உரியவராயினர்.

சங்க இலக்கியத்தில் புறநானூற்றில் இந்த வரலாற்று இயக்கத்தை நாம் காண்கிறோம். தமிழ்ச் சமூகத்தில் நிகழ்ந்த பிரளயத்தை, பெரும் வெள்ளத்தைப் புறநானூறு பதிவு செய்திருக்கிறது. கடையேழுவள்ளல்கள் எனச் சொல்லப்பெறும் பாரி முதலிய வேளிர்களின் காலம் இப்படித்தான் முடிவுபெற்றது. பாரி, காரி, ஆய் முதலியவர் தமக்கென எதையும் வைத்துக்கொள்ளவில்லை. எல்லாவற்றையும் பரிசிலர்க்கு ஈந்தனர். கொடைக்குணம் மட்டுமே இதற்கு ஒரே காரணமாகச் சொல்ல முடியாது. எல்லாமே இயற்கையின் விளைச்சல். மனித உழைப்பைக் காட்டிலும்

இயற்கையின் கொடையே பெரியது. இயற்கை மனிதனுக்குள்ளும் இயங்குகிறது. இவர்களுக்குள் ஆதிப் பொதுமைச் சமூகம் அறமாய்க் கொடையாய் மனிதப் பண்பாய்த் தங்கியிருக்கிறது. இவற்றை இழந்த பிறகு வாழ்வதில் பொருள் இல்லை. இத்தகைய சமூகம் அழியுமென்றால் இதனோடு சேர்ந்து நாமும் அழிவதுதான் நல்லது என்பது இவர்களின் எண்ணம். உடைமைக்கும் அதிகாரத்திற்கும் இடம் தருவதும் அடிமைப்படுவதும் மனித நாகரிகமாக இருக்கமுடியாது. தம் அறத்தைக் காப்பதற்குத்தான் இவர்கள் போராடினர், மடிந்தனர். இவர்கள் தான் இன்றுவரை தமிழ்ச் சமூகத்தின் கலங்கரை விளக்குகள். பாரி முல்லைக்குத் தேர்கொடுத்தான்; பேகன் மயிலுக்குப் போர்வை தந்தான். இவை போன்ற கதைகளிலிருந்து நாம் என்ன தெரிந்து கொள்கிறோம்? வீரயுகம் அழிந்த பிறகும் தொடரும் வரலாற்றுக் காலங்களில் மக்கள் நெஞ்சில் இவர்கள் நாயகர்களாக நிலவினர். இவர்களை வரலாறு என்று போற்றுவதன் மூலம் சமூகம் தனக்குத் தேவையான ஆற்றலைப் பெற்றுக் கொள்கிறது.

புறநானூறு தமிழ் மக்களுக்கு இன்று வரை ஒரு பேரிலக்கியம். அற்புதமான மனிதர்களின் அரிய வாழ்க்கையின் பன்முகப் பரிமாணங்களை அற்புதமான தமிழில் பதிவு செய்திருக்கிறது புறநானூறு. இதன் அளவிற்கு வாழ்வியலின் பரப்பையும் ஆழ அகலங்களையும் மேன்மைகளையும் பதிவு செய்து வைத்திருக்கிற தனி ஒரு தமிழ் இலக்கியம் வேறு இல்லை. இதன் காரணமாகத்தான் புறநானூறு தமிழர்களுக்குப் பேரிலக்கியமாகிறது. சமதரும சமூகத்தை நோக்கி நம்மை உந்துவதற்கான ஆற்றலையும் அறத்தையும் புறநானூறு தனக்குள் தாங்கியிருக்கிறது. இது குறித்து இங்குச் சில சொல்லலாம்.

முன்னைய ஆதிப் பொதுமைச் சமூகத்தில் பிளவுகள் இல்லை. பிளவுபட்ட சமூகம் தன்னைத்தானே அழித்துக்கொள்கிற சமூகம். இதை பண்புடைய சமூகம் என்று சொல்லமுடியாது. ஒரு ஊரில் ஒரே தெருவில் ஒரு வீட்டில் மணமுழவும் இன்னொரு வீட்டில் சாப்பறையும் ஒலிப்பதை முன்னைய சமூகம் ஏற்காது. புதியது என வந்த உடைமைச்சமூகம் இதை ஏற்கிறது. இப்படி ஒரு சமூகத்தைப் படைத்தவனைப் பண்பற்றவன் என்றும் இந்தச் சமூகம் கொடியது என்றும் ‘பக்குடுக்கை நன்கணியார்’ பாடுகிறார். ‘ஓர் இல் நெய்தல் கறங்க’ என்று தொடங்கும் புறநானூற்றுப் பாடலை பிளவுபட்ட சமூகச் சூழலில் வைத்துத்தான் நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

தனியுடமையும் அரசதிகாரமும் மோதுகிற நிலையில் சமூகத்தில் பெரிய மாற்றங்கள் மிக விரைவில் நடந்துகொண்டு இருக்கின்றன. கணியன் பூங்குன்றன் பாடலில் இதன் பதிலைக் காண்கிறோம். வானம் மின்னி இடிக்கிறது; பெரும்மழை கொட்டுகிறது; பேராற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. பாறைகளும் இழுத்துச் செல்லப்படுகின்றன. இந்தப் பேராற்றில் இழுத்துச் செல்லப்படும் தெப்பம் புணை என்னவாகும்? மேட்டிலும் பள்ளத்திலும் புரள்வது இந்தத் தெப்பம். விதி இப்படித் தெப்பத்தைப் புரட்டுகிறது என்கிறார் பூங்குன்றன். நிலங்கள் மயங்குகின்றன. தத்தம் நிலங்களில் மனிதர் வாழமுடியாது. விதியின் வலிமை பெரிது. சிலரைப் பெரியவர் என்று பாராட்டுகிறோம். சிலரைச் சிறியவர் என்று இகழ்கிறோம். விதி சிலரை உயர்ந்த இடத்தில் வைக்கிறது. சிலரைத் தாழ்த்துகிறது. பலரை இடம் பெயர வைக்கிறது. இந்தச் சூழலில் நமக்குள் தடுமாற்றம் கூடாது. பெரியோர் என்று சிலரைப் பார்த்து வியப்பதற்கு இல்லை. சிறியவர் எனச்சிலரை இகழ்வதற்கு இல்லை. இனிவரும் காலங்களில் எல்லா ஊர்களும் நம் ஊர்கள். எல்லா மனிதர்களும் நம் உறவினர்கள். இப்படிச் சொல்கிறது கணியனின் பாடல். இவர் காலத்தின் இயக்கத்தைக் கணித்ததோடு, காலத்தை ஏற்றுக் கொள்வதற்கான மெய்யியலையும் இப்பாடலில் பதிவு செய்கிறார்.

உலகம் பண்பற்றதாக மாறிக்கொண்டிருக்கிறது. நாமும் பண்பற்றவர்களாக மாறத்தான் வேண்டுமா? ஆனால் நம்மால் இப்படி மாற முடியாது. ஒரு சிலரேனும் பண்போடு வாழ்வதன் மூலம்தான் உலகத்தை அழியாது காப்பாற்ற முடியும். உண்டால் அம்ம இவ்வுலகம் என்ற அற்புதமான கவிதை இதைத்தானே சொல்கிறது. தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்பவர்கள் இருப்பதனால் தான் இந்த உலகம். இன்னும் அழியாமலிருக்கிறது என்கிறார் கவிஞர். வாழ்விற்குப் பெரும்பொருள் தேவையில்லை. பொருள் திரட்டுவது அதிகாரத்தைச் சேர்த்துகொள்வது என்று தொடங்கினால் வாழ்வு அழியும். ஒருவன் பெருமைக்குரிய அரசனாக இருக்கலாம், அல்லது ஒருவன் இரவு பகல் பாராது வேட்டையாடித்திரியும் வேடனாக இருக்கலாம். இருவருக்கும் என்ன தேவை? உண்பதற்கு நாழி உணவு. உடுப்பதற்கு இரண்டு உடைகள் இவை போதும் என்கிறார் நக்கீரர். செல்வத்துப் பயனே ஈதல். நாமே வைத்து நுகர்வோம் என்றால் வாழ்வில் நல்லனபல தவறிவிடும் என்கிறார் நக்கீரர். எளிய வாழ்க்கைதான் அனைவருக்கும் உறுதியான வாழ்க்கை.

இதில்தான் அன்பு தழைக்கும். மனிதன் மனிதனாக வாழமுடியும். செல்வம் ஒரு பக்கம் சேர்ந்தால் சமூகம் பிளவுபடும். வாழ்க்கை சீர்குலையும் என்பது நக்கீரர் கருத்து.

சமூகம் பிளவுபட்டதனால் நேரும் கொடுமைகளை எல்லாக் குடும்பங்களினுள்ளும் நாம் பார்க்கிறோம். கோப்பெருஞ்சோழனுக்கு எதிராக அவன் மக்களே போர்தொடுக்கின்றனர். எல்லாவற்றையும் வறியவர்களுக்கு கொடுத்து விடுவான் தந்தை என்பதனால் மக்கள் போர் தொடுக்கின்றனர். பொத்தியார் அறிவுரை சொல்கிறார். கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர்துறக்கிறார். இத்தகைய கொடுமை புலவர்களுக்கு உடன்பாடு இல்லை. கோப்பெருஞ்சோழனோடு புலவர்களும் உயிர்துறந்தனர். இதேபோலத்தான் குமணனுக்கு எதிராக அவன் தம்பி எழுந்தான். ஒற்றை மாம்பழம் என்றாலும் அது தன் உடைமை. அதைப்பிறர் பற்றிக்கொள்ள முடியாது. இதன் காரணமாகத்தான் நன்னன் பெண் கொலை புரிந்தான். இந்த நன்னன் கொடியவன், இவனை மட்டுமல்லாமல் இவன் தலைமுறையினரையும் புலவர்கள் பாடக்கூடாது என்று முடிவுசெய்தனர் தமிழ்ச் சான்றோர்.

படைப்பியக்கம் குறித்து நாம் பேசி வருகிறோம். கணியனுக்கு கவிதை உண்டு. இயக்கமுண்டு. நன்னனுக்குள் கவிதையில்லை. இயக்கமில்லை. தனக்குள் படைப்பியக்கத்தை உணர்ந்தவன் தன்னைச் சிறுமைப்படுத்திக் கொள்ளமாட்டான். தனக்குள்ள அதிகாரத்தில் முடங்கிவிட மாட்டான். எல்லோரையும் ஓர் இனம் என்றும், ஓர் குலம் என்றும் பார்ப்பவன் தனக்குள் விரிந்து செல்பவன். அன்புடையவன் இடத்தில் தான் அறம் தங்குமென்றான் வள்ளுவன். அறத்திற்கும் வீரம் தான் துணை என்றார். எல்லாவற்றையும் பிறர் நலத்திற்கென இழப்பது பேரறம் மட்டுமல்ல வீரம். கோழையினிடம் அறம் தங்காது. அன்பு தங்காது. உடமையையும் அதிகாரத்தையும் நம்பி உயிர்வாழ்பவன் கோழை. சான்றோர் இவனை மதிக்க மாட்டார். தமிழ்ச் சமூகத்தில் பரவிவந்த தனியுடமை குடும்பத்தினுள்ளும் புகுகிறது. களவு மணத்தைப் போற்றி வந்தவர்கள் இப்பொழுது, களவு மணத்திற்கு எதிராக நிற்கின்றனர். பிறப்பிலும் குடியாண்மையிலும் செல்வத்திலும் மேம்பட்டவனைத்தான் தன் மகள் மணக்க வேண்டும் என்கின்றனர் பெற்றோர். தலைவனோடு உடன்போகிறாள் இந்தப்பெண். அறவோர் இதனை ஏற்கின்றனர்.

இந்த அறவோர் தமிழ்ச்சான்றோர். தமிழர்களின் நெடுங்கால மரபான அன்பை களவு மணத்தைக் கைவிடக் கூடாது என்பவர்கள் இவர்கள். ஐந்திணைப் பாடல்கள் அனைத்திலும் இந்த அறப்பண்பையே நாம் காண்கிறோம். களவு மணம்தான் தமிழரின் அறம் எனக்கூறிய அரசனுக்கு கபிலர் அறிவுறுத்துகிறார். களவுதான் கற்புமணத்தில் நிறைவுபெற வேண்டும் என்பது தமிழர் அறம். களவோடு முடித்துக் கொள்ளலாம் என்பது கந்தர்வ மணமுறை. தொல்காப்பியர் முதலிய தமிழ்ச்சான்றோர்க்கு இது உடன்பாடு இல்லை. உடைமைக்கோ சாதி, மதம் முதலியவற்றிற்கோ முதன்மை தரும் உறவு முறையில் அன்புக்கு இடமில்லை. சமத்துவத்திற்கு இடமில்லை. இதைத் தமிழ்நெறி என ஏற்கமுடியாது.

இடையில் 1500 / 2000 ஆண்டுகள் கழிந்தாலும் இன்றும் நாம் சங்க இலக்கியத்திற்கு நெருக்கமாகத்தான் இருக்கிறோம். சங்க இலக்கியத்தில் போற்றப்பட்ட வாழ்வியலைத்தான் நாம் இன்றும் மதிக்கிறோம். சமயச் சார்பற்றது சங்க இலக்கியம். சமதரும உணர்விற்கு நெருக்கமானது சங்க இலக்கியம்; தமிழ் இலக்கியத்தின் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் ஊற்றாக இருப்பது சங்க இலக்கியம். சங்க இலக்கியத்தினுள்ளிருந்தே தமிழரின் மெய்யியல் தோற்றம் கொள்கிறது. பாரி, அவ்வை முதலியவர்களை நாம் என்றும் நினைவு கொள்வோம். 'எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே' என்று பாடியவர் அவ்வை. அறவிலை வணிகன் ஆய்அலன் என்றவன் ஒரு கவிஞன். இவன் நிறைவாழ்வு வாழ்ந்தவன். இவனை எரிக்கலாம் அல்லது புதைக்கலாம். சடங்குகள் பற்றி இப்பொழுது ஆய்விற்கு இடமில்லை. மனிதன் மகத்தானவன், இவன் பெருமை உலகளவில் அடங்குவதில்லை, இவனை அடக்கம் செய்வதற்குக் கலம் செய்கின்ற குயவனே, உலகத்தையும் உள்ளடக்கக்கூடிய பெருங்கலம் ஒன்றை உன்னால் செய்ய முடியுமா? என்று கேட்கிறார் ஒரு கவிஞர். பொதுமை நம் சமூகத்தின் உயிரியக்கம். இதை நம்மால் இழக்க முடியாது. பொதுமைச் சமூகத்தின் ஆதிக்குடிகள் நாம். இந்தச் சமூகத்தை அழிக்க வருபவனோடு போரிட்டு மடிவது நம் மறக்குடிப்பண்பு. இந்தப் பண்பைத் தாங்கிய மறக்குடிமகள் தான், முதல்நாள் போரில் தந்தை இறந்த நிலையில் மறுநாள் போரில் கணவனை இழந்த நிலையிலும், தன் ஒரே மகனை போருக்கு அனுப்பி வைக்கிறாள். தனக்குள் படைப்பியக்கத்தைத் தளரவிடாதவள் இந்த மறக்குடிமகள்.

இறுதியாக இப்படிச் சொல்லலாம். சங்ககால தமிழ்ச் சான்றோருக்குள் பொங்கி வழிந்தது படைப்பியக்கம். தமக்குள் நிலவிய ஆதிப்பொதுமைச் சமூகத்தின் அறத்தை அழிப்பதற்கென வந்த உடமைச் சமூகத்தை எதிர்க்கும் முறையில் தமக்குள் இருந்த படைப்பியக்கத்தை விடுவித்துக் கொண்டவர் தமிழ்ச்சான்றோர். இந்த ஊற்றைத்தான் வள்ளுவரும், இளங்கோவும், கம்பரும், பாரதியும், பாரதிதாசனும் தமக்குள் கண்டெடுத்தனர். இந்த ஊற்றிலிருந்து தான் சித்தர்கள் தோன்றினர். இந்த ஊற்றுத்தான் சமதரும உணர்விற்கும் தோற்றுவாய், தமிழர் என்றும் இதை இழந்துவிட முடியாது.

*குறிப்பு:*

*20-8-99ல் ஈச்சனாரி கற்பகம் கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற 'தமிழிலக்கியத்தில் படைப்பியக்கம்' கருத்தரங்கில் தரப்பட்ட கட்டுரை.*

# 8. சங்க இலக்கிய மெய்யியல்

1. உலக அளவில் தமிழ் இலக்கியத்தின் மேன்மைக்குச் சான்றாக விளங்குவது சங்க இலக்கியம். சங்க இலக்கியங்கள் கண்டுபிடிக்கப்பட்டு கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாகப் பெரும் ஈடுபாட்டோடு தமிழ் அறிஞர்கள் ஆய்ந்து வருகின்றனர். இடைக்காலத்தில் சங்க இலக்கியம் ஈடுபாட்டோடு பயிலப்பட்டதாகத் தெரியவில்லை. சமய உணர்வுகள் முன்னிலையிலிருந்த அக்காலத்தில் சங்க இலக்கியங்களுக்குத் தேவையில்லை. மேற்கத்திய உலகின் உறவு நமக்குள் ஏற்பட்டதை அடுத்துத்தான் சமயங்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு மண்ணுலகின், மனித வாழ்வின் முதன்மையை நாம் உணரத் தொடங்கினோம். கடவுள் இல்லாமல், சமயங்களின் ஆதிக்கத்திற்கு உட்படாமல் நமக்கான உலகத்தை, வாழ்வை, படைத்துக் கொள்ள முடியும். இத்தகைய உணர்வுகள் முதன்மைப்பட்ட கால அளவில்தான் சங்க இலக்கியத்தோடு நமக்கு ஆழ்ந்த உறவும் பற்றும் ஏற்படலாயின.

சங்க இலக்கியத்தினுள்ளும் மனித வாழ்க்கைதான், மனிதனின் அகமும் புறமும் சார்ந்த வாழ்க்கைதான் முதன்மைப்பட்டிருந்தது. சமயத்திற்கு அங்கு முதன்மை இல்லை. சங்க இலக்கியம் நம்மை இன்றும் ஈர்ப்பதற்கு இது காரணம். சங்க இலக்கியக் கல்வியின் மூலம் தமிழனின் நெடுங்கால வரலாறு, வாழ்வின் மேன்மை, தமிழ் வாழ்வின் தனித்தன்மை, தொன்மை முதலியவை பற்றியெல்லாம் கூடுதலாக அறிகிறோம். நமக்குள்ளிருந்து தமிழ்த்தேசியம் என்ற உணர்வைப் பெறுவதற்கும் சங்க இலக்கியத்தின் மூலம் நாம் பெறக்கூடிய தூண்டுதலும் ஒரு முக்கியமான காரணம்.

இன்றைய காலச்சூழலில் தமிழர் என்ற முறையில் நமக்கு நிம்மதியான வாழ்வு கிட்டவில்லை. நமக்கான வாழ்வை நம்மால் படைத்துக்கொள்ள முடியவில்லை. நமக்கான அரசியல், பொருளியல், பண்பாடு, கல்வி, தொழில்கள், முதலியவற்றைத் தக்க வைத்துக் கொள்ள முடியவில்லை. தமிழ் வாழ்வுக்கு எதிரான சக்திகள்தான் இன்று தமிழகத்தினுள்ளும் வெளியிலும் ஆதிக்கத்தில் உள்ளன. இவற்றின் அசுரத்தனமான பிடிகளுக்கு உள்ளாகி நம் நிலம் நீர் முதலியவற்றையும் நம் வாழ்வையும் நாம் இழந்து வருகிறோம். அசுரத்தனமான அந்நிய சக்திகளின் ஆதிக்கத்திலிருந்து நம்மை மீட்டுக்கொள்வது பற்றிச் சிந்திக்கிறோம்.

சங்க இலக்கியம் மட்டுமல்லாமல் வரலாறு நெடுகிலும் தமிழ் வாழ்வின் மேன்மைக்கு எத்தனையோ சான்றுகள் இருக்கின்றன. இவற்றை எல்லாம் நம்மால் இன்று இழக்க முடியாது. சங்க இலக்கியத்தின் வழியே நமக்குள் இன்றும் திரட்டிக் கொள்ளத்தக்க தமிழ் வாழ்வு பற்றி, தமிழ் அறம் பற்றி நாம் கூடுதலாகச் சிந்திக்கிறோம். தமிழ் வாழ்வின் மையமென சமத்துவம் சமதர்மம் இன்று நமக்கு முதன்மையான அறமாகத் தெரிகிறது. இந்த அறம் மட்டுமே இன்றும் நம்மை வாழ்விக்கும். அந்நிய சக்திகளின் பிடியிலிருந்து நமக்கான தூண்டுதலைப் பெறத்தக்க நெறியாக அமைய முடியும். இதற்கும்தான் இன்று நமக்குச் சங்க இலக்கியம் தேவை.

ஒரு நூற்றாண்டுக்கும் மேலாகப் போராடி, இறுதியாக தமிழ் ஒரு செம்மொழிதான் என்ற அரைகுறையான ஏற்பைப் பெற்றிருக்கிறோம். செம்மொழி என்ற முறையில் தமிழின் மொழித்திறன், இலக்கண வளம், இலக்கிய மேன்மை, வரலாற்றுத் தொன்மை முதலியவற்றை உலகம் அறிந்து கொள்ளத்தக்க முறையில் பலவகையான ஆய்வுகளில் இன்று நம்மை ஈடுபடுத்திக் கொள்ள விரும்புகிறோம். தமிழ் வாழ்வை உறுதியான தளத்தில் நிலை நிறுத்துவது நமக்கான தேவை என்பது உண்மையானால் தமிழ் வாழ்வுக்கு அடித்தளமாக இருக்கவேண்டிய தமிழ் மெய்யியல் குறித்த ஆய்வு நமக்குத் தேவை. தமிழரின் அரசியல், பொருளியல் முதலிய அனைத்தையும் புதிய தளங்களில் படைக்க, ஆழ்ந்த மெய்யுணர்வு இல்லாமல் முடியாது.

கடந்த சில 10 ஆண்டுகளாக மெய்யியல் பற்றிய அக்கறை நமக்கு இல்லை என்பதற்கான காரணங்கள் பற்றி இங்கு சுருக்கமாகக் குறிப்பிடலாம். மெய்யியல் என்றவுடனே அதை மதம்தானே என்று நாம் ஒதுக்கியிருக்கிறோம். பகுத்தறிவுப் பார்வையின் தேவையை கூடுதலாக வற்புறுத்த வேண்டிய தேவை இருந்ததன் காரணமாகவும் இத்தகைய புரிதலுக்கு நாம் உள்ளானோம். பார்ப்பனியத்தின் ஆதிக்கத்தை உதறிக்கொள்ள நாம் முனைந்தபோது சைவமோ, வைணவமோ நமக்குத் துணை வரவில்லை. இவற்றினுள்ளிருந்தும் நம்மை விடுவித்துக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது.

மெய்யியல் என்றவுடனே அது மதம்தானே என்று நாம் புரிந்து கொள்ள வேண்டியதில்லை. மதம் என்றால் என்ன என்ற ஆய்வுக்குள் இப்பொழுது நாம் செல்ல வேண்டியதில்லை. எனினும் சுருக்கமாக ஒன்றைச் சொல்லலாம். மதம் அல்லது சமயம் என்ற அமைப்பினுள்

இரண்டு கூறுகள் இருப்பதை ஜான்லெவிஸ் என்ற அறிஞர் சுட்டிக் காட்டியுள்ளார். சடங்குகள், விக்கிரகங்கள், வழிபாடு, புராணங்கள் முதலியவற்றோடு கூடிய அடுக்கு ஒன்றைத்தான் சமயம் என்று பொதுவாக நாம் புரிந்து கொண்டுள்ளோம். புரோகிதர்களுக்கு இந்த அடுக்குதான் முதன்மையானது. இதை வைத்துத்தான் மக்களை அவர்கள் தம் ஆதிக்கத்திற்குள் வைத்துக்கொள்கின்றனர். உலக அளவில் எல்லாச் சமயங்களினுள்ளும் நடைபெறுவது புரோகிதர்களின் ஆதிக்கந்தான். சமயங்களினுள் இயங்குவது இன்னொரு கூறு. இறைவன் அன்பே வடிவானவன். இறைவனுக்கு முன் அனைவரும் சமம். இறைவனுக்கு உருவமில்லை. எந்த உருவத்திலும் அவனை வழிபடலாம். வழிபட்டுத்தான் ஆக வேண்டும் என்பதுமில்லை. உயிர்களிடம் அன்பு செய்வதே இறைவனுக்கு நாம் செய்யும் வழிபாடு. இறைவன் முன்னிலையில் ஏற்றத்தாழ்வுக்கு இடமில்லை. சமயங்களின் உள்ளியக்கமென இப்படி ஒரு கருத்தியலை நாம் தொகுக்க முடியும். இது சமயத்தின் மெய்யியல் கூறு. சாதி, சடங்கு முதலியவை இறைவனை அடைவதற்கான நெறியில்லை. புரோகிதத்தைச் சமயத்தின் மையமெனக் கூறவேண்டாம். தனியுடைமை, அரசதிகாரம் ஆகியவற்றோடு ஒத்தியங்குவது புரோகிதம். இப்போக்கை முற்றாக மறுப்பது மெய்யியல் கூறு. எந்த ஒரு சமயத்தினுள்ளும் இந்த இருவகைக் கூறுகளுக்கிடையில் நடைபெறுவது ஓயாத போராட்டம். புரோகிதம் மனித வாழ்வை மேம்படுத்த முடியாது. வாழ்வின் அழிவுச் சக்தியாகச் செயல்படுவது புரோகிதம். வாழ்வின் ஆக்கத்திறனாகச் செயல்படுவது மெய்யியல்.

இம்முறையில் விரித்துச் சொல்லவேண்டிய பார்வைக்குப் பெயர்தான் மெய்யியல். அரசியல் அதிகாரத்தோடு, தனியுடைமை ஆதிக்கத்தோடு ஒத்துச் செல்வதாக மெய்யியல் பார்வை இருக்க முடியாது. பணம், அதிகாரம், பதவி என்பவை மனித வளர்ச்சிக்கான ஆக்கக் கூறுகள் அல்ல. தனிமனிதன் தன் வாழ்வுக்கான ஆக்கக் கூறுகள் அல்ல. தனிமனிதன் தன் வாழ்வுக்காகப் பிறரைத் தனக்குக் கூலியாக்க வேண்டாம். அடிமையாக்க வேண்டாம். இயற்கை அனைவருக்கும் பொதுவானது. உழைப்பும் பகிர்வுமே மனிதத் தரமான வாழ்வுக்கு அர்த்தம் தரக்கூடியவை. வரலாற்றுச் சூழலில் ஆதிக்கங்களுக்கெதிராகப் போராடித்தான் மனிதன் தனக்கான வாழ்வைப் படைத்துக் கொண்டான். கடவுள் முதலியவர்களையும் படைத்தவன் மனிதன்தான். கலைகளைப்

படைப்பதைப் போலவே கடவுளையும்தான் படைத்தான். ஆதிக்கச்சக்திகள் எல்லாவற்றையும் அபகரித்துக் கொள்வதிலேயே முனைப்பாக இருக்கின்றன. ஆதிக்கம் செய்வதும் ஆதிக்கத்திற்கு அடங்குவதும் மனித தரத்தை, மனித வாழ்வை வக்கிரமாக்கும். அவலத்திற்குள்ளாக்கும். இவற்றிலிருந்தெல்லாம் விடுபட்டுத் தனக்கான உலகத்தை அனைவருக்குமான வாழ்வை, சமத்துவத்தை, சமதர்மத்தைப் படைத்துக் கொள்வதன் மூலமே மனித வாழ்வு அர்த்தம் பெறும். அழகு பெறும். ஆற்றல் பெறும். அரசியல் அதிகாரமும் பொருளியல் ஆதிக்கமும் தமிழ்ச் சமூகத்தைக் கூறு போட்டு, தமிழ் வாழ்வின் அடையாளங்களை அழித்துவரும் இன்றைய நிலையில் வாழ்வுக்கு அர்த்தமும் அழகும் சேர்க்கும் தமிழறத்தை, தமிழ் மெய்யியலை, நமக்குள் தாங்கி வளர்த்தாக வேண்டும்.

## 2. முனைவர். சு. துரையின் ஆய்வு நூல்

சங்க இலக்கியத்தினுள் செயல்படுகிற மெய்யியல் பற்றி ஆய்வது தான் நம் நோக்கம். இத்தகையதொரு ஆய்வுக்கு முன்னோட்டமாகத்தான் நண்பர் சு.துரை அவர்களின் ''சங்க இலக்கிய மெய்யியல்'' என்னும் ஆய்வுநூல் வெளிவருகிறது. ஒரு தொடக்கநூல் என்ற முறையில் இவரது ஆய்வை நாம் வெகுவாகப் பாராட்ட முடியும். சங்க இலக்கியம் என்ற தொகுப்பை இவர் முழு அளவில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவில்லை. புறநானூறு என்ற தொகுப்பினுள் இடம் பெறும் சங்ககால மெய்யியல் பற்றியது தான் இவரது ஆய்வு. இத்தகைய ஆய்வையும் இவர் தொடங்கி வைத்திருக்கிறார் என்றுதான் சொல்ல முடியும். இந்தத் தொடக்கத்திற்காகவும் நாம் இவரது நூலை வரவேற்க முடியும்.

இந்த நூலில் முன்னுரை தவிர மெய்யியல், புலன் கடந்த பொருளியல், அழகியல், அறிவியல் என்ற நான்கு இயல்கள் அடங்கியுள்ளன. இறுதியாக நிறைவுரை என்பதும் ஓர் இயல். மெய்யியல் என்ற முதலியலில் மெய்யியல் குறித்து விரிவான விளக்கங்கள் தருகிறார். அதிகளவில் மார்க்சியர் குறிப்பிடும் மெய்யியல் குறித்த விளக்கங்களைத் தருகிறார். இடையில் ''மேலை-கீழை மெய்யியல்'' என்ற நூலில் அறிஞர். மௌலானா அபுல்கலாம் ஆசாத் அவர்களின் சில அரிய கருத்துரைகளைத் தொகுக்கிறார். மேலை மெய்யியலிலிருந்து கீழை மெய்யியல் குறிப்பாக இந்திய மெய்யியல் எவ்வாறு வேறுபடுகிறது, என்ற ஆசாத்தின் கருத்தைத் தருகிறார். மேலைமெய்யியல் அறிவியல் சார்புடையது. இந்திய மெய்யியல்

மதச் சார்புடையது என்கிறார். இந்த இயலின் இறுதியில் மேலை மெய்யியலின் முக்கியக் கூறுகளெனப் புலன் கடந்த பொருளியல், அழகியல், அறிவியல் என்பனவற்றை ஆய்வாளர் துரை தன் ஆய்வுக்கு அடிப்படையாக எடுத்துக் கொள்கிறார். மேலை மெய்யியலின் வேறு இரு கூறுகள் என அளவையியலையும், அறிவுத்தோற்ற இயலையும் குறிப்பிடும் ஆய்வாளர், சங்க இலக்கிய மெய்யியல் குறித்த ஆய்வுக்கு இக்கூறுகளை எடுத்துக் கொள்ளவில்லை.

புலன் கடந்த பொருளியல் என்னும் இயலில் சிவன், திருமால், முருகன், இந்திரன், பலராமன் ஆகிய கடவுளர் கூற்றம், தேவர் உலகம், மறுபிறப்பு, ஊழ், நிமித்தம் முதலிய நம்பிக்கைகள், இறுதியாக நடுகல் வணக்கம் முதலிய கருத்தினங்கள் புறநானூற்றுப் பாடல்களில் இடம் பெறுவதை ஆய்வாளர் தொகுத்துத் தருகிறார்.

அழகியல் என்னும் அடுத்த இயலில் அழகியல் குறித்து மேற்கத்தியர் மற்றும் இந்தியர் / தமிழர் கருத்து நிலைகள் சிலவற்றைத் தொகுப்பதோடு புறநானூற்றில் இடம்பெறும் பாணர், விறலியர், கூத்தர் இவர்களின் இசை, ஆடல், இசைக்கருவிகள் பற்றிய குறிப்புக்களோடு இக்கலைஞர்களின் வறுமைநிலை பற்றியும் புறநானூற்றிலிருந்து விவரங்களைத் தொகுக்கிறார்.

திரு. ஜனசுந்தரம் அவர்களின் தொல்காப்பிய நூற்பா ஒன்றிலிருந்து தமிழர்களின் அழகியல் குறித்த கருத்தியலைப் பயன்படுத்திப் புறநானூற்றின் கவிதை இயல் குறித்து ஆய்வாளர் சில கருத்துக்களைத் தருகிறார்.

அறிவியல் என்னும் அடுத்த இயலில் அறம், காலத்திற்கும் தேசத்திற்கும் இடத்திற்கும் ஏற்ற முறையில் மாறுவது பற்றியும் அறத்திற்கு நிரந்தரத் தன்மையில்லை என்பது பற்றியும் சிலரது கருத்துக்களைத் தருகிறார். அறம், தர்மம் என்ற சொற்களை வேறுபடுத்துகிறார். புறநானூற்றுப் பாடல்களிலிருந்து அக்கால மக்களின் அறங்கள் என்பனவற்றிலிருந்து ஐந்தைத் தொகுக்கிறார். தமிழ் மக்களின் இல்லறம், துறவறம், அரசு அறம், போர் அறம், சமூக அறம், கொடை அறம் என்ற தலைப்புக்களில் புறநானூற்றுப் பாடல்களிலிருந்து விவரங்களைத் தொகுக்கிறார்.

சங்ககாலத்தில் நிலவிய கைம்மை முறை, உடன்கட்டை ஏறல் பற்றிச் சொல்லுகிறார். அரசு அறம் என்ற முறையில் நாடு காத்தல், வேளாண்மையைக் காத்தல், சான்றோர்க்கு மரியாதை, ஆகிய அரசுக் கடமைகள் குறித்துச் சொல்கிறார். தமிழ் மக்களின் வீர உணர்வு என்ற முறையில் புறப்புண்ணுக்கு நாணி வடக்கிருத்தலைச் சொல்லுகிறார். அறவழியில் போர் புரியும் மன்னர், எதிரி நாட்டில் செய்யும் சில அழிவுகள் பற்றியும் சொல்கிறார். புலவர்கள் வறுமையிலும் செம்மையுடையவர் என்பதை எடுத்துச் சொல்கிறார். சில சமூக அறங்களை விரிவாகத் தொகுக்கிறார். இறுதியாக நிறைவுரையில் தன் ஆய்வுக் கருத்துக்களைத் தொகுத்துத் தருகிறார்.

### 3. சு. துரையின் ஆய்வுமுறை

ஆய்வாளர் துரை அவர்களின் ஆய்வுமுறை, தேர்ந்தெடுத்துக்கொண்ட தரவுகள், அவர் தரும் முடிவுகள் ஆகியவை பற்றி இங்கு விரிவாகப் பேசவேண்டியதில்லை. எனினும் இவர் ஆய்வின் தனித்தன்மை மற்றும் சிறப்புக் குறித்தும் இவரது ஆய்வுமுறை குறித்தும் சில கருத்துக்களை இங்கு முன் வைப்பது பொருத்தமாக இருக்கும்.

1. பொதுவாக சங்க இலக்கியத்தில் மன்னர்கள், புலவர்கள், காதல், வீரம், அணிகலன்கள், விளையாட்டுக்கள், என்றெல்லாம் சாரமற்ற ஆய்வுகளில் பலர் ஈடுபடுவதைப் போல இவர் செய்யவில்லை. சங்க இலக்கியத்தில் மெய்யியல் என்று ஆய்வதன் இன்றைய தேவையை ஆய்வாளர் முதன்மைப்படுத்துகிறார். மெய்யியல் பற்றிய ஆய்வு சிக்கலான ஆய்வு. இதற்கு விரிந்த அளவிலான படிப்பறிவு தேவை. மதப்பார்வையிலிருந்தும் விடுபட்டவர்க்கே இத்தகைய ஆய்வு இயலும். மதமே மெய்யியல் என்ற குழப்பவாதத்திலிருந்தும் ஒருவர் விடுதலை பெற்றிருக்கவேண்டும். மதம் வேறு, மெய்யியல் வேறு என்ற தெளிவோடு ஆய்வைச் செய்ய வேண்டும். ஆய்வாளர் சு.துரை அவர்களுக்கு இவ்வகையான தகுதி இருப்பதை முதலில் சொல்லவேண்டும்.

2. நம் காலத்தைப் பொறுத்தவரை விரிந்த அளவிலான வரலாறு, பொருளியல், வாழ்வியல் பார்வையை, முன்வைப்பது மார்க்சியம். மார்க்சியப்பார்வை உடையவருக்கு இலக்கியம் பற்றிக் கூடுதலான தெளிவைப் பெறமுடியும். சங்க இலக்கிய ஆய்வுக்கு மார்க்சியம் புதிய திறப்புக்களைத் தரும். துரை மார்க்சியம் குறித்துக் குறைந்த

அளவுக்கேனும் அறிமுகமுடையவர். மெய்யியல் குறித்து மார்க்சியரின் கருத்துரைகளை முதலியலில் விரிவாகத் தருகிறார். அறிவியல் குறித்த இயலிலும் மார்க்சியரின் கருத்துக்களைத் தொகுக்கிறார். பெரும்பாலும் இவர் பயன்படுத்திக் கொண்டவை மார்க்சியரின் பாடநூல்கள். மார்க்சியம் குறித்து/ மெய்யியல் குறித்து மார்க்சியரின் வரையறை குறித்து ஆய்வதற்கு பாடநூல்கள் போதுமானவை அல்ல. மூல ஆசிரியர்களை, திறனாய்வு நோக்கில் தேடிச் செல்லவேண்டும். இளம் முனைவர் பட்ட ஆய்வுக்கு இத்தகைய தேடல் சாத்தியமில்லை.

3. மேற்கத்தியரின் மெய்யியல் விளக்கங்கள் குறித்து ஆய்வாளர் குறைந்த அளவுக்கேனும் அறிந்திருக்கிறார். மேலை மெய்யியல், கீழை மெய்யியல் பற்றிய வேறுபாடுகள் குறித்து அறிந்திருக்கிறார். வாழ்வியல் கலைக்களஞ்சியம் போன்ற பெரும் தொகுப்புக்களையும் ஃகிரியண்ணா போன்றவர்களின் நூல்களையும் தன் ஆய்வுக்கு இவர் பயன்படுத்தியிருக்கிறார். வியக்கத்தக்க முறையில் தமிழ் லெக்சிகன் மற்றும் நிகண்டுகள் சிலவற்றை இவர் பயன்படுத்திக் கொள்கிறார்.

4. தமிழ் ஆய்வாளர்கள், அறிஞர்.குணா, பேரா.நெடுஞ்செழியன் ஆகியவர்களின் தமிழ் மெய்யியல் குறித்த நுணுக்கமான ஆய்வுகளோடு தொடர்பு கொள்வதில்லை. சமயச் சார்புடையவர்கள், இத்தகையவர்களை நெருங்கமாட்டார்கள். வழக்கமான தமிழியல் ஆய்வுகளிலிருந்து குணா, நெடுஞ்செழியன் ஆகியவர்களின் அணுகுமுறை முற்றிலும் வேறானது. தமிழ்த்தேசியம் என நம் கால உணர்வை வளர்த்தெடுப்பதில் இவர்கள் முதன்மையானவர்கள். இவர்களைப் போலவே அறிஞர். எஸ்.என். நாகராசன் அவர்களின் ஆய்வுரையையும் துரை பயன்படுத்திக் கொள்கிறார். எஸ்.என். நாகராசன் ஒரு அசலான மார்க்சிய அறிஞர். லெனின் அவர்களின் தொகுப்பு நூல்களில் 38வது நூல் அவரின் குறிப்பேடுகள் - ''மெய்யியல் (Philosophical Note Books) குறிப்பேடுகள்''. லெனின் அவர்களின் அற்புதமான ஆய்வுரைகள் இந்தத் தொகுப்பில் அடங்கியுள்ளன. இந்தத் தொகுப்பினுள் சென்று வந்தவர்க்கே லெனின் மேதைமை புரியும். கருத்து முதலியல் – பொருள் முதலியல் ஆகியவற்றினுள் ஊடாடும் இயங்கியல் நுட்பத்தை லெனினிலிருந்து நாகராசன் கண்டறிந்து சொல்கிறார். நாகராசனிலிருந்து இந்தக் கருத்துரையை துரை எடுத்துக் கொள்கிறார். மார்க்சியத்தோடு உறவு கொள்ளத் தயங்கும் தமிழியல் ஆய்வாளர்களிலிருந்து விலகி நிற்பவர் மட்டுமல்ல, மார்க்சியத்தின் தேவையைத் தமிழியல் ஆய்வுக்குள் கொண்டு வருபவர் துரை.

5. இளம் முனைவர், அல்லது முனைவர் பட்டத்திற்கான ஆய்வாளர்கள் தம் சொந்தக் கருத்தை தன் ஆய்வு நூலில் வெளியிடுவதில்லை. வெளியிடுவதை நெறியாளர் பலர் ஒப்புக் கொள்வதில்லை. விவரத்தொகுப்பாக மட்டுமே ஆய்வுகள் இருந்தால் போதும். மேற்கோள்கள் என்று நிறையக் கொட்டி வைக்க வேண்டும். அவற்றின் தகுதி குறித்து மதிப்பீடு தேவையில்லை. இத்தகையவர்களுக்கிடையில் ஆய்வாளர் துரை பெரிதும் வேறுபடுகிறார். சங்க காலத்திருந்த சடங்குகள், நம்பிக்கைகள் முதலியவற்றை மூடநம்பிக்கையென இவர் சாடவில்லை. இத்தகைய நம்பிக்கைகள் எத்தகைய வரலாற்றுச் சூழலில் மனிதருக்கான எத்தகைய தேவையோடு உணர்வோடு தோன்றியிருக்க முடியும் என்று சொல்லுகிறார். அறிஞர் குணாவின் பார்வையைப் பயன்படுத்திக் கொள்கிறார். சங்க காலத்தில் கணவனோடு உடன்கட்டை ஏறலைக் கண்டிக்கிறார். மன்னர்கள் பகைவர் நாடுகளில் செய்யும் அழிவுச் செயலை வீரம் என்று இவர் பாராட்டவில்லை.

6. நிறைவுரையில் ஆய்வாளர் தரும் சில முடிவுகள் தீர்க்கமானவை. சங்க காலத்தில் மனிதர் வாழ்வில் சமயம் ஆதிக்கம் பெறவில்லை. சமய நம்பிக்கைகளென சில இருந்த போதிலும் அவற்றைக் கேள்விக்குட்படுத்த மக்கள் தயங்கவில்லை. மேலுலக வாழ்வு இன்றியமையாதது என மக்கள் நம்பவில்லை. உலகியல் வாழ்வுக்கே மக்கள் முதன்மை தந்தனர். மன்னர்களின் ஆதிக்கத்தையும் புலவர் கேள்விக்குட்படுத்தினர். இயற்கையைத் தமிழர் பெரிதும் நேசித்தனர். வறுமை தீருவதற்காக கலைஞர்கள் தன்மானத்தை இழக்கவில்லை. இனக்குழுச் சமூக வாழ்வின் நற்குணங்களை மக்கள் உதறிக்கொள்ளவில்லை. போர்க்கள அழிவை மக்கள் விரும்பவில்லை. எனினும் காலம் மாறிக் கொண்டிருந்தது. இனக்குழுச் சமூகம் அழிந்து உடமைச்சமூகம் முன்னுக்கு வந்து கொண்டிருந்தது. நிறைவுரையில் ஆய்வாளர் தரும் இத்தகைய முடிவுகள் நம் பாராட்டுக்குரியவை.

துரை அவர்களின் இந்த ஆய்வு நூலைத் திறனாய்வு செய்யும் முறையில் கீழ்க்கண்ட சில கருத்துக்களை இங்கே தருகின்றேன்.

1. பாடநூல்களிலிருந்து மார்க்சியத்தை நாம் பயன்படுத்துவதில் தவறுகள் பல நேருகின்றன. கட்சி மார்க்சியரைப் பொறுத்தவரை மார்க்சியத்திற்கென இயங்கியலைத் தவிர வேறு மெய்யியல் உண்டு என இவர்கள் நம்புவதில்லை. சங்க இலக்கியத்தினுள் தெரிய வருகிற மெய்யியலை ஒரு அசலான மார்க்சிய நோக்கிலிருந்து சிறப்பாகத் தொகுக்க முடியும்.

2. அறவியல் என்பதும் அழகியல் என்பதும் தனித்தனி இயக்கமுடையவை அல்ல. மனித வாழ்வை மேம்படுத்தும் முறையில் அழகியலும் அறவியலும் மெய்யியலும் ஒரு புள்ளியில் இணைகின்றன. சங்ககால மெய்யியலினுள்ளும் இத்தகைய புள்ளியைக் காண முடியும். மார்க்சிய நோக்கில் மட்டுமே இது சாத்தியம். நவீன மேலை மெய்யியல் முதலாளியச் சார்புடைய மெய்யியல். இந்திய மெய்யியலைக் கண்டறிய மார்க்சியமே உதவும்.

3. மார்க்சியப் பாடநூல்கள் முதலியவை கூறுவதுபோல மெய்யியல் வரலாற்றைக் கிரேக்கத்திலிருந்து தொடங்கவேண்டியதில்லை. இந்திய மெய்யியல் என்பதன் ஊற்று, தமிழ் மெய்யியல் தான்.

## 4. சங்க காலம் – சமூக முரண்பாடுகள்

1. சங்க இலக்கியத்திலிருந்து தமிழ் மெய்யியலைத் தொகுத்து அறிவதற்கு முன்னர் சங்ககால வரலாற்றுச் சூழலில் நிலவிய சமூக முரண்பாடுகள் குறித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். இனக்குழுச் சமூகம் தொடர்ந்து அழிக்கப்பட்டு தனியுடைமையும் அரசதிகாரமும் மேலுக்கு வந்துகொண்டிருக்கிற ஒரு மாறுதல் கட்டம்தான் சங்ககாலம் என்று அறிஞர் பலரும் கருதுகின்றனர். சங்க காலத்திற்கு முன்பு தமிழகம் என்று இன்று அறியப்படுகிற பெரும் நிலப்பரப்பில் இனக்குழுக்கள் பல வாழ்ந்தன. இனக்குழு மக்கள் இயற்கையிலிருந்து தமக்குத் தேவையான உணவைப் பெற்றனர். கிடைத்தவற்றைத் தமக்குள் பகிர்ந்து கொண்டனர். இவர்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வுகள் இல்லை. அனுபவமிக்க முதியவர் இவர்களின் தலைவர். இயற்கையோடு இவர்கள் இணைந்து வாழ்ந்தனர். தாம் வாழும் நிலப்பரப்பைக் காப்பதற்காகவும் உணவுத்தேவைக்காகவும் இனக்குழுக்களுக்கிடையில் மோதல் நிகழ்ந்திருக்கக்கூடும். எந்த ஒரு இன்க்குழுவும் தனிப்படை வைத்துக் கொள்வதில்லை. மோதலின் போது அனைவரும் கலந்து கொண்டனர். இனக்குழுவில் ஒருவருக்கு ஏற்படும் தீங்கு என்பதை இனக்குழுவிலிருக்கும் அனைவரும் தமக்கு ஏற்பட்ட தீங்காகக் கருதுவர். தனி மனிதன் என்ற உணர்வு எவரிடத்தும் இல்லை. தனி மனிதத் துயரம் என்பதற்கு இடமில்லை.

இனக்குழுக்களுக்கிடையில் மோதல்கள் இல்லாமல் வாழ்க்கை இல்லை. பல்வேறு இனக்குழுக்களிலிருந்து ஒன்றிரண்டு இனக்குழுக்கள், குழுக்களிலுள்ள மக்கள் தொகை காரணமாகவும் மோதலின் போது பெற்ற

அனுபவம் காரணமாகவும் பிற இனக்குழுக்களை ஒடுக்கி ஆதிக்கத்திற்கு வந்திருக்கக் கூடும். ஒடுக்கப்பட்ட இனக்குழுக்களின் நிலங்களை இவர்கள் அபகரித்திருக்கக் கூடும். இவ்வகையில் மெல்லமெல்லத் தனியுடைமையும் ஆதிக்கமும் உருவாகத் தொடங்கின. ஆதிக்கம் என்பது நாளடைவில் வெறித்தனமாக மாறத்தான் செய்யும். போரிடுவதற்கான படையென ஒன்றைத் தனியே உருவாக்கிக் கொள்ளமுடியும். தோல்வியடைந்த இனக்குழு மக்கள் வெற்றி பெற்ற குழுவுக்காக உழைக்கவேண்டும். போரிட வேண்டும். வெற்றி பெற்ற இனக்குழு தொடர்ந்து இனக்குழுவாக, தன் உறுப்பினர்களுக்குள் சமத்துவம் நிலவுகிற இனக்குழுவாக இருக்க வாய்ப்பில்லை. தலைவனுக்குக் கூடுதல் அதிகாரம், பிற இனக்குழுக்களை வெற்றி கொள்ளும்போது கிடைத்தவற்றைப் பகிர்ந்து கொள்வதில் வேறுபாடுகளும் ஏற்றத்தாழ்வுகளும் நிலவின. தலைவர்கள் நாளடைவில் அரசர் அல்லது வேந்தர் என அறியப்படுகின்றனர். வேந்தன் படைவலிமையுடையவன். நாடு எனவும் அரசு எனவும் நாளடைவில் உருவாக்கிக் கொள்கிறான். தோல்வியடைந்த இனக்குழுவினரும் அடங்கி அமைதியாக இருக்க முடியாது. வேந்தன் தன்னை மகிமைப்படுத்திக் கொள்வதற்காக புலவர்களைக் கொண்டு தன்னைப் பாட வைக்கிறான். வேந்தர் தொடர்ந்து இனக் குழுவை ஒழிக்கின்றனர்.

இனக்குழுவின் தலைவர் அன்று வேளிர் என அறியப்பட்டிருந்தனர். பாரி, ஆய், அதியன், காரி, ஓரி என்று சங்க இலக்கியத்தில் இடம் பெறும் வேளிர் இத்தகையவர். இவர்களை அழித்த நிலையில்தான் மூவேந்தர்கள் சங்ககாலச் சமூகத்தின் ஆதிக்கத்திற்கு வருகின்றனர். சங்க காலத்தின் இறுதியில் வேளிர்கள் இல்லை. அவர்கள் போற்றிய சமத்துவமான சமூக வாழ்வுக்கு இடமில்லை. இனக்குழுக்களின் பேராதரவைப் பெற்றவர்கள் பாணர், கூத்தர், விறலியர் முதலிய கலைஞர்கள். இனக்குழுக்கள் அழிந்து வரும் நிலையில் இவர்கள் தமக்கு ஆதரவு தேடி ஊர்கள் தோறும் அலைகின்றனர். 'இனிப்பாடுநர்க்கு ஒன்று ஈகுநர் இல்லை' என்ற நிலை தோன்றுகிறது.

இனக்குழு வாழ்வில் மரியாதைக்குரியவராய்த் திகழ்ந்த பெரியவர்கள் பின்னர் சான்றோர் என அழைக்கப்பட்டவர்கள். தனியுடைமையும் அரசதிகாரமும் மேலோங்கி வருகிற சமூகச் சூழலில் இவர்களால் நிம்மதியாக வாழ முடியவில்லை. இனக்குழுச் சமூகத்தின் பண்பாட்டு மேன்மையை இவர்களால் கைவிட முடியாது. அந்த

அறப்பண்பாட்டை இன்னும் இவர்கள் வற்புறுத்துகின்றனர். தனியுடைமையோடு அரசதிகாரத்தோடு இவர்களால் ஒத்துப்போக முடியாது. இனக்குழுவின் உயிரியக்கம் இவர்களுக்குள் இன்னும் துடித்துக் கொண்டிருக்கின்றது. இனக்குழுச் சமூக வாழ்வின் அறப்பண்பாட்டைக் கைவிடும் நிலை நேரும்பொழுது இவர்கள் உயிர்விடத் துணிந்தனர். மன்னர்கள் என அறியப்படுகின்ற சிலரும் முன்னைய சமூகத்தின் பண்பாட்டு மேன்மையைக் கைவிட இயலாத நிலையில் உயிர்விடத் துணிகின்றனர்.

சங்க இலக்கியத்தை ஊன்றிக் கற்கும் எவரும் அன்றைய சமூக வாழ்வின் முரண்பாடுகள் குறித்து இத்தகைய புரிதலைப் பெறமுடியும். சங்க காலத்தை வீரர்யுகம் என்றும் அல்லது வீர நிலைக்காலம் என்றும் கலாநிதி கைலாசபதி இட்ட பெயரை தமிழறிஞர் சிலர் மறுத்தனர். உண்மையில் வீரயுகம் என்பதைச் சங்ககாலத்தின் தொடக்கம் என்று புரிந்து கொள்வதில் தவறில்லை. இனக்குழுச் சமூகத்தின் வாழ்வு மேன்மையைக் காப்பதற்காக அச்சமூகத்தின் தலைவர்களாகிய வேளிர்களின் தலைமையில் கடுமையாகப் போரிட்ட மக்கள் வாழ்ந்த காலம் சங்ககாலத்தின் தொடக்ககாலம். இவர்கள் தம் தலைவனுக்காகப் போரிடவில்லை. தம் சமூகத்தின் மேன்மையை இழந்துவிட முடியாது என்ற அறவுணர்வோடு போரிட்டார்கள். வேந்தர்களின் படைவலிமைக்கு முன் இவர்களால் நிற்க முடியாது. இந்த வீர மறவர்களுக்குத் தான் தமிழகத்தில் ஊர்தோறுப் நடுகற்கள் எழுந்தன. இறந்த வீரனின் பெயரும் புகழும் பொறித்த கல்லுக்கு மாலை சூட்டி மறக்குலப் பெண்கள் வழிபட்டனர். முதல்நாள் போரில் தந்தையையும் மறுநாள் போரில் கணவனையும் மூன்றாம் நாள் போரில் தன் சிறுவனையும் அனுப்பி வைத்த மறக் குலப் பெண் இவளாகத் தான் இருக்க முடியும்.

இந்த வீரமறவரின் தலைவனென அறியப்பட்ட பாரி பற்றி சுருக்கமாகச் சொல்ல வேண்டும். இவன் தனக்கென எதையும் வைத்துக் கொள்ளாதவன். தன் ஆளுகையிலிருந்த முந்நூறு ஊர்களையும் புலவர்களுக்குத் தந்தவன். இவன் புகழ் தமிழகமெங்கும் நிலைபெற்றது. இவன் இருக்கும்வரை வேந்தர்களை மக்கள் புகழ மாட்டார்கள். இதற்காகப் படையெடுத்து வந்து பாரியைக் கொன்றனர். அவன் பெண்களை ஏதிலிகளாக்கினர். வேறு எந்தக் குறுநிலத் தலைவனும் அந்தப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டு வாழமுடியாது. இந்தப் பெண்களைப் பலரிடமும் அழைத்துச் சென்று மனம் நொந்தவர் கபிலர்.

பாரிக்கு நேர்ந்த கதிதான் பிற குறுநிலத் தலைவர்களுக்கும் நேர்ந்தது. இவர்களின் பெருமித வாழ்வுக்குப் புறநானூற்றுப் பாடல்கள் சான்றாகத் திகழ்கின்றன.

அரசதிகாரக் கொடுங்கோன்மைக்கு நன்னனை ஒரு சான்றாகக் குறிப்பிடலாம். அரசனின் தோட்டத்தில் இருந்த மாமரத்திலிருந்து பழுத்த ஒரு பழம் ஆற்றில் விழ, அதை எடுத்து உண்டாள் ஒரு இளம்பெண். அரசன்முன் குற்றவாளியாக நிறுத்தப்பட்ட அப்பெண்ணின் விடுதலைக்காக அவள் தந்தை தரவிரும்பிய பொன்னின் மிகுதியை நன்னன் ஏற்றுக்கொள்ளாமல் தன் அரசதிகாரத்தை நிலைநிறுத்தும் நோக்கில் அப்பெண்ணைக் கொலை புரிந்தான். தமிழ்ச் சான்றோர்கள் கொதித்தனர். இனி இவனையோ, இவன் மரபில் வரும் இன்னொருவனையோ புலவர்கள் பாடுவதில்லையென முடிவு செய்தனர்.

தனியுடைமையும் அரசதிகாரமும் தன்னை பாதித்துவிடக் கூடாது என்ற கவனத்தோடு வாழ்ந்தவன் கோப்பெருஞ்சோழன். புலவர்களுக்குத் தன் அரச செல்வத்தை இவன் வாரி வழங்கியதை ஏற்காத இவன் மக்கள் இவன் மீது போர் தொடுத்தனர். பொத்தியார் தலையிட்டார். இறுதியில் கோப்பெருஞ்சோழனும் புலவர் பலரும் ஆற்றங்கரையில் வடக்கிருந்து உயிர் துறந்தனர். குமணன் என்ற இன்னொரு மன்னனுக்கு, எதிராக அவன் தம்பி இளங்குமணன் எழுந்தான். காட்டுக்குச் சென்ற அண்ணன் தலைக்கும் இளங்குமணன் விலை வைத்தான். பெருகிவரும் தனியுடைமையும் அரசதிகாரமும் இவ்வாறெல்லாம் சமூகவாழ்வைச் சிதைத்தன. இந்தப் பின்னணியில்தான் தமிழ் மெய்யியலை வடித்தெடுக்க முனைந்துள்ளோம். தமிழ்ச் சமூக வாழ்வின் ஒரு மாறுதல் காலமெனச் சொல்லப்படும் சங்ககால வாழ்வின் முரண்நிலையைத் தான் புறநானூற்றுப் பாடல்கள் நமக்கு வெளிப்படுத்துகின்றன.

## 5. மார்க்சின் பேரறம்

மெய்யியல் நோக்கில் பார்க்கும் பொழுது மனித வாழ்வில் அறவியலும் அழகியலும் தமக்குள் முரண்படும் என்று தோன்றவில்லை. இவை மூன்றுமே ஒரு புள்ளியில் இணையும் பொழுதுதான் அதுவே வாழ்வின் பேரறமாகவும் பேரழகாகவும் திகழமுடியும். மனித வாழ்வை முழு அளவில் ஒரு மையத்திலிருந்து பார்க்கும் பார்வையென இதைச் சொல்லமுடியும். இதுவே மார்க்சிய நெறியிலான பேரறம் என்பதைச் சொல்லமுடியும்.

*1844*-இல் ஜெர்மனியிலிருந்து நாடு கடத்தப்பட்டு பாரிசில் வாழ்ந்த பொழுது மார்க்சு தன் தேவைக்காக, தனக்குத்தானே தன் சிந்தனையைத் தெளிவுபடுத்திக் கொள்ளும் முறையில் ''*1844*-கையெழுத்துப்படிகளை'' உருவாக்கினார். 'மார்க்சியம் என்பதன் மெய்யியலின் அடிப்படை இந்தக் கையெழுத்துப் படிகளிலிருந்துதான் நமக்குக் கிடைக்கிறது. மார்க்சியம் பற்றிய பாடநூல்களிலிருந்து இத்தகைய தெளிவை நாம் பெறமுடியாது.

அந்நியமாதல் என்பதுதான் மார்க்சின் அடிப்படைக் கருத்து. ஜெர்மானிய மெய்யியலாளராகிய ஹெகலின் வலுவான சிந்தனையிலிருந்து தன்னை இப்பொழுது மார்க்சு விடுவித்துக் கொள்கிறார். இவர் சிந்தனைப்படி, பிரம்மம் என்று நமக்குத் தெரிந்த சொல்லில் குறிப்பிடக்கூடிய பேரிறைமை தன் தனிமையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் முறையில் பிரபஞ்சமாக வடிவெடுத்தது. இயக்கத்தின் போது பிரபஞ்சம், ஒன்றிலிருந்து இன்னொன்றாக மாறி, இறுதியில் ஓரறிவு உயிராகி, இத்தகைய பொருள் உருவில் தன்னை மாற்றிக் கொண்ட பொழுது தன்னை இழந்து, தன்னை மறந்து, தொடர்ந்து தனக்குத்தானே இயங்கி, பரிணாம முறையில் மனிதனாகி, அப்புறம் ஜெர்மானியனாகி, அப்படி ஜெர்மானியன் ஆகிய பொழுதுதான் தன்னைத்தானே பேரிறைமை என்று அறிந்து கொண்டது. ஆதியிலிருந்த பேரிறைமையைத் தனக்குள் இப்படி அந்நியமாகி இறுதியில் தன்னைத் தானே பேரிறைமை என்று அறிந்து கொண்டபோது தன் சுய அந்நியமாதலிலிருந்து விடுதலை பெற்றது.

இந்தக் கதையை – கருத்தியலை மார்க்சால் ஒப்புக் கொள்ள இயலவில்லை. இறைமை தனியே இருந்து அதன்பிறகு பிரபஞ்சம் என்ற பொருளை, இயக்கத்தைப் படைத்திருக்க முடியாது. சிந்தனை தனியே இருந்து பொருளைப் படைக்க முடியாது. பொருளும் இயக்கமும் தனித்தவையல்ல. என்றும் இயக்கத்திலிருப்பதுதான் பொருள் அல்லது பொருண்மை. இப்படி விளங்கிக் கொள்ளும் போதே அந்நியமாதல் என்பதைத் தன்னளவில் பொருள்படுத்துகிறார். மார்க்சின் ''கையெழுத்துப் படிகள்'' அந்நியமாதலை விரித்துரைக்கிறது. இங்கு சுருக்கமாகச் சொல்லலாம்.

வரலாற்றுக்கு முற்பட்ட தொன்மைக்காலத்தில் மனிதன் இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்தான். இனக்குழு என்ற சமூக வாழ்வில் சமூகத்தினுள்ளும் தனக்குள்ளும் பிளவு இல்லை. இயற்கை, சமூகம், தான் என்பன ஒன்றியிருந்தன. வரலாற்றுக்குள் வரும்பொழுது அதாவது

தனியுடமை, அரசதிகாரம், குடும்பம் என்ற சூழலுக்குள் வரும்பொழுது, மனிதன் இயற்கையிலிருந்தும் சமூகத்திலிருந்தும் அப்புறம் தன்னிடமிருந்தும் அந்நியமாகிறான். இயற்கை ஒரு சிலருக்குத் தனியுடமையாகிறது. சமூகத்தினுள் ஏற்றத்தாழ்வுகள், வர்க்க வேறுபாடுகள் தோன்றுகின்றன. சமூகம் பிளவுபடுகிறது. மனிதர்களுக்கிடையில் போட்டி, பொறாமை, ஆதிக்கம், அடிமைத்தனம், போர்கள் ஏற்படுகின்றன. தன் வாழ்வே தனக்குப் புரியவில்லை. துயரங்கள் தனக்கு எங்கிருந்து வருகின்றன என்பது தெரிவதில்லை. துயரங்கள் எப்பொழுது தீரும், யார் தீர்ப்பார் என்ற சிந்தனை மனிதனை ஆட்கொள்கிறது. இப்படி அவன் தனக்குள் பிளவுபட்டு, தனக்குத்தானே அந்நியமாகிறான். இதன் பிறகுதான் இறைவன், ஆன்மா, மேலுலகம், புண்ணியம், பாவம் முதலிய சமய இயக்கத்துக்குள் மறைகிறான். எனினும் இவன் முழு அளவில் தன்னுணர்வை இழப்பதில்லை. தன்னுணர்வை இவனால் இழக்கவும் முடியாது. மீண்டும் தன்னைத், தனக்கான சமூகத்தைத், தனக்கான இயற்கையைத், தனக்கான உலகத்தைப் பெறப்போராடுகிறான். இயற்கையை வசப்படுத்திக் கொண்டதோடு மனிதர்களுக்குள், பிளவு ஏற்படுத்தி, அவர்களைக் கொண்டே சமூகத்தில் தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்பவர், இவனுக்கு விடுதலை வழங்குவதில்லை. இவன் போராடுகிறான். போராட்டத்தில் பலமுறை தோற்றாலும் தன்னை மீண்டும் மீண்டும் புதுப்பித்துக் கொள்கிறான். இடையிடையே தன்னைப் பொருளுக்குள்ளும் சமயம் முதலிய பிரமைகளுக்குள்ளும் இழந்து அவற்றையே தனக்கான வாழ்வு என்று, கருதினாலும் அத்தகைய வாழ்வும் அடிமைத்தனத்தின் இன்னொரு வடிவம் என்பதைப் புரிந்துகொண்டு, பிரமைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள மீண்டும் போராடுகிறான். இறுதியில் தனக்கான உலகைப் பெறுகிறான்.

இந்தப்புதிய உலகத்தில் ஏற்றத்தாழ்வுகள் இல்லை. ஆதிக்கங்கள் இல்லை. இனக்குழுச் சமூகத்திலிருந்து அந்நியமாகி விலகி வந்தவன் இப்பொழுது மீண்டும் ஓர் உயரிய நிலையில் அனைத்து மனிதர்க்கிடையிலும் சமத்துவமும் சமதர்மமும் நிலவக்கூடிய வாழ்வைப் பெறுகிறான். இப்பொழுது அவனுக்குள் அந்நியமாதல் இல்லை. இனி அவனுக்கு இறைவனில்லை. சமயங்கள் இல்லை. இவன் சுதந்தரமானவன். தன்னைத்தானே நிர்வாகம் செய்து கொள்ளக்கூடியவன். இப்பொழுது அரசு இல்லை. தனியுடமை இல்லை.

இப்படித்தான் மார்க்சு வரலாற்றை, சமூக வாழ்வை விளக்குகிறார். சமதர்மம்தான் வாழ்வின் பேரறம். இதற்காகப் போராடுவதுதான் வாழ்வின் பேரழகு. தனக்கென எதுவும் வைத்துக் கொள்ளாமல், தனக்குள் வரலாற்றையும், சமூகத்தையும் இயற்கையையும் கண்டு, அறிந்து, உணர்ந்து இவை அனைத்தையும் உள்ளடக்கிய பிரபஞ்சம் என்னும் பேரியக்கத்தில் தன்னைக் கரைத்துக் கொள்வதுதான் வாழ்வின் மெய்யியல். போராட்டம் இல்லாமல் வாழ்க்கை இல்லை. போராட்டத்தின் போதுதான் மனிதன் தனக்குள் சமூகத்தை, வரலாற்றைச் செரித்துக் கொள்கிறான். இவன் சமூக மனிதன். தனி மனிதனுக்குள் இயக்கமில்லை. வரலாற்று இயக்கம் இவனுக்குள் இல்லை. வாழ்வின் நிறைவு இவனுக்கு இல்லை. இவனுக்குள் இசை இல்லை. கலை இல்லை. இலக்கியமில்லை. வரலாற்றையும் சமூகத்தையும் இயற்கையையும் இவற்றின் பேரியக்கத்தையும் தனக்குள் தாங்கியுள்ள மனிதன் நிறைவான மனிதன். இவனுக்கு உடமை தேவையில்லை. அதிகாரம் தேவையில்லை. இவன் அன்பு மயமானவன். இவன் பேரறிவாளன். வரலாறு நெடுகிலும் வாழ்ந்த சாக்ரடீஸ், புத்தர், இயேசு, வள்ளுவர் முதலிய ஞானிகளை இவனுக்குள் காண முடியும். அவர்கள் இவனுக்குள் நிறைவாகின்றனர். வரலாறு முழுவதும் மனிதன் கண்ட கனவுகள் இவனுக்குள் நனவாகின்றன.

மார்க்சியத்தின் ஆய்வுமுறை ஒன்று பற்றி இங்குக் கூடுதலாகச் சொல்ல வேண்டும். ஹெகலின் மெய்யியல் ஒருவகையில் மதச்சார்புக்கு நெருக்கமான கருத்து முதல்வாத மெய்யியல். கருத்து முதலியல் என்பதையும் பொருள் முதலியல் என்பதையும் வேறுபடுத்திப் பார்க்கிற சில மார்க்சியர் இவ்விரண்டும் முரண்பட்டவை, இவற்றிற்கு இடையில் உறவு இல்லை என்று சொல்லுகின்றனர். கூர்ந்து பார்த்தால் இப்படிச் சொல்வது பொருத்தமில்லை.

ஹெகலிடமிருந்துதான் அந்நியமாதலை மார்க்சு எடுத்துக் கொள்கிறார். பிரபஞ்சம் மற்றும் உயிர்களின் பரிணாமம் பற்றி ஹெகலுக்கு நம்பிக்கை இருக்கிறது. பரிணாமக் கொள்கை மார்க்சியருக்கும் உடன்பாடான கொள்கைதான். இவ்வகையில் ஹெகலுக்கும் மார்க்சுக்குமிடையில் ஒத்த கூறுகள் இருப்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

ஆனால் ஹெகலிடமிருந்து மார்க்சு எங்கே வேறுபடுகிறார் என்பதை நாம் பார்க்க வேண்டும். ஹெகலை மார்க்சு தலைகீழாகப்

புரட்டினார் என்று சொல்வதில் உண்மையிருக்கிறது. பிரபஞ்சத்தைப் படைப்பதற்கு முன்பு பேரிறை தனியே இருந்தது என்பது உண்மையில்லை. வழக்கமாக இறைவன் பிரபஞ்சத்தை உலகைப் படைத்தான் என்று நம்மவர் நம்புகின்றனர். ஹெகலின் பேரிறை என்பதும் இக்கருத்துத்தான். அதாவது மண்பானையை வனைய குயவன் வேண்டும் என்று தர்க்கம் தொடங்கி இறுதியில் உயிர்களையும் பிரபஞ்சத்தையும் படைக்க ஒருவன் இவற்றுக்கு முன்பே இருந்திருக்க வேண்டும் என்று பேசுவதும் தர்க்கமின்றி வேறில்லை. தனியே இருந்து படைக்கும் அவனைப் படைப்பதற்கும் இன்னொருவன் வேண்டும் என்று இதே தர்க்கத்தை நீட்டும் பொழுது தர்க்கம் சிதைந்து விடுகிறது.

பிரபஞ்சம் என்றைக்கும் ஏதோ ஒரு வடிவில் இயங்குகிறது என்ற பொருள்முதலியல் கருத்துத்தான் இங்கு வெற்றி பெறுகிறது. இம்முறையில் பேரிறை என்ற கருத்தும் உண்மையில்லை. பேரிறை என்பதும் சிந்தனை அல்லது மனம் என்பதைத் தவிர வேறில்லை. சிந்தனை அல்லது மனம் தனியே இருக்க முடியாது/ செயல்பட முடியாது. கருத்து முதலியலாளரைப் பொறுத்தவரை சிந்தனை அல்லது மனம்தான், உலகை, பொருளைப் படைக்கிறது என்று கூறுகிறார்கள். இது எந்த அளவுக்கு உண்மை அல்லது உண்மையில்லை என்பது பற்றி விவாதிக்க இங்கு இடமில்லை. ஹெகலின் கருத்தியலின் உள்ளியக்கத்தை மார்க்சு எடுத்துக் கொள்கிறார். பிரபஞ்சம் தொடங்கி மனிதன் வரையிலான பரிணாமத்தை மார்க்சு ஏற்கிறார். ஹெகலின் அந்நியமாதல், கருத்து முதலியல். இதனைப் பொருள் முதலியலாக மார்க்சு பொருள்படுத்துகிறார். பொருளின் இயக்கம்தான் ஹெகலுக்கு இறையின் இயக்கமாகத் தெரிந்திருக்கிறது.

ஹெகல் மேலும் ஒரு தவறைச் செய்திருக்கிறார். ஜெர்மானியனுக்குள் வந்துதான் பேரிறை மீண்டும் தன்னைக் கண்டு கொள்கிறது. அதாவது இறையின் இயக்கம் முற்றுப் பெறுகிறது என்று காண்கிறார் ஹெகல். இயக்கத்திற்கு முடிவில்லை. இதுவும் பரிணாமக் கொள்கை. ஹெகலின் இறை என்பதற்கும் மீண்டும் மாற்றம் மற்றும் வளர்ச்சி இருந்தாக வேண்டும். ஹெகலுக்கும் இது தெரியும். ஜெர்மானியப் பேரரசு நிறைவான ஓர் அரசாக இருக்க முடியாது. அதுவும் மாறும். ஜெர்மானியப் பேரரசன் கெய்சருக்கும் அவனது ஆட்சிக்கும் மாற்றம் உண்டு. முடிவும் உண்டு. ஹெகலால் இப்படி வெளிப்படையாகச் சொல்ல முடியவில்லை. அரசின் அதிகாரம் அவரது வாயை அடைத்தது. ஹெகல்

அரசுக்குக் கட்டுப்பட்டிருக்கலாம். மார்க்சால் கட்டுப்படமுடியாது. மார்க்சின் கோட்பாடு பொருள் முதலியல் மட்டுமல்ல. இயங்கியலும் ஆகும்.

ஹெகலை மார்க்ஸ் தலைகீழாகப் புரட்டினாரேயொழிய ஹெகலை முற்றாக மறுத்துவிடவில்லை. ஹெகலுக்குள்ளிருந்த ஹெகலுக்குள் மறைந்திருந்த பொருளியலை – பொருள் முதலியலை மார்க்சு மீட்டுக் கொள்கிறார். லெனின் விளக்கியபடி எந்த ஒரு கருத்து முதலியலும் முற்றான பொய்யில்லை. உண்மை என்பதன் ஒரு சிறு பகுதியை முழுமைப்படுத்திப் பார்ப்பது கருத்து முதலியல். ஆகவே கருத்து முதலியலுக்குள் இருக்கிற சிறிய அளவினதாயினும் அந்தச் சிறு பகுதியாகிய பொருளியலை மீட்டுக் கொள்ள வேண்டும். மீட்ட பிறகு, அதை இழந்த கருத்து முதலியலுக்கு இனி உயிர்ப்பில்லை. இந்தச் சிறுபகுதி தனக்குள் இருக்கும்வரை அதன் ஆர்ப்பாட்டத்தை நம்மால் முற்றாக மறுக்க முடியாது.

லெனின் தன் ''மெய்யியல் குறிப்பேடுகளில்'' குறிப்பிட்டுள்ள ஒரு கருத்துரையை ஆய்வாளர் துரையும் குறிப்பிடுகிறார். லெனின் கூற்று: ''மெய்யியல் வகைப்பட்ட கருத்து முதலியலை, இயந்திர வகையிலான பொருள் முதலியல் ஒருக்காலும் வெல்ல முடியாது''. இது மார்க்சியத்தின் வளமான இயங்கியல் பார்வை. இந்தப் பார்வையின் அடிப்படையில் கருத்து முதலியலையும் பொருள் முதலியலையும் முற்றான எதிர்நிலையில் நிறுத்த முடியாது. மார்க்சியப் பாடநூலில் இப்படி ஒரு தெளிவு கிடைக்காது.

இங்கு இன்னொரு உண்மையையும் நாம் குறிப்பிட வேண்டும். ஹெகலின் பேரிறைமை என்ற கருத்து இந்தியாவில் சங்கரர் முன் வைத்த பிரம்மம் என்ற கருத்தன்றி வேறில்லை. இந்தியச் சிந்தனைக்குக் ஹெகல் கடன்பட்டிருக்கிறார். ஹெகலைப் புரட்டி அவருக்குள் இருந்த உண்மையை மார்க்சு தன் வயமாக்கிக் கொண்டது போல இந்தியாவில் நெடுங்காலமாக நிலவிவருகிற பல்வேறு மதங்களாகிய கருத்து முதலியல்களை, அவற்றுக்குள் நுழைந்து அங்கங்கே உள்ள பொருள் முதலியல் கூறுகளை அவற்றிலிருந்து மீட்டுக் கொள்வதன் மூலம் மதங்களை உள்ளீடற்றதாகச் செய்வதோடு பொருள் முதலியல் பார்வையையும் செழுமைப்படுத்த முடியும். இதை நம்மவர் செய்யவில்லை.

அறிஞர் குணா மட்டுமே இதில் விதி விலக்கானவர். மற்றவர்கள் மதம் என்பது முற்றிலும் பொய்மை என்று ஓயாமல் அதை அடித்தும் அதைச் சாகடிக்க முடியாமல் திணறுகிறார்கள்.

## 6. இயற்கை – இனக்குழுச் சமூகம் – கடவுள்

இத்தகைய கூடுதலான தெளிவோடுதான் சங்ககாலத்தில் நிலவிய சிலவகைக் கருத்தினங்களையும் நாம் ஆராயவேண்டும். சங்ககாலச் சமூகத்திலும் நடுகல் வணக்கம், பேய் நம்பிக்கை, நிமித்தங்கள் குறித்த நம்பிக்கை, கூற்றுவன், சிவன் முதலிய தெய்வங்கள் குறித்த நம்பிக்கை இறுதியாக யாகம், அரசனும் இறைவனுக்கு நிகரானவன், துறக்கம், மறுபிறப்பு என்றெல்லாம் நம்பிக்கைகள் பல நிலவின. இவற்றின் வழியே சமய உருவாக்கம் நிகழ முடியும். இவை பற்றியும் நமக்கு ஆய்வு தேவை.

மதங்களின் மேலடுக்கு அல்லது புறவடிவம் புரோகிதம் என்று பொதுப்படையாகச் சொல்லமுடியும். மதத்தின் அகம் அல்லது உள்ளடக்கம் என்பதை மெய்யியல் என்று குறிப்பிடலாம். புறத்தில் திரண்டிருக்கும் உள்ளீடு கூட மனிதச் சார்பிலிருந்து வேறு என்னவாக இருக்க முடியும் என்ற கேள்வியோடு நம் ஆய்வைத் தொடர முடியும். ஒருவகையில் மதத்தின் புற வடிவத்தைக் கலைத்துப்போட்டு, இவற்றினுள்ளும் அகத்தின் உள்ளிருக்கிற உள்ளீட்டுக்கு இடமுண்டா? என்ற முறையிலும் ஆய்வைத் தொடர முடியும்.

மேலடுக்கிலுள்ள கடவுள் என்ற கருத்தாக்கத்தினுள் திரண்டிருப்பவை என்னவாக இருக்க முடியும்? இனக்குழுச் சமூகத்தில் மனித வாழ்வுக்கு ஆதாரமாக இருந்தனவற்றில் ஒரு முக்கியக் கூறு இயற்கை. அந்த இயற்கை மனிதனுக்குள்ளும் ஆழமாக வேரோடியிருந்தது. இயற்கையிலிருந்து மனிதனைப் பிரித்துப் பார்க்க முடியாது. அதேபோல இனக்குழுச் சமூகத்தின் கூட்டுவாழ்வு அல்லது பொதுமைக்குள் மனிதன் இருந்தான். அவனுக்குள் பிளவு இல்லை, ஏற்றத்தாழ்வு இல்லை. சமூகம் அவனுக்குள்ளும் வேரோடியிருந்தது. உழைப்பும் பகிர்வும் அவன் வாழ்வுக்கு ஆதாரம்.

இனக்குழுச் சமூகம் தகரும் போது உடமைச் சமூகத்துக்குள் இந்த மனிதன் ஈர்க்கப்படுகிறான். இயற்கை மற்றும் பொதுமையிலிருந்து அவன் தன்னைத் துண்டித்துக் கொள்ள முடியாது. அதேசமயம் இயற்கை மற்றும் சமூக உரிமையிலிருந்து இவன் விலகிக் கொண்டும் இருக்கிறான். முன்னைய சமூகத்தின் உள்ளிருந்த வேர்களிலிருந்து இவன் தன்னை வெட்டிக் கொள்ள முடியாது. அந்த வேர்களை இன்னும் பற்றிக் கொண்டுதான் இவன் இருக்கிறான். உடமைச் சமூகத்தினுள் முற்றிலுமாக இணக்கம் காணமுடியாத நிலையில் முன்னைய சமூகத்தின் வேர்களை அவன் வெட்டிக் கொள்ளவும் முடியாது.

கடவுள் என்ற கருத்தாக்கத்தைக் கலைத்துப் பார்ப்போமானால் மாபெரும் இயற்கை என்ற சித்தரிப்பிலிருந்து கடவுளைப் பிரித்துக் காணமுடியாது. கடவுளுக்குள் ஏற்றத்தாழ்வுக்கு இடமில்லை. கடவுள் பேரன்புடையவர். எல்லோருக்கமான வாழ்வை வழங்கக்கூடியவர். அவரை நம்பியிருந்தால் எல்லாம் நலமாக முடியும். அவரே நமக்கு நெறியாகவும் விளங்குகிறார். அவரைக் கொண்டாட வேண்டும். அவரை நெஞ்சில் நிறுத்தவேண்டும். அவரோடு இணங்கியிருக்க வேண்டும்.

கடவுள் பற்றிய இத்தகைய கருத்தாக்கம் இனக்குழுச் சமூகம் என்பதன் உள்ளிருந்து தொடர்ந்தது என்பதன்றி வேறு என்னவாக இருக்க முடியும்? கடவுள் என்பது ஓர் உருவகம், இனக்குழுச் சமூகம் தன்னைவிட்டுச் செல்லுகிற நிலையில் அந்தச் சமூகத்தின் வேர்களோடு கூடிய இந்தக் கடவுள் என்னும் உருவகத்தை மனிதன் இறுக்கமாகப் பற்றிக் கொள்கிறான். இந்தக் கடவுள் மூலம் இன்றில்லாவிட்டால் இன்னொரு சமயம் அனைவருக்குமான வாழ்வு கிட்டும். உடைமைச் சமூகத்திற்குள் பிளவுபட்டுக் கொண்டிருக்கிற மனிதன் பிளவுக்குட்படாத கடவுள் என்னும் உருவகத்தைத் தனக்குள் தன் நெஞ்சில் தாங்கியிருக்கிறான். இந்தக் கடவுள் மேன்மையானவர். எல்லாம் வல்லவர். அருள் நிறைந்தவர். இவர் இப்பொழுது நம் கைக்கு எட்டவில்லை. எட்டாத தொலைவிலிருந்தாலும் இவரையன்றி நமக்கு வேறு கதியில்லை. இவரோடு இணங்கியிருப்பதே நமக்கு உயரிய வாழ்வு. உடைமைச் சமூகத்தின் துயர்களிலிருந்து வெப்பத்திலிருந்து நம்மை இவர் காப்பார். நமக்குத் தேவையான அந்த உன்னத வாழ்வை, துறக்க வாழ்வை, இன்ப உலகத்தை நமக்கு இவர் வழங்குவார்.

இப்படித்தான் கடவுள் என்னும் கருத்தாக்கம் மனிதர்களைத் தனக்குள் கட்டிப் போட்டிருக்க முடியும். இயற்கையோடுதான் இந்தக் கடவுள் இருக்கிறார். மனிதர்களை வாழ்விப்பது மண்ணும் நீரும் கதிரவனும் காற்றும் நெருப்பும் தாவரங்களும் பிற உயிரினங்களும். இவற்றோடு தான் மனிதன் வாழ்கிறான். இவைதான் இவன் உடம்பையும் உயிரையும் தாங்குகின்றன. இயற்கை எல்லையில்லாதது. பேராற்றலுடையது. கடவுள் என்னும் உருவகத்திற்குள் இயற்கையின் இயக்கம் அடங்கியிருக்கிறது. இயற்கை, இயற்கையோடு இருக்கிற, இயற்கைக்குள் இருக்கிற கடவுள் நம்மைக் காப்பாற்றுவார்.

கடவுள் என்னும் கருத்தாக்கம் இப்படித்தான் தோன்றி ஆற்றல்மிக்கதாகச் சமூகத்திற்குள், வரலாற்றுக்குள் வளர்ந்தது. இதன்

தோற்றம், மற்றும் வளர்ச்சி, இன்று நமக்குப் புரிவது போல அந்தப் பழங்காலத்தில் மக்களுக்குப் புரியவில்லை. புரிந்து கொள்வதற்கான வாய்ப்பில்லை. கடவுள் என்னும் இந்தக் கருவியைக் கைப்பற்றிக் கொண்டவர்கள், இதைத் தம் தேவைக்காகப் பெரிய அளவில் பயன்படுத்திக் கொள்ள முடியும். அரசன் இல்லாமல் நாம் வாழ முடியாது. அரசன் நம்மைக் காப்பாற்றுகிறான் என்று சொல்லி அரசனுக்கும் கடவுளுக்கும் முடிச்சுப் போட முடியும். கடவுள் எனக்குள்ளும் இருக்கிறார் என்ற உண்மையைப் பற்றிய உணர்வோடு கடவுள் எனக்குள் தான் இருக்கிறார், கடவுளைப் பற்றி நானே அறிவேன் என்று சொல்லும் புரோகிதன் தோன்ற முடியும். கடவுள் தூய்மையானவர், உனக்குள் இருக்க முடியாது என்று சிலரைக் கீழிறக்கிப் பேசமுடியும். அரசனிடம், நிலக்கிழாரிடம், முதலாளியிடம் விசுவாசமாக இருக்கிற அளவுக்கு அவர் நம்மைக் காப்பாற்றுவார். அவர்கள் என்ன தீங்கு செய்தாலும் நமக்கு அவர்கள் தாய் தந்தையர் போன்றவர்கள். அவர்கள் அன்பில்தான் நாம் வாழமுடியும். ஆகவே அவர்களை நாம் ஐயுறக்கூடாது. இப்படியெல்லாம் கடவுளுக்கும் அதிகாரத்துக்கும், கடவுளுக்கும் செல்வத்துக்கும், கடவுளுக்கும் நீண்ட ஆயுளுக்கும் திறமையாக முடிச்சுப் போடமுடியும். இத்தகைய புரோகிதர்களைப் பெரும்பொருள் கொடுத்து அரசன் ஆதரிப்பதில் வியப்பில்லை.

தமிழ்ச் சமூகத்திலும் இப்படித்தான் நடந்திருக்க முடியும். இனக்குழுச்சமூகத்தில் நடுகல்லாக நின்ற தலைவன் மக்களின் வணக்கத்திற்கு உரியவன். இத்தகைய தலைவர்கள் சமூகத்தைத் தாங்கியவர், காப்பாற்றியவர். இவர்களை வழிபடுவது அடுத்துவரும் தலைமுறைகளுக்கு உணர்வு தரும், ஊக்கம் தரும். நடுகல் என்பது இவர்களுக்கான உருவம், உருவகம். வெயிலும் மழையும் தாக்காதிருக்க நடுகல்லுக்கு ஒரு கூரை போடலாம். இப்படிச் சிறிய அளவில் உருவாகும் கோவில் நாளடைவில் பெரிய அளவிலான கோவிலாகும். வழிபாடும் தேவைப்படுகிறது. பலியிடல் முதலியவை வந்து விடுகின்றன.

இப்படித்தான் சமயம் மக்கள் மத்தியில் உருவாகி நாளடைவில் புரோகிதர் மற்றும் ஆளும் வர்க்கத்தின் கருவியாகி, மக்கள் மேல் ஆதிக்கமாகி, தன் உருவாக்கம் பற்றிய வரலாற்று அறிவை மறைத்து, தானும் மறந்து, சமயம் இல்லாமல் மனித வாழ்க்கை இல்லை என்ற நிலை தோன்றி விடுகிறது. தமிழ்ச் சமயங்கள் இந்த வரலாற்றுக்கு விதி

விலக்காக இல்லை. சங்க காலத்தில் நடுகல் வணக்கத்தையும் காண்கிறோம். முருகன், சிவன், பெருமாள், இந்திரன் முதலிய கடவுளரையும் காண்கிறோம். அந்தணர் வளர்க்கும் வேள்விகளையும் காண்கிறோம். இவற்றின் வழியே தமிழ்ச் சமூகம் என்ன ஆயிற்று என்பதையும் நாம் காணமுடியும்.

## 7. இருவேறு உலகம் இடையில் சான்றோர்

இனக்குழுச் சமூகம் அழிந்து தனியுடமைச் சமூகம் வலுப்பெற்ற காலம் சங்ககாலம் என்ற நம்பிக்கையோடு நாம் சங்க இலக்கியத்தில் மெய்யியல் உணர்வு மிக்க கவிதைகளைக் கொண்ட புறநானூற்றுக் கவிதைகளைப் பார்த்து வருகிறோம். இந்த நோக்கில் புறநானூற்றிலிருந்து ஒரு சில கவிதைகளை மட்டும் இந்தக் கட்டுரையில் ஆராய்வோம்.

இனக்குழுச் சமூகத்தில் மக்கள் அனைவரும் ஒன்றி வாழ்ந்தனர் – ஒரு மனிதராய் வாழ்ந்தனர். ஓர் ஊரில் ஒரு குடும்பத்தில் திருமணம் என்றால் ஊரெல்லாம் அந்த விழாவைக் கொண்டாடும். அதே போல ஒரு குடும்பத்தில் சாவு என்றால் ஊர் முழுவதும் அந்தச் சோகத்தில் மூழ்கியிருக்கும். உடமைச் சமூகத்தின் ஆதிக்கம் வரவர சமூகம் பிளவுபடுகிறது. அந்த ஊரில் ஒரே தெருவில் ஒரு வீட்டில் மணப்பறை. இன்னொரு வீட்டில் சாப்பறை. இனக்குழுச் சமூகத்தின் உறவில் ஊறி வந்த சான்றோர் இதைப் பொறுக்க முடியாது. உலகம் ஏன் இப்படி மாறியது? என்பது அவருக்குள் எழும் கேள்வி. மாறியது என்ற உண்மை அவரை உறுத்துகிறது. காரணம் அவருக்குப் புலப்படவில்லை. நமக்குப் புரிகிறது. இடைக்காலத்தில் வரலாற்று அறிவு நமக்குள் வளர்ந்திருக்கிறது. அந்தச் சான்றோர் வரலாற்றுச் சூழலுக்குள் கட்டுப்பட்டவர்கள். ஏன் இப்படி என்று தடுமாறுகிறார்கள். இப்படி இந்தச் சமூகத்தைத் தகர்த்தவர் யார்? கடவுள் என்று சிலர் அக்காலத்தில் கூறத் தொடங்கியிருந்தனர். இப்படிச் சமூகத்தைப் படைத்தவன் பண்பற்றவன் என அவர் சாடுகிறார். முன்பு இனியதாக இருந்த இந்தச் சமூகம் இப்பொழுது கொடியதாக மாறியிருக்கிறது. வருந்திக் கொண்டே வாழமுடியாது. இன்னாதது இந்த வாழ்வுக்குள் வந்துவிட்ட போதிலும் நாம் இன்னாதவராக மாற முடியாது. அப்படி மாறுவது உலகை மேலும் இன்னாதது ஆக்கும். ஆகவே இனியது செய்வது நம் கடன்.

'ஓர் இல் நெய்தல் கறங்க' என்று தொடங்கும் (புறம் – 194) பாடல் எழுதியவர் பக்குடுக்கை நன்கணியார். இந்தியாவில்

அணுக்கொள்கை அடிப்படையில் உருவான ஆசிவகமெய்யியல் வகுத்த முதல்வர் இவரென, இவரைப் பற்றி ஆய்ந்து கண்டவர் பேராசிரியர் நெடுஞ்செழியன்.

சமூகம் இப்படி பிளவுபட்டுவிட்டது என்ற உண்மையை இனி மறுக்கமுடியாது. சமூகத்தில் பிளவு காரணமாக நமக்குள் பிளவு ஏற்படுவதையும் ஏற்கமுடியாது. சான்றோர் தமக்குள் வளர்த்துக் கொள்ளும் நற்பண்பு இத்தகையதாகத்தான் இருக்கமுடியும். காரணம் (அக்காலத்தில்) புரியவில்லை. இதை விதி என்று சிலர் கூறத் தொடங்கினர். வரலாற்றின் வழியே அறிவுபெற்ற நமக்கு இது சமுதாய விதி என்று புலப்படுகிறது. சமூகத்தில் ஏற்பட்ட இந்தப்பிளவு அன்று மிகக் கடுமையானதாகத்தான் இருந்திருக்க வேண்டும். உடமையின் ஆதிக்கம் சமூகத்தை இப்படிக் கடுமையாகத் தாக்கிப் பிளக்கிறது.

நாம் அனைவரும் அறிந்த 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' (புறம் – 192) என்ற கணியன் பூங்குன்றனின் பாடலைக் கொஞ்சம் பார்த்துக் கொள்வோம். மின்னல் வெட்டி, இடி இடித்து, மழை பெய்கிறது. மலை முகட்டிலிருந்து அருவி கொட்டுகிறது. பாறைகளை உருட்டிக் கொண்டு வெள்ளம் பாய்கிறது. வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்ட ஒரு தெப்பம் (புணை) வெள்ளத்தில் அங்கும் இங்கும் இழுபடுகிறது. வெள்ளம் இந்தத் தெப்பத்தை ஒரு சமயம் மேட்டில் தள்ளுகிறது. இன்னொரு சமயம் பள்ளத்தில் தெப்பம் இழுபடுகிறது.

இப்படி ஆற்று வெள்ளத்தில் தெப்பத்தின் கதி பற்றிக் கணியன் பேசுகிறார். தெப்பம் மேட்டில் ஒரு சமயம், இன்னொரு சமயம் பள்ளத்தில். இப்படித்தான் இந்தச் சமூகம் சிலரை உயரத்தில் வைக்கிறது. சிலரைப் பள்ளத்தில் வீழ்த்துகிறது. உயரத்திலிருப்பவர் பெரியவர். பள்ளத்தில் கிடப்பவர் சிறியவர். சிலர் உயரத்திலிருப்பதற்கும் சிலர் பள்ளத்திலிருப்பதற்கும் அவரவர் காரணமில்லை. ஆகவே பெரியோரைப் பெரிய மனிதரை நாம் வியந்து பாராட்ட முடியாது. சிறியவரை இகழவும் முடியாது. இப்பொழுது உயரத்திலிருப்பவர் இன்னொரு சமயம் பள்ளத்தில் விழலாம். இப்பொழுது கீழே இருப்பவர் இன்னொரு சமயம் மேலே செல்லலாம். இப்படித்தான் விதி (சமுதாயவிதி) ஊழ் செயல்படுகிறது.

இத்தகைய பார்வை வளமான பார்வை. கவிஞர் ஒரு சான்றோர். வேறுவகையில் இவரால் சிந்திக்கமுடியாது. நடுவு நிலையிலிருந்து சான்றோர் கீழிறங்க முடியாது. சிலர் மன்னராகிவிட்டனர். சிலர் குற்றவாளி

ஆகிவிட்டனர். இதற்காக நோகமுடியாது. இப்படிச் செல்லுகிறது கவிஞரின் பார்வை.

விதி நம்பிக்கை இப்படித்தான் நம் சமூகத்தில் நுழைந்திருக்கிறது. விதி என்பதன் உள்ளியக்கம் என்ன என்பது நமக்கு இன்று புரிகிறது. இனக்குழுச் சமூகம் தகர்ந்து, உடைமைச் சமூகம் ஆதிக்கத்திற்கு வரும்பொழுது இத்தகைய சிந்தனை உள் நுழைகிறது. மெல்ல மெல்ல இந்தச் சிந்தனை வலுப்பெறுகிறது. இந்தச் சிந்தனையைக் கொண்டு வந்தவர் யார்? இவரைச் சமணர் என்று நாம் கூறுகிறோம். சரிதானா? சிந்திப்போம்.

சமூக வாழ்வுக்குள் வந்துவிட்ட இந்த விதி சிலருக்குச் சாதகமாகவும் பலருக்குப் பாதகமாகவும் மாறி வருகிறது. வாய்ப்புக் கிடைத்தவர் கூடியவரை அதிக அளவில் பறித்துக் கொள்ளலாம். பலரை வறியவராக்கலாம். கிடைத்ததைத் தாமே உண்டு மகிழலாம். பிறர் பசியால் வருந்த, தாமே உண்டு மகிழலாம். இதுதான் விதி என்றால் திருடலாம். கொள்ளையடிக்கலாம். எதுவும் செய்யலாம். இப்படிச் செய்பவர்களும் சமூகத்திற்குள் வந்து விட்டனர். இத்தகைய போக்கைச் சான்றோர் ஏற்க முடியாது. இத்தகைய போக்கு நியாயம் என்றும் பேசமுடியாது. இவர்களாவது இந்த உலகியல் வாழ்வைத் தாங்கியாக வேண்டும். காப்பாற்றியாக வேண்டும். இப்படி இவர்கள் செய்வதன் மூலமே உலகைக் காப்பாற்ற முடியும். பிறர் போல பழிக்கு அஞ்சாமல் இவர்கள் வாழ முடியாது. பழியோடு வருவது உலகமே என்றாலும் இவர்கள் ஏற்கமாட்டார்கள். உலகைக் காக்க இவர்கள் உயிர் விடுவார்கள். இப்படிச் செய்யும் சான்றோர் இன்னும் இருப்பதனால் தான் வாழ்வின் மீது, உலகின் மீது, மக்களுக்கு இன்னும் நம்பிக்கை இருக்கிறது.

'உண்டால் அம்ம', (புறம்-182) என்ற அற்புதமான பாடலை பாடியவரைப் பற்றி நமக்கு இப்பொழுது நினைவு வரலாம். கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி என்ற சான்றோர் இவர். 'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்' என்று வள்ளுவரும் பாடியிருக்கிறார். எல்லோரும் தமக்குள் முரண்பட்டு வம்பும் வழக்கும் செய்து திருடியும், கொலையும் செய்துகொண்டே இருப்பார்களென்றால் வாழ்வின்மீது யார்தான் நம்பிக்கை கொள்ளமுடியும்? பண்பாட்டை யார் மதிக்கமுடியும்?

## 8. நிலமும் நீரும் இனி உயிரில்லை:

மன்னன் இந்தச் சமூகத்திற்குள் வந்துவிட்டான். சமூகத்திற்குள் இவன் இப்பொழுதுதான் வந்திருக்கிறான். இவன் ஆட்சி செய்கிறான். இவன் தன் நிலப் பகுதியைக் காப்பாற்றுகிறான். இவன் கொடியவனில்லை. நில எல்லை அதிகரிக்கும் போது, இவனும் பெரிய படையைத் திரட்டிக் கொள்ளும் போது, இவனுக்கும் ஆதிக்க வெறி பிடிக்கும் போது, நாடு நாடாக இருக்காது.

இனக்குழுச் சமூகத்தில் அல்லது இனக்குழுச் சமூகம் இன்னும் நொறுங்காத கால அளவில் நெல்லும் நீரும் மக்களின் உயிரைக்காப்பாற்றின. தம் உழைப்புக்குத் தாமே உரிமை உடையவராய் மக்கள் இருந்தனர். வாழ்க்கை இன்னும் இவர்கள் வசத்தில்தான் இருந்தது. இவர்களிடமிருந்து யாரும் இவர்கள் நெல்லையோ, நீரையோ, வாழ்வையோ அபகரித்துக் கொள்ளவில்லை.

காலம் மாறுகிறது. இவர்களிடமிருந்து நிலத்தையும் நீரையும் கூடவே நெல்லையும் பறித்துக் கொள்பவர் தொலைவிலிருந்து வந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் இந்த மக்களின் தலைவன் – மன்னர் நிலைக்கு உயர்ந்தவன், இவர்களின் நிலத்தைக் காப்பாற்றுகிறான். நெல்லையும் நீரையும் பிறர் அபகரிக்காமல் இவன் காப்பாற்றுகிறான். இப்பொழுது இவன்தான் மக்களுக்கு உயிராகிறான்.

மோசிகீரனார் பாடுகிறார். (புறம்:186) ''நெல்லும் உயிரன்று நீரும் உயிர் அன்று மலர் தலை உலகத்திற்கு மன்னன்தான் உயிர்'' கவிஞர் மேலும் சொல்லுகிறார். இத்தகைய அறிவு மன்னனுக்கு வேண்டும். வேற்படையோடு கூடிய மன்னன் இதை அறிந்து கொள்வது அவனுக்குக் கடமை என்கிறார். கவிஞர் மன்னனுக்கு அறிவுறுத்துகிறாரா? அல்லது மன்னனை எச்சரிக்கிறாரா? படை வலிமை போதாது, மக்கள் ஆதரவு தேவை என்கிறார். உண்மையில் நெல் இல்லாமல், நீர் இல்லாமல் மக்கள் வாழ முடியாது. அதே சமயம் மன்னன் கொடியவன் என்றால் மக்களுக்கு நெல்லும் இல்லை. நீரும் இல்லை. மன்னன் கொடியவனாகித் தன் அதிகாரிகளைக் கொண்டு வரி வசூல் என்ற பெயரில் மக்களைத் துன்புறுத்துவன் என்றால், இன்னொரு கவிஞர் பாடியது போல (புறம்:184) ''யானை புக்க புலம் போல தானும் உண்ணான் உலகமும் கெடும்''.

நாம் அறிந்த இன்னொரு பாடல் ஔவையார் பாடியது. (புறம்:187) ''நிலம் நாடாக இருக்கலாம். அல்லது காடாக இருக்கலாம். பள்ளமாக இருக்கலாம் அல்லது மேடாக இருக்கலாம்''. இதற்கு என்ன பொருள்? குறிஞ்சியாக இருக்கலாம். முல்லையாக இருக்கலாம். நெய்தலாக இருக்கலாம். அல்லது மருதமாக இருக்கலாம். நிலம் வளமாக இருந்தால் போதுமா? நிலத்தில் வாழ்வதற்கு மட்டுமல்ல நிலத்தை நிர்வாகம் செய்வதற்கும், நிலத்தை ஆள்வதற்கும் கூட மன்னர் வந்துவிட்டனர். முன்பெல்லாம் இதில் சிக்கல் எதுவுமில்லை. குறிஞ்சியோ பிற நிலமோ யாரும் குறுக்கே வரவில்லை. காட்டில் வேட்டையாடலாம். முல்லை நிலத்தில் ஆடுமாடு மேய்க்கலாம். நெய்தலில் மீன் பிடிக்கலாம். மருத நிலத்தில் பயிரிடலாம். வாழ்க்கை இயல்பாக நடந்தது. இப்பொழுது எல்லாமே மாறிக் கொண்டிருக்கிறது. இடையில் புகுந்தவர் அங்கங்கே அபகரித்துக் கொள்கின்றனர். அவர்களும் உள்ளே வந்து தங்கி, உழைத்து வாழ வாய்ப்பு இருந்தபோதிலும் அவர்கள் இப்படிச் செய்வதில்லை. நிலம் இருந்தும் பயனில்லை. தம் உழைப்பைத் தாமே துய்க்க முடியவில்லை. உள்ளே வந்தவர் நல்லவர் என்றால் எல்லோரும் நலமாக வாழமுடியும். நாடு நாடாக இருக்கும். சிலர் நல்லவராக இருக்கின்றனர். சிலர் அப்படி இல்லை. இது இப்பொழுது வந்த சிக்கல். உள்ளே வந்தவன் மன்னன். கூட அவன் அதிகாரிகள். இவர்கள் ஆடவர் – ஆண்மக்கள். ஆணாதிக்க உணர்வோடும் வந்திருக்கின்றனர். இவர்கள் பெண்களை மதிப்பதில்லை. பெண் கூடுதலாக உழைக்க வேண்டும். ஆண் அதிகாரம் செய்யலாம்.

இப்படியெல்லாம் இந்தப் பாடலைப் பொருள்படுத்தலாமா? இப்படிப் பொருள்படுத்துவதற்கான வாய்ப்பு பாடலுக்குள் இல்லை. ஆனால் பாடலுக்கு வெளியே இருக்கிறது. முரண்பட்ட சமூகச்சூழலைப் பின்புலத்தில் வைத்துப் பாடலை நாம் வாசிக்கிறோம். இது நவீன வாசிப்பு முறை. முன்பு நமக்குத் தெரியாத வரலாற்றுப் புரிதலோடு இன்று நாம் இப்படி வாசிக்கிறோம். உண்மையில் சங்க இலக்கியத்தைச் சரியாக வாசிக்கிற அறிவுடமை இக்காலத்தில்தான் நமக்கு வாய்த்திருக்கிறது. அதுவும் மார்க்சியம் அறிந்ததால் இப்படி வாசிக்கிறோம். மேலும் ஒரு பாடல். பாடியவர் மதுரைக் கணக்காயனார் மகன் நக்கீரனார் (புறம்:189)

இந்த நில உலகம் மக்கள் அனைவருக்கும் பொதுவானது. அனைவரும் வாழ, உழைக்க, பிழைக்க இந்த உலகம் இடம் தருகிறது. இப்படி மக்கள் வாழ்வதைப் பொறுக்க முடியாமல் கடல் சூழ்ந்த இந்த

உலகம் முழுவதும் தனக்கே உரிமையுடையதாக இருக்க வேண்டும் என்று சிலர் மன்னரென வந்துவிட்டனர். நாட்டில் இவர்கள் ஒரு புறம். இன்னொரு புறத்தில் காட்டில் வாழும் வேடர்கள். இரவு, பகல் என்று பாராமல், உண்ணாமல் உறங்காமல் விலங்குகளைத் தேடி வேட்டையாட இவர்கள் திரிகின்றனர். இவர்களுக்குக் கல்வி அறிவு இல்லை. நாகரிகம் இல்லை.

இப்படிச் சமூகத்தில் ஒருவர் உயர்நிலையில். பலர் கீழ் நிலையில். ஒருவர் உழைக்க வேண்டியதில்லை. பலர் உழைக்க வேண்டும். உணவுக்காக இரவு பகல் என்று பாராமல் உழைக்க வேண்டும். இப்படிச் சமூகத்தில் வேறுபாடுகள், பிளவுகள் வந்துவிட்டன. சிலர் செல்வத்தில் மிதக்கின்றனர். பலர் வறுமையில் வாடுகின்றனர். இவர்களுக்கு இடையில் இப்படி வேற்றுமை இருந்தபோதிலும் 'உண்ண இவர்களுக்கு நாழி உணவு போதும்' உடுக்க இரண்டு ஆடைகள் போதும். வேறு தேவைகள் இல்லை. இவற்றை அனைவரும் எளிதாகப் பெற்ற வாழமுடியும். ஆனால் இப்படி நடைபெறுவதில்லை.

இவற்றையெல்லாம் பார்த்த நக்கீரர் சொல்லுகிறார். செல்வம் சேர்த்து என்ன பயன்? உலகை வளைத்து என்ன பயன்? தம்மிடம் செல்வம் சேருமென்றால், தானே அதை முழுமையாய்த் துய்க்க முடியுமா? பலரோடு பகிர்ந்து கொண்டால் என்ன குறைந்து விடும்? ஒரு சிலர் தம்மிடம் சேர்ந்த செல்வத்தைத் தாமே முடக்கி வைத்துத் துய்ப்பதனால் எத்தனை தவறுகள் இங்கு நேருகின்றன? செல்வத்தை வைத்திருப்பவர்கள் நிம்மதியாய் வாழ முடியுமா? இல்லாதவர் இப்படியே இருந்து விட முடியுமா? வறுமை மனிதர்களை என்னவாகச் செய்யும்? முதியவர், குழந்தைகள் என்ன ஆவர்? யார் இங்கு பாதுகாப்பாக இருக்க முடியும்?

இவ்வாறெல்லாம் நம் காலத்துக்கு ஒத்த முறையில் இந்தக் கவிதையை நாம் பொருள்படுத்துகிறோம். மெய்யியல் என்றும் அறிவியல் என்றும் அழகியல் என்றும் நாம் பேசுகிறோம். வாழ்வின் மேன்மை என்ன? தாழ்வு என்ன? என்று சிந்திக்கிறோம். வாழ்வு ஏன் சிதைகிறது? அடியற்றுப் போகிறது? வாழ்வுக்கு எது அழகு சேர்க்கும்? வாழ்வில் எப்பொழுது அறம் தங்கும்? வாழ்வின் அர்த்தம் என்ன? மெய்மை என்ன? என்றும் சிந்திக்கிறோம் இப்படியெல்லாம் சிந்திப்பதற்குப் புறநானூற்றுப் பாடல்கள் இடம் தருகின்றன. சங்க காலத்திற்கும் இன்றைய நம் காலத்திற்கும் இடையில் ஓர் ஒற்றுமை தெரிகிறது. பொதுமைச் சமூகம்

உன்னதமானது. அனைவருக்குமான வாழ்வின் மேன்மையைத் தருவது. உடமைச்சமூகம் மனித வாழ்வை, மனிதனைக் கூறுபோடுகிறது. மனிதனைச் சிதைக்கிறது. இந்தச்சமூகம் நமக்கு வேண்டாம்.

### 9. பிளவுகள் தொடங்கும் போது:

சங்ககாலம் என்று பெயரிடப்பட்ட காலம் குறைந்த அளவுக்கு ஐநூறு ஆண்டுகாலம் நிலவியிருக்கக்கூடும் என்று அறிஞர் கருதுகின்றனர். இந்தக் கால அளவுக்குள் தமிழ்ச் சமூகம் தனக்குள் பெரும் மாற்றங்களைக் கண்டிருக்கிறது. முதற்காலச் சமூகம் இயற்கையோடு இயைந்ததாய் மனித வாழ்வின் அன்பு, அறம், தன்மானம் முதலியவற்றைப் பேணுவதாய், நிலத்தோடும் நீரோடும் நெருக்கமுடையதாய் இருந்தது என்றால், அதை அடுத்துவரும் காலம் வாழ்வின் அடிப்படைகளிலிருந்து மெல்லமெல்ல விலகியதாய் ஒருவரை அழித்து இன்னொருவர் வாழக் கூடியதாய், வாழ்வு என்றால் என்ன? என்ற கேள்வியை எழுப்பக்கூடியதாய், வாழ்வின் தடங்கள் மாலை இருளுக்குள் மறையக்கூடியதாய் மாறி வருகிறது. தமிழ்ச்சமூகம் தனக்குள் இருந்த முரண்பாடுகளின் வழியே இன்னொரு கட்டத்தை அடையக்கூடியதாய் மாறிக் கொண்டிருந்த அதே வேளையில் தமிழ்ச் சமூகத்திற்கு வெளியிலிருந்து சில தாக்கங்கள் உள்ளே வரத் தொடங்கின. புறத்தாக்கங்களில் ஒரு பகுதியைத் தமிழ்ச் சமூகம் உள்வாங்கிக் கொண்ட அதே சமயத்தில், புறத்திலிருந்து வந்த இன்னொரு பகுதி காரணமாக, தமிழ்ச்சமூகம் தனக்குள் நடுக்கமுறத் தொடங்கியது என்றும் தெரிகிறது. முதற்காலச் சமூகத்தில் மனிதர் தமக்குள் இன்னும் பிளவுபடவில்லை. மக்களும் தலைவனும் தமக்குள் ஒன்றியிருந்தனர். செல்வத்தைப் பகிர்ந்து கொண்டனர். செல்வத்திற்கு வாழ்வின் மீது வெறுப்பு இன்னும் வரவில்லை. ''ஈன்று புறந்தருவது ஒரு பெண்ணுக்கு சுமையாக இல்லை. இது இவளுக்கு ஒரு கடமை. இவனைச் சான்றோனாக்குவது தந்தைக்குக் கடமை. இவன் வீரனாகப் பயிற்சி பெற வேண்டும். இவனுக்குத் தேவையான வேல்வடித்துத் தருவது கொல்லனின் கடமை. சமூகத்தில் நன்னெறியை காப்பது மன்னனுக்குக் கடமை. தம் நாட்டுக்கு ஒரு கேடு வரும்பொழுது களிறு எறிந்து பெயர்தல் காளையின் கடமை'' இப்படி ஒரு தாயும் கவிஞருமாக இருக்கிற பொன்முடியார் (புறம் 31) பாடுகிறார். சுருக்கமாகத் தன் சமூகத்தைக் காட்சிப்படுத்துகிறார் கவிஞர்.

இதே சமூகத்தை பிசிராந்தையார் கீழ்க்கண்டவாறு காட்சிப்படுத்துகிறார். ''வயது முதிர்ந்த நிலையிலும் எனக்கு நரை

தோன்றவில்லை. இது பற்றி நீங்கள் வியந்து கேள்வி கேட்கிறீர்கள். என் மனைவி மாண்புடையவள். என் மக்களும் நல்லவர். எனக்கு உதவியாக இருப்பவர்களும் நல்லவர்கள். சமூக வாழ்வுக்கு வேந்தனால் தீங்கு எதுவுமில்லை. என் ஊரில் அறிவும் பண்பும் நிறைந்த சான்றோர் பலர் வாழ்கின்றனர்'' (புறம்-191). சமூகத்திற்குள் முரண்பாடுகள் இல்லாமல் சமூகத்தில் இயக்கமில்லை. இந்த முரண்பாடுகள் இவர்கள் வாழ்வை இன்னும் நடுக்குரச் செய்யவில்லை.

இந்தச் சமூகத்திற்காக மக்கள் போராட முடியும். இந்தச் சமூகத்தின் மீது தாக்குதல் வரத்தான் செய்கிறது. ஆண்கள் வீரத்தோடு போர்க்களம் செல்கின்றனர். ஆண்களோடு பெண் மக்களும் வீரமுடையவராய் வீரத்தாய்மார்களாய் விளங்கினர் என்பதற்குப் புறநானூற்றில் எத்தனையோ கவிதைகள் உள்ளன.

முதல் நாள் போரில் தன் தந்தையையும் மறுநாள் தன் கணவனையும் இழந்த ஒரு தாய், மூன்றாம் நாள் போருக்குத் தன் சிறுவனை அனுப்பி வைக்கிறாள். ''உன் மகன் எங்கே சென்றான் என்று கேட்கும் ஒரு பெண்ணுக்கு அவனை ஈன்ற வயிற்றோடு இங்கு இருக்கிறேன். குகையில் இருந்து புறப்பட்டு வெளியே சென்ற புலிக்குட்டி போன்ற என்மகன், தோன்றுமிடம் போர்க்களமாகத்தான் இருக்கும்'' (புறம்-86) என்கிறார் காவற்பெண்டு.

''முதுகில் புண்பட்டுப் போர்க்களத்தில் கிடக்கிறான் உன் மகன் என்று யாரோ சொல்லக்கேட்டு வாளோடு போர்க்களம் நோக்கிச் சென்ற தாய், மார்பில் தன் மகன் புண்பட்டுக் கிடப்பதைப் பார்த்து ஈன்ற பொழுதினும் பெரிதுவந்தாள்''. இப்படி எத்தனையோ கவிதைகள்.

இத்தனை வீரத்தோடு சிறுவரும் தாய்மாரும்கூட இருப்பாரென்றால் இவர்கள் கூலிக்காகப் போரிடுபவராக இருக்கமுடியாது. தம் குடியை, ஊரை, தம் சமூகத்தை, தம் தலைவனைக் காப்பதற்காகத்தான் இவர்கள் இவ்வளவு வீரத்தோடு போரிட முடியும். கொடியவன் தலைவன் என்றால் இப்படிப் போரிட முடியாது. வெளியில் இருந்து வரும் அந்நியனுக்குத் தாங்கள் இடம் கொடுக்க முடியாது. தம் நிலத்தை இழக்க முடியாது. அந்நியனிடம் அடிமைப்பட்டு வாழ்வதைவிட போரிட்டு மடிவதே சிறப்பு.

இந்தச்சமூகம் தனக்குள் ஒன்றியிருக்கிற சமூகம். தனக்குள் முரண்படாத சமூகம். வெளியிலிருந்து வரும் ஆதிக்கம் இந்தச்சமூகத்தை

நாளடைவில் தகர்க்க முடியும். இத்தகைய அந்நியரால் தனக்கு வாழ்வு தேவையில்லை.

## 10. வறுமை நிலையிலும் வாழ்வில் செம்மை:

வாழ்வுக்கு அர்த்தம் தேடுவதும் நிலைநிறுத்திக் கொள்வதும் வாழ்வின் மெய்யியலில் முக்கியமான கூறு என்பதில் ஐயமில்லை. புறநானூற்றில் வறுமை நிலையிலும் செம்மைப் பண்பிலிருந்து தவறாத புலவர்கள் பற்றி நிறைய அறிந்துள்ளோம். சுருக்கமாக இவற்றில் சிலர் பற்றி இங்குப் பார்த்துக் கொள்ளலாம்.

அதியமானைத் தேடிச்சென்ற ஔவையாருக்குப் பரிசில் தராமல் அதியமான் காலம் கடத்தியபோது அரண்மனைக் காவலரிடம் ''எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே'' என்று ஔவையார் கூறி தன் உறவுச் சுற்றத்தோடு புறப்பட்டதை அறிகிறோம். ஔவையாரைத் தன்னோடு இருத்தி வைக்கத்தான் இவ்வாறு செய்தான் என்பதைப் பின் ஔவையார் அறிந்து பேருவுவகை கொண்டார். ''ஒருநாள் சென்றாலும் பலநாள் சென்றாலும், பலரோடு சென்றாலும் முதல் நாளில் அதியன் எவ்வாறு வரவேற்பானோ அவ்வாறே தொடர்ந்து நடந்து கொள்கிறவன்'' (புறம்:101) என்று ஔவை அதியனின் அன்புச் சிறப்பைப் பாராட்டுகிறார். சில சமயம் பரிசில் பெற வரும் புலவரைக் காக்க வைத்து, புலவரை நேரில் கண்டு அவர் கவிதைக் கேட்டு, அவர் தரத்தை மதிப்பிட்டுத் தக்க முறையில் மன்னன் பரிசில் வழங்கவில்லை என்றால் ''என்னை நேரில் காணாது இந்த அரசன் என் தகுதியை எப்படி மதிப்பிட்டான், நேரில் காணாமல் இவன் தரும் பரிசிலைப் பெற்றுக்கொள்ள நான் ஒரு வணிகப் பரிசிலன் அல்லேன்'' என்று மன்னனைச் சினந்து வெளியேறும் புலவரையும் புறநானூற்றில் காண்கிறோம். இப்படி மேலும் பல காட்சிகள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன.

இன்னுமொரு புலவர், புலவரின் தகுதியறிந்து பரிசில் வழங்காதபோது அவனைச் சினந்து அவன் நாட்டை விட்டு அகன்று இன்னொரு மன்னனிடம் சென்று அவன் நாட்டு வளத்தையும் மன்னன் பெருமையையும் பாடி யானையைப் பரிசில் பெற்றுத் திரும்பி வரும் வழியில் தன் தகுதியறிந்து பரிசில் வழங்காத மன்னனின் அரண்மனை வாயிலிலிருந்த காவல் மரத்தில் தான் ஏறிவந்த யானையைக் கட்டிவிட்டு 'உன் மன்னனுக்கு நான் தரும் பரிசில் இது' என்று அரண்மனைக்

காவலனிடம் சொல்லிச் சென்ற புலவரையும் நாம் பார்க்கிறோம். புலவரின் தன்மானத்தையும் மறவுணர்வையும் நாம் இங்கெல்லாம் வியந்து பார்க்க முடியும்.

மேலும் ஒரு புலவர் காலம் தாழ்த்தியதோடு தனக்குப் பரிசில் வழங்கவும் மனம் ஒப்பாத மன்னனைச் சினந்து வெளியேறும் போது ''நோயிலராக நின் புதல்வர் உன் ஆயுளும் வளர்க என்று வாழ்த்தியதோடு வறுமையில் வாடிக் கொண்டிருக்கிற, என் வருகையை எதிர்பாத்திருக்கிற என் மனைவியை நாடிச் செல்கிறேன்'' என்று கூறிச் சென்றதையும் பார்க்கிறோம். அரசனைச் சினந்த நிலையில் புலவர் இப்படிக் கூறினாரா? என்றும் நமக்குள் கேட்டுக் கொள்கிறோம். மன்னர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது புரியவில்லை. வேளிர்களைப் பொறுத்தவரை நாஞ்சில் வள்ளுவன் போன்ற குறுநிலத் தலைவர்களைப் பொறுத்தவரை பாணர் மற்றும் விறலியரை ஆதரிப்பதில் குறை வைத்துக் கொள்ளவில்லை. தன் மனைவியின் மங்கல நாண் தவிர எல்லாவற்றையும் இரவலர்க்குத் தந்த காரி போன்றவர்களையும் சங்ககாலத்தில் நாம் பார்க்கிறோம். மன்னர் ஆன நிலையில் இவர்கள் மனம் இறுக்கமடைந்ததா? நல்ல புலவர்களின் பாடல் பெறக்கூடிய தகுதியை இவர்கள் இழந்து விட்டார்களா? கொடிய மன்னவரைப் பாடுவதில்லை என்று முடிவு செய்து கொண்ட புலவர்களையும் சங்ககாலத்தில் நாம் சந்திக்கிறோம். ''நான் கொடியவன் என்றால் என்மீது படையெடுத்து வந்தவர்களை என்னால் தோற்கடிக்க முடியவில்லை என்றால் புலவர் பாடாது வரைக என் நிலவறை'' என்று கூறிய மன்னனையும் சங்க காலத்தில் நாம் பார்க்கிறோம்.

குமணனைப்பாடிப் பெரும் பரிசில் பெற்றுவந்த பெருந்தலைச் சாத்தனார் தன் மனைவியிடம் கூறுவதாக ஒரு பாடல் (புறம்-163) குமணன் தந்த இந்தப் பெருஞ்செல்வத்தை நாமே வைத்து நுகர்வோம் என்று எண்ணாமல் எல்லோருக்கும் நீ கொடு, நீ யாரை விரும்புகிறாயோ ''உன்னை எவரெல்லாம் விரும்புகிறார்களோ, வறுமைப்பட்ட காலத்தில் நமக்கு யாரெல்லாம் உதவி செய்தார்களோ அனைவருக்கும் கொடு. நாமாக வைத்து வாழ்வோம் என்று எண்ணாமல் அனைவருக்கும் கொடு'' இப்படிப் பேசுகிற பெருந்தன்மை புலவர்கள் பலரிடத்தும் இருந்த பண்புதான். துயரப்பட்டவருக்குத் தான் பிறர் துயரம் தெரியும் என்ற பொது உண்மையையும் நாம் இங்கு புரிந்து கொள்ள முடியும். பொருள் குறித்து மனிதனின் பார்வை என்னவாக இருக்க வேண்டும் என்பது மெய்யியல்

பார்வையின் முதன்மைக் கூறு. சமூகத்திற்குள் தனியுடைமை என்பது வலுப்பெற்று வரும் காலத்தில் அதற்கு மனிதர் இடம் கொடுத்து தம்மை இழந்துவிடக் கூடாது, தமக்குள் சிறுத்துப் போய்விடக் கூடாது என்பதையும் இங்குக் காண்கிறோம்.

## 11. பொருள் பெரிதில்லை தன்மானம் பெரிது:

புறநானூற்றில் இடம்பெற்ற அற்புதமான பாடல்களில் ஒன்று (புறம்-66) பாடியவர் வெண்ணிக் குயத்தியார். பெருமைக்குரிய சோழமன்னன் கரிகால் வளவன், படையோடு சென்று வெண்ணி என்னும் போர்க்களத்தில் சேரமான் பெருஞ்சேரலாதனைத் தோற்கடித்தான். வெற்றி பெற்றவன் கரிகால்வளவன். இவனைச் சந்தித்த வெண்ணிக்குயத்தியார், தோற்றவன் சேரலாதன் என்றாலும் அவனையே ''நின்னினும் நல்லன்'' என்று பாராட்டுகிறார். போர்க்களத்தில் சேரலாதனுக்கு ஏற்பட்டது புறப்புண். சேரலாதன் முதுகில் புண் எப்படி ஏற்பட்டிருக்கக்கூடும்? புறமுதுகிட்டுத் தோற்றோடிய நிலையில் கரிகாலன் எறிந்த வேல் சேரலாதனைத் தாக்கியது என்றால் இதில் இருவருக்கும் பெருமையில்லை. கரிகாலன் எறிந்த வேல் சேரலாதனின் மார்பை ஊடுருவி முதுகில் வெளிப்பட்டது என்று சிலர் கருதுவது எந்த அளவில் உண்மையாக இருக்க முடியும்? போர் என்றால் தோல்வியும் ஓர் இயல்பு தான். என்ன நேர்ந்தது என்பது தெரியவில்லை. தன் புறப்புண்ணுக்கு நாணி சேரலாதன் வடக்கிருந்து உயிர் நீத்தான். கரிகாற் பெருவளத்தானைப் பொறுத்தவரை பெரும் மன்னன். கடற்படையுடையவன். எத்தனையோ பெருமைகளுக்குரியவன். எனினும் வெண்ணிக்குயத்தியார் பார்வையில் கரிகாற்சோழனை விட சேரலாதன் பெருமைக் குரியவன். கரிகாலன் முன்னிலையிலே இதைப் புலவர் சொல்லுகிறார். குயத்தியார் பெண்பாற் புலவர். கரிகாற் சோழனும் சேரலாதனை மதிக்கத்தான் வேண்டும். மனிதனின் வீரம், தன்மானம் ஆகியவற்றுக்கு முதன்மை தருவது மெய்யியல்.

(புறம்–71)ல் சேரமான் கணைக்கால் இரும்பொறை என்ற மன்னனின் தன்மானச் சிறப்பைக் காண்கிறோம். சோழன் செங்கனாலன் என்பவனுக்கும் கணைக்கால் இரும்பொறைக்கும் நடைபெற்ற போரில் சேரமன்னன் தோற்றான். தோற்றவனைச் சங்கிலியால் பிணிக்கப்பட்ட நாயைப் போல இழுத்துச் சென்று சிறையில் அடைத்தனர். தாகம் எடுத்தபோது தண்ணீர் கேட்ட சேரனை சிறைக்காவலர் அவமதிக்கும்

முறையில் காலம் தாழ்த்திச் சிறிதளவு நீர் தந்தனர். இதற்கிடையில் சேரன் பலவற்றையும் நினைத்திருக்க வேண்டும். குழந்தை இறந்து பிறந்தாலும் வெறும் தசைப் பிண்டமாகப் பிறந்தாலும் அதன் உடம்பில் வாளால் கீறி புண் உண்டாக்கித் தான் அதை அடக்கம் செய்வது வீரர் குடிப்பண்பு. இத்தகைய தன்மானமுடையவர் மரபில் வந்தவன் சேரன். மனிதனுக்கு மானம் பெரிது. உயிர் பெரிதன்று. ஆகவே காவலர் தந்த நீரை உண்ணாமல் இருந்து இப்படியே பலநாள் இருந்து உயிர்விட்டான் சேரன்.

பொருள் பெரிதன்று, உயிர் வாழ்க்கையும் பெரிதன்று. மானம் பெரிது. கிடைப்பது எவ்வளவாயினும் பலரோடு பகிர்ந்து கொள்ளுதல் தேவை. மன்னரெனினும் அவரை மதிப்பது அவரது நற்பண்புக்காகத்தான். தன்மானம் கெடும் பொழுது உயிரைக் கொடுத்தேனும் மானத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். சங்ககால மன்னர் இன்னும் மனிதப் பண்பை முற்றாக இழக்கவில்லை. இனக்குழுச் சமூகம் இன்னும் மனித நினைவிலிருந்து முற்றாக நீங்கி விடவில்லை. தனியுடைமையை இன்னும் ஒதுக்க முடியும். இத்தகைய வாழ்வுதான் அறச்சார்பான, அழகான வாழ்வு. இதுவே மெய்யியல் நோக்கிலான வாழ்வு.

## 12. சமயம் நுழைவதற்கு ஏது இடம்:

சமயம் என்பது மனித வாழ்வுக்குள் எங்கே நுழைகிறது என்பது ஒரு முதன்மையான கேள்வி. சங்க கால வாழ்வில் சமய நிறுவனங்கள் இல்லை என்ற போதிலும் சமயமாக உருவம் பெறக்கூடிய உணர்வுகள் சமூகத்திற்குள் வந்துவிட்டன. இந்த உணர்வு மனித வாழ்வின் எல்லைக்குள் இருக்கும் வரை நாம் இதை ரசிக்க முடியும், ஏற்க முடியும். வாழ்வின் எல்லைக்குள்ளிருந்து வெளியே சென்று வாழ்வை அச்சுறுத்தும் போது, வாழ்வைத் தன் ஆதிக்கத்திற்குள் அடக்கும் போது அது சமயமாகிறது. அதிலிருந்து சமயம் உருவாகும். மனித வாழ்வு நம் புரிதலுக்கு எட்டாததாகி நம்மை மருட்டும். அது ஒரு தனிச் சக்தியாகி விடுகிறது. அஞ்சத்தக்கதும் வழிபாட்டுக்குரியதும் ஆன ஒரு சக்தியாகி விடுகிறது. பொருளியல் வாழ்வுக்கு நம் புலன்களுக்கு அப்பாற் சென்று நம்மை ஆதிக்கம் செய்யும் சக்தி அது.

சங்க காலத்தில் ஊருக்காக, தன் மக்களுக்காக இறந்த வீரர்களுக்கு நடுகல் வைத்து வழிபாடு செய்தார்கள். நெல்லும் பூவும் சொரிந்து இறந்த வீரனை வழிபட்டார்கள். மக்களுக்காக, எதிரியோடு போரிட்டு மடிந்தவன்

அவன். அவன் இன்னும் ஊர் மக்களின் நெஞ்சிலிருக்கிறான். அவன் நினைவு மக்கள் நெஞ்சில் உவப்பாக, உரமாக இருந்து மக்களை உயிர்த்துடிப்போடு வாழ வைக்கிறது. அவன் நடுகல் வடிவிலிருந்து மக்களுக்கு உரமாகிறான். இத்தகைய நடுகல்லில் இருப்பவன் மக்களுக்குரிய கடவுள். இவன் யாரையும் அச்சுறுத்தவில்லை. இவனைத் தவிர இவர்கள் வேறு கடவுளை ஏற்பதாகவும் இல்லை. 'நெல் வகுத்துப் பரவும் கடவுளும் இலவே. (புறம்). இவனைத் தவிர எங்களுக்கு வேறு கடவுள் இல்லை. வேறு கடவுள் வேண்டாம். மருதம் போன்ற பிற நிலங்களுக்குப் பெரிய கடவுளர் வந்துவிட்டனர். எங்கள் நிலத்திற்கு அந்தக் கடவுளர் தேவையில்லை. இப்படி இந்தப் பாடல் வரியைப் பொருள்படுத்துகிறார் அறிஞர். கு.வே. பாலசுப்ரமணியம். இத்தகைய பொருள்கோள் ஏற்கத்தக்கது தான்.

ஊருக்காக, உலகுக்காகச் சாவை ஏற்பது மகிழ்ச்சி தரும் செயல். அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி இது பொது உண்மை. சாவை உருவகப்படுத்தும் முறையில் கூற்று என்றும், கூற்றுவன் என்றும் மக்கள் கூறினர். ஊருக்கும் உலகத்துக்கும் பயன்பட வாழ்ந்தவன் சாவுக்கு அஞ்சுவதில்லை. இப்படி சாவுக்கு அஞ்சாதவர் என்று கோப்பெருஞ்சோழன், சேரலாதன் போலப் பலரைச் சங்க காலத்தில் பார்க்கிறோம்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் போரில் வல்லவன், பெரும்கொடை புரிந்தவன். அவன் இயல்பாகத்தான் இறந்தான். அவன் இறப்பை மாரோக்கத்து நப்பசலையார் வியந்து பாடினார். (புறம்:வ26) ''கூற்றுவன், கிள்ளிவளவனை வெறுத்தோ சினந்தோ அவனை நெருங்கி வந்து கைப்பற்றியோ அவனுயிரை எடுத்திருக்க முடியாது. கிள்ளிவளவனைக் கூற்றுவனால் நெருங்க முடியாது. அவனுயரை எடுக்க வேண்டுமானால், கூற்றுவன் அவன் முன்னர் உயிரை வேண்டிப்பாடும் ஒரு பரிசிலன் போல வந்து கைதொழுது, அவனை வேண்டி அவனுயிரைப் பெற்றிருக்க வேண்டும்''. மாவீரன் கூற்றுவனுக்கு அஞ்சவில்லை. கூற்றுவன்தான் இவனைக் கண்டு அஞ்சி இருக்கவேண்டும் என்று கற்பனை நயத்தோடு கவிஞர் பாடுகிறார்.

தம் வாழ்நாளில் நல்லன செய்தவர் சாவுக்கு அஞ்ச வேண்டியதில்லை. நன்மை செய்யாமல் வாழ்ந்தவர்களும் பிறருக்குத் தீமை செய்து தம் வாழ்வை மேம்படுத்திக் கொண்டவர்களும் சாவுக்கு அஞ்சுவர். இறப்புக்குப் பின்னர் என்ன நேருமோ என்று அவர்கள்

அஞ்சுவர். சான்றோர் எனப்படுவோர் பிறருக்கு நன்மை செய்யத் தவறக்கூடாது. தவறியவரை சான்றோர் என்பதில் பொருளில்லை. ஆனால் சான்றோர் என்ற பெயரோடு பிறருக்குத் தெரிந்தோ அல்லது தெரியாமலோ தவறு செய்து வாழும் சான்றோர் சிலரைச் சந்திக்க நேர்ந்த பொழுது நரி வெருஉத்தலையார் (புறம்-195) கூறுவதாக ஒரு பாடல். ''பயனில்லாமல் வாழ்ந்த சான்றோரே கணிச்சி என்னும் மழு ஆயுதத்தோடு ஆற்றல் மிக்கவனாகிய கூற்றுவன் உங்களை நெருங்கி வரும் பொழுது நீங்கள் அஞ்சுவீர்கள் அல்லவா. ஆகவே இப்பொழுது முதற்கொண்டே உங்களால் நல்லது செய்ய இயலாது என்றாலும், பிறருக்குத் தீமை செய்யாமலாவது இருக்க முடியும்''.

பூதப்பாண்டியன் தேவி தன் கணவன் இறந்த போது அவனது உடம்புக்கு சான்றோரும் உடன் இருந்து தீ மூட்டிய நிலையில் சான்றோர் தடுத்தபோதிலும் அவர்களைப் பொருட்படுத்தாமல் தீப்புகுந்து தன் உயிரை மாய்த்துக் கொண்டாள்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் இறந்தபோது அவனது இறுதிச் சடங்குக்கு சென்ற புலவர்களுள் ஒருவர் ஐயூர் முடவனார். மன்னன் முதலிய பெருமைக்குரியவர்களை தாழியில் வைத்து அடக்கம் செய்வதோ அல்லது தாழியைக் கவித்து அடக்கம் செய்வதோ அக்காலத்து முறைமை. கலம் செய்வது வேள்கோவர் தொழில்-குயவர் தொழில். கிள்ளிவளவன் உலகளவுக்கான பெரும்புகழ் படைத்தவன். இவனது புகழுடம்பும் அந்த அளவுக்குப் பெரியது. இவனை அடக்கம் செய்வதற்கு மிகப்பெரிய தாழி தேவை. இவ்வளவு பெரிய தாழியை உன்னால் செய்ய முடியுமா? என்று வேட்கோவைப் புலவர் கேட்கிறார். (புறம்:228)

அத்துணை பெரிய தாழியை வனைய வேண்டுமானால் இந்த நிலவுலகத்தையே திகிரியாகக் கொள்ள வேண்டும். மேருமலையை மண்ணாகக் கொள்ளவேண்டும். இதை உன்னால் செய்ய முடியுமா என்கிறார் புலவர்.

புலவர் வருத்தப்படவில்லை. கிள்ளிவளவனின் பெருமையை, பெரும்புகழை நினைத்து வியக்கிறார். 'கலம் செய்கோவே' எனத்தொடங்கும் இன்னொரு பாடலும் (புறம்:256) புறநானூற்றில் இடம் பெறுகிறது. பாடலைப் பாடியவர் பெயர் இல்லை. இடைச்சுரத்தில் இறந்த கணவனோடு புலம்புகிற தனிமகள் என்பதனால் தனி மகள் என்று பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. பாலை நிலத்தில் கணவன் இறந்தான். இவனோடு

இணைந்து வந்தவள் இவன் காதலி. இடைச்சுரத்தில் (பாலையில்) ஏற்பட்ட போரில் இறந்தானா? அல்லது வேறு எப்படி இறந்தான் என்ற குறிப்பு பாடலில் இல்லை. உருக்கமானது இப்பாடல். நெடுவழியில் செல்லும் ஒரு வண்டியின் ஆரக்காலோடு பொருந்திய உருளையை விடாது பற்றி வருகிற ஒரு பல்லியைப் போல நானும் என் தலைவனோடு இணைந்து வந்தேனென்கிறாள் இப்பெண். இறந்த தன் கணவனை அடக்கம் செய்வதற்குத் தாழி வேண்டும். இறந்த தன் கணவனோடு தானும் இணைந்தே அடக்கம் செய்யப்படவேண்டும். தனியொருவரை அடக்கம் செய்வதற்கான தாழி இதற்குப் போதாது. ஆகவே கலம் செய்யும் வேட்கோவை வேண்டிக் கொள்கிறாள் இப்பெண். ''என்னையும் சேர்த்து அடக்கம் செய்யப் பெரியதாக ஒரு தாழியை நீ வனைந்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறாள்''. கணவனோடு தானும் சாவதற்கு இப்பெண் வருந்தவில்லை. கணவனை இழந்தபிறகு தான் வாழும் விருப்பமும் இவளுக்கு இல்லை. கணவனோடு தானும் அடக்கம் செய்யப்படுவதையே இவள் விரும்புகிறாள். சாவை இப்படி இந்தப் பெண் எதிர்கொள்கிறாள்.

### 13. காஞ்சித்திணையில் அவலம்

சங்க இலக்கியத்தின் பொதுப்போக்கிலிருந்து முற்றிலும் விலகியதாகிய காஞ்சித்திணைப் பாடல்கள் சில புறநானூற்றில் உள்ளன. இவற்றில் ஒரு பாடலைப் (புறம்:358) பாடியவர் வான்மீகியார். வான்மீகியார் என்ற பெயரில் உள்ள இவர் யாராக இருக்கக் கூடும் என்று தமிழறிஞர் விவாதிக்கின்றனர். வடமொழி வான்மீகியர் பெயரிலுள்ள தமிழ்ப் புலவர் என்பது முதற்கொண்டு, வடமொழியில் இராமாயணம் எழுதிய வான்மீகியார் தமிழர்தான் என்பதுவரை பலவகையான கருத்துக்கள் நிலவுகின்றன. இவர் தமிழரே என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்பவர் அறிஞர். வ.சுப. மாணிக்கம். இவர் பாடியுள்ள இந்தப்பாடலே தன் கருத்துக்குச் சான்று என்கிறார் வ.சுப. மாணிக்கம். இராமனது வாழ்வைத்தான் இந்தப் பாடல் சொல்கிறது என்கிறார் அவர்.

'பருதி சூழ்ந்தவிப் பயங்கெழு மாநிலம்' என்று தொடங்கும் இப்பாடலின் கருத்தைக் கீழ்க்கண்டவாறு தொகுத்துச் சொல்லலாம்.

''கதிரவன் சுற்றி வருகிற இந்தப் பெரிய உலகத்தில் எத்தனையோ மன்னர்கள் – தலைவர்கள் வாழ்ந்து மறைந்தனர். ஒருநாளில் எழுவர்

என்று சொல்லும் அளவுக்கு வாழ்ந்தவர் பலர். இவர்களது வாழ்வை ஆராய்ந்து பார்க்கும் போது இல்லறமா? துறவறமா? எது சிறந்தது என்று கேள்வி எழும். தவத்தோடு ஒப்பிடும் பொழுது வையக வாழ்வாகிய இல்லறம் ஒரு சிறு கடுகு அளவுக்கும் குறைந்ததேயாகும். ஆகவே வீட்டுலக வாழ்வை விரும்பியவர் காதல் வாழ்வை, இல்லறத்தைக் கைவிட்டனர். இல்வாழ்வில் பற்று விடாதவரை திருமகள் நெருங்க மாட்டாள். பற்று விட்டவரைத் திருமகள் விடமாட்டாள்.''

ஏழு வரிகளில் சுருக்கமாக உள்ள இப்பாடல் சற்று சிக்கலானது தான். இந்த உலகில் மன்னர் என வாழ்ந்த எத்தனையோ பேர் வெற்றியும் தோல்வியும் என அலைந்து வாழ்வை வீணாக்கிக் கொண்டனர். மன்னர் மட்டுமல்லாமல் மக்களும் இப்படி இல்லற வாழ்வில் ஈடுபட்டுப் பொருள் தேடியலைந்து, பொருளைத் தேடுவதே வாழ்வாகி பொருள் இன்பத்தில் மூழ்கித் தம்மைத்தாமே அழித்துக் கொண்டனர். துறக்க இன்பத்தோடு ஒப்பிடும் பொழுது இல்லற இன்பம் ஒரு சிறு கடுகின் அளவுக்கும், வராது. தவ இன்பமே பேரின்பம். தவம் செய்பவரோடுதான் திருமகள் தங்குவாள் – இப்படிச் செல்லுகிறது கவிஞரின் சிந்தனை. திருமகள் என்பது செல்வத்தை குறிப்பிட முடியாது. திரு என்பது உன்னதமான – ஆன்மீக வாழ்வு – இவர் எவ்வகை முனிவர் என்று தெரியவில்லை. சங்ககால வாழ்வுக்குள் இவர் எங்கிருந்து நுழைந்தார். சங்க கால வாழ்வுக்குள் இந்தச் சிந்தனைக்கு என்ன இடம் என்று ஆராய வேண்டும்.

## 14. இல்லறம் இனிது இல்லை – துறவு தேவைதான்

சங்ககாலம் ஐநூறு ஆண்டுக்கால அளவுக்குக் குறுகியது என்றாலும் இக்கால அளவில் வாழ்ந்த மன்னர் நூற்றுக்கு மேற்பட்டவராக இருந்திருக்க வேண்டும். இவர்கள் நிலத்துக்காகக் கடுமையாகத் தமக்குள் போரிட்டுக் கொண்டனர். இப்படி விடாது போரிட்டு நெடுங்காலம் இவர்கள் வாழ்ந்தார்களா என்றால் அப்படியும் வாழமுடியவில்லை. தம் புகழை நிலை நிறுத்த இவர்கள் என்ன செய்தார்கள் என்றால் அப்படியும் இவர்கள் செய்யவில்லை. உடை வேல மரத்தின் சிறிய இலை அளவுக்குக் கூட நிலத்தைப் பிறருக்கு விட்டுக் கொடுக்கக்கூடாது என்று இவர்கள் வெறித்தனமாகப் போரிட்டார்கள். போரிட்டுச் செத்தவர் தொகை, கரையில் ஒதுக்கப்பட்ட மணலின் எண்ணிக்கையைக் காட்டிலும் கூடுதலாக இருக்கும் என்கிறார் புலவர். தம் பெருமிதமான வாழ்வுக்காக இவர்கள் போரிட்டார்கள் என்றால் இவர்களும் சாகாமலா இருந்தார்கள்? சாவைத்

தவிர்க்க முடியுமா? அப்படியானால் என்ன செய்திருக்க வேண்டும். இப்படிக் கேள்வி கேட்டு ஐயாவி சிறுவெண்தேரையார் பாடுகிறார்கள் (புறம்:363). வேந்தனை நோக்கிக் கவிஞர் இப்படிக் கூறுகிறார்:''சுடுகாட்டில் பிணத்தை அடக்கம் செய்த பிறகு உப்பில்லாமல் வேகவைத்த புழுங்கல் அரிசி உணவைப் புலையன் தர கையில் வாங்கித் தரையில் இட்டு, மண்ணோடு எடுத்து உண்ணக்கூடிய நிலை கொடியது. கள்ளிக்காட்டில் இப்படி அமர்ந்து மன்னனும் உண்ணும் நிலை வரும். இத்தகைய இரங்கத்தக்க நிலை வருமுன்னே எண்ணிருந்த தவத்தைச் செய்வாயாக!'' மன்னர்களும் சாகாமல் இல்லை. சாவைத் தவிர்க்க முடியாது. போரிடுவதில் பயனில்லை. வெற்றியும் நிலைப்பதில்லை. வாழ்வு கூட உண்மையில்லை. சாவே உண்மை. செய்த தீமைகளுக்குப் பரிகாரமாக தவம் செய்ய வேண்டும். பிறவி வேண்டாம். இப்பொழுது சமய உணர்வு வாழ்வுக்குள் தலைதூக்குகிறது.

இல்லற வாழ்க்கை முழுவதும் இனியது தானா? அல்லது துன்பமுடையதா? மனைவி மக்களோடு வாழும் வாழ்க்கையை உதறிக் கொள்ளத்தான் முடியுமா? இந்த வாழ்க்கைக்குள்ளே எவ்வளவு காலம்தான் சுற்றி அலைவது? தப்பிச் செல்லத்தான் வேண்டும். தப்பிச் செல்ல என்ன வழி? சங்ககால வாழ்வுக்குள் இப்படி ஒரு புலவர் சிந்திக்கிறார். இவர் பெயர் ஓரேருழவர். இது இவரது இயற்பெயர் இல்லை. இயற்பெயர் தெரியாத நிலையில் இவர் எழுதிய அகத்திணைப் பாடல் ஒன்றில் இவர் கையாண்ட அழகிய உவமையைக் கொண்டு இவருக்கு ஒரேருழவர் என்று பெயரிட்டார் பாடலைத் தொகுத்தவர். வினை முடித்துத் தன் இல்லம் நோக்கித் தேரில் விரைந்து வரும் தலைவனின் மனம் எத்தகைய பதற்றத்தோடு இருந்தது. எத்துணை வேகத்தில் இவன் விரைந்தான் என்பதைச் சொல்லும்போது 'ஓரேருழவனைப் போல' என்ற உவமையை இவர் பயன்படுத்தினார். மழைபெய்து நின்றது. இன்னும் தூறல் போட்டுக் கொண்டிருக்கிறது. ஈரம் காய்ந்து விடுவதற்குள் நிலத்தை உழுதாக வேண்டும். இருப்பது ஒரே ஒரு ஏர். இதைக்கொண்டு விரைவாய் உழவை முடித்துக் கொள்ள வேண்டும். இந்த உழவனைப் போல தலைவன் பதற்றத்தோடு விரைகிறான்.

தன் மனைவியினிடத்தில் இவ்வளவு பற்றுக் கொண்ட ஒரு தலைவனைப் பாடிய புலவர்தான் இல்லறத்திலிருந்து விடுபடுவது பற்றியும் பாடுகிறார். (புறம்-193) ''நீண்ட வறண்ட களர் நிலம். ஆட்டுத்தோலை உரித்துப் புரட்டி வைத்தது போன்ற கரடுமுரடான தரிசுநிலம். இந்த நிலத்தில்

மானைத் துரத்திக் கொண்டு வேடன் ஒருவன் ஓடுகிறான். இவனிடமிருந்து தப்பித்துக் கொண்டாக வேண்டும். மான் ஓடுகிறது. தப்பிச்செல்ல முடியுமா? என்பது இன்னும் தெரியவில்லை''. இல்லற வாழ்க்கைக்குள்ளும் இப்படித்தான் ஓடுகிறோம். அலைகிறோம். மனைவி, மக்களை விட்டுத் தப்பிச்செல்ல முடியுமா? காலை இவர்கள் இடறுகிறார்கள். தப்ப முடியவில்லை.

இல்லற வாழ்க்கைக்குள் என்ன இடர் வந்தது? இல்லற வாழ்க்கைக்குள் மனிதர் அலைகிறார்கள். வேடனிடமிருந்து தப்பிச்செல்ல ஓடித்தவிக்கிற மான் போல துன்புறுகிறார்கள். இல்லறக் கடமையும் என ஒன்றிருக்கிறது. இன்பமும் இழுக்கிறது. மனம் முற்றாக ஒன்றவில்லை. ஆண்பாற் புலவர் இவர். ஆண் இப்படிச் சிந்திக்கலாம். பெண் என்ன செய்ய முடியும்? சங்க கால வாழ்வுக்குள் நெருக்கடி வந்து கொண்டிருக்கிறது என்பதை இப்பாடல் புலப்படுத்துகிறது.

கோப்பெருஞ்சோழன், பொத்தியார் கூறியபடி தன் ஆட்சியைத் துறந்து வடக்கிருந்தான். வடக்கிருந்து அதாவது உண்ணாமல் ஆற்றின் வடகரையிலிருந்து உயிர் விடுவதால் என்ன பயன் என்ற கேள்வியை, அங்கு கூடியிருந்த புலவரில் சிலர் கேட்டிருக்கக் கூடும். இப்படி வடக்கிருப்பதாகிய தவத்தை மேற்கொள்வதன் மூலம் மேலுலக வாழ்வு கிட்டும் என்று சொல்வது உண்மைதானா? என்பது இவருக்குள் எழுந்த ஐயம். கோப்பெருஞ்சோழன் மேலுலக வாழ்வை விரும்பியா வடக்கிருந்தான்? மேலுலகம் கிட்டாது என்றால் அவன் எதற்காக வடக்கிருக்க வேண்டும்? கோப்பெருஞ்சோழனும் வாழ்வின் மெய்மை குறித்துச் சிந்தனை செய்தவன். தனக்கு நிறைவிருந்தால் மட்டுமே வடக்கிருந்து உயிர் துறப்பதை அவன் நிறைவோடு செய்ய முடியும். கோப்பெருஞ்சோழனுக்குள் மேலுலகம் பற்றி ஆசையில்லை. மேலுலகம் இல்லையென்றாலும் புகழ் கிட்டும். இது போதுமென்பது அவன் கருத்து.

பாடற்கருத்தை ஒருமுறை பார்த்துக் கொள்வோம் (புறம்:214) ''நல்வினை செய்வதா? வேண்டாமா? என்பதில் சிலருக்குத் தெளிவு இல்லை. யானையை வேட்டையாட வேண்டும் என்பதில் உறுதியுடையவன் யானை வேட்டையில் வெற்றி பெறுவான். உறுதியில்லாதவன் சிறு பறவையைக் கூடப் பெற முடியாமல் வெறுங்கையோடு திரும்புவான். தவம் செய்வதில் நம்பிக்கை உடையவர்க்கு மேலுலக வாழ்வு கிட்டவும் கூடும். மேலுலகம் கிட்டாது என்றபோதும் மறுபிறப்பாவது இல்லை

என்று ஆகும். மறுபிறப்பென்பதும் இல்லை என்றால் உயர்ந்த இமயமலைக்கு ஒத்த பெரும் புகழாவது கிட்டும். ஆகவே நல்வினையைச் செய்யலாமா? வேண்டாமா? என்ற ஐயம் தேவையில்லை''.

சங்ககாலத்தில் இப்படிச் சில விவாதங்கள் எழுந்தன என்பதை இப்பாடல் மூலம் அறிகிறோம். மேலுலகம் இல்லையென்றாலும் இப்பிறப்பு ஒன்றைத்தவிர வேறு ஒன்று இல்லையென்றாலும் நல்வினை செய்யத்தான் வேண்டும். புகழ் கிடைப்பதே போதும். இப்படி வாழ்வின் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை சங்ககாலச் சூழலில் இன்னும் அழிந்து விடவில்லை என்பதற்கு நல்ல சான்று.

பாண்டியரின் படைத்தலைவனாகவும் குறுநில மன்னனாகவும் இருந்த நம்பி நெடுஞ்செழியன் இறந்தான். அவன் இறந்த போது புலவர்கள் மற்றும் மக்களிடையே ஒரு கேள்வி எழுந்தது. அவனைப் புதைப்பதா? அல்லது எரிப்பதா? என்ற கேள்வி. சமூகத்தின் மரபுக்குள்ளிருந்து எழுகிற கேள்வி. சமூகத்தில் ஒரு மரபினர் எரிப்பார்கள். இன்னொரு மரபினர் புதைப்பார்கள். நம்பி நெடுஞ்செழியனை என்ன செய்யலாம்? கூடியிருந்த புலவர்களில் ஒருவர் பேரெயின் முறவலார். அவர் இந்தச் சிக்கலைத் தீர்த்து வைக்கிறார்.

நம்பி நெடுஞ்செழியன் தன் வாழ்நாளில் ஒரு நல்ல மனிதன் என்ற முறையில் ஒரு நல்ல தலைவன் என்ற முறையில் தான் செய்ய வேண்டிய அனைத்துக் கடமைகளையும் குறைவில்லாமல் சிறப்பாகச் செய்தான். ஆகவே அவனைப் புதைக்கலாம், அல்லது எரிக்கலாம், எதுவும் செய்யலாம். நமக்கு இது ஒரு சிக்கலாக இருக்க வேண்டியதில்லை என்று முடித்து வைக்கிறார்.

மண்ணுலக வாழ்வில் ஒரு மனிதனாக, தலைவனாகச் சிறப்பாக வாழ்ந்தவன் நம்பி நெடுஞ்செழியன். கவிஞர் இவன் வாழ்வை அற்புதமாக இங்குக் கவிதையில் தொகுத்துச் சொல்லுகிறார். மனித வாழ்வின் எல்லைக்கு வெளியில் இருப்பதாகச் சொல்லப்படும் எதன் மீதும் நம்பி நெடுஞ்செழியனுக்கோ புலவருக்கோ நம்பிக்கையில்லை. ஒரு வகையில் சங்ககால மனிதன் என்பவனின் பண்பு நலன்கள் அனைத்தையும் தொகுத்துச் சொல்வதற்கு இந்தக் கவிதை ஒன்று போதும். மனித வாழ்வில், சமூக வாழ்வில் ஆழமாக வேர் பிடித்து விரிவான கிளை படர்ந்த மனித வாழ்வுக்கு இக்கவிதை சான்று. ''நம்பி நெடுஞ்செழியன் இளைய மகளிரை

மணந்து கொண்டான். சோலைகளில் மலர் சூடினான். குளிர்ந்த சந்தனம் பூசினான். பகைவரை அழித்தான். நண்பர்களைப் போற்றினான். வலியவர்களிடம் பணியவில்லை. எளியவர்களை இகழவில்லை. பிறரிடம் இரக்கவில்லை. தன்னிடம் இரந்தவர்க்கு எதையும் மறுக்கவில்லை. வேந்தர் அவையில் தன் புகழை நிலை நிறுத்தினான். தன் நாட்டின் மீது வந்த பகைவரைத் தடுத்தான். புறமுதுகிட்டவரைத் தாக்கவில்லை. குதிரையை தன் மனத்தைக் காட்டிலும் விரைந்து செலுத்தினான். தெருவில் தேரை விரைந்து செலுத்தினான். உயரிய களிற்றின் மீது அமர்ந்து சென்றான். மதுக்குடங்களைப் பலரோடு அமர்ந்து உண்டான். பாணர்களின் பசி தீர்த்தான். நடுவு நிலையிலிருந்து பிறழ்ந்து அவன் பேசவில்லை. இவ்வாறு ஒரு மனிதன் செய்யவேண்டியவை அனைத்தையும் இவன் செய்தான். ஆகவே இவனைப் புதைக்கலாம் அல்லது எரிக்கலாம். கேள்விக்கு இடமில்லை''.

இருபது வரிகளில் நடையும் ஓட்டமுமாக ஒரு வரிக்கு ஒரு நற்செயல் என்ற முறையில் ஒரு நல்ல மனிதனின், தலைவனின் நற்பண்புகளைத் தொகுத்துச் சொல்லும் முறையில் ஒரு அற்புதமான கவிதை. உலகியல் வாழ்வில் முழுவதுமாக, நிறைவுற வாழ்ந்தவன் நம்பி செழியன். இவன் தான் சங்ககால நிறைமனிதன். சங்கக் கவிதைக்கு இவன் ஒரு சான்று.

மனித வாழ்வு மனிதர் வசத்திலிருந்து விலகி வாழ்வின் எல்லைக்கு வெளியில் செல்லும் பொழுது சமயம் வாழ்வுக்குள் வருவதாகச் சொல்லலாம். இல்லற வாழ்வுக்குள் என்ன குறை வந்து இல்லறத்தை வெறுத்துத் துறவு பற்றி மனிதர் சிந்திக்க வேண்டும்? இவ்வுலக வாழ்வுக்குள் என்ன குறை கண்டு மேலுலக வாழ்வு பற்றிச் சிந்திக்க வேண்டும்? மறுபிறப்பு என்ற சிந்தனைக்கு என்ன தேவை? இத்தகைய கேள்விகளை எழுப்பிக்கொண்டு சிந்திக்கும் பொழுது சில உண்மைகள் நமக்குத் தெளிவுபடுகின்றன.

தனியுடமை சமூகத்திற்குள் வந்து அதன் ஆதிக்கம் தொடர்ந்து அதிகரிக்கும்பொழுது, உடமையைப் பெற மனிதர் அலையும்போது, இதன் காரணமாக ஊருக்குள்ளும், உறவுக்குள்ளும் முரண் அதிகரிக்கிற போது, சிக்கல் புறத்தில் மட்டுமல்லாமல் அகத்திற்குள்ளும் பாதிப்புக்களை ஏற்படுத்தும். இயற்கையிலிருந்தும் சமூகத்திலிருந்தும் தனக்குள்ளிருந்தும் அந்நியமாகிற மனிதனின் நிலை இப்படித்தான் இருக்க முடியும். அரசும்

அதிகாரமும் சமூகத்திற்குள் கூடுதலான பிளவுகளை ஏற்படுத்தும்பொழுது மனித வாழ்க்கை அவலத்திற்கு உள்ளாகும்.

. இப்பொழுதுதான் மனிதன் தனக்குள் கேட்டுக் கொள்கிறான். உலகம் துன்பமயமானதா? வாழ்வு இவ்வளவு கொடுமையானதா? என் வாழ்வை என் வசத்தில் வைத்துக் கொள்ள முடியாதா? புறத்திலிருந்து என்னைத் தகர்ப்பது யார்? இவ்வுலகம் தவிர வேறு உலகம், மறு பிறப்பு என இருக்குமா? இவ்வுலகில் நான் செய்யும் நன்மை எப்படி எனக்கு எதிரான தீமையாக மாறுகிறது? தெய்வமென ஒன்று இருக்கிறதா? எனக்குள் இருக்கிற இன்ப நாட்டத்தை எப்படி என்னால் தவிர்க்க முடியும்? புலன்களுக்கு நிறைவு தேவை. அவற்றை எப்படி ஒடுக்குவது? பசியும் காமமும் பாதுகாப்பும் இல்லையென்ற நிலைக்கு என்ன மாற்று? வாழ்வு எப்படி வெறுப்புக்குரியதாக மாறியது? இத்தகைய சிக்கல் பலவற்றுக்குள் மனிதன் மாட்டிக் கொள்கிறான். இப்பொழுதுதான் சமயவாதிகள் வாழ்வுக்குள்ளிருந்தே பேசத் தொடங்குகின்றனர். இத்தகைய கேள்விகள் சங்க காலத்திற்குள்ளிலிருந்து எழுகின்றன. புறநானூற்றுப் பாடல்கள் பலவற்றுள் இத்தகைய கேள்விகள் இடம் பெறுகின்றன.

## 15. அரசின் கொற்றமும், அறநெறியும்

சமூக வாழ்வுக்குள் அரசு அதிகாரம் நுழைந்து, நாளுக்கு நாள் தன்னை வலுப்படுத்திக் கொண்டு தன் நில எல்லையை விரிவுபடுத்தும் நோக்கில், அயல் நிலத்தையும் அகப்படுத்தி அரசன் வாழ்கிறபோது என்னவெல்லாம் நேரும் என்பது பற்றி நாம் சிந்திக்கத்தக்க முறையில் புறநானூற்றில் பாடல்கள் பல உள்ளன.

சான்றுக்கு (புறம்:55) பாண்டியன் இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நன்மாறனை மதுரை மருதன் இளநாகனார் பாடிய ஒரு பாடலை எடுத்துக் கொள்ளலாம். பாண்டியனுடைய நால்வகைப் படையை சிறப்பித்துச் சொல்லும் கவிஞர். ''நால்வகைப் படையோடு மாட்சிமையுடையது உன் அரசு எனினும் அரசின் கொற்றம் என்பது அறநெறியை ஆதாரமாகக் கொண்டதாகத்தான் இருக்கவேண்டும்'' என்கிறார். இதைக் குறிப்பாக விளக்கும் முறையில் ஒன்றைச் சொல்லுகிறார். ''நம்மவர் எனச் சிலர் மீது பரிவுகொண்டு அவருக்கு நன்மை செய்வதற்காகத் தன் செங்கோன்மையிலிருந்து நீ பிறழக்கூடாது. அயலார் என்பதனால் அவர் மீது வெறுப்புக் கொண்டு செங்கோன்மையிலிருந்து தவறக்கூடாது''.

இப்படிச் சொல்லும் புலவர் இவற்றோடு ''வறியவரின் வறுமை தீர்ப்பதும் உன் கடமை'' என்கிறார். இவற்றையெல்லாம் செய்து 'நீ நீண்டகாலம் வாழ வேண்டும்' என்றும் வாழ்த்துகிறார்.

பாடலின் அடிக்கருத்து என்பது இதுதான் என்ற போதிலும் நன்மாறனைச் சிறப்பிக்கும் முறையில் பாடலில் இடம்பெறும் விவரிப்புக்களை நாம் கவனிக்க வேண்டும். பாடலின் தொடக்கத்தில் ''இமயமலையை வில்லாக வளைத்து, ஆதிசேடன் என்ற பாம்பை அம்பாக வைத்து, அவுணர்களின் மூன்று கோட்டைகளைத் தகர்த்து, தேவர்களுக்கு வெற்றியைத் தந்தவனாகிய, தொண்டையில் நஞ்சைத் தாங்கிய, சிவபெருமானின் நெற்றியிலுள்ள ஒரு கண்ணைப் போல, மூன்று வேந்தருள்ளும் மேம்பட்டவனாகிய நன்மாறனே'' என்று அரசனைப் பாராட்டுகிறார். இத்தகைய பெருமைக்குரிய நீ அறநெறி தவறக்கூடாது என்கிறார். 'தவறாது இருந்து திருச்செந்தூரில் கோயில் கொண்டுள்ள முருகனின் பாதங்களின் மீது வந்து தவழ்கிற கடற்கரையிலுள்ள மணல்களைக் காட்டிலும் நெடுங்காலம் வாழ்வாயாக' என்று முடிக்கிறார்.

கவிஞரின் கற்பனைத் திறனையும் பெரும் புலமையையும் நாம் வியக்காமல் இருக்க முடியாது. கூடவே புலவருக்குள் வந்து விட்ட பேருணர்வு ஒன்றையும் நாம் கவனிக்க வேண்டும். சிவபெருமானின் பேராற்றலை கவிஞர் வியந்து சொல்கிறார். அவனது நெற்றியிலுள்ள ஒரு கண் போல மூவேந்தருள்ளும் சிறந்தவன் நன்மாறன் என்கிறார். சிவபெருமானையும் நன்மாறனையும் இணைத்துப் பேசுகிறார். பாடலின் இறுதியில் திருச்செந்தூர் முருகனையும் நன்மாறனையும் இணைத்துப் பேசுகிறார். இவ்வளவு பேராற்றல் உடையவனா நன்மாறன்? சிவபெருமான் முருகன் பற்றிய சிந்தனைகள் தமிழ்ச் சமூகத்திற்குள் பேரளவில் வந்துவிட்டன என்பதற்கு இப்பாடல் சான்று. வேந்தனின் பேராற்றலைத் தெய்வங்களை வைத்து சொல்லும் உணர்வும் புலவருக்குள் வந்துவிட்டது. சிவனையும் முருகனையும் சொல்லித்தான் மன்னனின் ஆற்றலை பெருமைப்படுத்த வேண்டும். இத்தகைய பாராட்டைக் கேட்டு மன்னன் மகிழ்வான். சிவபெருமானைப் போல பேராற்றலுடையவன் நன்மாறன். இவன் ஆயுட்காலம் எவ்வளவாக இருக்க முடியும்? ஆனால் கவிஞர் வாழ்த்தும் போது கடற்கரை மணலைக் காட்டிலும் நெடுங்காலம் வாழ வேண்டும் என்கிறார்.

மருதன் இளநாகனார் என்பவர் மட்டுமல்ல. இப்படி இன்னும் பல புல்வர்கள் பாடும் மரபு தமிழ்ச் சமூகத்திற்குள் வந்துவிட்டது. நன்மாறனை மட்டுமல்லாமல் இன்னும் பல மன்னர்களை இப்படிப் பாராட்டும் முறையும் தமிழ்ச் சமூகத்திற்குள் வந்துவிட்டது. இத்தகைய பாராட்டுக்களைப் புறநானூற்றில் நாம் நிறையக் காண்கிறோம். இந்தப் பாடலைக் காட்டிலும் இன்னும் வெளிப்படையான பாடல்களையும் காண்கிறோம். அந்தணர்களும் தமிழ்ச் சமூகத்திற்குள் வந்துவிட்டனர். இவர்களோடு யாகங்களும் தமிழ்ச் சமூகத்திற்குள் வந்துவிட்டன. தமிழ்ச் சமூகம் இனி தனக்குள் புரண்டு கொள்ள வேண்டும். தமிழ்வாழ்வு இனித்தடம் புரளும். சங்க காலத்திலேயே இத்தகைய பெரும் சிக்கல் தமிழ்ச் சமூகத்திற்குள் வந்து சேர்ந்திருக்கிறது.

மேற்குறிப்பிட்ட பாடலில் இன்னும் சிலவற்றை நாம் உணர்ந்து கொள்ள முடியும். பேராற்றலும் பெரும்படையும் உடையவன் மன்னன். ஆகவே அறநெறியிலிருந்து பிறழ்வதற்கான வாய்ப்புகள் அதிகம். இப்படிப் படைதிரட்டவும் நாடுகளை வெல்லவும் தன்னைச் சேர்ந்தவர் எத்தகையவராயினும் அவரை ஆதரிக்க வேண்டும். தன்னோடு முரண்பட்டவரை ஒதுக்கவும் தண்டிக்கவும் வேண்டும். இதையுணர்ந்த புலவர்தான் அரசனைப் பாராட்டுவதோடு அறிவுரையும் கூறுகிறார். அரசனோடு புலவர் முரண்படுவதும் தெரிகிறது.

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி பற்றி நாம் அறிவோம். மன்னர் பலரை வென்று வேள்விகள் பலவற்றைச் செய்தவன். நெட்டிமையார் இவனைப் புகழ்ந்து பாடுகிறார். (புறம்-15) ''பகைவர் நாட்டின் மீது படையெடுத்துச் சென்று அவரது அரண்களை அழித்து, நகரத் தெருக்கள் குழியுமாறு தேர்களை நடத்தி, கழுதைகளைக் கொண்டு ஏறு பூட்டியுழுது அவரது அரண்கள் பலவற்றை நீ அழித்தாய். அம்மன்னர்களது வயல்வெளி பாழாகுமாறு வலிமையான குதிரைகள் பூட்டிய தேர்களைச் செலுத்தினாய். வலிமை பொருந்திய யானைகளைக் கொண்டு அம்மன்னர் நாட்டின் குளங்களை அழித்தாய். உன் படையெடுப்புக்கு எதிராக உன்னைத் தாக்குவதற்காக வேற்படையோடு வந்து தோல்வியுற்று வசையோடு வாழ்ந்த மன்னர் எண்ணிக்கை எவ்வளவோ! நான்கு வகை வேதங்களிலும் சொல்லப்பட்ட வேள்விகளைச் செய்ய நீ நாட்டிய வேள்வித் தூண்களின் எண்ணிக்கை எவ்வளவோ! இவற்றில் எவை அதிகம்''?.

முதுகுடுமிப் பெருவழுதி பெரும்படையோடு சென்று நாடுகளை அழித்தான். மன்னர்களைத் தோற்கடித்தான். தோற்ற மன்னர்களின் எண்ணிக்கை அதிகம் என்று வியக்கிறார் நெட்டிமையார். நாடுகளின் அழிவு இவர் கண்களை மறைக்கிறது. வேள்விகள் இவரைக் கவருகின்றன. புதிதாக வந்து கொண்டிருக்கிற சமூகம் இவருக்குள் இத்தகைய உணர்வைத் தோற்றுவிக்கிறது. அழிவே இவருக்கு ஆக்கமாகத் தெரிகிறது.

# 9. நவீன கால நோக்கில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

தமிழகத்தில் புழந்தமிழ் இலக்கியம் மற்றும் இலக்கண நூல்களின் தொகுப்பும் ஆய்வும் நடைபெற்ற 19/20-ஆம் நூற்றாண்டு வரலாற்றுச் சூழல் குறித்து நாம் சிலவற்றைச் சொல்லவேண்டும். மேற்குலகில் மறுமலர்ச்சி, அறிவொளி இயக்கம் ஆகியவற்றைத் தொடர்ந்து உலக அளவில் ஒரு புதுவகையான அறிவியல் சார்ந்த உலகப்பார்வை ஏற்பட்டது. இந்தியாவுக்கு வந்து சேர்ந்த மேற்கத்தியர் மூலமாக, குறிப்பாக ஆங்கிலேயர் மூலமாக இந்தப் புதிய உலகப்பார்வை நமக்கும் வந்து சேர்ந்தது. இந்தியாவின் அரசியல், பொருளியல், கல்வி, மருத்துவம், தொழில்முறை, சமூகம் முதலியவற்றில் பெருத்த மாற்றங்கள் நிகழ்ந்தன. இவை குறித்தெல்லாம் நமக்கு விமர்சனங்கள் இருந்தபோதிலும் இந்தியா தன்னைத், தன் வரலாற்றைத், தன் தொன்மையை மறுஆய்வு செய்து கொள்வதற்கும் தன்னைப் புதுப்பித்துக் கொள்வதற்குமான வாய்ப்புக்களும் நேர்ந்தன. மேற்கத்தியர், குறிப்பாக ஆங்கிலேயர் தாம் சார்ந்த நாகரிகம், தொழில்முறை, கல்வி, மருத்துவம், ஆட்சிமுறை முதலியனவே நவீன காலத்திற்கு ஒத்தவையென்றும் இவற்றை இந்தியர் கற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்றும் இந்த நோக்கத்தோடுதான் இந்தியாவுக்குத் தம் ஆட்சி அதிகாரம் இன்றியமையாதது என்றும் நமக்குக் கற்பிக்க முயன்றபோது மேற்கத்தியர் இருண்ட உலகில் வாழ்ந்த அந்தப் பழங்காலத்திலேயே இந்தியா மனித நாகரிகம், அறிவியல், தொழில்முறை, இலக்கியம், கலைகள், கணிதம், மருத்துவம் முதலிய துறைகளில் உச்சங்களைத் தொட்டது என்றும் இந்தியராகிய எங்களுக்கு, எங்களை நாங்களே ஆண்டு கொள்ளத் திறனுண்டு என்றும் உரத்துச் சொல்ல வேண்டிய தேவையேற்பட்டது. இத்தகைய வரலாற்றுப் பின்புலத்தில்தான் எல்லாத்துறைகளிலும் தன்னைப் புதுப்பித்துக்கொள்ள முனைந்தது இந்தியா.

வரலாற்றுச் சூழலில் இத்தகைய தேவை தமிழ் நிலத்துக்கும் நேர்ந்தது. அதிலும் குறிப்பாக இந்தியா என்றாலே வேதநாகரிகம், சமஸ்கிருதம் ஆகியன வளர்ந்த வடபுலம்தான் என்ற கருத்து ஆங்கிலேயர் மத்தியிலும் வலுவாக இடம் பெற்ற சூழலில் இந்திய நாகரிகம்

முதலியவற்றில் தென்னிந்தியாவுக்குக் குறிப்பாகத் தமிழ்நிலத்துக்குப் பங்கு உண்டு என்பதை அறிஞர்கள் சொல்ல வேண்டியிருந்தது. சிந்து சமவெளியில் மொகஞ்சதாரோ – ஹரப்பா நாகரிகம் கண்டறியப்பட்டு அந்த நாகரிகம் ஆரியருக்கு முற்பட்ட திராவிட நாகரிகம் என்ற முறையில் மேற்கத்திய அறிஞர்கள் உண்மைகளை வெளிப்படுத்தியபோது தமிழர்கள் தலை நிமிர்ந்தனர். ஆங்கிலேயருக்கெதிரான விடுதலை இயக்கத்திலும் தமிழ் மக்களின் பங்கு மறுக்கத் தக்கதாக இல்லை. தமிழர் தம் தொன்மை வரலாற்றைத் தேடி எடுத்தனர். சங்க இலக்கியங்கள் முதலியவை கண்டறிந்து துவக்கப்பட்டன. சங்க இலக்கியம் முதலிய தொகுப்புக்களை ஓலைச்சுவடிகளிலிருந்து ஆராய்ந்து அச்சு வாகனம் ஏற்றுவதில் என்றும் நம் மரியாதைக்குரிய பேரறிஞர் பலர் ஈடுபட்டனர். இத்தகைய சங்க இலக்கியம் முதலியவை குறித்த ஆய்வுகளின் விளைவாகத் தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் முதலிய அனைத்துத் துறைகளிலும் பெரும் வீச்சுக்கள் நிகழ்ந்தன. பேரியக்கங்கள் உருவாயின. நவீன காலத்துக்குள் நாம் நுழைந்தோம். உலக அளவிலான நவீன கால வாழ்வுக்குத் தமிழர்களாகிய நமக்கும் தகுதியுண்டு. உலகின் தொன்மையான நாகரிகங்களில் நம் நாகரிகமும் ஒன்று. திராவிட மொழிகள் ஒரு தனிக்குடும்பமாய்த் தோன்றி வளர்ந்தவை. வேறு எந்த மொழியின் சார்பில்லாமல் இயங்கக்கூடிய வளமும் வலிமையும் உடையது தமிழ்மொழி. இந்திய நாகரிகத்தில் தமிழரின் பங்கு மிகுதி. அரசியல், பொருளியல், வணிகம், இலக்கியம், இலக்கணம், அறிவியல், மருத்துவம், இசை, சிற்பம், கட்டிடம், கடல் வாணிகம் என்று எல்லாத் துறைகளிலும் தமிழ் மக்கள் தமக்கான வளங்களைப் பெற்றிருந்ததோடு கிரேக்கம், சீனம் முதலிய தொன்மையான நாகரிகங்களுக்கு நிகரான முறையில் தமிழர் வாழ்ந்தனர். இத்தகைய வீறு தமிழ் மக்களைக் கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாக இயக்கி வருகிறது. இந்தியாவின் நவீன கால அரசியல் மற்றும் பொருளியல் வாழ்விலும் நமக்கான இடத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கான முனைப்பிலும் நாம் ஈடுபட்டுள்ளோம். இத்தகைய பின்புலத்தில்தான் தமிழைச் செம்மொழியென இந்திய அரசு ஏற்க வேண்டும் என்ற கோரிக்கையை நாம் முன்வைத்து இதற்காகப் பல பத்தாண்டுகள் போராடி இப்பொழுது ஓரளவுக்கேனும் வெற்றி பெற்றுள்ளோம். தமிழைச் செம்மொழியென நிறுவுவதற்கான ஆய்வுகளிலும் நாம் ஈடுபட்டுள்ளோம்.

2. சங்க இலக்கியம் என நாம் அறிந்திருக்கிற பாட்டும் தொகையும் எனப்பட்ட நூல்கள் பதினெட்டு என வகைப்படுத்தியுள்ளோம். கீழ்க்கணக்கு என அறியப்படுகின்ற நூல்களையும் பதினெட்டு எனச் சொல்கிறோம். இவை சங்க இலக்கியத்திற்குப் பிறகான இலக்கியங்கள் என்றும் நாம் அறிந்துள்ளோம். இவை தோன்றிய வரலாற்றுக்காலம் குறித்து நமக்குத் தேவையான விபரங்கள் அனைத்தும் கிடைத்த பாடில்லை.

நவீன நோக்கில் பதினெண்கீழ்க்கணக்கு என்பது இந்த ஆய்வுக் கருத்தரங்கின் பொருளென நாம் வரையறை செய்துகொண்டு ஆய்வைத் தொடங்குகிறோம். நாம் நவீன காலத்தில் வாழ்வதாக நம்புகிறோம். நவீனகாலம் என்பது அறிவியலும் தொழில்களும் இவற்றோடு கல்வி, மருத்துவம் முதலியனவும் வளர்ந்து வருகிற காலம். மக்களாட்சி, முதலாளியம், உலகமயமாதல் என்றெல்லாம் பேசப்படுகின்ற காலச்சூழலில் நாம் வாழ்கிறோம். உலக அளவுக்கான நாகரிகம் முதலியவற்றின் தாக்கத்தோடும் நாம் வாழ்கிறோம். இவ்வகை வளர்ச்சிகளெல்லாம் நமக்குப் பல வாய்ப்புக்களைத் தந்துள்ள அதே சமயத்தில் நிறையச் சிக்கல்களையும் நமக்குத் தந்துள்ளன. இவற்றையெல்லாம் நாம் எதிர்கொள்ள வேண்டிய சூழலிலும் நாம் வாழ்கிறோம். இந்தச் சூழலுக்கு ஒத்த முறையில் நமக்கான வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும். இதற்கு ஒத்த முறையில்தான் இலக்கியம் முதலியவை பற்றிய ஆய்வுகளும் நடைபெற வேண்டும். இத்தகைய நோக்கைத்தான் நவீனகால நோக்கு அல்லது சுருக்கமாக நவீன நோக்கு என்று நாம் கொள்வது சரியாக இருக்க முடியும். நவீன நோக்கு என்பது நமக்குள் நெடுங்காலமாக நிலவி வருகிற மரபைக் குறிப்பாகத் தமிழ் மரபை ஒதுக்குவதாகவும் இருக்க முடியாது இயன்றவரை நம் காலத்துக்கு ஒத்த முறையில் நம் மரபைப் புதுப்பித்துக் கொள்வதும் நவீன நோக்கில் இடம் பெற முடியும்.

பதினெண்கீழ்க்கணக்கு என்று அறியப்படும் பதினெட்டு நூல்களில் ஒரு பகுதி திருக்குறள், நாலடியார், முதலிய அறநூல்கள். இன்னொரு பகுதி திணை இலக்கியம் என்று அறியப்படும் அகத்திணை, புறத்திணை நூல்கள். இவை எப்படிக் கீழ்க்கணக்கு நூல்கள் எனப் பெயர் பெற்றன என்றும் வேதசகாயகுமார் ஓர் ஆய்வை முன் வைக்கிறார். கீழ்க்கணக்கு என இவை பெயரிடப்பட்ட பின்னர்தான் பாட்டும் தொகையும் என அறியப்பட்ட சங்க இலக்கிய நூல்கள் மேல் கணக்கு நூல்கள் என

அறியப்பட்டன என்கிறார். நான்கடியும் நான்கு அடிகளுக்குக் குறைவான அடிகளையும் கொண்ட நூல்கள் கீழ்க்கணக்கு என்றும் ஐந்து அடிகள் எனத் தொடங்கி இந்த எண்ணிக்கைக்கு மேற்பட்ட அடிகளைக் கொண்ட நூல்கள் மேல்கணக்கு என்று அறியப்பட்டன என்று ஏற்கனவே நாம் அறிந்துள்ளதை இவர் ஒப்புக் கொள்ளவில்லை. கணிதத்திலிருந்து கீழ்க்கணக்கு என்ற தொடர் வந்திருக்கக் கூடும் எனவும் இவர் கருத்துரைக்கிறார். இவ்வகை நூல்களைப் பதினெட்டு, பதினெட்டு எனத் தொகைப்படுத்துவதும் நமக்குள் ஒரு கேள்வி. பதினெட்டு நாள் போர், என்றெல்லாம் ஒரு மரபு நமக்குள் இருப்பது குறித்தும் இவர் குறிப்பிடுகிறார். இவ்வாறான கேள்வியை நாம் மறுப்பதற்கில்லை.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களை அறநூல்கள் எனவும் திணை நூல்கள் எனவும் வகைப்படுத்திக் கொண்டோம். இத்தகைய பிரிவு சங்க இலக்கியத்தில் இல்லை. சங்க காலத்திற்குப் பிறகு ஏற்பட்ட பிரிவுகள் என இவற்றைக் கொள்ளலாம். சங்க இலக்கியத்தில் அகத்திணை/புறத்திணை இலக்கியங்களில் அறம் இடம் பெற்றதே ஒழிய அற இலக்கியம் எனத் தனிவகை அன்றில்லை. சங்க காலத்திற்குப் பிறகுதான் அறம் என்பதற்கு அழுத்தம் வாய்த்திருக்கிறது. இதற்கான காரணம் குறித்துத் தமிழறிஞர் ஆய்ந்துள்ளனர். சங்க காலத்தில் கடுமையான போர்கள் நடைபெற்றன. இதன் விளைவாகச் சங்க காலத்திற்குப் பிறகு தமிழகச் சூழலில் வறுமை கடுமையாக அதிகரித்திருக்கக் கூடும். சங்ககாலச் சமூக வாழ்வில் காமத்திற்குக் கூடுதலான இடமிருந்தது. பரத்தையர் வாழ்வு சங்க காலத்தில் கண்டிக்கப்படவில்லை. கள், புலால் உண்ணலும் சங்க காலத்து வாழ்வியல் நடைமுறைகள். போர், வீரம் பெரிதாக அன்று மதிக்கப்பட்டது. இவ்வகை வாழ்வியல் முறை சங்ககால அழிவுக்கும் காரணமாக இருக்க முடியும். இவற்றையெல்லாம் சுட்டிக் காட்டும் முறையில் இயலுமானால் தமிழ் மக்கள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும் முறையிலும் அற இலக்கியம் தனியாகத் தோன்றி அழுத்தம் பெற்றிருக்கக் கூடும். தமிழில் இவ்வகை அற இலக்கிய வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தவர் பெரும்பாலும் சமணர் என்பதும் ஒரு வரலாற்று உண்மை.

ஆய்வாளர் வேத சகாய குமார் இன்னொரு விபரத்தையும் தருகிறார். சமண முனிவர்கள் தமிழ் இலக்கியம்/இலக்கண வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றினார் என்பதும் அனைவரும் அறிந்த உண்மை. தமிழ் மக்கள் மத்தியில் சமண முனிவர் மருத்துவப் பணியும் செய்தனர்

என்பதைக் குமார் சுட்டிக் காட்டுகிறார். இதற்காக அவர்கள் அறச்சாலைகள் ஏற்படுத்தியிருந்தனர். கீழ்க்கணக்கு நூல்களில் திரிகடுகம், ஏலாதி, சிறு பஞ்சமூலம் என்பவை மருத்துவப் பெயர் கொண்ட அறநூல்கள். இந்நூல்களில் இடம் பெறும் சில பாடல்கள் மருத்துவம் பற்றியும் சொல்லுகின்றன. எனினும் இவை முதன்மையான அறநூல்கள். மக்களின் உடல் நோய்களைத் தீர்ப்பதற்குரிய முறையில் மருத்துவம் பார்த்ததோடு தமிழ் மக்களின் மன நோய்களைத் தீர்க்கும் முறையில் அறநூல்களை இயற்றினர் என்று கூறுவது பொருத்தம்தான். இவ்வகை மருந்துகளைப் பற்றிய ஆய்வு குறித்துக் குமார் குறிப்பிடுகிறார். சமண முனிவர் தாம் தங்கி இருந்த பள்ளிகளில் தமிழ் மாணவர்களுக்கு இலக்கியம் இலக்கணங்களைக் கற்பித்திருக்க வேண்டும். மாணவர்களுக்குச் சிறுவர்களுக்கு அறக்கருத்துக்களை மனனம் செய்து கற்றுக் கொள்ளும் முறையில் இவ்வகைப் பாடல்களை அவர்கள் இயற்றியிருக்கக் கூடும். ஏற்கனவே திருக்குறள், நாலடியார் போன்ற நூல்களில் விரிவாகச் சொல்லப்பட்ட அறக் கருத்துக்கள் சுருங்கிய முறையில் ஒரு வெண்பாவில் 3,4,5 என அடக்கித் தந்துள்ளனர். திருக்குறள், நாலடியார் போன்ற நூல்களிலிருந்து சிற்சில அறக்கருத்துக்கள் மட்டுமே வேறுபட்டுள்ளதையும் நாம் கவனிக்க முடியும். இவ்வகை வடிவம் தமிழ் இலக்கியத்திற்குப் புதுமையானது என்றும் நாம் புரிந்துகொள்ள முடியும்.

மேலும் ஒன்று. பாட்டும் தொகையும் என அறியப்பட்ட சங்க இலக்கியத்தில் வெண்பா வடிவத்திற்குச் சிறப்பிடம் இல்லை. செறிவான அழகிய வடிவம் வெண்பா. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்தும் வெண்பா வடிவில் அமைந்துள்ளவை. இது சங்க இலக்கியத்திற்குப் பிற்பட்ட வளர்ச்சியென மதிப்பிடலாம். இன்னும் ஒன்று. கீழ்க்கணக்கு நூல்களில் திணை மாலை ஐம்பது எனத் தொடங்கி பல நூல்கள் இடம் பெறுகின்றன. நாற்பது, ஐம்பது என இவை ஒவ்வொன்றும் தனி எண்ணிக்கை உடையவை. அறநூல்களும் இவ்வாறு எண்ணிக்கை உடையவை. திணை இலக்கியத்தைப் பொறுத்தவரை முன்னைய சங்கத்தொகை நூல்களின் உள்ளடக்கத்தையே இவையும் கொண்டுள்ளன. வாழ்வியல் நடைமுறையோடு இவ்வகை உள்ளடக்கம் எந்த அளவுக்கு உறவு கொண்டுள்ளது என்பதைக் காட்டிலும் திணை, துறை, கூற்று என முறைப்படுத்தப்பட்ட திணை வகைப்பாடலை மீண்டும் மீண்டும் பயிற்சி பெறும் நோக்கிலும் கூடுதலான அழகியலைச் சேர்க்கும் முறையிலும் கவிஞர் இவற்றை எழுதிப் பார்த்தனர் என்றுதான் கருத முடியும்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் திணை இலக்கியம் குறித்தக் கட்டுரையைத் தந்திருப்பவர் திரு.சுப்பராயிலு. இக்கட்டுரையில் ஆய்வு நோக்கம் முதன்மை பெறவில்லையெனினும் பதினெண்கீழ்க்கணக்கின் திணை இலக்கியம் குறித்த பாடல்கள் பலவற்றை குறுந்தொகை முதலிய மேல் கணக்கின் திணை இலக்கியப் பாடல்களோடு ஒப்பிடும் முறையில் விரிவான சான்றுகளைத் தருகிறார்.

பதினெண்கீழ்க்கணக்கின் அற இலக்கியத்தையும் திணை இலக்கியத்தையும் இணைத்துப் பார்க்கும் முறையில் ஆய்வு செய்வதற்கான தேவை குறித்து இங்கு ஒன்றைச் சொல்லலாம். களவுக் காலத்தின் போது தலைவனோடு உறவு கொண்ட தலைவி அவனோடுதான் தனக்குக் கற்பு வாழ்வு என்ற உறுதியோடு அறத்தொடு நிற்கிறாள். இங்கு அறம் அழுத்தம் பெறுகிறது. தோழி முதலியவர்களும் இந்த அறத்தில் உறுதியோடு நிற்கின்றனர். தலைவன், தலைவி இருவரும் நிலம், குளம், பிறப்பு, செல்வம் ஆகியவற்றில் வேறுபாடு உள்ளவர். எனினும் காதலர் இருவரின் இணைவுக்கு இவை தடையாக இருக்க வேண்டியதில்லை. சங்க இலக்கியச் சான்றோர் அனைவரும் இந்த அறத்தை விடாப்பிடியாக வற்புறுத்துகின்றனர். இதற்காகவே உடன்போக்கு. கற்பியலிலும் தலைவி விடாப்படியாகக் கற்பென்னும் அறத்தைப் பற்றி நிற்கிறாள். பரத்தையோடு தலைவனுக்கு உறவு கூடாது என்கிறாள். இங்கும் தலைவனைத் தலைவி நெறிப்படுத்துகிறாள். "அறத்தான் வருவதே இன்பம்" அரசனுக்கு கபிலர் வற்புறுத்திய தமிழறம் என்பதும் இது. உடமை பெரிதில்லை. அன்புக்கே முதன்மை. இதுவே அறம். இதன் விளைச்சலே வள்ளுவரின் அறம்.

## 3. நூல் பதிப்புக்கள்

எவ்வகை ஆய்வுக்கும் அடிப்படையாகத் திருந்திய நூல் பதிப்புக்கள் தேவை. சங்க இலக்கியம் என அறியப்படும் நூல்கள் முதலியவை அனைத்தும் ஓலைச் சுவடிகளிலிருந்து அச்சுப் படிவத்துக்கு வந்து சேர்ந்தவை. இடையில் பாட பேதங்கள் பல ஏற்பட்டிருக்கக்கூடும். இம்முறையில் கிடைக்கும் படிகளைச் செப்பம் செய்வது முதன்மையான ஒரு பணி. அதன் பிறகு உரை காண்பது. ஓலைச்சுவடிகளிலிருந்து பெயர்த்து எழுதப்படும் பழைய உரைகள். இவை கிடைக்காத நிலையில் பதிப்புச் செய்பவர் புது உரைகள் எழுதிப் பதிப்பிக்க வேண்டும். ஒவ்வொரு நூலும் பலர் கைபட்டு பதிப்புக்களும் பலவாக வெளிவந்துள்ளன. இவை மீண்டும் மீண்டும் புதுப்பிக்கவும் படுகின்றன. உரை எழுதுபவர் தம் கருத்துக்களும்

உரைகளில் ஏறி விடுவதும் உண்டு. பதிப்புச் செய்பவரும் உரை எழுதுபவரும் தம் காலத்திற்கும் தம் அனுபவ அறிவுக்கும் கட்டுப்பட்டவர். இதுவரையில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுக்குக் கிடைக்கும் பதிப்புக்களைத் தொகுத்து ஆய்வுக் கட்டுரையாக்கித் தருவது மிகமிகப் பொறுப்போடு செய்யவேண்டிய பணி. திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு ஆகிய மூன்றையும் தவிர்த்து பிற பதினைந்து நூல்கள் சார்ந்த பதிப்புக்கள் குறித்த மிக விரிவான கட்டுரையைச் சரவணன் தந்துள்ளார். ஒவ்வொரு பதிப்பு குறித்தும் அதன் தனித்தன்மை முதலியவற்றோடு பதிப்புச் செய்த அச்சகம் உட்பட மிகமிக விரிவான விபரங்களை வியத்தகு முறையில் இவர் தொகுத்துள்ளார்.

மிகுந்த அக்கறையோடு இவர் செய்துள்ள பணி பெரும் பாராட்டுக்குரியது. குறைந்த அளவுக்கு ஐந்நூறு பதிப்புகள் குறித்து இவர் விபரங்கள் தொகுத்திருக்கிறார். மறைமலையடிகள் நூலகம், ரோஜா முத்தையா ஆய்வு நிறுவனம் என்று பல இடங்களிலும் இவர் அலைந்திருக்கிறார். ஒளியச்சுப் படிவங்களையும் இவர் பார்வையிட்டு இருக்கிறார். தமிழகத்தில் வேறு இடங்களிலும் மேலும் பல பதிப்புக்கள் கிடைக்கக் கூடும். இவை அனைத்தையும் தேடிச் சென்று செம்மொழி ஆய்வு நிறுவனம் தொகுத்து வைப்பது எதிர்கால ஆய்வுக்குப் பேருதவியாக அமையும்.

உ.வே.சா. அவர்கள் குறுந்தொகை வரையிலான பதிப்பு முயற்சிகளை முடித்துக் கொண்ட நிலையில் பேராசிரியர் வையாபுரி அவர்கள் பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் அனைத்தையும் ஓலைச் சுவடிகளைக் கொண்டு ஆராய்ச்சி செய்து செம் பதிப்புக்களாக அன்றி ஆய்வுப் பதிப்புக்களாகவும் வெளியிட மேற்கொண்ட முயற்சி குறித்து பெருமாள் முருகன் தன் கட்டுரையில் குறிப்பிடுகிறார். நான்கு நூல்களை மட்டும் வையாபுரியார் வெளியிட்டிருக்கிறார். பேராசிரியர் வையாபுரி அவர்கள் முதன்மையாக அகர முதலித் தொகுப்பாளர். அடுத்தபடியாக ஆய்வாளர். வையாபுரியாரின் இத்தகைய அரிய பண்புகள் அவர் வெளியிட்ட நூல் பதிப்புக்களிலும் இடம் பெற்றிருப்பதை முருகன் குறிப்பிடுகிறார். செம்பதிப்பை ஆய்வுப் பதிப்பாகவும் வெளியிடுவதற்கான நெறியை வையாபுரியார் மூலம் நாம் அறிகிறோம். சரவணன், பெருமாள், முருகன் ஆகிய இருவரது ஆய்வுக் கட்டுரைகளும் உயரிய தரத்தில் அமைபவை. திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு ஆகிய மூவகைப்

பெருநூல்களுக்கும் இவ்வகையில் செம்பதிப்பாக்கங்கள் குறித்த கட்டுரைகள் நமக்குத் தேவை. பதினெண்கீழ்க்கணக்கில் திருக்குறள், நாலடியார் போன்ற நூல்கள் ஆங்கிலம் போன்ற பிற மொழிகளில் ஒரு நூற்றாண்டுக்கு மேலாகவே அறிஞர் பலரால் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. திருக்குறளைப் பொறுத்தவரை ஆங்கிலம் முதலிய பிற மொழிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட அறிஞர் மொழி பெயர்த்துள்ளனர். மூல நூலின் கவித்துவம் மொழி பெயர்ப்பில் இடம் பெறுவது கடினம். அன்றியும் மொழி பெயர்த்தவர் தம் சமயச் சார்பு முதலியவற்றை முற்றாகத் தவிர்ப்பதும் கடினம். அறிஞர் தி.ந.இராமச்சந்திரன் அவர்கள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், ஆங்கிலம் முதலிய பிற மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்ட விரிவான விவரங்களை அற்புதமாகத் தொகுத்துத்தருகிறார். வியப்புக்குரியது இவரது முயற்சி. மொழி பெயர்ப்பு ஒவ்வொன்றையும் செய்யும் பிறமொழி அறிஞர் எவ்வகைத் தேவையை முன்னிறுத்தித் திருக்குறள் முதலியவற்றை மொழிபெயர்த்தார் என்பது குறித்தும் இவர் கருத்து வழங்கியிருக்க வேண்டும்.

தமிழ் நூல்களில் அதிக எண்ணிக்கையிலான பிற மொழி பெயர்ப்புக்களைக் கண்டது திருக்குறள் மட்டுமே. விவிலியத்தின் உயர் பண்புகள், குறிப்பாக இயேசுவின் அறங்கள் திருக்குறளில் கண்டதனாலேயே போப் இதை மொழி பெயர்த்தார். இப்படித்தான் ஜெர்மானியரும் ருஷ்யரும் தமக்கும் தம் காலத்துக்கும் ஒத்த கருத்துக்களைத் திருக்குறளில் கண்டதனால் மொழிபெயர்த்திருக்கக்கூடும். டால்ஸ்டாயும் காந்தியும் தமக்கு ஒத்த சில கருத்துக்கள் திருக்குறளில் இருந்ததனால் திருக்குறளைப் போற்றினர். இவ்வாறே இந்தியாவிலுள்ள அறவியல் சார்பான எத்தனையோ நூல்களுள் திருக்குறளில் மட்டுமே உலகியல் சார்பை, மனிதச் சார்பைக் கண்டு ஆல்பர்ட் சுவைசர் திருக்குறளைப் போற்றினார். திருக்குறளை மட்டுமல்லாமல் பெரும்பாலான தமிழிலக்கிய நூல்களை இன்றைய உலகம் அறிந்து கொள்ள வேண்டும் என்று இன்று நாம் பெரிதும் விரும்புகிறோம். சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம் போன்ற நூல்கள் உலகியல் சார்பை, மனிதவியலை, மனித அறத்தை முன்னிறுத்துபவை. 18,19,20-ஆகிய நூற்றாண்டுகள் உலக வரலாற்றில் மீண்டும் மனிதனை முன்னிறுத்தும். இந்த நூற்றாண்டுகளின் பொது வளர்ச்சியோடு ஒத்துச் செல்லும் திருக்குறள் முதலிய சங்க இலக்கியத்தை நாம் விரும்பிப் பயில்கிறோம். செம்மொழி குறித்த ஆய்வு இத்தகைய ஆய்வாகவும் மொழி பெயர்ப்பாகவும் அமையத்தான் வேண்டும்.

4. குறள் மட்டும் அல்லாமல் வேறு எந்த ஒரு கவிதையையும் அல்லது காப்பியம் போன்ற இலக்கிய வகையினையும் பொருள்படுத்துவது என்பது ஆய்வாளர்களுக்கு ஒரு முக்கியமான பணி. தமிழிலக்கணத்தில் பொருள்கோள் என்பது ஒரு கூறு. ஒரு கவிதையில் ஓரடிக்குள் சொற்களை இடமாற்றியோ அல்லது இரண்டு முதல் பல அடிகளுக்கிடையில் சொற்கள் அல்லது தொடர்களை இடமாற்றியோ பொருள் கொள்வதைப் பொருள்கோள் என்று கூறுகிறோம். கொண்டு கூட்டுப் பொருள்கோள் என்பதை நச்சினார்க்கினியர் வியக்கத்தக்க முறையிலும் விநோதமான முறையிலும் பயன்படுத்திக் கவிதைகளுக்குப் புதிய பொருள் உருவாக்கினார். கருத்தரங்கில் கட்டுரை வழங்கிய க.பூரணச்சந்திரன் அவர்களும் பொருள் மயக்கம் பற்றிப் பேசுகிறார். வில்லியம் எம்சன் என்ற ஆங்கில அறிஞர் எழுதிய ஏழு வகைப் பொருள்மயக்கம் என்ற நூலைப் பயன்படுத்திக் கொண்டு எம்சன் கூறிய ஏழு வகைப் பொருள்மயக்கங்களில் ஒவ்வொன்றையும் விளக்கி ஒரு குறட்பாவை எடுத்துக்கொண்டு அதைப் பொருள் படுத்துவதிலுள்ள பொருள் மயக்கம் பற்றிப் பூரணச்சந்திரன் எழுதுகிறார். 'ஏம்பிக்விட்டி' என்ற ஆங்கிலச் சொல்லை பொருள்மயக்கம் என்று கூறுகிறார். இது சரி தானா என்று எனக்குள் ஒரு கேள்வி எழுகிறது (கவர் பொருள் என்று மொழி பெயர்ப்பது மேலும் சரியாக இருக்கக்கூடும்) இவ்வகைப் பொருள்படுத்தலில் திருக்குறள் மேலும் சிறப்படைகிறதா என்று உறுதியாகச் சொல்ல முடியவில்லை. 'வறியார்க்கொன்று ஈவதே ஈகை' என்பதில் வறியாருக்கு ஒன்று, வறியவருக்கு ஒரு பொருள் கொடுப்பதே ஈகை என்று நாம் இதுவரை பொருள்படுத்துகிறோம். இத்தொடரை வறியாரைக் கொன்று – வறியாரை ஒழித்து என இவர் பொருள் படுத்துகிறார். 'அந்தணர் நூற்கும்' என்ற குறளுக்கு இவர் சொல்லும் பொருள் சற்று வியப்பாக இருக்கிறது. அந்தணர் நூலுக்கும் அறத்திற்கும் ஆதியாய் – அடிப்படையாய் – முதலாய் இருப்பது – மன்னவன் செங்கோல் முறை என்று நாம் பொருள் காண்கிறோம். இப்படிப் பொருள் காண்பதிலும் சிக்கல் உண்டு. ஆனால் பூரணச்சந்திரன் அந்தணர் நூற்கும் – இயற்றும் – செய்யும் அறத்திற்கு அடிப்படையாய் இருப்பது மன்னவன் கோல் – மன்னவன் செங்கோல் அல்லது கொடுங்கோல் என்று பொருள்படுத்துகிறார். நவீன காலத்தில் அரசுக்கு ஒத்த முறையில்தான் அறம் பற்றி - நீதி பற்றி அறிஞர் பேசுகின்றனர் – அரசை மறுக்கும் முறையில் அறிவாளிகள் பேசுவதில்லை. அரசு செய்வது கொடுங்கோல் என்றாலும் அதையும் நீதி

என்றே அறிஞர் வழக்காடுகின்றனர். இத்தகைய ஒரு கருத்தை வள்ளுவருக்குள்ளும் இவர் காண்கிறார். அந்தணர் நூலுக்கும் அறத்திற்கும் என்பதிலுள்ள எண்ணும்மையை இவர் தவற விடுகிறார். 'பேய் அரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்', என்று பாரதி கூறியதை நாம் ஏற்கிறோம். வள்ளுவருக்கு இப்படிப் பொருள் காண முடியுமா? என்பது கேள்வி. 'சேவற் கொடியோன் காப்ப – ஏம வைகல் எய்திற்றால் உலகே' என்ற குறுந்தொகை கடவுள் வாழ்த்துப் பாடலின் இறுதி அடிக்கு இவர் கூறும் பொருள் – 'கொடியவன் காவலில் உலகம் பாதுகாப்பாக இருக்கிறது'. கொடியவன் என்பதற்கு இவர் காணும் பொருள்மயக்கம் இது.

இப்படி இன்னும் சில குறள்களுக்குள் பொருள்மயக்கம் காண்கிறார். கட்டுரையின் இறுதியில் மொழியை மனிதன் ஆள்வதில்லை. மொழிதான் மனிதனை ஆள்கிறது என்ற நவீன கால மொழி குறித்த கருத்தை எடுத்துரைக்கிறார். மொழியை எப்படியும் பொருள்படுத்தலாம் என்ற அளவுக்கு இவர் செல்லுகிறார். ஒன்றுக்கொன்று எதிரான இரண்டு கருத்துக்களும் சில சமயங்களில் உண்மையாக இருக்க முடியும். கவிஞர் எழுதும் போது இப்படி அவரை மீறியும் உண்மை வெளிப்படுவதுண்டு. இம்முறையில் கவர்பொருள் காண்பதற்கு இடமிருக்கிறது. நவீனகாலப் பொருள் என்று தொடங்கி தாறுமாறாகப் பொருள்படுத்துவது முறையன்று. எனினும் பொருள்மயக்கம் குறித்த பார்வை நமக்குத் தேவைதான். முதல்குறள் பற்றி இவர் காணும் பொருள் சிறப்பானது.

பழமொழி நானூறு, சமணர் எழுதிய அறநூல். ஒவ்வொரு வெண்பாவின் இறுதியிலும் இடம்பெறும் பழமொழிக்குப் பொருள்காணும் முறையில் முதல் மூன்று அடிகள் என்ற முறையில் வடிவம் அமைந்துள்ளது. இந்நூலுக்கு ஜெயமோகன் பொருள் காணும் முறையின் தனித்தன்மை குறித்து நாம் காணவேண்டும். பழமொழிகள், தமிழ்ச் சமூகத்தில் நாட்டு மக்கள் மத்தியில், நாட்டார் வழக்கில் எழுந்தவை. சமணர் வருகை கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது. தமிழ்ச் சமூகச் சூழலில், தமிழ்ப் பழமொழிகளைத் தம் தேவைகளுக்கு ஒத்த முறையில் சமண முனிவர் பயன்படுத்துகின்றனர். சமண முனிவர் கல்வியறிவு நிரம்பியவர். ஆடையின்றித் திரிபவர். நின்று உண்பவர். தலைமுடியைத் தாமே பறித்துக் கொள்பவர். இதைக் கண்டு மாற்றுக் கருத்துடையவர் அல்லது சமயத்தினர் சமண முனிவரை கேலி செய்திருப்பர். சூரியனைக் கண்டு நாய் குரைப்பதைப் போல என்று இன்று நாம் சொல்லுகிறோம். சூரியனை

நாய் புரிந்து கொள்ள முடியாது. ஆகவே நாய் குரைப்பதைப் பொருட்படுத்த வேண்டியதில்லை. 'திங்களை நாய் குரைத்தற்று' என்பது நூலில் இடம் பெறும் ஒரு பழமொழி. சமண முனிவரைச் சிலர் இகழ்வதைப் பொருட்படுத்த வேண்டியதில்லை. இகழ்பவர் நாய் போன்றவர். பாடலின் கருத்தை இந்த அடிப்படையில் சமண முனிவர் அமைத்துக் கொள்கிறார் என்கிறார் ஜெயமோகன். இதைப் போல வேறு சில பழமொழிகளுக்கும் சிறப்பான விளக்கம் தருகிறார். இரு வேறு காலம், இரு வேறு கருத்தினங்கள் இவற்றை இணைக்கும் முறையில் இந்நூல்.

5. வள்ளுவருக்குள் சமணத்தாக்கம் குறித்து அறிஞர் ஆராய்ந்திருக்கின்றனர். சங்ககாலச் சமூகத்தில் காமம், மது, பரத்தமை போன்ற தீய ஒழுக்கங்கள் இடம் பெற்றிருந்தன. இவை குறித்துச் சங்கக் கவிதைகளில் நாம் காண்கிறோம். சங்க காலத்தில் போர் வீரம் பாராட்டுக்குரியதாக இருந்தது. போரினால் நேர்ந்த அழிவுகள் குறித்தும் கவிஞர் பாராட்டியும் வருந்தியும் எழுதியுள்ளனர். இப்போக்கைப் போர் வெறியென அறவாணன் போன்றவர் கருதுகின்றனர். பிறன்மனை நோக்குதல் கவிதைகளில் பதிவு பெறவில்லை. ஆனால் வள்ளுவர் இவற்றைக் கடிந்துரைக்கிறார். வள்ளுவரின் இத்தகைய கருத்துக்களில் சமணர்களின் தாக்கத்தை நாம் காண முடியும். ஆனால் வள்ளுவரைச் சமணர்தான் என்று கூறுவதற்கு இன்னும் ஆதாரங்கள் தேவை. கடவுள் வாழ்த்து என்று பெயரிடப்பட்ட அதிகாரத்தில் கடவுள் என்ற சொல் இல்லை. இந்த அதிகாரத்தில் இடம் பெற்ற கருத்துக்களின் வழியே சமண சமயத்தாக்கத்தையும் கூடுதலாகக் காண முடியும். ஆதிபகவன் என்பது சமணர்களின் முதல் தீர்த்தங்கரரான ஆதிநாதரை வள்ளுவர் குறிப்பிடுகிறார் என்பதுதான் பொருத்தமாக இருக்கும். இவர்தான் பொறிவாயில் ஐந்து அவித்தவர். குறள் பாக்களில் தெய்வம் பற்றிய கருத்து விரிவாக இடம் பெறுகிறது. தொல்காப்பியர் தெய்வம் என்ற கருத்தை முதற் பொருளாகக் கூறவில்லை. கருப்பொருள்களில் ஒன்றாகக் குறிப்பிடுகிறார். அதாவது நிலம், பொழுது ஆகியவற்றில் (காலம் வெளி) கட்டுபட்டது தெய்வம். சைவர் முதலியவர் கூறும் இறைவன் நிலம், பொழுது ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டவர். காலத்தையும் வெளியையும் படைத்தவர் அவர். தனி முதல்வர். இத்தகைய இறைமைக் கருத்தைச் சமணர் ஏற்கவில்லை. சமணர்களின் தெய்வம் மனிதனாக இருந்து, மனிதனில் மேம்பட்டவர். காலம், வெளிகளுக்குள் அடங்கியவர். வள்ளுவரும் இவ்வகைத் தெய்வம்

பற்றியே பேசுவதாகக் காணலாம். சமணரின் மறுபிறப்பு, பிறப்பு அறுதல், புலனடக்கம், தவம் முதலிய கொள்கைகளும் வள்ளுவருக்கு உடன்பாடு. எனினும் சமணர்கள் முன் வைத்த கடும் துறவை – இளமை முதற்கொண்டே துறவு மேற்கொள்வதை, சமணத் துறவியின் புறக் கோலத்தை, தலைமுடி பறிப்பதை, நின்று உணவு உண்பதை வள்ளுவர் ஏற்கவில்லை. வள்ளுவரைப் பொருத்தவரை இல்லறத்திலிருந்து அறத்தைக் கடை பிடிப்பதைத்தான் விரும்புகிறார். இத்தகைய இல்லறத்தானுக்குத் துறவு தேவையில்லை. துறவிகளைக் காப்பதும் இல்லறத்தார் கடமை. வள்ளுவருக்குக் களவியலும் வேண்டும். கற்பியலும் வேண்டும். கடுமையான சமண நெறியில் பொருள்படுத்தினால் அவ்விய நெஞ்சத்தானும் முன் செய்த வினை காரணமாக ஆக்கம் பெறுவான். முன் பிறவியில் அறம் செய்தவன் இப்பிறப்பில் சிவிகையில் அமர்ந்து செல்வான். விதியை மனிதன் வெல்ல முடியாது. இல்லறத்தானுக்குப் பிறவி அறாது. முற்றிலும் துறந்தவனுக்கே பிறப்பு அறும். இப்படிப் பொருள்படுத்தினாலும் வள்ளுவரிடம் சமண மதத்தின் தாக்கம் உண்டு எனக்கருதலாம். எனினும் அவரைச் சமணர் என்று சொல்வதற்கில்லை. சமண சமயத்தை ஏற்றதன் மூலமே சங்ககால வாழ்க்கை குறித்து அவர் விமர்சனம் செய்தார் என்று கூறுவதற்கில்லை. தமிழ்ச் சமூகத்திற்குச் சமணர் செய்த சேவைகளை நாம் மறுப்பதற்கில்லை. சமணர் வருகைக்கு முன்பு தமிழ் சமூகமும் ஆரோக்கியத்தோடுதான் இருந்தது. தமிழ்ச் சமூகமும் வளமான சமூகம்தான். வள்ளுவர், இளங்கோ, சாத்தனார் முதலியவர்கள் அசலான தமிழர்கள். தொல்காப்பியரின் அகத்திணை, அதற்குள் செயல்பட்ட அறக்கருத்து முதலியவை தமிழருக்கு உரியவைதான். தமிழ் மக்களுக்கும் விரிவான சமூக அமைப்பு - ஆக்கம் முதலியவை இருந்தன.

பொ. வேல்சாமி அவர்கள் வள்ளுவரைச் சமணர் என்றே கூறுவதற்கான ஆதாரங்களை விரிவாகத் தருகிறார். சங்க இலக்கியம் முழுவதுமே கூடச் சமணர் இலக்கியம்தான் என்று நெடுங்காலம் கருதப்பட்டது. திருக்குறளில் சமணத் தாக்கத்தை ஒப்புக்கொள்ள விரும்பாத பரிமேலழகர் முதலியவர் தமக்குச் சார்பான சமயக் கருத்தை வள்ளுவருக்குள் கண்டிருக்கிறார். திருக்குறளைப் பொதுமறையென சைவர் முதலியவர் சாதிப்பதும்கூட திருக்குறளிலுள்ள சமணத் தாக்கத்தை மறைப்பதற்காகத் தான். வள்ளுரைச் சைவர் என்று சாதிக்கும் முறையில் எவ்வளவோ எழுதிப் பார்க்கின்றனர். பொ. வேல்சாமி அவர்கள் தன்

கட்டுரை நெடுகிலும் எடுத்துரைக்கும் ஆதாரங்கள் ஆழமான ஆய்வுக்குரியவை. நம் காலத்தில் வள்ளுவரைப் பகுத்தறிவாளர்தான் என்று சில அறிஞர் சாதிக்கின்றனர். வைதீகத்தை வள்ளுவர் கடுமையாகச் சாடுகிறார். இவ்வகையிலும் சமணர்களின் கருத்தியல்களோடு வள்ளுவர் உடன்படுகிறார் என்று கூறுவதற்கு வாய்ப்புண்டு. வள்ளுவர் தன் காலத்தில், தன் கால வரலாற்றில் வேரூன்றியவர். இத்தகைய வேரூன்றல் இல்லாமல் அற்புதமான கவிதைகள் இவர் செய்திருக்க முடியாது. வள்ளுவரின் கவித்துவம் தமிழிலக்கிய வரலாற்றில் வேரூன்றிக் கிளை விரிப்பது.

மேலும் ஒன்றை இங்கு குறிப்பிடலாம். தமிழ்ச் சமூகத்திற்குள் வந்த சமணர், அந்நியரல்லர். இந்தியா முழுவதும் பரவியிருந்த மாபெரும் தமிழ் நாகரிகத்தின் ஆற்றல் மிக்க கிளைகளெனச் சமணத்தையும் பௌத்தத்தையும் நாம் கருத முடியும். வேத மதத்தை ஆதி முதலே முற்றாக மறுத்த மாபெரும் கூட்டத்தில் நாமும் அவர்களும் இருந்தோம். அவர்களை இன்று அந்நியப்படுத்திக் கூறுவது கூட முறையில்லை. இந்திய நாகரிகமென அறியப்படுகிற நாகரிகம் மேலடுக்கில் ஆரிய நாகரிகம். அடித்தளத்தில் திராவிட நாகரிகம். அடித்தளம் முழுவதும் திராவிட நாகரிகம்.

அண்மையில் ராஜ் கௌதமன் எழுதி வெளியிட்டுள்ள ஒரு நூல் பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் சமூக உருவாக்கமும் என்பதாகும். இந்நூலில் இந்தியா முழுவதும் அவ்வப் பிரதேசங்களிலிருந்து தமக்குள் ஓயாமல் உறவு கொண்டு, இத்தகைய உறவின் மூலம் கொண்டும் கொடுத்தும் உறவாடி ஆக்கம் பெற்ற மூவகைத் தொகுதி மக்கள் பற்றிச் சொல்கிறார். வடக்கில் ஆரியர், இடையில் புத்தரும் சமணரும் தெற்கில் தமிழர். ஆரியத்திற்கும் தமிழியத்திற்கும் இடையில் எதிர்நிலையையே நம் காலத்தில் முதன்மைப்படுத்துகிறோம். இந்திய வரலாற்றில் சமணர், பௌத்தர் ஆகியவர்களின் ஆக்கத்தை ஒதுக்குகிறோம். இம்மூவரையும் சம நிலையில் வைத்து, இவர்களுக்கிடையிலான உரையாடலாக வரலாற்றைக் காண்பது வளமான பார்வையாக அமையக்கூடும்.

6. கருத்தரங்கில் முன்வைக்கப்பட்ட கட்டுரைகளில் சிறப்பான இன்னொரு கட்டுரை. பேராசிரியர் மாதையன் அவர்களின் கட்டுரை. திருக்குறளில் அரசு உருவாக்கத்தை முதன்மைப்படுத்தும் கட்டுரை. அண்மைக் காலத்தில் தமிழியல் ஆய்வில் புதிய தடங்கள்

திறக்கப்படுகின்றன. தொல்காப்பியரின் இலக்கண உருவாக்கம், சங்க இலக்கியத் தொகுப்பு முயற்சி முதலியவை.. அவ்வக்கால சமூக உருவாக்கம் மற்றும் அரசு உருவாக்கத்திற்கு இணையான ஆக்கங்கள். ஒரே கால அளவில் இவை இணையாக நடைபெற்றன என்பது மட்டுமல்ல. இலக்கண உருவாக்கம் இலக்கியத் தொகுப்பு உருவாக்கம் ஆகியவை சமூகம் மற்றும் அரசு உருவாக்கத்திற்கும் துணையாக அன்றியும் தேவையாக இருந்தன. இதன் காரணமாகவே இத்தகைய தொகுப்பு முயற்சிக்கு அரசுகளும் ஆதரவாக, அன்றியும் தூண்டுதலாக இருந்தன. ஆங்கிலேயர் இந்தியாவில் தம் அரசு ஆதிக்கத்தை உருவாக்கவும் வலுப்படுத்தவும் முயற்சி செய்த அதே காலத்தில் இந்து சட்டத் தொகுப்பு இந்தியாவில் சாதி முதலியவை குறித்த விவரத் தொகுப்பு இந்தியாவின் தொன்மை குறித்த நூலாக்கம் முதலியனவும் நடைபெற்றதை இங்கு சுட்டிக் கூறலாம். அரசு தன் ஆதிக்கத்திற்கு உட்படுத்தும் சமூகத்தைக் கூடியவரை அதிக அளவில் புரிந்து கொள்ளும் நோக்கிலேயே இவ்வகை விவரத் தொகுப்புக்களை உருவாக்குகின்றன.

மாதையன் அவர்களின் ஆய்வுக்குப் பேருதவியாக எங்கல்சின் 'தனிச்சொத்து, குடும்பம், அரசு' ஆகியவற்றின் தோற்றம் என்ற நூல் பயன்பட்டிருக்கக் கூடும். திருக்குறளில் அரசின் ஆறு உறுப்புக்கள், அமைச்சர், தூதுவர், ஒற்றர், பெரியார் துணை, அரசுப் பணிக்குரியவரைத் தெரிவு செய்தல், அரண் முதலிய விவரங்கள் விரிவாக இடம் பெறுகின்றன. இவற்றின் வழியே வள்ளுவர் காலத்தில் நடைபெற்ற அரசு உருவாக்கத்தை நாம் அறிந்து கொள்ள முடியும். அரசு உருவாக்கத்திற்கு இணையாகத் தனிச்சொத்தினை அடிப்படையாகக் கொண்ட குடும்ப உருவாக்கம் குறித்து மாதையன் ஆராய்கிறார். ''மிச்சில் மிசைவான் புலம்'' 'செல்லான் கிழவன் இருப்பின்' ஆகிய குறள்கள் நிலத்தில் தனியுடமை ஏற்பட்டதைக் குறிக்கின்றன. உழவுத் தொழில் குறித்து மிக உயர்வாக வள்ளுவர் குறிக்கிறார். நாட்டில் அரசருக்கு நிகர் குடும்பத்தில் தலைவன். அவனுக்கு வாழ்க்கைத்துணை மனைவி. இந்த ஒப்புமையை இன்னும் நீடிப்பதற்கில்லை. இவரது ஆய்வில் குடி/குலம் பற்றிய ஆய்வு முக்கியமானது. முன்னர் நிலவிய இனக்குழுச் சமூகத்தின் தொடர்ச்சியாகவும் எச்சமாகவும் குடிகள்/ குலங்கள் அரசு உருவாக்கச் சூழலில் நிலவுகின்றன. வள்ளுவரின் குறட்பாக்களில் குடி ஆளுமைக்கு உயரிய இடமுண்டு. இதுபற்றி மாதையன் விரித்துரைப்பது நம் கவனத்திற்கு உரியது. இச்

சமயத்தில் சான்றாண்மை குறித்து ராஜ் கௌதமன் ஆய்வை இங்குக் குறிப்பிட வேண்டும். இனக்குழுச் சமூகத்தின் உயரிய பண்புகளைத் தமக்குள் தக்கவைத்துக் கொள்ளும் சான்றோர் அரசு உருவாக்கம் நடைபெறும் சூழலிலும் தம் குணம் குன்றாமல் வாழ்கின்றனர். சான்றாண்மை/ பண்புடைமை இவர்களது பெரும் குணம். ஆனால் தனியுடைமை, அரசு உருவாக்கச் சூழலில் செல்வத்திற்கு, அரசதிகாரத்திற்கு முதன்மை நேர்கிறது. இச்சூழலில் சான்றோர் தம் நிலை தளர்வுக்கு உள்ளாகிறது. மாதையன் இவரது ஆய்வை தம் கவனத்தில் கொள்வது தேவை.

7. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஆசாரக் கோவையில் இடம்பெறும் வைதீகம் குறித்து விரிவான விவரங்களை தன் கட்டுரையில் தொகுத்துத் தருகிறார் காசி. மாரியப்பன். சங்க காலத்திலேயே தமிழ்ச் சமூகத்தினுள் ஆரியர் நுழைவை நாம் காண்கிறோம். குறிப்பாகப் பார்ப்பனரின் வேள்விமுறை, பார்ப்பனர்க்கு மரியாதை முதலியவற்றை மன்னர் கடைப்பிடித்தனர். பாரி முதலிய வேளிர்களைப் பொருத்தவரை வேள்வி செய்யவில்லை. வைதீகத்திற்கு அவர்கள் இரையாகவில்லை. தமிழகச் சூழலில் அரசு உருவாக்கத்தோடு பார்ப்பனர் ஒத்துழைத்தனர் என்பதை இவ்வாறு நாம் புரிந்து கொள்ளமுடியும். சங்க காலத்தை அடுத்த சங்கப் பிற்காலத்தில் மக்கள் மத்தியிலும் வைதீகம் இடம் பெற்றதை ஆசாரக் கோவை புலப்படுத்துகிறது. கட்டுரையாளர் சுட்டிக்காட்டுகிறபடி ஆசாரக்கோவையில் மட்டுமல்லாமல் வைதீகத்தின் தாக்கத்தைப் பதினெண்கீழ்க்கணக்கின் அனைத்து நூல்களிலும் காணமுடியும். தமிழ்ச் சமூகத்திற்கு வைதீகம் செய்து வந்த கேடுகளை இன்றளவும் நாம் அனுபவிக்கிறோம். இத்தகைய கேடுகள் சமூக வாழ்வின் அனைத்துத் தளங்களிலும் ஊடுறுவித் தங்கிவிட்டன.

இந்த இடத்தில் நாம் இன்னொரு உண்மையையும் காணத்தவறக்கூடாது. ஆசாரங்கள், சடங்குகள், முதலியவற்றைப் பார்ப்பனர் மட்டுமே இங்கு நுழைத்தனர் என்பது சரியான பார்வை என்று சொல்வதற்கில்லை. சடங்குகள் முதலியவற்றின் பெருக்கத்திற்குச் சமணர், பௌத்தர் முதலியவர்களும்தான் காரணம் என்று சொல்லமுடியும். புராணங்கள், விழாக்கள், வழிபாடுகள், விரதம் முதலியவற்றைச் சமணர்களும் கொண்டிருந்தனர். மேலும் ஓர் உண்மை. இவ்வகையான சடங்குகள் முதலியவை வரலாற்றுக்கு முற்பட்ட தொன்மைக்கால மக்கள் மத்தியிலிருந்தே தொடர்பவை. பிறப்பு, இறப்புச் சடங்குகள், முன்னோர்

வழிபாடு, வெறியாட்டு, பேய் நம்பிக்கை, வேளாண்மை முதலியவற்றுக்கான சடங்கு, இல்லத்தில், மரங்களில் பேய்கள்/தெய்வங்கள் தங்கியிருக்கின்றன என்ற நம்பிக்கை முதலியவை தொன்மைக்கால மக்களின் நம்பிக்கைகள். இவ்வகைச் சடங்குகள் குறித்துச் சங்ககாலச் சமூகத்திலும் விரிவாகக் காண்கிறோம். இவற்றுக்காகப் பார்ப்பனரை மட்டும் நொந்து பயனில்லை. இவ்வகைச் சடங்குகள் தவிர முற்பிறப்பு, மறுபிறப்பு, மேலுலகம், கீழுலகம், ஆவிகள், தெய்வங்கள் பற்றிய நம்பிக்கைகளும் தொன்மைக்காலச் சமூகத்தில் மக்களுக்கு இருந்த நம்பிக்கைகளாகத்தான் இருக்கமுடியும். செடி, கொடி, மரங்கள், விதைகள் மூலம் தொடர்ந்து அழியாமல் உற்பத்தியாகின்றன. இவ்வகை அனுபவம் உயிர்கள், மற்றும் மனிதப் பிறப்பின் தொடர்ச்சி பற்றிய நம்பிக்கைக்கு ஆதாரமாகலாம். மரங்கள் பூக்கின்றன, காய்க்கின்றன. மரங்களுக்குள் உயிரியக்கம் தொடர முடியும். பாட்டனைப் போல பேரனின் முகம், குணம், திறன்கள், பேரனுக்கும் இருக்கின்றன. ஆகவே ஆன்மா தொடர்கிறது, என்ற கருத்தும் இப்படி ஏற்பட முடியும். ஒருவன் ஏன் ஊனமாகப் பிறக்கவேண்டும்? இளமையிலேயே ஏன் சாக வேண்டும்? விபத்துக்கள் ஏன் ஏற்படவேண்டும்? இவற்றுக்கெல்லாம் முன்வினை காரணமாக இருக்க வேண்டும். இப்படியெல்லாம் எத்தனையோ நம்பிக்கைகள் தொன்மைக்கால மக்களுக்குள் இருந்திருக்க முடியும். இவை குறித்தெல்லாம் அடுத்து வந்த காலங்களில் மனிதர் சிந்திக்கின்றனர். இந்தச் சிந்தனைகள் தர்க்க முறைக்கு வழி திறக்கின்றன. தொடர்ந்து பலவகையான தர்க்கங்கள். கடவுள் உண்டு, இல்லை. ஆன்மா உண்டு, இல்லை. இப்படி எவ்வளவோ சிந்தனைகள், பலவகையான மெய்யியல்கள். இவர்களில் ஒரு வகையினர் சமணர். இன்னொரு வகையினர் பௌத்தர். மேலும் சில வகைகள். சார்வாகம், சாங்கியம், நியாயம், வைசேடிகம். சிந்தனை வளர்ச்சியில் மேலும் தீவிரம் கொள்ளும் போது எல்லாமே இறைமை – அத்வைதம். இறைவன் வேறு, உயிர்கள் வேறு – துவைதம். இறைவனும் உயிர்களும் ஒன்றோடொன்று ஊடாடுபவை - விசிஸ்டாத்வைதம். வேதங்களுக்கு இப்படி விளக்கம் சொன்னவர் சங்கரர் முதலியவர். இவர்கள் திராவிடர்/தமிழர்.

திருக்குறள் முதலிய அறநூல்கள், பதினெண்கீழ்க்கணக்கில் ஒரு தொகுதியாக அமைகின்றன. தமிழ்ச் சமூகத்தின் தொடக்கம் முதல் எல்லா இலக்கியங்களிலுள்ளும் அறம் பற்றிய ஆய்வுகள் தொடர்கின்றன. அறவியல் என்ற கருத்தியல் உலகில் எல்லா சமூகத்தினுள்ளும் அழுத்தமாக

இடம்பெறும் ஒன்று. உலகில் எல்லா மதங்களினுள்ளும் அறங்கள் இடம்பெறுகின்றன. சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்றவர்கள் மட்டுமல்ல, சீனாவில் கன்பியூசியஸ் வரை தொடக்ககாலம் முதற்கொண்டே அறச்சிந்தனைகள் தொடர்கின்றன. மேற்குலகில் மெய்யியலின் மிக முக்கியமான ஒரு பகுதி அறஇயல். மேற்குலகில் ஸ்பினோசா, கான்ட், ஹெகல், நீட்சே முதலியவர்கள் அறஇயல் குறித்து அழுத்தமான சிந்தனையுடையவர்கள். மார்க்சியமும் அறம் பற்றிப் பேசுகிறது. இந்தியாவின் சமயங்கள் அனைத்தினுள்ளும் அறவியல் இடம் பெறுகிறது. திருக்குறள் முதலிய அறவியல் கருத்துக்கள் பற்றி நாம் ஆய்வு செய்யும் பொழுது உலக அளவிலான அறவியல் சிந்தனைகளோடு ஒப்பிட்டு ஆய்வது நமக்குத் தேவை. இவ்வகையில் ஒரு விரிவான ஆய்வைத் தந்தவர் அறிஞர். க.த. திருநாவுக்கரசு. பதினெண்கீழ்க்கணக்கில் இடம்பெறும் அறவியல் பற்றிய ஆய்வும் தேவை. இனியேனும் இதைச் செய்ய வேண்டும்.

சங்க இலக்கியத்தில் இடம் பெறும் அறம் பற்றிய ஆய்வைச் சங்க இலக்கியத்தின் தோற்றத்தோடு கூடிய வரலாற்றில் வைத்துச் செய்வது பொருத்தமாக இருக்கும். சங்ககாலம் ஒரு மாறுதல் காலம். இனக்குழுச் சமூகம் மங்கி முற்றிலும் மறைந்தும் மறையாமலும், அழிந்தும் அழியாமலும் இருந்த காலம். அரசு உருவாக்கத்திற்கு இடம் தந்து இனக்குழுக்கள் மறைந்து கொண்டிருந்த காலம். இனக்குழு வாழ்வில் மக்கள் மத்தியில் ஏற்றத்தாழ்வு இல்லை. உழைப்பும் பகிர்வும் எல்லோருக்கும் உரியவை. ஆதிக்கம் எந்த வடிவிலும் இல்லை. தனியுடைமையும் அரசதிகாரமும் தோன்றி வளரும் சூழலில் இனக்குழுச் சமூகத்தின் பண்பை மக்கள் இழக்க முடியாது. இனக்குழுச் சமூகம் வேந்தர்களின் ஆதிக்கத்திற்கு இடம் கொடுத்துத் தன்னை அழித்துக்கொள்ள முடியாது. பாரி முதலிய வேளிர்கள் இனக்குழுச் சமூகத்தின் தலைவர்கள். இவர்களுக்காக மக்கள் போரிட்டு மடிகின்றனர். இனக்குழுச் சமூகத்தை வேந்தர் முற்றாக அழித்துவிடவும் இயலாது. இவர்களோடு சமரசம் செய்து கொள்வதும் தேவை. முன்னைய சமூகத்தின் தொடர்ச்சிதான் சான்றாண்மை, ஒப்புரவு முதலிய அறங்கள். இன்க்குழுச் சமூகத்தின் தொடர்ச்சி இந்த அறம். தனியுடைமை மற்றும் அரசுக்கு வேறுவகை அறம்.

அறவியல் கருத்துக்களைப் பொருத்தவரை சமூகத்திற்குச் சமூகம் மாறும் என்பது ஒரு கருத்து. நிலவுடைமைச் சமூகத்தில் ஒரு வகை அறம். முதலாளியத்திற்கு இன்னொரு வகை அறம். சமதர்மத்திற்கு வேறு வகை

அறம். சமூகத்தின் பல்வேறு பிரிவுகளில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வகை அறம். உழவர்களுக்கு ஒரு வகை. வணிகர்களுக்கு ஒரு வகை. ஆணுக்கு ஒரு வகை. பெண்ணுக்கு ஒரு வகை. இப்படி அறத்தை நூறு வகைகளில் பிரித்துப் பேசமுடியும். காலத்திற்குக் காலம் அறம் மாறுபடும். தேசத்திற்குத் தேசம் அறம் மாறுபடும். பிராமணர்க்கு ஒருவகை அறம். சூத்திரனுக்கு ஒரு வகை. சமணத்தில் ஒரு வகை. சைவத்தில் வேறு வகை. இப்படியும் பேசலாம். இத்தகைய விவாதங்களிலிருந்து ஒரு முடிவுக்கு வர இயலாது. எனினும் ஒரு கருத்தை உறுதியாகச் சொல்ல முடியும்.

ஏற்றத்தாழ்வுகள் நிலவுகிற காலம் முழுவதும் ஆதிக்கத்தில் உள்ளவர்களுக்கு ஒருவகை அறம். ஆதிக்கத்திற்கு உள்ளாகியவருக்கு வேறு வகை அறம். ஆதிக்கத்திலுள்ளவர் மக்களைத் தமக்காக உழைக்க வைத்து, வேலை வாங்கி அவர்கள் மீது சுரண்டலையும் ஒடுக்கு முறையையும் திணித்து நாகரிகம், தொழில்வளர்ச்சி என்றெல்லாம் சொல்லி இதற்கான கல்வி, அறம், ஒழுக்கம் என்று பேசி உழைக்கும் மக்கள் இவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டு அடங்கி, ஒடுங்கி இவ்வாறு வாழ்வதிலும் ஆக்கம் உண்டு, இன்று இல்லாவிட்டாலும் நாளை, இப்பிறப்பில் இல்லாவிட்டாலும் மறுபிறப்பில், இந்த உலகில் இல்லாவிட்டாலும் வேறு உலகில்- இப்படி நம்பி இயன்றவரை அடக்குமுறையைச் சுரண்டலை ஏற்றுக் கொண்டு வாழவேண்டும். சுரண்டலும் ஒடுக்குமுறையும் அதிகரிக்கும் காலங்களிலெல்லாம் மக்கள் கலகம், புரட்சி எனச் செய்வது அவர்களுக்கான நியாயம். வரலாற்றுக் காலம் முழுவதும் சுரண்டலுக்கு, ஒடுக்குமுறைக்கு எதிரான கலவரங்கள் நிகழ்கின்றன.

இங்கு மார்க்சின் அடிப்படை ஒன்றைக் குறிப்பிடுவது பொருந்தும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இயற்கையோடும் சமூகத்தோடும் மனிதர் ஒன்றியிருந்தனர். ஏற்றத்தாழ்வு, தனியுடைமை, அரசு ஆகியவை தோன்றி நிலைபெற்ற காலத்தில் இயற்கையிலிருந்தும் சமூகத்திலிருந்தும் மனிதர் அந்நியப்பட்டனர். இயற்கை ஒரு சிலர் கைபட உழைக்கும் மக்களுக்கு நிலம் இல்லை. இயற்கை இல்லை. ஏற்றத்தாழ்வு காரணமாகச் சமூகம் தனக்குள் பிளவுபட்டது. ஆண்டான் அடிமை என்ற பிளவு. இவ்வகை நிலவரம் காரணமாக மனிதன் தனக்குள்ளும் பிளவுபடுகின்றான். அந்நியமாகிறான். யாருக்காகவோ யாருடைய தேவைகளை நிறைவேற்றுவதற்காகவோ மனிதன் உழைக்கிறான்.

உழைப்பின் விளைவு இவனுக்குச் சொந்தமில்லை. ஆண்டான் தருவது கூலி. ஆண்டான் விருப்பத்திற்கு முழு அளவில் ஒத்துழைக்க முடியாத பொழுது அடி, உதை. இது இவனுக்கு ஒரு அவலம். ஆள்பவனுக்குள்ளும் வரலாற்றுக்காலம் முழுவதும் இந்நிலையே தொடரும். மீண்டும் ஒரு காலம் வரும். அப்பொழுது இயற்கை, அனைவருக்கும் பொது. சமூகத்தில் பிளவு இல்லை. மனிதன் தனக்குள்ளும் பிளவு இல்லை. அந்நியமாதல் எந்த வடிவிலும் இல்லை. தனியுடைமைக்கு, அரசு அதிகாரத்திற்கு மாறாக மனிதர் தம்மைத்தாமே சுய நிர்வாகம் செய்து கொள்கின்றனர்.

வரலாற்றியக்கத்தை மார்க்ஸ் இப்படித்தான் விளக்குகிறார். முரண்களோடுதான் வரலாறு இயங்குகிறது. உற்பத்தி பெருக வேண்டும். வரலாற்றில் வளர்ச்சி தேவைதான். ஆளும் வர்க்கம் அதிகம் எடுத்துக்கொள்கிறது. சமபங்கீடு இல்லை. இதன் காரணமாக வரலாற்றுக்குள் பகைமை, போர், கொடுமைகள். ஒரு பக்கம் வீக்கம் மறுபக்கம் தேய்வு. வீக்கமும் ஒரு நோய். தேய்வு இன்னொரு வகை நோய். இவ்வகைச் சமூகம் ஆரோக்கியமில்லாத சமூகம். வளர்ச்சி என்பதில் அனைவருக்கும் சம பங்கு தேவை. ஆதிக்கம் இருக்கும் வரை சமூகத்தில் அமைதி நிலவ முடியாது. அதிகாரம் செய்துதான் மனிதர்களைக் கட்டுப்படுத்துவது என்பது உண்மையில்லை.

ஆதிக்கம் செய்பவனுக்கு ஓர் அறம். அடிமைப்பட்டவனுக்கு இன்னொரு அறம் என்று சொல்வது அறமுமாகாது. ஆதிக்கம் செய்வது அநீதி, கலகம் செய்வது நீதி. ஆகவே அறம், பண்பு, ஒழுக்கம், நீதி, கடவுள், மேலுலகம், தூய்மை என்றெல்லாம் சொல்லி மனிதர்களை ஒடுக்குவது, ஏமாற்றுவது அநீதி, கயமைத்தனம். ஒரு தேசம் இன்னொரு தேசத்தை ஒடுக்கி, தான் உயர்வது நீதி ஆகாது. உண்டு பெருத்தவன் ஓயாத நோய்க்கு உள்ளாவான். ஆதிக்கம் செய்பவன் அச்சத்தோடுதான் வாழவேண்டும். ஆண்மை என்று தனியாக இல்லை. தெய்வங்கள் மனிதன் தோற்றுவித்தவை. புரோகிதர் சமூக வாழ்வுக்குத் தேவை இல்லை. சமணர்களும் பௌத்தர்களும் குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலுக்கு அறிவு சொன்னவர். அறம் சொன்னவர். நமக்கு மன்னர்கள் தேவையில்லை. மத பீடங்கள் தேவையில்லை. நாம் நவீன காலத்தில் வாழ்கிறோம். சமத்துவம், சமதர்மம்தான் நமக்கான அறம். அறவியல் குறித்த ஆய்வு என்பது இங்கு தான் நிறைவு பெற முடியும்.

மார்க்சின் இன்னொரு கருத்தையும் நம் கவனத்தில் கொள்ள வேண்டும். கோத்தா வேலைத்திட்டம் என்ற ஒரு கட்டுரையில் மார்க்ஸ் சிலவற்றைச் சொல்லுகிறார். இயந்திரங்களைப் பயன்படுத்தித் தொழிலாளிகளின் உழைப்புத் திறனைக் கூடுதலாகச் சுரண்டி தொழிலாளிகள் உற்பத்தி செய்யும் உபரி மதிப்பை முதலாளி அபகரித்துக் கொள்கிறான். உபரி மதிப்பை அனைத்துத் தொழிலாளிகளுக்குச் சம அளவில் முழுமையாகப் பகிர்ந்து கொடுப்பதைச் சமதர்மம் என மார்க்ஸ் ஒப்புக் கொள்ளவில்லை. அப்படிப் பகிர்ந்து கொடுக்கப்படும் உபரி மதிப்பைத் தொழிலாளிகள் உண்டோ உடுத்தியோ தீர்ப்பார்கள் என்றால் தொழிற்சாலையில் தேயும் இயந்திரங்களைப் பழுது நீக்க முடியாது. புதிய இயந்திரங்களைப் பொருத்தி தொழிலாளிகளுக்கான வேலை வாய்ப்பை விரிவுபடுத்த இயலாது. நகரத்தில் நிர்வாகம் நடத்த முடியாது. தொழிலாளிகளுக்குத் தேவையான மருத்துவமனைகளோ குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கும் கல்வி நிலையங்களோ செயல்படுத்த முடியாது. இவற்றுக்கெல்லாம் எடுத்த தொகை போக மீதித் தொகையைத் தொழிலாளிகள் பகிர்ந்து கொள்வதுதான் தேவை. முதலாளி கூடுதலாக எடுத்துக் கொண்டு வெற்று ஆடம்பரங்கள் செய்வதை ஏற்பதற்கில்லை. ஒரு தேசத்தில் கலை வளர்ச்சி முதலியன இல்லாமல் முடியாது. கலைஞர்கள், கல்விக் கூடங்கள், புதிய வகை ஆய்வுகள் இல்லாமல் வரலாற்றில் வளர்ச்சி இல்லை. எந்தச் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் குறைவாக இருக்குமோ அது நல்ல சமூகம். கூடியவரை அனைவருக்கும் சமநீதி தேவை. முற்றான சமதர்மம் நிலவ நெடுங்காலம் பிடிக்கும். மக்கள் நாயகம் என்ற பெயரில் மக்கள் ஏமாற்றப்படுவதை நாம் ஒப்புக் கொள்வதற்கில்லை. தொழில் வளர்ச்சி என்ற பெயரில் இயற்கை நாசமாவதை ஏற்க முடியாது. அந்நியர் ஆளுகைக்கு நம்மையோ நம் தேச வளங்களையோ விட்டுத்தர முடியாது. இப்படி இன்னும் எவ்வளவோ சொல்லலாம். நவீன காலத்துக்கு ஒத்த பார்வை இது. இதற்கான அறம் நமக்குத் தேவை. ஆதிக்கம் எந்த வடிவிலும் தேவை இல்லை. சாதி நமக்கு வேண்டாம். சமூகத்தில் ஒரு சிலர் புனிதமானவர் என்பது பொய். உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை என்பதான தவம் தேவை. இப்படி எல்லாவற்றையும் மறு ஆய்வுக்கு உட்படுத்தத் தான் வேண்டும். அரசியல், பொருளியல் முதலிய அனைத்தையும் மறு ஆய்வுக்கு உட்படுத்துவது போலவே இலக்கியம், வரலாறு, அறம் முதலிய அனைத்தும்

மறு ஆய்வுக்குரியவை. ஆய்வு முறைகளையும் தொடர்ந்து புதுப்பித்துக் கொள்ள வேண்டும். அதிகாரம் எந்த வடிவிலும் நமக்குத் தேவை இல்லை. இவை நம் காலத்துக்குத் தேவையான நவீன நோக்கு. பழமை என்பதற்காக எதையும் கொண்டாட வேண்டாம். வள்ளுவரே நமக்குப் போதும் என்பதும் உண்மையில்லை. சமணர்கள் முதலியவர்களும் வரலாற்று வளர்ச்சியில் ஒரு கட்டத்தைச் சேர்ந்தவர். நம்கால வரலாற்றில் நாம் முன் செல்லவேண்டும்.

தமிழ்ச் சமூகத்தில் அறவியல் என்ற கருத்தியலின் தோற்ற காலம் குறித்து சிலவற்றை இங்கு காணவேண்டும். இனக்குழுச் சமூகம் தொடர்ந்து தன் ஆற்றல் அழிந்த நிலையில் சங்ககாலத் தனியுடைமை/அரச ஆதிக்க சமூகம் நிலைபெற்றது என்பது வரலாறு. இனக்குழுச் சமூகத்தின் பொதுமை அறம் சங்க கால சமூகத்தினுள்ளும் சான்றோர் வழியாகத் தொடர்கிறது. உலகம் இரண்டு படுவதை வள்ளுவர் ஏற்கவில்லை. திரு வேறாகவும் தெள்ளியர் வேறாகவும் முரண்படுவது வள்ளுவருக்கு உடன்பாடில்லை. ஊருணி நீர் அனைவருக்கும் உரியது. சமூகத்தில் உற்பத்தியாகும் செல்வம் அனைவருக்கும் உரியது. இதுவே வள்ளுவர் காணும் தமிழ் அறம். பக்குடுக்கை நன்கணியார் கருத்தும் இதுதான். ஒரே தெருவில் ஒரு வீட்டில் மணப்பறை. இன்னொரு வீட்டில் சாப்பறை என்று முரண்படுவது பண்பாடில்லை. இத்தகைய உலகம் இன்னாத உலகம். இது மாறத்தான் வேண்டும். செல்வத்தின் பயன் ஈதல். ஈயாமல் சேர்த்து வைத்தால் நிகழ்வன தவறுகள் என்கிறார் நக்கீரர். இத்தகைய தமிழறத்தின் நீட்சியை முன்னும் பின்னும் இன்றளவும் காண்கிறோம். வள்ளுவரின் சான்றாண்மைக்கும் ஒப்புரவுக்கும் இந்த அறமே மையம். சாதி, மதம் ஆகியவற்றின் இறுக்கம் இந்த அறத்தை அழிக்கும். சித்தரியமும் தமிழறமும் வேறு வேறு அன்று. தமிழ்ச் சமயங்களினுள்ளும் ஊடுருவி இருப்பது இவ்வறம். களவியலில் இடம் பெறும் அறத்தொடு நிற்றல் கற்பியலுக்கும் நீள்கிறது. தமிழ் அரசியலும் பொருளியலும் இதன் சார்பில் இயங்குபவை. பதினெண்கீழ்க்கணக்கில் அறவியல் ஆய்வும் இதை நோக்கியதாகத்தான் இருக்க முடியும்.

## குறிப்பு:

**நாமக்கல் – அரசுக்கலைக் கல்லூரித் தமிழ்த் துறையும் செம்மொழி உயராய்வு நிறுவனமும் இணைந்து 27,28,12-2007இல் நடத்திய கருத்தரங்கின் இறுதியில் ஞானி நிகழ்த்திய தொகுப்புரையின் எழுத்து வடிவம்.**

# 10. பன்முகப் பார்வையில் பதினெண் கீழ்க்கணக்கு

1. தமிழ், செம்மொழி என்று இனம் கண்டு அறிவிக்கப்பட்ட நிலையில் சங்க இலக்கியம் குறித்தும் சங்ககாலத்திற்குப் பிற்பட்ட கீழ்க்கணக்கு நூல்கள் குறித்தும் விரிவான முறையில் கற்பதற்கும், ஆய்வதற்கும் இதன்மூலம் தமிழிலக்கியம் மட்டுமல்லாமல் தமிழ் வாழ்வின் மரபுகளையும் தொகுத்துக் கொள்வதற்கும் நவீனகால நோக்கில் இவைகுறித்து மதிப்பீடு செய்வதற்குமான வாய்ப்புக்கள் நமக்குக் கிடைத்துள்ளன. இதற்காக நாம் பலருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

2. சங்க இலக்கியத் தொகுப்பு என்ற முறையில் இவற்றுள் கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டும் அடங்கும் என்ற போதிலும் பாட்டும், தொகையும் என அறியப்பட்ட 18 மேற்கணக்கு நூல்களோடு, கீழ்க்கணக்கு நூல்களை ஒப்பிட்டுப் பார்த்து, கீழ்க்கணக்கு நூல்களின் தகுதி, தரம் பற்றியும் சிலவற்றைச் சொல்ல வேண்டியிருக்கிறது. சங்ககாலம் முடிவுக்கு வந்து, மேலும் சில நூற்றாண்டுகள் கழிந்த நிலையில், தமிழ்ச்சமூகத்தில் களப்பிரர்களின் ஆளுகையும் சமணம், பவுத்தம் ஆகிய சமயங்களின் தாக்கமும் ஏற்பட்ட பின்புலத்தில் கீழ்க்கணக்கு நூல்கள் படைக்கப்பட்டன. கீழ்க்கணக்கு நூல்களினுள்ளும் தனிச்சிறப்புடன் திருக்குறள் இன்றளவும் விளங்குகிறது. இதற்கு அடுத்தப்படியான தனித்தன்மையும் சிறப்பும் கொண்டவை என நாலடியாரையும், பழமொழி நானூறையும் குறிப்பிடுவது பொருந்தும். தொகுத்துப் பார்க்கும்போது, பதினெட்டு கீழ்க்கணக்கு நூல்களில் அறநூல்கள் 11, அன்பின் ஐந்திணையைப் பற்றிய நூல்கள் 6, போர்க்களக்காட்சியை விவரிக்கும் புறத்திணை சார்ந்த நூல் 1, ஒவ்வொரு நூலிலும் அடங்கியுள்ள பாடல்களின் எண்ணிக்கையைப் பொறுத்த அளவிலும் சிலவற்றில் நானூறும் நானூற்றுக்கு மேற்பட்ட பாடல்களும், பிற பெரும்பாலான நூல்களில் அதிகளவில் ஒவ்வொரு நூலிலும் நாற்பது பாடல்கள் சிலவற்றில் 50,70,150,ம் ஆக அமைந்துள்ளன. எண்ணிக்கையைப் பொறுத்தளவில் நூல்களின் தரம்பற்றி நாம் பேசுவதற்கில்லை. சில நூல்களில் சமணத்தின் தாக்கம் வெளிப்படையாகத் தெரிகிறது. இரண்டொரு நூல்களில் வைதீகத்தின் தாக்கம் தெரிகிறது. சமண முனிவர்கள்

மருத்துவத்துறையிலும் தேர்ந்தவராய் இருந்திருக்க வேண்டும். இவர்கள் அமைத்த பள்ளியில் மாணவர்களுக்கு அறம் கற்றுத்தரும் முறையில் மருந்தின் பெயரோடு கூடிய சில அறநூல்களை எழுதியுள்ளனர்.

சங்க இலக்கியத்தில் அன்பின் ஐந்திணையின் தாக்கம் பெரியது. அன்பின் ஐந்திணை தமிழ்ச்சூழலில் ஆற்றலோடு தொடர்வதை கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள ஆறு நூல்களும் வெளிப்படுத்துகின்றன. களவழி நாற்பது என்ற ஒரு நூல் புறத்திணையின் ஒரு பகுதி. அனைத்து கீழ்க்கணக்கு நூல்களும் மரபு முறையிலான செய்யுள் வடிவில் அமைந்திருப்பதோடு, சங்ககாலத்தில் பெரிதாக வெளிப்படாமல் இருந்த வெண்பா வடிவம் கீழ்க்கணக்கு நூல்களில் முதன்மைப்பட்டிருக்கிறது. அனைத்து நூல்களின் கவிதையினுள்ளும் கவித்துவத்தின் ஆளுகையை நாம் கூடுதலாக உணர்ந்து மகிழ்ச்சியடைய முடியும்.

3. சங்க இலக்கியத்தை அறம், புறம் என்று மட்டுமே பகுத்துப்பார்ப்பது தொல்காப்பியர் நெறி. தொல்காப்பியத்திலேயே அறம், பொருள், இன்பம் என்ற பகுப்பு குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும் சங்ககாலத்தை அடுத்து வந்த திருக்குறளில் இந்தப் பாகுபாடு அழுத்தம் பெற்றிருக்கிறது. சங்க இலக்கியத்தில் அறம் என்பது புறத்திணைகளில் ஒன்றாகிய வாகைத் திணையின் ஒருகூறு. சங்க இலக்கியத்தில் முதன்மைப்பட்டிருக்கிற அகத்திணை திருக்குறளில் மூன்றாம் இடத்தைப் பெறுகிறது. கீழ்க்கணக்கு நூல்களில் நாலடியாரில் இதற்கு இடம் இல்லை என்று சொல்லுமளவிற்கு பாடல்கள் எண்ணிக்கையில் குறைவு எனினும் அகத்திணை நூல்கள் ஆறு இந்தத் தொகுப்பில் உள்ளன. முன்பு புறத்திணையின் ஒரு பகுதியாக இருந்த அறம் இப்பொழுது முதன்மை இடத்திற்கு வந்திருக்கிறது. தொல்காப்பியரின் புறத்திணையில் குறைந்த அளவுக்கே இடம்பெற்றிருந்த, குறிப்பாக பாடாண் திணையில் மட்டும் முதன்மை பெற்றிருந்த ஆட்சியியல், பொருளியல், குடிமையியல் முதலியவை திருக்குறளில் பொருட்பால் என்று தனித்தன்மை பெறுகிறது. பொருட்பாலின் சில கூறுகள் கீழ்க்கணக்கு அறநூல்களில் அங்கங்கே இடம் பெற்றுள்ளன. எனினும் அழுத்தம் பெறவில்லை. தொல்காப்பியத்தில் துறவறம் தனித்து இடம் பெறவில்லை. வாகைத்திணையின் ஒரு கூறாக இடம் பெறுகிறது. அன்றியும் இல்லறத்தின் இறுதிநிலைதான் துறவு என்று தொல்காப்பியம் கூறுகிறது.

ஆனால், சங்ககாலத்திற்கு சில நூற்றாண்டுகள் கழிந்த நிலையில் கீழ்க்கணக்கு நூல்களின் காலத்தில் துறவு ஒரு தனி அறமாக மாறுகிறது. திருக்குறளில் இல்லறத்தையடுத்து இடம் பெறுவது துறவு. வள்ளுவர் கருத்துப்படி துறவு இல்லறத்திற்கு நிகரான தகுதி பெறவில்லை. நாலடியாரில் துறவுக்கு முதன்மை தரப்படுகிறது. பிற நூல்களில் இத்தகைய முதன்மை இல்லை. வள்ளுவர் அளவுக்குத் கீழ்க்கணக்கு நூல்களின் பிற ஆசிரியர், அரசியல், பொருளியல் முதலியவற்றுக்கு அழுத்தம் தரவில்லை. கூடுதலாக ஒன்றை இங்குச் சொல்லலாம். கீழ்க்கணக்கு நூல்களில் முதலிடம் பெறுவது மட்டுமல்ல முதலில் எழுதப்பட்ட நூல் திருக்குறளாக இருந்திருக்கக்கூடும். ஆகவே, திருக்குறள் இருக்கும் பொழுதே இதனையொத்த இன்னொரு நூல் தேவையில்லை. அன்றியும் திருக்குறளில் சொல்லப்படும் சொல்லப்பட்ட அறநெறிகளைக் காட்டிலும் கூடுதலாக பிற நூல்களில் அதிகம் சொல்லப்படவுமில்லை. எனினும் ஒவ்வொரு நூலின் தனித்தன்மையையும் நாம் மறுப்பதற்கில்லை. நாலடியாரும், பழமொழி நானூறும் தனித்திறமுடையவை.

4. கீழ்க்கணக்கு நூல்களின் படைப்பு முறை (அ) படைப்புத்திறம் பற்றிச் சிலவற்றை இங்கு குறிப்பிடலாம். கீழ்க்கணக்கு நூல்கள் குறித்த பன்முகப்பார்வைகளில் படைப்புத்திறம் பற்றிய பார்வை முக்கியத்துவம் உடையது என்று நாம் கருதலாம். சங்க இலக்கியத் தொகுப்பிலேயே குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, இவற்றோடு புறநானூறு ஆகிய நான்கு தொகுப்புகளும் சங்ககாலத்தின் முதற்காலத்தவை என்பது மட்டுமல்ல, இவற்றிலுள்ள கவிதைகள் அக்கால மக்களின் எதார்த்த வாழ்வுக்கு மிக நெருக்கமானவை. ஒருவகையில் அசலான சங்க இலக்கியம் என்று இவற்றைத்தான் குறிப்பிட முடியும். உலகியல் சார்ந்த மனித வாழ்வின் அழுத்தமான சிலகூறுகள் கவிதைக்குரிய பொருளாகி, கவிஞர்களின் நெஞ்சில் கவித்துவ அலைகளை எழுப்பி, அழகியல் உணர்வோடு இவை படைக்கப்பட்டுள்ளன. இவை தொடர்ந்து கற்கப்பட்டன. இந்த அனுபவத்திலிருந்து கவிதை மரபு எழுகிறது புலவர்கள் நெஞ்சில் குடியேறிய இந்தக் கவிதை மரபு, அவர்களின் அனுபவத் தூண்டுதலோடு மேலும், பல கவிதைகளைத் தோற்றுவிக்கின்றன.

பத்துப்பாட்டின் நெடுங்கவிதைகள் இவ்வகை கவிதை இயக்கத்திற்கு சான்றுகள். அதாவது கவித்துவம் ஒரு மரபாகி, அந்த மரபு புலவர் நெஞ்சில் குடியேறி, அந்த மரபின் தொடர்ச்சியாக, விரிவாக,

தம்காலச் சூழலுக்கு ஒத்த சில அனுபவங்களோடு புதிய படைப்புக்கள் எழுகின்றன. பட்டினப்பாலை இதற்கு நல்ல சான்று. கலித்தொகையில் முன்னைய கவிமரபின் தொடர்ச்சியாய் எழும் கவித்துவ அழகியல் அற்புதமானது. முன்னைய உலகியல் மரபில் இறைவனுக்கு அழுத்தமில்லை. பரிபாடல் முதலியவற்றில் இறைவனுக்கு அழுத்தம் கூடுகிறது. கூடுதலாக மேலும் ஒன்று. முன்னைய கவிமரபின் தொடர்ச்சியாக இனி ஒவ்வொரு திணை குறித்தும் அல்லது ஒவ்வொரு அரசர் குறித்தும் பத்து, நூறு எனக் கவிதைகள் எழுதலாம். கூடுதலான அழகியல் உணர்வோடு இனி கவிதைகள் எழுதலாம்.

சுருக்கமாகச் சொன்னால், இன்று கடவுள் பற்றியும் தமிழ் பற்றியும் ஆழமான ஈடுபாடு இல்லை என்றாலும் தேவைக்காக, பத்திரிக்கைக்காக, விழாக்களுக்காக, விளம்பரத்திற்காக, தமிழ்ப்பற்றியும், இறைவன் பற்றியும், இன்னும் காதல் பற்றியும் கவிதைகளாக புதிய புதிய கலை நேர்த்தியுடன் கற்பனை வீச்சுடன் கவிதைகள் எழுதலாம். மனித அனுபவத்திற்கு இவ்வகை ஆக்கங்கள் முற்றிலும் விலகியவை என்று சொல்ல முடியாது. அனுபவமும் கொஞ்சம். கற்றுக்கொண்ட கவி மரபின் தூண்டுதலோடு தொடர்ச்சியாகக் கவிதைகள் எழுதலாம். தேவாரப் பதிகங்கள் போல பத்துபத்தாக, கோவை இலக்கியங்கள் போல நானூறு நானூறாக, பிள்ளைத் தமிழ்போல நூறுநூறாக எழுதலாம்.

கவிதை மரபு (அ) இலக்கிய மரபென்பது இப்படித்தான் புதிய அனுபவங்களின் வீச்சோடு தன்னை மேலும் மேலும் திருத்தம் செய்து கொண்டு, தேவைப்படும்போது புதிய மரபுகளுக்கு இடம் கொடுத்து, அந்தப் புதிய மரபுக்குள்ளும் தங்கி - இப்படித்தான் வாழ்கிறது / வளர்கிறது.

கீழ்க்கணக்கு நூல்களில் இடம்பெறும் அன்பின் ஐந்திணை பற்றிய ஆறு கவிதை நூல்கள் இம்முறையில் உருவானவை. கவித்துவ அழகியல், கற்பனை நயத்தோடு இங்கு கூடியிருக்கின்றது. வெண்பா வடிவமும் கூடியவரைத் திருத்தமாக அமைகின்றது.

தமிழில் சங்க இலக்கியத்திற்கும் முன்னரே மக்கள் மத்தியில் வழங்கி வாழ்வின் சாரமான உண்மைகளைத் தமக்குள் தாங்கி நிலை பெற்றவை பழமொழிகள். இவற்றிலிருந்து நானூறு பழமொழிகளைத் தெரிவு செய்து தம்கால அனுபவத்துக்கு ஒத்த முறையில் முன்றுறையரையனார் கவிதை படைத்துள்ளார். நெடுங்காலத் தமிழ்க்கவிதையில் ஒருவகையில் புதிய ஆக்கம் இக்கவிதைகள்.

களவழிநாற்பது போர்க்களக் காட்சியை பாடும் நூல். போர்க்களத்தில் கடுமையான வன்முறையின் விளைவாக ஏற்படும் அழிவுகள் – யானை, குதிரை, மனிதர் முதலியவற்றின் சிதைந்த உடல்கள் – இரத்தம், நிணம் முதலியவை நமக்கு அருவருப்பானவை, அச்சம் தருபவை. ஆனால் போர்ச்சூழலில் வாழவேண்டிய கட்டாயத்திற்குள்ளாகிய நிலையில் இவ்வகைக்காட்சிகள் பழக்கப்பட்டவையாய் மாறுகின்றன. ஒருவகையில் இக்காட்சிகளும் வீரர்களுக்கு அழகியலே. மனிதனுக்குள் அழகியல் உணர்வு இவ்வகையிலும் இயங்கமுடியும். இயற்கையழகு, பெண்ணின் அழகு என்பவை போல வன்முறையும் ஒரு அழகியலாக மாறுகிறது. எதிர் அழகியல் போல இதுவும் ஓர் அழகியல்.

செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை என்றெல்லாம் நாலடியாரில் இடம் பெறும் பாடல்கள் நம் உணர்வுக்கு ஒத்தவையல்ல. அதுபோல அருவருப்பான முறையில் பெண்ணைச் சித்தரிக்கும் பாடல்களும் நம்கால உணர்வுக்கு ஒத்தவையல்ல. சமணமுனிவர்களின் உணர்வுக்கு இவை அழகியலே.

கீழ்க்கணக்கு நூல்களின் கவிதையாக்கம், கவித்துவம் குறித்து மேலும் விரிவான பார்வை தேவை. கவிதைகளில் இடம் பெறும் உவமை நயங்கள் என்றெல்லாம் தொகுத்துப் பார்க்கலாம். புனைந்துரை என்ற வகையிலும் இயல்புக்கு மீறிய காட்சிகளும் கவிதையில் இடம் பெறுகின்றன. இயற்கை நிகழ்வுகளை மனித உணர்வுக்கு ஒத்த முறையில் புனைவு செய்து எழுதும் உரைகளும் இத்தகையது. வள்ளுவரின் கவித்துவத்திற்கு அவரது இன்பத்துப்பால் தக்க சான்று. தமிழிலக்கியத்திலேயே வள்ளுவரின் இவ்வகைக் கவிதைகளுக்கு நிகராக சொல்லத் தகுந்த கவிதைகளைத் தேடித்தான் தொகுக்க வேண்டும். அன்றியும் கவிதைகளின் சொற்செட்டு, செறிவு முதலியனவும் வியக்கத்தக்கவை.

மனிதர்களுக்கு கவிதைகள் வேண்டும். கவிதைகள் இல்லாமல் மனிதனுக்கு வாழ்வில்லை. இயற்கையோடு நல்ல உறவுகளோடு உயர்வகை இலட்சியங்களோடு, நிகழ்வுகளைக் கதையாக்கும் திறத்தோடு, நாடகப்படுத்தும் முறையிலும் வாழ்கிறவன் மனிதன். கவிதைக்குள் அவன் தன்னைத் தேடுகிறான். தன்னைப் புதிய மனிதன் ஆக்கிக் கொள்கிறான். தொடர்ந்து தன்னைப் படைத்துக் கொள்ளும் மனிதனின் ஒரு படைப்பு கவிதை. சங்ககாலக் கவிதையோடு ஒப்பிடும்போது கீழ்க்கணக்கு நூல்களின்

தரம் குறைவு என்று நாம் பொதுவாக கருதுகிறோம். இத்தகைய மதிப்பீடு எந்த அளவுக்குச் சரி என்று நமக்குள் கேட்டுக் கொள்ளத்தான் வேண்டும். கவிதைகள் எண்ணிக்கையில் குறைவு என்பதனால் கவிதைகளை கவிதைகள் அல்ல என்று சொல்ல முடியாது. எண்ணிக்கையைக் கொண்டு கவிதையை மதிப்பிடுவதும் தவறு.

கீழ்க்கணக்கு நூல்களில்தான் கவிதை விளையாட்டின் ஒரு அற்புதமான வடிவமாகிய வெண்பாவை நாம் பார்க்கிறோம். மேலும் ஒன்று முதுமொழிக் காஞ்சியில் பத்துபத்தாக நூறுவரிகள். ஒவ்வொரு வரியிலும் தெளிவான ஒரு கருத்து. வாழ்வுக்கு அறம் சொல்லும் ஒரு கருத்து.

5. கவிதை அல்லது இலக்கிய இயக்கத்தின் ஆற்றல்மிக்க இன்னொரு கூறு அறவுணர்வை விடாப்பிடியாக எடுத்துரைத்தல். நெடுங்காலத் தமிழ்க் கவிதையிலிருந்து அறவுணர்வைப் பிரித்துப் பேசுவதற்கில்லை. தமிழுக்கும் அறவுணர்வுக்கும் உள்ள நெருக்கமான உறவு பற்றி நாம் வியந்துரைக்கிறோம். தமிழையே அறம் என்றும் நாம் சொல்கிறோம். அறவுணர்வு இல்லாமல் மனிதன் வாழமுடியாது. இலக்கியம் இல்லாமலும் மனிதனுக்கு வாழ்வில்லை. அறமும் இலக்கியமும் இப்படி இணைபிரியாத இரட்டைகள், இரண்டு தலைகளைக் கொண்ட ஒரு பறவை என்றும் இதை புனைந்துரைக்க முடியும். அறவுணர்வும் அழகியல் உணர்வும் வேறுவேறானவையும் அன்று. ஒருவகையில் இலக்கியம் கற்கும்பொழுதே அறத்தையும் கற்கிறோம். அறவுணர்வை நமக்குள் மேம்படுத்திக் கொள்வதற்காகவும் இலக்கியம் கற்கிறோம். திருக்குறளை நாம் ஆழ்ந்து ஆழ்ந்து கற்பது இவ்வகையில் நமக்குள் அறவுணர்வைத் தூண்டி வளர்த்துக் கொள்வதற்காகத்தான்.

நெடுங்காலத் தமிழ்ச் சமூகத்தில் மனிதர்களை சாதி, மதம் என்ற முறையில் எதிர் நிறுத்தி, வேறுபடுத்திப் பார்ப்பதற்கு இடமில்லை. ''பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்'' என்பது தமிழறம். ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்பது இதன் இன்னொரு வடிவம். இயற்கையோடு மனிதன் என்பதும் இது. 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' என்பதும் இது. மனிதனுக்குத்தான் இங்கு முதன்மை. உயிரினங்களில் ஒரு வகையில் இவன் இளையவன் என்றாலும் பிற உயிர்களுக்கு இல்லாத வகையில் இவன் அனுபவ உணர்வின் முதிர்ச்சியோடு இயங்குபவன். இதன் காரணமாகவே அனைத்து உயிர்களோடும் நல்லுறவோடு இருப்பவன்

இவன். இயற்கை, சமூகம், பிரபஞ்சம், முதலிய அனைத்தையும் தனக்குள் தாங்கியிருப்பவன் இவன். தனக்குள் முரண்பாடு இல்லாதவன். இவன் சான்றோன், இவனே மனிதன். பகுத்தறிவு என்பது இவனோடு இடையறாது இயங்குவது. சமத்துவம், சமதர்மம் என்பவை இவனது ஆக்கக் கூறுகள். இவற்றில் இவன் வாழ்பவன். இதுதான் இவனுக்கான அறம். இதுவே தமிழறம். தெய்வம் என்று பேசினாலும் அறவுணர்வை மையப்படுத்தியே பேசுகிறோம். சமயம் இவனைப் பொறுத்தவரை அறவுணர்வை ஒதுக்கியதாக இருக்கமுடியாது. இத்தகைய அறவுணர்வில் எல்லாக்கூறுகளும், எல்லாப் பரிமாணங்களும் எந்த ஒரு தனி இலக்கியத்திலும் முழுமையாக இருக்கமுடியாது. அறத்தின் திரிபுகளும் மனிதனுள்ளும் அதன் காரணமாக இலக்கியத்தினுள்ளும் இடம் பெறலாம்.

இலக்கியத்தின் வழியே உள்நுழைந்து நாம் நம்மை நிமிர்த்திக்கொள்ள இயலும். திருத்தம் செய்ய இயலும். கீழ்க்கணக்கு நூல்களையும் இந்த உணர்வோடுதான் நாம் கற்கிறோம். வள்ளுவம் நமக்கு ஆதார நூல். பிற நூல்களை நாம் ஒதுக்கவில்லை.

பகுதி - 2

1. பாட்டும் தொகையும் என்று குறிப்பிடப்படும் சங்க இலக்கியம் குறித்து இதுவரை நடைபெற்ற விரிவான ஆய்வுகளோடு ஒப்பிடும்போது திருக்குறள் தவிர பிற கீழ்க்கணக்கு நூல்கள் பற்றி நடைபெற்ற ஆய்வுகள் மிகவும் குறைவு. தமிழிலக்கிய வரலாறு என்று தொடர்ச்சியாக எழுதியவர்கள் கீழ்க்கணக்கு நூல்கள் குறித்தும் ஓர் இயலை ஒதுக்கி எழுதியுள்ளனர். தெ.பொ.மீ., டாக்டர் மு.வ. ஆகியவர்களின் தமிழிலக்கிய வரலாற்று நூல்களில் இவர்கள் எழுதிய கட்டுரைகள் உள்ளன. உலகத் தமிழாய்வு நிறுவனம் பல்லாண்டு தொடர்ந்து உருவாக்கிய ''தமிழிலக்கியக் கொள்கை'' நூலின் முதல் தொகுதியில் சிறப்பான ஒரு கட்டுரையை க.த. திருநாவுக்கரசு எழுதியுள்ளார். ராஜ்கௌதமன் பல ஆண்டுகளுக்கு முன்பு கீழ்க்கணக்கு நூல்களின் அறிவியல் சார்ந்த கருத்துக்களை, மேட்டுக்குடி மக்களின் அதிகாரத்தை உள்ளடக்கிய கருத்துக்கள் என்ற முறையில் விரிவாக எழுதினார். அந்த நூலை மேலும் விரிவுபடுத்தி 'தமிழ்ச்சமூகத்தில் அறமும் ஆற்றலும்' என்னும் பெயரில் அண்மையில் விரிவான நூல் எழுதியுள்ளார்.

பதினான்காம் நூற்றாண்டுக்குப் பின்னால் எழுந்த அறவியல் நூல்களையும் உள்ளடக்கி கீழ்க்கணக்கு நூல்கள் பற்றி மிக விரிவான முறையில் 'அறஇலக்கியக் களஞ்சியம்' என்ற பெருநூலை க.ப.

அறவாணன் அண்மையில் வெளியிட்டுள்ளார். இவை தவிர மேலும் தனித்தனிக் கட்டுரைகள் வெளிவந்திருக்கக்கூடும். கீழ்க்கணக்கு நூல்கள் எத்தகைய வரலாற்றுக்காலச் சூழலில் எழுந்தன என்ற முறையில் பலரும் ஆராய்ந்துள்ளனர். களப்பிரர் எழுச்சி குறித்து உடன்பாட்டு முறையிலும், எதிர்மறை முறையிலும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அயல் நிலத்திலிருந்து வந்த களப்பிரரால் தமிழ்ச்சமூகத்தின் அறங்கள் சிதைந்தன என்ற முறையிலும், தமிழகத்திற்கு உள்ளிருந்தே, அரசதிகாரத்திற்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தவர் களப்பிரர் என்றும், சமணச் சமயச்சார்புடைய இவர்கள், சங்க காலத்தின் இறுதியில் தமிழ்ச்சமூகத்தில் அழுத்தமாக இடம் பெற்ற வைதீக சமூகத்தின் சார்பை, தமிழ்ச்சமூகத்திலிருந்து களைந்தவர்கள் என்றும், சிலவகையான ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. களப்பிரருக்கு எதிரான கருத்து நிலையை முன்வைப்பவர் பெரும்பாலும் சைவ சமயச் சார்பினர் என்று நம்மால் புரிந்து கொள்ள முடியும். சமயச் சார்பில்லாத நம்மைப் பொறுத்தவரை, தமிழ்ச்சமூகத்தின் உள்ளிருந்தே கலகக்காரர்களாக எழுந்த இவர்கள் முற்கால தமிழ்ச் சமூகத்தின் குறைகள் சிலவற்றை நீக்க முயன்றதோடு, இன்று தமிழ்ப்பண்பாடு என்று அறியப்படும் தொகுப்பைத் தோற்றுவிக்கக் காரணமாக இருந்தவர்கள் என்று மதிப்பீடு செய்ய வாய்ப்பிருக்கிறது.

சங்க காலத்திலேயே தமிழ்ச் சமூகத்தில் ஆண்கள், கள், சூது, பரத்தமை, காமம், வன்முறை ஆகிய தீமைகளுக்கு இடங்கொடுத்து, தமிழ்ச் சமூகத்தின் சீரழிவுக்கு காரணமாக இருந்தனர் என்ற முறையில் அறவாணன் விரிவாக எழுதுகிறார். பெரும்பாலான தமிழறிஞர்கள் தமிழ்ச் சமூகத்தில் நிலவிய அகத்திணை ஒழுக்கம் பற்றியும், தமிழரின் வீரம் குறித்தும் பாராட்டும் நிலையில், அறவாணன் மட்டுமே தமிழ்ச் சமூகத்தில் காதலுக்கும், காமத்திற்கும் கூடுதலான அழுத்தம் இருந்தது பற்றியும் போர் மறம் என்ற முறையில் தமிழர் வன்முறையைப் பெரிதும் போற்றினர் என்றும் சாடுகிறார். இத்தகைய தீமைகளைச் சமணர்கள் சாடினர். வள்ளுவரும், கள், சூது, பரத்தமை, ஆகியவற்றைச் சாடுகிறார்.

அன்றியும் சங்க இலக்கியத்தில் முதன்மை பெற்றிருந்த அகத்திணையை வள்ளுவர் மூன்றாமிடத்துக்குத் தள்ளுகிறார். அறத்திற்கு முதன்மை தருகிறார். பொருளியல் பற்றி விரிவாக எழுதுகிறார். வைதீகத்தை வள்ளுவர் சாடுகிறார். இல்லறமே நல்லறம் என்கிறார். விதியைக் காட்டிலும் மனிதமுயற்சியை வேண்டுகிறார். உழவுத்தொழிலைச்

சிறப்பிக்கிறார். இல்லறத்திற்கு அடுத்த படியாகத்தான் துறவை வைக்கிறார். இவையெல்லாம் சமண சமயத்தின் தாக்கத்தோடு வள்ளுவருக்குள் இடம் பெற்ற கருத்தினங்கள்.

அறவாணரைப் பொறுத்தவரை வள்ளுவரால் தமிழ்ச்சமூகத்தை திருத்த முடிந்ததா? என்ற கேள்வியைப் பெரிதாக எழுப்புகிறார். கள்ளையும், சூதையும் வள்ளுவர் கண்டித்தார். என்றாலும் தமிழ்ச் சமூகத்தில் இவை ஒழியவில்லை. பரத்தமை இன்றுவரை வாழ்கிறது. வைதீகத்தை வள்ளுவர் மறுத்த போதிலும் கடவுளை ஏற்கிறார். கடவுள் அடியைத் தொழ வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து. வள்ளுவருக்கு வலிமையான சீடர்கள் இருக்கவில்லை. தமிழ்ச் சமூகத்தின் நடைமுறைப் போக்கை வள்ளுவர் சாடியதால் தமிழ்ச் சமூகம் வள்ளுவரை ஏற்கவில்லை. வள்ளுவர் நெறியைத் தமிழ் மன்னர் எவரும் அரசு நெறியாக்கவில்லை. வள்ளுவத்திற்கு பிற்காலத்தில் உரையாசிரியர் பலர் கிடைத்த போதிலும் வள்ளுவமும் அறவகை இலக்கியமாகவே படிக்கப்பட்டது. வள்ளுவம் தமிழர்களின் வாழ்வியல் ஆகவில்லை.

அறவாணரின் இவ்வகை ஆய்வு மறுக்கக்கூடியதாக இல்லை. வைதீகமும் தமிழ்ச் சமூகத்தில் அழிந்துவிடவில்லை. இங்கு இன்னொன்றைக் கூறலாம். வைதீகமும் சரி வைதீகத்தை மறுக்கும் சமணமும் சரி, சமணத்தோடு பவுத்தத்தையும் சேர்த்துக் கொள்ளலாம், இவை சமயங்கள். இவற்றில் அறத்திற்குத் தனி ஆளுமை இல்லை. சமயத்தின் ஆளுமை மிக விரிவானது. சமயம் அறநெறியைத் தனக்குள் செரித்துக் கொள்ளும். சமயச்சார்பினதாக அறத்தை மாற்றியமைத்துக் கொள்ளும். அறம் தனக்குள் சுருங்கி சமயத்திற்கு சேவை செய்வதாகத்தான் மாறமுடியும்.

2. வள்ளுவத்தில் அறம் பெற்ற இடம் எத்தகையது என்பதை இங்கு சுருக்கமாகக் காணலாம்.

> ''மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
> அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு.''
> ''என்பிலதனை வெயில் போலக் காயுமே
> அன்பி லதனை அறம்.''
> ''பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
> பிற்பகல் தாமே வரும்.''

''கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்.''

இன்னும் இவை போல பல குறட்பாக்களில் அறம் என்பதன் தனி ஆளுமை பற்றிப் பேசுகிறார். மனிதனுக்கு அப்பாலிருந்து, இயற்கையின் இயக்கத்தோடு இணைந்து, அறம் மனித வாழ்வைத் தீர்மானிக்கிறது என்பது வள்ளுவர் கருத்தாக இருக்கலாம். தீயவனை அறம் தண்டிக்கும். நல்லவனை அறம் வாழவைக்கும். அறத்திற்கு இவ்வாற்றல் உண்டு. பெரும்பாலும் இக்கருத்து வள்ளுவரில் அழுத்தம் பெற்றிருக்கிறது.

''அல்லல் பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை''.

என்ற குறட்பாவிலும் இதே உணர்வைத்தான் வள்ளுவர் வெளியிடுகிறார். இக்கருத்து வள்ளுவரிடம் ஓங்கி ஒலித்தாலும் வாழ்வின் அனைத்து நிகழ்வுகளையும் அறமே தீர்மானிக்கிறது என்பதை நிறுவ முடியாது. வள்ளுவருக்குள்ளும் ஐயம் எழுகிறது.

''அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்''.

அறத்தின் ஆட்சி எங்கும் தவறாமல் நடைபெறும் என்றால் நல்லவனிடத்து செல்வம் பெருகவேண்டும். தீயவன் செல்வம் அழியவேண்டும். இவை நடைமுறையில் இல்லை. நல்லவன் வறுமை வயப்படுகிறான். தீயவன் செல்வம் சேர்க்கிறான். இவற்றை ஆராய வேண்டும் என்கிறார் வள்ளுவர். வள்ளுவருக்குள் காணும் இந்த முரண்பாட்டிற்கு வேறு இடத்தில்தான் தெளிவைத் தேடியாக வேண்டும்.

அறம் குறித்து மேலும் வள்ளுவர் பல விளக்கங்களினை நமக்குத் தருகிறார். மனிதன் எல்லாவற்றையும் பலரோடு பகிர்ந்து கொள்ளும் அறம் பற்றி விரிவாகப் பேசுகிறார். குளத்தில் இயற்கையாக நிறையும் நீர் போல, அறிவுடையவனிடம் சேர்ந்த செல்வம் பலருக்கும் பயன்பட வேண்டும் என்கிறார். நடுவூரில் பழுத்த பழமரத்திலிருந்து கனியை எவரும் பறித்துக் கொள்ளலாம் 'அகழ்வாரைத் தாங்கும் நிலம்' போல என்று நிலத்தை உவமையாக்கி அறவுணர்வை விளக்குகிறார். மேகம் போல மனிதர் கொடுக்க வேண்டும். இயற்கைக்குள் அறம் இப்படிச் செயல்படுகிறது. ஆசைகளை அறவே துறந்தவன், தன் நிலையிலிருந்து பிறழா இயற்கையின் பகுதியாக மாறுவான் என்றும் வள்ளுவர் பேசுகிறார். சரியாகச் சொன்னால்

இயற்கையின் இயக்கமே அறம். காமம், வெகுளி, மயக்கம், ஆகியவற்றைத் துறந்து இயற்கையின் பகுதியாக, இயற்கையின் ஆளுகைக்குத் தன்னை ஒப்படைத்தவனாக மனிதன் மாறிவிட வேண்டும் என்பது வள்ளுவர் கருத்தாகலாம். வள்ளுவரின் துறவி இத்தகையவர். வள்ளுவரின் சான்றோரும் இத்தகையவர்.

3. வள்ளுவர் காலத்திலேயே தமிழ்ச்சமூகத்தில் சமணம் செல்வாக்கு பெற்றிருக்கக்கூடும். வினைக்கோட்பாட்டை முன்வைத்து சமணர் மனிதப்பிறப்பை, வாழ்வில், மனிதர் பெறும் அழிவு, ஆக்கங்களை, உயர்வு, தாழ்வுகளை விளக்குகின்றார். முன்பிறப்பில் செய்த தீவினை காரணமாக இப்பிறவியில் மனிதனுக்குத் துயரம், ஊனம், இளமையில் சாவு முதலியவை நேருகின்றன. மனிதன் தன் துயரத்தை அறவே துடைத்துக் கொள்ள வேண்டுமென்றால் வினைகளிலிருந்து விடுபட வேண்டும். புலனடக்கத்தை முற்றாக மேற்கொள்ள வேண்டும். உயிர்க்கொலை, புலால், காமம், வெகுளி முதலியவற்றை அறவே விட்டுவிட வேண்டும். பிறவி அறுவதே பேரின்பம்.

வள்ளுவரின் அறம் பற்றிய கருத்தும் சமணரின் வினைபற்றிய கொள்கையும் ஓரளவுக்கேனும் நெருக்கமாக இருப்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியும். அறமே எல்லாவற்றையும் தீர்மானிக்கிறது என்ற கருத்தும் வினையே எல்லாவற்றிற்கும் காரணம் என்ற சமணர் கருத்தும் ஒன்று போல் தோன்றுகின்றன. ஆனால் வள்ளுவர் நடைமுறை வாழ்வை மறுத்துவிட்டு அறம் பற்றிப் பேசுவதில்லை. நடைமுறை வாழ்வுக்குள் முரண் இருப்பதை வள்ளுவர் கண்டு கொள்கிறார். சமணரின் வினைக்கொள்கை, விதிக்கொள்கையாக வடிவு பெறும். ஆனால், விதியின் முற்றதிகாரத்தை வள்ளுவர் மறுக்கிறார். மனிதனின் ஆளுமைத் திறத்தை வள்ளுவர் போற்றுகிறார். மனிதப் பிறவியை முற்றாகத் துடைத்தெறிய வேண்டும் என்ற கொள்கையோடு வள்ளுவர் இல்லை. வள்ளுவரைப் பொறுத்தவரை இல்லறமே முதலறம். அடுத்தபடியில்தான் துறவறம். துறவிகளிலும் போலிகளின் எண்ணிக்கை அதிகம். சமணத் துறவியருள்ளும் வள்ளுவர் போலிகளைக் கண்டிருப்பார்.

வள்ளுவரிடம் சங்க இலக்கியத்தின் அகத்திணை வாழ்வு கூடுதலான ஆற்றலோடு வெளிப்படுகிறது. வள்ளுவரின் கடவுள், வைதீகரின் கடவுளாக இல்லை. வள்ளுவரின் கடவுள் மனித வாழ்விலிருந்து வெளிப்பட்டு மேம்படும் கடவுள். மனிதனை தனக்குள் ஒடுக்கிக் கொள்கிற

கடவுளாக இவர் இல்லை. ஒருவகையில் வள்ளுவரை, சங்ககாலத்தில் மனிதவாழ்வுக்குள்ளிருந்து வெளிப்படுகிற அறவுணர்வை, மேலும் ஆழமாகக் கண்டறிந்தவர் என்று மதிப்பிடலாம்.

அறம் என்பதன் அடித்தளம் மெய்யியல். இயற்கையின் ஒரு பகுதி என்று அறத்தை வள்ளுவர் கண்டது, வள்ளுவரின் மெய்யியல். கணியன் பூங்குன்றன் போன்ற சான்றோர்களின் நெறியில் வள்ளுவர் நெடும்பயணம் மேற்கொண்டவர். மனித வாழ்வைத் தொலைத்து விடாதவர் வள்ளுவர். சமணம் மனிதவாழ்வைத் தொலைக்கிற சமயம். வினைகள் வேண்டாம், வாழ்வும் வேண்டாம், பிறவிகள் வேண்டாம் என்பது சமணம்.

சமணத்தில் துறவுக்கே முதன்மை. இல்லறத்திற்கு இரண்டாவது இடம். இதன் காரணமாகத்தான் நிலையாமை பற்றி நாலடியார் அழுத்திப் பேசுகிறது. செல்வம் வேண்டும். திரட்டிக்கொள். செல்வம் நம்மை விட்டு நீங்குவதற்குள் நல்லதைச் செய் என்பார் வள்ளுவர். இளமை நிலைக்காது, பயன்படுத்திக் கொள் என்பார் வள்ளுவர். வாழ்வு நிலையில்லாதது, நல்லதைச் செய். வாழ்வு ஒரு பேறு ஆகும் என்பார் வள்ளுவர். நல்லது செய்யும் பொழுது தெய்வம் உன்னைத் தேடி உடன் வரும். தாமரைக்கண்ணான் உலகை இல்லறத்திலிருந்தே அனுபவிக்கலாம் என்பார் வள்ளுவர்.

4. தமிழக வரலாற்றில் அடுத்து என்ன நிகழ்கிறது? சமணம் தேய்ந்து சைவத்திற்கு இடம் தருகிறது. பவுத்தம் தேய்ந்து வைணவம் ஆகிறது. வள்ளுவர் இன்னும் வாழ்கிறார். இலக்கியமாக, அறநூலாக வாழ்கிறார். சமயம் எதுவாயினும் பிரபஞ்சம் இயற்கை, உயிர்கள், மனிதவாழ்வு, வறுமை, சாவு, நோய் நொடிகள் ஆண், பெண், அரசன், ஆண்டி முதலிய அனைத்தையும் தனக்குள் அடக்கி விளக்கம் தருகிறது சமயம். மழை ஏன் பெய்கிறது? பருவங்கள் எப்படி மாறுகின்றன? மரங்கள் எப்படிக் காய்கின்றன? அரசன் ஏன் அழிந்தான்? இப்படி நூற்றுக்கணக்கான கேள்விகளுக்கு எல்லாம் சமயம் தன்னுள் பதில் வைத்திருக்கிறது.

அரசதிகாரத்திற்கும் தனியுடைமைக்கும், குடும்ப வாழ்வுக்கும் அனைத்து மக்களையும் உள்ளடக்கி, எல்லாவற்றிற்கும் அறிவார்ந்த விளக்கம் உண்டு என்று தன்னுள் நம்ப வைத்து, சமயம் தன் அதிகாரத்தை எல்லோருக்குள்ளும் திணித்து தன்னை வாழ்வித்துக் கொள்கிறது. சமயம் தரும் இத்தனை விளக்கங்களும் வள்ளுவருக்குள் இல்லை. வள்ளுவரால் இவையனைத்தையும் விளக்க முடியாது. ஆகவே சமயம் ஓங்கும். அறம்

தனக்குள் சுருங்கும். கடவுளும் நாளுக்கு நாள் வலிமை பெறுகிறார். எல்லாவற்றையும் தனக்குள் ஒடுக்கிக் கொள்கிறார். வள்ளுவருக்கு இது முடியாது. அதாவது சமயம் தன் ஆளுமையை பெருக்கிக் கொள்ளும் அளவிற்கு அறம் தன் ஆளுமையை பெருக்கிக் கொள்ள முடியாது.

5. இவை குறித்து மேலும் ஒன்றைச் சொல்ல வேண்டும். சங்ககாலம் என்பது இனக்குழு வாழ்வு ஒடுங்கி தனியுடைமையும் அரசதிகாரமும் வலுப்பெற்று வருகிற காலம். இனக்குழு வாழ்வில் இயற்கையின் பகுதியாக, வாழ்ந்தவர் மனிதர். இங்கு ஏற்றத்தாழ்வு இல்லை. இயற்கையில் கிடைக்கும் உணவைப் பகுத்துண்டு வாழ்ந்தனர். தனியுடைமையும் அரசதிகாரமும் தோன்றி வளர்ந்த காலத்தில் இயற்கை தனியுடைமையாயிற்று. தனியுடைமையும், அரசதிகாரமும் கைகோத்துக் கொண்டன. சமூகத்தில் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டது. உழைப்பவர் பலர். அனுபவிப்பவர் ஒரு சிலர். நிலத்தை, நீரை, காடுகளை வசப்படுத்த போர்கள் - இதன் விளைவாகப் பேரழிவுகள் — தொடர்ந்து வறுமை, - சாவு. மனித வாழ்வுக்குள் துயரங்கள் — ஏன் என்ற கேள்வி - வறுமை எப்படி ஏற்பட்டது? அரசதிகாரம் எப்படி ஏற்பட்டது? என்ற கேள்விக்கு பதில் இல்லை, பதில் தெரியாது. ஏற்றத்தாழ்வு காரணமாக வறுமை முதலிய நூறுவகைத் துயரங்கள் — ஆதிக்கம் ஒருபுறம் — அடிமைத்தனம் இன்னொரு, புறம் — எல்லாமே வினையின் விளைவு - வினை என்பது தொழில் — அதிகாரம் என்பதை அக்காலத்தவர் புரிந்து கொள்ள இயலவில்லை.

துயரங்களுக்கு விடைதேடி புத்தர் கிளம்புகிறார். மகாவீரரும் கிளம்புகிறார். ஆசைகளே துயரத்திற்கு காரணம் என்கின்றனர். ஆசைகள் இல்லாமல் மனிதன் எப்படி வாழ முடியும்? ஆண் — பெண் உறவு இல்லாமல் மனிதன் வாழ முடியுமா? நிலத்தில் உழாமல் தானியம் விளையுமா? உழவுத்தொழில் நடைபெறுமா? இவைகள் எல்லாம் தீவினையா? மக்களிடமிருந்து அதிகாரத்தைப் பறித்துக்கொண்டு மன்னன் எனத் தன்னை நிறுவிக் கொண்டவன் செய்தவை அனைத்தும் நல்ல செயல்களா? நல்ல வினைகளா? இப்படியெல்லாம் நூறு கேள்விகள் எழுந்திருக்க வேண்டும். சாங்கியர், சார்வாகர் என இப்படிச் சிலர் கேட்டிருக்கலாம். அவர்களிடமும் முற்றான பதில் இல்லை. அரசதிகாரம் இவர்களை ஒடுக்கத்தான் செய்யும். சாணக்கியன் வந்துவிட்டான் மனுவும் வந்துவிட்டான். வேந்தர் படையெடுக்கிறார்கள். கோவில் கட்டுகிறார்கள்,

புரோகிதர்களைக் கிளப்புகிறார்கள். இவர்களிடம்தான் எல்லா அதிகாரமும். சமணர்கள் என்ன செய்யமுடியும்? வள்ளுவர்களும் எங்கே ஒதுங்குவார்கள்?

அறமும் அதிகாரமும் இங்கு இணைகின்றன. அரசனுக்கு அதிகாரம் வேண்டும். செல்வம் வேண்டும். இவற்றுக்கான வழிகள் அனைத்தும், அரசனைப் பொறுத்தவரை அறநெறிகள். மக்களின் வறுமை தீர இவன் பொருள் வழங்குவான். இது அறம். பிச்சை எடுப்பதும் அறம். தருவதும் அறம். அதிகாரம் செய்வதும் அறம். ஒடுங்கி இருப்பதும் அறம். ஆண்டானுக்கு ஒருவகை அறம். அடிமைக்கு இன்னொரு வகை அறம். கடமையைச் செய். பலனை எதிர்பாராதே.

இத்தகைய சூழலில் வள்ளுவருக்கு எங்கே இடம்? வள்ளுவருக்கு இனி உரைகள் எழுத முடியும். வள்ளுவரை வளைக்க வேண்டும். முடிந்த அளவுக்கு வளைக்க வேண்டும். வள்ளுவரைப் பள்ளி மாணவர்க்கு பாடம் சொல்ல வேண்டும். மனப்பாடம் செய்யப் பணிக்க வேண்டும். வள்ளுவரைப் புனிதப்படுத்த வேண்டும். வள்ளுவருக்குள் இருந்து வைதீகத்தை எடுக்கமுடியும். வள்ளுவருக்குள்ளிருந்து சமணத்தைப் பேசவைக்க முடியும். சைவத்தையும் பேச வைக்க முடியும். அறவாணருக்கு இப்படி எல்லாம் சில விளக்கங்களை நாம் தர முடியும்.

தமிழ்ச் சமூகத்தில் இன்றுவரை வள்ளுவர் பெரிதாக மதிக்கப்படுகிறார் என்ற போதிலும் வள்ளுவர் எத்தகைய காலச்சூழலில், வரையறைக்குள் செயல்பட்டார் என்பதை அறவாணன் விளக்கியுள்ளார். சமணத்தின் எழுச்சியே மட்டுமல்லாமல் தமிழ்ச் சமூகத்தில் சமணத்தின் செல்வாக்கையும் அறவாணன் பாராட்டத்தான் செய்கிறார். ஆனால், சமணமும், சில வரையறைகளோடுதான் செயல்பட்டது என்பதையும், சமணம் நாளடைவில் செல்வாக்கிழந்தது என்பதையும், சமணரின் சில கொள்கைகளை வள்ளுவரிடம் நாம் காண முடியும் என்றாலும் வாழ்வை மறுக்கும் போக்கு வள்ளுவரிடம் அறவே இல்லை என்றும் நெடுங்காலத்தமிழ் வாழ்வியக்கத்தை, வள்ளுவர் தமக்குள் வைத்துப் போற்றினார் என்றும் நாம் காணத் தவறமுடியாது. வள்ளுவருக்கு இடைக்காலத்தில் உரைகள் பல இயற்றப்பட்ட போதிலும், எத்தகையத் தமிழகச் சூழலில் வள்ளுவர் கற்கப்பட்டார் என்பதையும் நாம் காண வேண்டும்.

பகுதி - 3

உலக அளவில் நெருக்கடிகள் மிகுந்து வரும் நவீன கால உலகில் தொன்மையான நம் தமிழ் இலக்கியத்தை மறுவாசிப்புக்கு உள்ளாக்க வேண்டிய தேவையோடு நாம் இருக்கிறோம். உலக அளவிலான பொருளியல் முதலிய நெருக்கடிகள் தமிழகத்தையும், தமிழ் மக்களையும், தமிழ் மொழிப் பண்பாடு, தமிழ்க் கல்வி முதலிய அனைத்தையும் கடுமையாகவே பாதித்துள்ளது. இத்தகைய சூழலில் தமிழ் உட்பட அனைத்தையும் மீட்கவும் காப்பாற்றவும் வேண்டிய சூழலில் இருக்கிறோம்.

இத்தகைய நெருக்கடிகளுக்குத் தமிழ் மாணவர் மற்றும் ஆய்வாளர் என்ற முறையில் நமக்கான எதிர்வினை என்னவாக இருக்க முடியும் என்ற கேள்வி நமக்குள் தவிர்க்க முடியாமல் எழுந்திருக்கிறது. இந்தப் பின்னணியில்தான் தமிழைச் செம்மொழி என்ற முறையிலும் தொன்மையான தமிழ் இலக்கியத்தை செவ்வியல் இலக்கியம் என்றும் நாம் வாசிக்கிறோம். ஆய்வுக்குட்படுத்துகிறோம். இன்றைய நெருக்கடிச் சூழலில் தமிழ் நிலத்தையும் தமிழின் தொன்மையான வரலாற்று மேன்மைகளையும் காத்துக் கொள்வதற்கான கூறுகள் செம்மொழி குறித்த ஆய்வில் எவை இருக்கின்றன என்ற முறையிலும் நாம் ஆய்கிறோம்.

கீழ்க்கணக்கு நூல்கள் பற்றிய ஆய்விலும் நம் தேவைகளை முன்வைத்து மீட்டுக் கொள்வதற்கான கூறுகள் எவை உள்ளன என்ற முறையிலும் நாம் ஆராய்கிறோம். இவை குறித்து இங்கு சுருக்கமாகவேனும் நாம் காண வேண்டும்.

2. 20-ஆம் நூற்றாண்டுச் சூழலில்தான், மேற்கத்திய தாக்கத்தின் விளைவாகவும் இந்திய மற்றும் தமிழ்ச் சமூகம் தம்மை பல்வேறு வகையான அடிமைத் தளைகளிலிருந்து மீட்டுக் கொள்வதற்குமான நிலவரங்கள் எழுந்தன. மேற்கத்தியரின் அறிவியல் பார்வை, சமத்துவம், சமதர்மம் குறித்த சமூகவியல் பார்வை, சமயச்சார்பின்மை, மன்னராட்சிக்கு இனி தேவையில்லை என்ற நிலைமை, ஆதிக்கங்கள் எவ்வகையிலும் நமக்கு வேண்டாம் என்ற நிலைமை முதலியவற்றை நம் தேசத்தின், மக்களின் நீட்சிக்கான தேவைகள் என நாம் உணர்ந்தோம்.

விரிவான முறையில் தமிழ் நாகரிகத்தின் தொன்மையை மேன்மையைக் கண்டறிந்தோம். கால்டுவெல்லின் ஆய்வுகள் மட்டுமல்லாமல்,

சிந்துவெளி பற்றிய ஆய்வு முதலியனவும் நமக்கு, நாம் தமிழர் என்ற உணர்வை ஏற்படுத்தின. இந்திய நாகரிகம் என்று அறியப்பட்ட தொகுப்பில் அறிவியல், கணிதம், வேளாண்மை, கட்டிடக்கலை, இசை, சிற்பம், மெய்யியல், கல்வி, அளவையியல், மருத்துவம், முதலிய பல்வேறு களங்களிலும் நமக்கான முதன்மையை அறிந்து கொண்டோம். இந்திய நாகரிகம் என்ற தொகுப்புக்குத் தமிழர் தந்த பெரும் கொடைகளை நாம் அறிந்தோம். இந்திய நாகரிகத்தின் மேலடுக்கில் ஆரியம் தன்னை நிறுவிக் கொண்டாலும் அடித்தளம் முழுவதுக்குமான ஆக்கங்களை தந்தவர் தமிழர் என்ற உணர்வைப் பெற்றோம். இனி நமக்கு சமயத்தின் ஆதிக்கம் தேவையில்லை. நம்மை நாமே ஆண்டு கொள்ள முடியும். இந்திய வரலாற்றில் நமக்கான இடத்தை இனிப் பெறமுடியும் என்றெல்லாம் தமிழறிஞர்கள் நமக்கு உணர்த்தினர்.

இத்தகைய சூழலில்தான் உலக நாகரிகத்தின் முதல் எழுச்சி என்று அறியத்தக்க கிரேக்கம், பாரசீகம், சீனம் முதலிய நாகரிகங்களுக்கு நிகரான நாகரிகம் தமிழ் நாகரிகம் என்று புரிந்து கொண்டோம். கிரேக்கம், சீனம் முதலிய தொன்மையான மொழிகள் செம்மொழிகள் என உலக அளவிலான அறிஞர் ஏற்றுக்கொண்ட நிலையில் தமிழையும் அவர்கள் செம்மொழி என ஏற்றனர். தமிழின் தொன்மை, இலக்கியமேன்மை முதலியவை மட்டும் செம்மொழி என்பதற்கான தகுதிகள் என்று சுருக்கிக்கொள்ள வேண்டியதில்லை. மனித வாழ்வின் மேன்மையான, அனைத்து மக்களையும் ஒரு நிகராகப் பார்க்கிற - மனித வாழ்வை மேம்படுத்துவது அதிகாரமல்ல – ஆதிக்கமல்ல – இதற்குமாறாக, மனித வாழ்வை மேம்படுத்துவது உயர்வகையான பண்பாடு – உலகை ஒன்றாக காண்கின்ற பார்வை – அனைத்து மனிதர் மத்தியிலும் – சமத்துவம், சமதர்மம் என்ற உணர்வுகளை - தக்கவைத்துக் கொள்வதற்கான மனித நேயம் – இவையனைத்தையும் ஒருங்கே கொண்டிருக்கின்றது என்ற முறையில் – தமிழைச் செவ்வியல் மொழியென நாம் புரிந்து கொள்கிறோம்.

3. தொன்மையான இனக்குழுச் சமூகத்தில் நிலவிய இயற்கையோடு மனித உறவு – சமூகத்தில் பிளவின்மை – ஆதிக்கம் இல்லை என்ற நிலைமை – மனிதன் தனக்குள் பிளவுபடாத தன்மை ஆகியவற்றை - தனியுடைமையும் அரசதிகாரமும் – வளர்ந்து வருகிற சூழலில் இழந்து விடக்கூடாது என்ற முறையில் தமிழ்ச் சான்றோர் – இலக்கியத்தில் தம்மைப் பதிவு செய்தனர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', 'பெரியோரை வியத்தலும் இலம் சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே',

'செல்வத்துப் பயனே ஈதல்' - 'துய்ப்போம் எனின் தப்புந பல' - போன்ற உணர்வுகளைக் கொண்டவர் நம் தமிழ்ச் சான்றோர். இனக்குழுச் சமூகத்திலிருந்து மெல்ல மெல்ல விலகி அரசதிகாரம், தனியுடைமை முதலியவற்றை ஆதாரமாகக் கொண்ட புதிய சமூகத்தின் போக்கை ஏற்க முடியாத பல தமிழ்ச் சான்றோர் வடக்கிருந்து உயிரையும் இழந்தனர். எல்லாவற்றையும் மக்களுக்கென ஒப்புக் கொடுத்த வேளிர்கள் அழிந்த நிலையில் இனிப்பாடுநரும் இல்லை, பாடுநருக்கென்று ஈகுநரும் இல்லை – என்ற நிலைதோன்ற, பாணர் முதலிய கலைஞர்கள் வாழ்விழந்து அலைந்தனர்.

உடைமை ஆதிக்கம் பெருகிய நிலையில்தான் களவு மணம் மறுக்கப்பட்டது. தான் விரும்பிய காதலனைப் பெரும் உறுதியோடு தலைவி அறத்தோடு நின்றாள். கபிலர் இதைத் தமிழறம் என்றார். உடமைக்கோ, குலத்திற்கோ மனிதர் தம்மை இழக்க வேண்டாம். அன்புக்கே முதன்மை – சமத்துவமே வாழ்வின் உயிர்ப்பு - என்ற உணர்வின் வெளிப்பாடுதான் – இந்த அறத்தோடு நிற்றல் – தமிழறம். இது மறுக்கப்பட்ட நிலையில்தான் பெண்களுக்கு கற்பு அழுத்தம் பெறுகிறது. மன்னர்கள் நிலத்திற்காக ஆதிக்கத்திற்காக நாற்படையோடு சென்று போரிட்டனர். நகரங்கள் அழிந்தன. வயல்வெளிகள் பாழ்பட்டன. சமூகத்தில் அமைதியில்லை. வறுமைக் கொடுமைகள் அதிகரித்தன. சங்க காலம் முடிவுக்கு வருகிறது. தமிழ் மன்னர்கள் வேதியர்களை அழைத்து மேலும் மேலும் போர் வெற்றிக்காக யாகம் செய்கின்றனர். சமூகச் சீர்கேடு அதிகரித்த நிலையில்தான் கள்ளும், சூதும், பரத்தமையும், காமமும், பொய்யும், வலுவும் அதிகரிக்கின்றன.

தமிழ்ச்சான்றோர் இந்த நிலையிலும் வாழாவிருக்க முடியாது. வள்ளுவர் முதலியவர்களை இக்காலத்தில் பார்க்கிறோம். சிலம்பும் மேகலையும் எழுகின்றன. கொடுங்கோல் மன்னருக்கு எதிராகக் கலகங்கள் எழுந்தன. இப்படிக் கலகம் செய்து மன்னர்களை விரட்டினார் களப்பிரர். இவர்கள் அந்நியர் அல்லர். சமூகம் சீர்கெட்ட நிலையில்தான் வாழ்வின் அவலம் அதிகரித்த நிலையில்தான் – சமணர்களுக்கு இங்கு தேவை ஏற்படுகிறது. இவர்களது வினைக்கோட்பாடு கூட தொன்மையான பழங்குடி சமூகத்தின் கொள்கையாகத்தான் இருக்கமுடியும். இன்று நீ தீங்கு செய்தால் நாளை உனக்குத் தீங்கு வரும் என்பது தொன்மையான கருத்தாகத்தான் இருக்க முடியும். சங்க முதற்கால்ச் சான்றோர்கள் மரபு முற்றாக அழிந்து

விடவில்லை. இவர்களின் பண்பாட்டு மரபு, கவிதை மரபு, கல்வி மரபு, முற்றாக அழிந்து விடவும் மாட்டாது. தமிழ்ச் சான்றோர் மக்களுக்கு நெருக்கமாக இருந்தவர். இவர்கள் வாழ்வு மக்களுக்கு முன்மாதிரியாக இருந்திருக்க முடியும். மக்களின் வாழ்விலிருந்தும் இவர்கள் இலக்கியம் படைக்கின்றனர். பழமொழிகள் இந்நிலையில்தான் இலக்கியத்தில் ஏறுகின்றன. எத்தகைய சமூகச்சூழலிலும் காதல் உணர்வைத் தடுக்கமுடியாது. களவு மணத்தையும் தடுக்கத்தான் முடியாது. இதைபோலத்தான் கவிதையுணர்வையும் அறவுணர்வையும் மனிதன் இழந்துவிட முடியாது. பள்ளிகள் இருக்கத்தான் செய்யும். கல்விப் பயிற்சிக்கும் வாய்ப்பு இருக்கத்தான் செய்யும். ஆகவே அறநெறிகள் எளிய இனிய வெண்பா வடிவில் கற்பனை நயத்தோடு, தமிழின் அழகோடு சிறு சிறு வடிவங்களில் நாற்பது, நாற்பது வெண்பாக்களாக, ஒற்றைவரியில் மூதுரையாக, ஒன்றே முக்காலடியில் குறட்பாவாக, மாணவர்களுக்குக் கற்பிக்க முடியும். இளம்வயதில்தான் கவிதையும் பாடலும் அறமும் மக்கள் நெஞ்சில் விதைக்கப்பட வேண்டும். இப்படித்தான் கீழ்க்கணக்கு நூல்கள் எழுந்திருக்க முடியும்.

தொன்மையான தமிழ் இலக்கிய வரலாற்றைப் பற்றிய சுருக்கமான மதிப்பீடு என்று இதை வைத்துக் கொள்ளமுடியுமானால் தமிழைச் செம்மொழி என இன்றைய நெருக்கடிச் சூழலில் நாம் போற்ற வேண்டியதற்கான காரணத்தையும் தகுதிப்பாட்டையும் நம்மால் புரிந்து கொள்ளமுடியும். இனக்குழு சமூகத்தின் வளமான மேன்மைகளைச் சங்க இலக்கியம் தனக்குள் பதிவு செய்திருக்கிறது. அவ்வையார், கபிலர், கோவூர்கிழார், பரணர், பிசிராந்தையார் போன்ற எண்ணற்ற தமிழ்ச் சான்றோர் மனித வாழ்வின் மேன்மையைத் தம் கவிதைகளில் பதிவு செய்திருக்கின்றனர். கணியன் பூங்குன்றனையும், நக்கீரரையும் நாம் போற்றுகிறோம். இவர்கள்தான் தமிழ்ப்பண்பாடு என்று இன்றும் அறியப்படுகிற தொகுப்பை நமக்கு விட்டுச் சென்றுள்ளனர்.

இவர்கள் நெறியில்தான் வள்ளுவரும் இளங்கோவும் சாத்தனாரும் அன்றைய வாழ்வின் சிக்கலை, மனிதன் நடத்திய அறப்போரைத் தமிழ் இலக்கியத்தில் பதிவு செய்தனர். கோப்பெருஞ்சோழனை அரசபீடத்திலிருந்து அகற்றிய அவன் மக்களை நாம் பாராட்ட முடியாது. ஒரு மாம்பழத்திற்காக இளம் பெண்ணைக் கொலை செய்த நன்னனை நாம் பாராட்ட முடியாது. தவறாகக் கருதி கோவலனைக் கொன்ற பாண்டிய

மன்னனை நாம் பாராட்ட முடியாது என்றாலும், தான் செய்தது தவறு என உணர்ந்த அதே கணத்தில் உயிரைவிட்ட அவனை நாம் மதிக்காமல் இருக்க முடியாது. குடும்பத்திற்குள் அதிகாரத்தைக் கொண்டு வந்த தனிஉடைமையும், குலப்பெருமையும் இளம்பெண்ணின் கனவுகளைச் சிதைப்பதை நாம் போற்றமுடியாது.

வஞ்சிப் போர் என்ற பெயரில் அடுத்த நாட்டின் மீது மன்னர் நடத்திய போர்களை நாம் இன்று மதிக்கவா முடியும்? இத்தகைய கேள்விகளோடுதான் தமிழறத்தைத் தமிழ்க் கவிதையைத் தமிழ் அழகியலை நமக்குள் வரித்துக் கொள்கிறோம். இத்தகைய உணர்வுதான் செவ்வியல் உணர்வு. இயற்கையோடு மனிதர் நெருக்கமாக இருந்தாக வேண்டும். இயற்கையை, உயிர்களை, மனித உறவுகளை நாசப்படுத்துவதன் மூலம், மாசுபடுத்துவதன் மூலம்தான் நமக்கான வாழ்வை மேன்மையை சேகரித்துக் கொள்ளமுடியும் என்றால் இதில் நமக்கு உடன்பாடு இல்லை. ஆதிக்கம் மனிதர்களை உள்ளும், புறமும் அழிக்கும். அரசாதிக்கம் மட்டுமல்ல, தனியுடைமை என்ற ஆதிக்கமும் உயர்சாதி என்ற ஆதிக்கமும், ஆணாதிக்கமும் சமூகத்தை நாசமாக்கும். மனித உறவுகளைச் சிதைக்கும். இத்தகைய ஆதிக்கம்தான் நிலத்தை, நீர் நிலைகளை, காடுகளை, உயிரினங்களை அழிக்கிறது. இத்தகைய உணர்வுதான் தமிழுணர்வு. இத்தகைய நல்லுணர்வு கொண்டவன்தான் தமிழைத் தமிழ் நிலத்தைக் காக்க முடியும்.

அந்நியர்க்கு நம் நிலத்தை, மக்களை, நம்மொழியை, நம் மருத்துவத்தை விட்டுத்தர முடியாது. இவற்றை அகப்படுத்திக் கொள்பவர் எவராயினும் இவர்கள் தமிழ் மக்களின் நலன் காப்பவராகவும் இருக்கமுடியாது. சங்க இலக்கியத்தை ஆழமாகக் கற்க வேண்டும் என்பது இதற்காகத்தான். தமிழைச் செவ்வியல் மொழி என நாம் ஏற்பதற்கும் காரணம் இதுவாகத்தான் இருக்கமுடியும். தமிழை இழந்துவிட்டு, தமிழ் நிலத்தை இழந்த நிலையில் நமக்கு என்ன வாழ்வு மிஞ்சும்? தமிழ்தான் நம் அனைவரையும் இணைக்கிறது.

வள்ளுவரையும், இளங்கோவையும், கபிலரையும் நமக்குள்ளிருந்து வெளியேற்றிக் கொள்ளவா முடியும்? இதேபோலத்தான் கம்பரையும் சேக்கிழாரையும் நம்மால் இழக்க முடியாது. பாரதியையும், பாரதிதாசனையும் நாம் எப்படி இழக்க முடியும்? செம்மொழித் தமிழ்

என்பதன் ஆற்றல்களை, அற்புதங்களைத் தமக்குள் தாங்கி வளர்த்தவர்கள் இவர்கள். சாதிச் சமூகம் நமக்கு உடன்பாடில்லை. சமயச்சார்பின்மைதான் சமூகத்தில் அமைதியை நிலைநிறுத்தும். சமத்துவம், சமதர்மம் என்பவைதான் தமிழறத்தின் இரண்டு முதன்மைக்கூறுகள்.

செம்மொழித் தமிழின் ஆற்றல் மிக்கக் கூறுகளைச் சங்க இலக்கியத்தின் பெரும்பகுதியில் நாம் காண்கிறோம் என்றால், பதினெட்டு கீழ்க்கணக்கு நூல்களினுள்ளும் இதன் தாக்கத்தை பகுதி அளவுக்கேனும் நாம் காணமுடியும். தமிழை முற்றிலும் சமயமயப்படுத்துவது நமக்கு உடன்பாடில்லை. மனித வாழ்வை எப்படி எல்லாம் மேம்படுத்த முடியும் என்பதில்தான் நம் கவனம் குவிகிறது. சங்ககாலத்தை அடுத்து வந்த காலத்தில் சமூக நெருக்கடிகள் கடுமையான நிலையில் மனித வாழ்வே துயரம், மனிதப் பிறப்பு அறவே வேண்டாம் என்ற உணர்வு தமிழ்ச் சமூகத்திலும் எழுந்திருக்கக்கூடும். கடுமையான சமூக நெருக்கடிகள் என்பவை தனியுடைமை அரசதிகாரம் என்பனவற்றின் ஆதிக்கச்சூழலில்தான் நேர்கிறது. இத்தகைய வரலாற்றை அக்காலத்து பெரும்புலவர்களாலும் புரிந்து கொள்ளத்தான் முடியவில்லை. உடமையையும் அரசையும் ஒதுக்கிப் பார்க்கும் உணர்வு அன்றைக்குச் சாத்தியமில்லை. இத்தகைய சாத்தியங்கள் குறைந்த அல்லது இல்லாத நிலையில்தான் சாதிகளும், மதங்களும் மனிதர்களை ஆக்கிரமித்துக் கொண்டன. இன்றும் ஆதிக்கங்கள் உலகளவில் அதிகரித்து வருவதை நாம் ஏற்போம் என்றால் நமக்கும் நேர்வது அழிவுதான். பதவி, அதிகாரம், செல்வம் என்ற முறையில் இவற்றுக்கு நம்மை விட்டுக் கொடுத்து உழைக்கும் மக்களை நமக்கு அடிமைப்படுத்தி அவர்களிடமிருந்து உழைப்பு, உரிமை முதலியவற்றைப் பறித்து நம் வாழ்வை மட்டும் மேம்படுத்திக் கொள்ள முடியும் என்று நாம் நினைப்போம் என்றால், நாம் மனிதராக இருக்கமுடியாது. அரக்கத்தனம்தான் நம் வாழ்வாகும். அதிகாரம் ஒரு கொடு நோய். அது மனிதத் தன்மையை நாளுக்குநாள் உறிஞ்சி நம்மை அரக்கனாக மாற்றும். குருதி குடிக்கும் பாசிசவாதியாக நம்மை மாற்றும்.

தமிழகம்/இந்தியச் சூழலில் எவ்வளவுதான் ஆதிக்கத்தை நம்மால் அபகரித்துக் கொள்ள இயலும் என்றாலும் இறுதியில் நம்மைவிட, அனைத்துலக அளவில் உள்ள நம்மைக் காட்டிலும் 1000/10,000 மடங்கு கொடுமையான ஆதிக்கவாதிகளுக்கு நாம் அடிபணிந்து சேவை செய்வதன்

மூலம் நம் உயிர் வாழ்வைத் தக்கவைத்துக் கொள்ளமுடியும் - நம் மக்களை அடிமைப்படுத்தி நமக்கான அதிகாரத்தைப் பெறமுடியும் என்றே வைத்துக் கொண்டாலும் - இறுதியில் நம்மிடம் மட்டுமே அதிகாரத்தைப் பறித்துக் கொள்கிற - மாபெரும் கொடும் நெறியாளர்முன் நாம் மண்டியிட நேரிடும். அப்புறம் நமக்குத் தமிழ் ஏன் வேண்டும்? தமிழ் நெறி ஏன் வேண்டும்? தமிழ்ச் செம்மொழி என்ற பெருமை ஏன் வேண்டும்?

இப்பொழுது மீண்டும் கீழ்க்கணக்கு நூல்கள் பற்றிய ஆய்வுக்குத் திரும்புவோம். தமிழ் மாணவர் என்ற முறையில் கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்தையும் நாம் ஊன்றிக் கற்போம். உரைகளையும் திரும்பத் திரும்ப கற்போம். இவற்றின்மூலம் தமிழ்க் கவிதையைக் கற்றுக் கொள்வோம். கவிதை என்றால் என்ன என்று அறிந்து கற்போம். நமக்குள் அறவுணர்வைச் சேகரித்துக் கொள்வோம். நம்காலச் சூழலிலிருந்து எது அறம் எந்த அறம் நம்மைக்காக்கும் என்று அறிந்து கற்போம். அறநெறியை அழிப்பவர்களோடு நமக்கு உறவு வேண்டாம். அதிகாரத்தோடு நமக்கு உறவு வேண்டாம். மக்களோடுதான் நமக்கு உறவு. தமிழ் இயற்கை, தமிழ் நிலம், நீர்நிலைகள் முதலியவற்றைக் காக்கும் உணர்வுதான் நமக்கான அறவுணர்வாகவும் இருக்கமுடியும். அறவுணர்வை நமக்குள் தானே பயிரிட்டுக் கொள்ள முடியாது. சமூக நலத்தோடு ஒத்திருப்பதன் மூலமே நமக்குள்ளும் அறவுணர்வை வளர்த்துக் கொள்ளமுடியும். அறவுணர்வோடுதான் அழகியல் தங்கும். கவிதை தங்கும். கவிதைக்குத் தனி வாழ்வில்லை. கவிதையும், அறமும் இணைபிரியாதவை. வெண்பாக்கள் தமிழ் அழகியலின் ஓர் அற்புதமான வடிவம். தமிழகத்தில் நம்மால் சேகரிக்க முடியுமானால் பத்தாயிரக்கணக்கில் பழமொழிகளைச் சேகரிக்க முடியும். பழமொழிகள் மக்கள் வாழ்வின் செறிவான பகுதிகள். இவையும் அசலான கவிதைகள். கீழ்க்கணக்கு நூல்களில் இன்னொரு பதிவு தமிழ் மருத்துவம். சமணர்கள் தமிழ் மருத்துவத்தையும் மேம்படுத்தியவர். தமிழ் வாழ்வையும் மேம்படுத்தியவர். எல்லாவற்றையும் வள்ளுவர் வழியே நாம் கற்போம். வள்ளுவம்தான் தமிழ் வாழ்வுக்கான செந்நெறி.

*குறிப்பு:-*

*சேலம் - பெரியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மார்ச்சு 16,17,18-2009 இல்நடத்திய கருத்தரங்கில் ஞானி நிகழ்த்திய தொடக்கவுரை.*

# 11. ஓருலக உருவாக்கமும் செம்மொழித் தமிழும்

1. ஓருலகம் என்பது உயரிய கொள்கையெனினும் அதன் உருவாக்கத்திற்கான தடைகள், வரலாற்றுக்காலம் முழுவதும் பல்வேறு வடிவங்களில் நிலவி வருகின்றன. இன்றைக்கும் உலகம் முரண்பட்ட, பல கூறுகளாகப் பிளவுபட்டுக் கிடக்கிறது. மேற்குலகம் கிழக்குலகம், வடக்கு தெற்கு இவற்றோடு முதல் உலகம், இரண்டாம் உலகம், மூன்றாம் உலகம் என்றும் உலகம் முழு அளவில் தகர்ந்து கொண்டிருக்கிறது. முதலாளியத்தை வெல்லும் ஆற்றல் சமதர்ம உலகிற்குச் சாத்தியப்படவில்லை. அணு ஆயுதப் பெருக்கம், இராணுவ மண்டலங்கள், பொருளியல் சுரண்டல் முதலியவை உச்ச அளவில் இன்றைய நடைமுறைகளாக உள்ளன. அமெரிக்கா மற்றும் அரசுகளின் பயங்கரவாதம், மக்கள் மத்தியில் பயங்கரவாதப்போக்கைத் தொடர்ந்து கிளப்பி வருகிறது. உலக அமைதியை இன்று ஐக்கிய நாடுகளின் அவையால் காக்க முடியவில்லை. உலக அளவில் பல்வேறு வடிவங்களில் ஏற்றத்தாழ்வுகள் நிலவும் காலம் முழுவதும் சுரண்டலும் ஒடுக்குமுறையும் போர்களும் தவிர்க்க இயலாதனவாக உள்ளன. இயற்கை வளமிகுந்த ஆசியா, ஆப்பிரிக்கா முதலிய கண்டங்களை முழு அளவில் சுரண்டும் நோக்கில் மேற்குலகில் அறிவியலும் தொழில் நுட்பமும் மூலதனப் பெருக்கமும் செயல்படுகின்றன. திட்டமிட்டு இவை உலகின் மீது மூன்றாம் உலகப்போரைத் திணிக்கின்றன. மூன்றாம் உலக நாடுகளின் வறுமையும் நோய் நொடிகளும் என்றைக்கேனும் தீருமா என்பதற்கு உறுதியில்லை. பொருளியல் சுரண்டல் காரணமாகவும் ஆதிக்க சக்திகளின் ஓயாத செயல்பாடுகள் காரணமாகவும் இயற்கைப் பேரழிவு உச்ச அளவில் நடைபெறுகிறது. புவியின் காற்று மண்டலம் முதலியவை நாசமாகி வருகின்றன. மனித வரலாறு தன் இறுதிக்கட்டத்தை எட்டிவிட்டதோ என்ற அச்சம் பெருகி வருகிறது. இத்தகைய நிலவரங்கள் முற்றிலும் மறைந்தாலொழிய அனைத்து மக்களின் வாழ்வியல் மேன்மையை உறுதிப்படுத்துவதாகிய ஓருலக உருவாக்கம் சாத்தியமில்லை என்று உறுதியாகச் சொல்ல முடியும்.

எனினும் வரலாற்றுக் காலம் முழுவதும் பல்வேறு நாடுகளில் தோன்றிய சான்றோர் பலரும் மக்கள் மத்தியில் பிளவுகளும்

ஏற்றத்தாழ்வுகளும் நீங்கி உழைப்பும் பகிர்வும் என்ற முறையில் அனைவரும் ஒத்த உணர்வோடு அமைதியாக வாழவேண்டும் என்று கனவு கண்டுள்ளனர். உலக அளவிலான இயற்கை வளங்களைத் தேவையான அளவுக்கு அனைத்து மனிதரும் பகிர்ந்து கொண்டு பயன்பெற முடியும். இயற்கையைப் பேரழிவுக்கு உட்படுத்தாமல் இன்று வளர்ச்சி பெற்றுள்ள அறிவியலையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தி மனிதர் தமக்குத் தேவையான உணவு, உடை, இருப்பிடம் ஆகிய வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும். பேரளவில் வளர்ந்துள்ள அறிவையும் கலை நுட்பங்களையும் அனைவரும் பெற்றுத் தம் வாழ்வை நிறைவு செய்து கொள்ள முடியும். விண்ணுலகம் பற்றிய நெடுங்காலக் .கனவுகளை மண்ணுலகில் நனவாக்க முடியும். மாபெரும் இயற்கையோடும் உயிர் வகைகளோடும் உறவு கொள்ள முடியும். மாபெரும் வரலாற்றுக்குள் மனிதர் தம்மை இனம் காண முடியும். மாபெரும் பிரபஞ்சத்தைத் தமக்குள்ளும் கண்டு தரிசிக்க முடியும். மனித வாழ்வுக்குள் அமரத்துவம் இயல்பாக நடைபெறும். மனிதனுக்குள் இயல்பாக இறைமை நிறையும். இத்தகையோர் சமூகம் நிலவும் ஒருகாலத்தில்தான் ஓருலகம் என்ற கொள்கை செயலுக்கு வரும். தேசங்கள் என்ற வரையறைகள் இருக்கலாம். இனங்கள், மதங்கள், மொழிகள் என்பன அழிய வேண்டியதும் இல்லை. போர்க்கருவிகள் அறவே தேவையில்லை. வாழ்க்கை வசதிகள் கொட்டிக் கிடக்க வேண்டும் என்பதில்லை. போட்டி, பொறாமை இல்லாமல், போர்கள் இல்லாமல் மனிதர் வாழமுடியும். எளிய வாழ்க்கை மனிதர்க்குப் போதும். அன்பும் அறிவுமே மனித வாழ்வின் நுட்பங்கள் ஆகமுடியும். இப்படியும் ஒர் உலகம் சாத்தியம் தான்.

2. இவ்வளவும் சொன்ன பிறகு இனி நம் செந்தமிழ் பற்றி, செம்மைத்தமிழ், செவ்வியல் தமிழ் பற்றிப் பேசலாம். ஓருலக உருவாக்கம் என்பது தமிழ் மக்களாகிய நமக்கு மிகவும் இயல்பானதொரு கொள்கை என்றே உறுதியாகச் சொல்ல முடியும். 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்', 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்று தொடங்கி தமிழிலக்கியங்களிலிருந்து நூற்றுக்கணக்கான மேற்கோள்களை நம்மால் சொல்ல முடியும். இவையெல்லாம் தமிழ்ச் சான்றோர்களின், பெரும் புலவர்களின் கொள்கைகள் என்றோ கற்பனைகள் என்றோ நாம் கருத வேண்டியதுமில்லை. இத்தகைய சான்றோரும் அறிஞரும் பெரும்பான்மையான மக்களோடு இரண்டறக் கலந்தவர். மக்களின் வாழ்விலிருந்து தம்மைப் படைத்துக் கொண்டவர்.

3. வரலாற்றுக் கால அளவில் நாம் அறிந்தவரை உலகின் முதல் நாகரிகங்கள் என்ற முறையில் கிரேக்கம், பாரசீகம், சீனம் ஆகியவற்றை நாம் குறிப்பிட முடியும். யூதர்களின் நாகரிகம் போன்றனவும் இந்த வரிசையில் சேர்த்துச் சொல்லப்பட வேண்டியவை. இந்த வரிசையில்தான் தமிழ் நாகரிகமும் இடம்பெறுகிறது. முதல் நாகரிகங்களென நாம் இப்பொழுது பட்டியலிட்டிருக்கும் நாகரிகங்களுக்கும் முற்பட்டதெனவும் தென்னமெரிக்காவின் வடபகுதியில் வளர்ந்த நாகரிகம் ஒன்றைச் சொல்லமுடியும். குறைந்த அளவு 15000 ஆண்டுகளுக்கு முற்பட்டதென இந்த நாகரிகத்தை அறிஞர் குறிப்பிடுவர். நம்மைப் பொருத்தவரை குமரிக்கண்டம் பற்றி பேசுகிறோம். இதற்கான சான்றுகள் எனவும் சிலவற்றை நாம் குறிப்பிடுகிறோம். 2002-இல் பூம்புகாரின் கடற்கரையிலிருந்து 5.கி.மீ. தொலைவில் கடலுக்கடியில் மறைந்து கிடக்கும் ஒரு மாபெரும் நகரின் எச்சங்கள் குறித்து பிரிட்டனில் இருந்து வந்த கடலியல் ஆய்வறிஞர் செய்த ஆய்வின் முடிவை இங்கு குறிப்பிடலாம். இன்றைக்கு 11500 ஆண்டுகளுக்கு முற்பட்டது அந்த நகரம் என்பது அவர் கண்டறிந்த முடிவு. இப்படியொரு பெருநகரம் அங்கு அக்காலத்தில் இருந்திருக்க வேண்டும் என்றால் அக்காலத்திலேயே பொறியியலும் கணிதவியலும் கூடவே ஒரு மொழியும் வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அந்த மொழியும் தமிழாகவோ தமிழின் தொன்மை மொழியாகவோ இருந்திருக்கக் கூடும். குமரிக்கண்டம் பற்றிய நம்மவரின் கருதுகோள் அல்லது உண்மைக்கும் அக்காலத்துப் புகார் நகர இருப்பை ஒரு வலுவான ஆதாரமாகக் கொள்ள முடியும். வரலாற்றுக்கு முற்பட்டதென இந்த நாகரிகங்களை ஒதுக்கிவிட்டாலும் கிரேக்கம் முதலிய முதல் நாகரிகங்கள் குறித்து மீண்டும் இங்கு பார்க்கலாம்.

4. நாம் அறிந்திருக்கிற ஐரோப்பிய நாகரிகத்திற்கு ஆதாரமாக விளங்கியது என்று கிரேக்க நாகரிகத்தை உறுதியாகச் சொல்ல முடியும். பாரசீகம், சீனம், முதலிய நாகரிகங்களும் அந்தந்த விரிந்த பிரதேசங்களில் உறுதியாக வளர்ச்சி பெற்ற நாகரிகங்கள். இவைபோலத்தான் இந்தியா என்று அறியப்படுகிற நிலத்தில் தமிழ் நாகரிகம். தொன்மையான இந்த நாகரிகங்களுக்கிடையில் குறைந்த அளவுக்கேனும் தொடர்புகளும் ஊடாட்டங்களும் இல்லாமலும் இருந்திருக்க முடியாது. கிரேக்கத்தின் கட்டிடக்கலை, சிற்பம், இலக்கியம், தர்க்கம், மெய்யியல், அரசியல் குறித்து இன்றளவும் உலக அளவில் வியக்கத்தக்க சாதனைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இவை குறித்து உலக அளவில் பேசாத

அறிஞர்கள் எவரும் இல்லை. பாரசீகம், சீனம் போன்ற நாகரிகங்களும் பல வகைகளிலும் சாதனைகள் இடம் பெற்ற நாகரிகங்கள். கிரேக்க நாகரிகம் அளவுக்குப் பிற நாகரிகங்கள் பற்றி அறிஞர்கள் பேசுவதில்லை. இன்று வரையில் உலகம் பெற்றிருக்கிற அறிவியல், இலக்கியம், மெய்யியல், சிற்பம் முதலிய அனைத்து கலை வளர்ச்சிகளுக்கும் கிரேக்கமே தொடக்கமாகவும் தூண்டுதலாகவும் இருந்தது என்றே மேற்குலக அறிஞர்கள் பேசுகின்றனர். மேற்கத்தியரின் காலனி ஆதிக்கம்தான் இம்முறையில் இவர்களைப் பேச வைத்திருக்கிறது என்று நம் காலத்தில் ஆய்வறிஞர்கள் உண்மை கூறுகின்றனர்.

முக்கியமாக நாம் இங்கு கூர்ந்து நோக்க வேண்டியது என்னவென்றால் இன்றளவிலான உலக நாகரிகத்தைத் தாங்கி நிற்பது கிரேக்கம் முதலிய தொன்மை நாகரிகங்கள்தான். மனித அறிவின், கலையுணர்வின் முதற்பேரெழுச்சியென இந்த நாகரிகங்களைத்தான் சொல்லமுடியும். இன்றும் நாம் சாக்ரடீஸ், பிளேட்டோ, ஹோமர் என்று வியந்து பேசுகிறோம். கிரேக்க நாகரிகத்தைப் போலவே சீன நாகரிகம் குறித்தும் தமிழ் நாகரிகம் குறித்தும் பேசுவதற்கு இன்று ஏராளமான விவரங்கள் உள்ளன. தமிழ் நாகரிகம் பற்றிப் பேசுவதென்றால் தொல்காப்பியம் என்றும் சங்க இலக்கியம் என்றும் தொடங்கி நிறையச் சொல்ல முடியும். இது பற்றிப் பிறகு குறிப்பிடலாம். இடையில் ஒன்றைச் சொல்லலாம்.

5. 2500 ஆண்டுகள் கழிந்தபோதிலும் கிரேக்கத்தின் கலை இலக்கியங்கள் சிற்பங்கள் முதலியவை நவீன காலத்தைச் சேர்ந்த நம் நெஞ்சத்தை ஏன் கவர்கின்றன? என்ற கேள்வியை பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த கார்ல் மார்க்ஸ் தனக்குள் எழுப்பிக் கொண்டார். ஐரோப்பிய தொழில் மற்றும் அறிவியல் நாகரிக வளர்ச்சிக்கு மத்தியில் மார்க்சின் நெஞ்சில் இப்படியொரு கேள்வி எழுந்தது. மார்க்சுக்கு உடனடியாக விடை கிடைக்கவில்லை. சில பத்தாண்டுகளுக்குப் பிறகு மார்க்ஸ் இந்த கேள்விக்கான விளக்கம் கண்டார்.

கிரேக்க நாகரிகம் என்பது உலகின் குழந்தைப் பருவத்து நாகரிகம். அதாவது இன்னும் மனிதன் உலகச் சூழலிலிருந்து தன்னை வேறுபடுத்திக் கொள்ளாத பருவம். இயற்கையும் தானும் ஒன்று எனக் கருதுகிற பருவம். மனிதர் தமக்கிடையில் தோன்றி வளர்ந்து கொண்டிருக்கிற ஏற்றத்தாழ்வுகள் வேற்றுமைகள் பற்றி உணராத காலம். இனக்குழுச் சமூகத் தொடர்பிலிருந்து இன்னும் மனிதர் தம்மை விடுவித்துக் கொள்ள முடியாத காலம்.

தனியுடமையும் அரசதிகாரமும் மனித வரலாற்றுக்குள் வந்து கொண்டிருக்கின்றன. மனிதரை இவை மெல்லமெல்ல ஆக்கிரமித்துத் தனக்கு வசப்படுத்திக் கொள்ளும் பொழுது மனிதரின் குழந்தைப் பருவம் மறைந்தொழியும். ஏற்றத்தாழ்வுக்கு இடம் இல்லாத இனக்குழுச் சமூகத்தினுள் தனக்குள் ஒருமை கொண்டிருக்கிற மனிதன், தனியுடைமைக்கும் அரசதிகாரத்திற்கும் வசப்படும் பொழுது தனக்குள் தானே தகர்ந்து இதமான தன் குழந்தைப் பருவத்தைத் தனக்குள்ளும் தானே தகர்த்துக் கொண்டு வரலாற்றுக் கட்டத்திற்குள் நுழைவான். இனக்குழுச் சமூகத்தின் அற்புதமான உணர்வுகளை அவனால் இப்பொழுதும் ஒதுக்கிக்கொள்ள இயலாது. மாபெரும் இயற்கையையும் தன்னையும் ஒன்றிணைத்துக் காணுகிற அவன் இனிச் சிதறிப் போவான். தனக்குள் ஒருமை கண்டறிந்த அவன் தன்னை, தன் பேரழகைக் கலைகளாகச், சிற்பங்களாக, இலக்கியமாகப் படைக்கிறான். தன்னைச் சிதறடிக்கிற புதிய உலகத்தினுள் தன் ஒருமையை நிலைநிறுத்திக் கொள்கிற நோக்கத்தோடு தன் படைப்புக்களை உருவாக்குகிறான். புதிய உலகத்தோடு, இந்தக் கலைப் படைப்புக்களைத் தன் கனவாக, தன் உயிர்த்துடிப்பாகக் கொண்டு செல்ல வேண்டும். குழந்தைப் பருவம் நீங்கிய பிறகும் அந்தப் பருவத்துக் கதைகளைக், கற்பனைகளை, உறவுச் செழுமையை, பெற்றோரின் பேரன்பை, நண்பர்களோடு கூடி ஆடிய விளையாட்டுகளை இறுதிவரை நாம் சுமந்து, அவை குறித்த இனிய நினைவுகளோடு வாழ்ந்து, கழிந்து போன அந்த உலகை மீண்டும் படைத்தாக வேண்டும் என்ற உணர்வோடு வாழ்வதைப் போலத்தான் கிரேக்கனும் தன் கலைப் படைப்புக்களை உருவாக்கினான். தானும் உலகமும் பிளவுபடாத ஓர் உணர்வைத் தன் படைப்புக்களில் கொண்டிருந்தான். இதன் காரணமாகத்தான் 2500 ஆண்டுகள் கழிந்த பிறகும் தன் காலத்து முதலாளியச் சூழலில் இயற்கையிலிருந்தும் சமூகத்திலிருந்தும் தனக்குள்ளும் பிளவுபட்டு அந்நியமான மனிதன், பிளவுபடாத அந்தப் பழங்காலத்து கிரேக்கக் கலைகளை இப்பொழுதும் உணர்வோடு கொண்டாடுகிறான். மார்க்ஸ் தந்த விளக்கத்தை இப்படித்தான் நாமும் புரிந்து கொள்கிறோம். இன்றும் உலகம் தனக்குள் பிளவுபட்டுச் சிதறிக் கொண்டிருக்கிறது. சிதறிக்கொண்டிருக்கிற உலகச் சூழலில் வாழும் நம்மைப் பொருத்தவரை உலகின் ஒருமையை வேண்டுகிறோம். ஒருலகம் என்பதை உருவாக்க விரும்புகிறோம். நமக்குள் இன்னும் அந்த ஓர்மை, ஒருலக நம்பிக்கை, பிளவுபடாத உலகம் வேண்டும் என்ற நம்பிக்கை தங்கியிருக்கிறது. அந்தக் கனவை நனவாக்க விரும்புகிறோம். செம்மொழியாகிய

தமிழுக்குள் எதிர்காலத்தில் நாம் காண விரும்பும் ஒருலகம், ஒன்றுபட்ட உலகம், பிளவுபடாத உலகம், பிளவுபடுவதை விரும்பாத உலகம், பிளவுக்கு எதிர்வினை தருகிற உலகம் இருக்கிறது. உலகின் நாகரிகம் என்று நாம் பட்டியலிட்ட அனைத்து தொன்மை நாகரிகங்களுக்குள்ளும் இத்தகைய கனவுகள் உண்டு. இன்று தகர்ந்து கொண்டிருக்கிற உலக நாகரிகத்தைத், தகர்ந்து விடாமல் காத்து நிறுத்தும் வலிமை அந்தத் தொன்மை நாகரிகங்களுக்குள் அவற்றின் கலை இலக்கியம் முதலியவற்றுக்குள் இருக்கின்றன. உலகைக் காக்கும் திறன் தமிழ் நாகரிகத்திற்கும் உண்டு. குறிப்பாக நம் செம்மொழிக்குள் அந்தத் திறன் உண்டு. செம்மொழியாகிய தமிழை இன்று நாம் போற்றுவதற்கும் இதுவே முதன்மையான காரணம். இதுகுறித்து இனி விரிவாகப் பார்க்கலாம்.

6. புறநானூற்றில் பக்குடுக்கை நன்கணியாரின் பாடல் ஒன்றை இங்கு நினைவு கூறலாம். முன்னைய சமூகத்தில் இருந்த ஒருமை தன் காலத்தில் சிதைந்தது கண்டு வருந்திப் பாடுகிறார். ஒரு தெருவில் ஒரு வீட்டில் மணப்பறையும், இன்னொரு வீட்டில் சாப்பறையும் முழங்குவது கேட்டு வருந்துகிறார். முன்பு இப்படி இல்லை. திருமணம் என்றால் ஊர் முழுவதும் சேர்த்து கொண்டாடும். சாவு என்றால் ஊர் முழுவதும் கூடி வருந்தும். இப்பொழுது நிலைமை மாறிவிட்டது. ஒரே தெருவில் மணப்பறையும் சாப்பறையும் முழங்குகின்றன. இப்படி உலகம் இன்னாததாக மாறி இருக்கிறது. இப்படி உலகைப் படைத்தவன் பண்பற்றவன். நாம் இதை மாற்றுவதற்கில்லை. இன்னாத இந்த உலகத்தில் இயன்றவரை இனியதைச் செய்ய வேண்டும்.

கணியன் பூங்குன்றனாரின் இன்னொரு பாடல். மலையில் மின்னல் வெட்டி இடி இடித்து மழை கொட்டுகிறது. ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓட, வெள்ளத்தில் இழுபட்டுச் செல்லும் ஒரு சிறு படகு சில சமயம் மேட்டில் ஏறிக் கொள்கிறது. சில சமயம் பள்ளத்தில் வீழ்கிறது. இதைப்போலத்தான் சமூகம் இன்று மாறியிருக்கிறது. சமூகத்திற்குள் வந்த விதி சிலரைப் பெரியோராக்குகிறது. சிலர் சிறியவராகின்றனர். சிலர் பெரியவர் ஆவதற்கு அவர்கள் காரணமில்லை. சிலர் சிறியவர்களாவதற்கு அவர்களும் காரணம் இல்லை. சமூகம் இப்படியும் சிலரை உயர்ந்த இடத்தில் வைக்கிறது. ஆகவே பெரியோரை நம்மால் வியக்கமுடியாது. சிறியவரை நம்மால் இகழவும் முடியாது. நம்மைப் பொருத்தவரை அனைவரும் ஒரு நிகரானவர். நமக்கும் 'யாதும் ஊர்' - 'யாவரும் கேளிர்'.

இந்த இரண்டு பாடல்களும், முன்னர் இனக்குழுச் சமூகத்தில் நிலவிய ஒருமை தகர்ந்த விளைவைச் சொல்லுகின்றன. உடமைச் சமூகத்தின்

வருகையை வறுமையால் நேர்ந்த மனித அவலத்தைச் சொல்லுகின்றன. சங்ககாலச் சான்றோருக்கு புது வரவாகிய உடைமைச் சமூகத்தோடு உடன்பாடில்லை.

இனக்குழுச் சமூகத்தின் பண்பாட்டு மேன்மையை இவர்கள் பற்றிக் கொள்கின்றனர். இத்தகைய தமிழ்ச் சான்றோர் புகழ் வரும் என்றால் உயிரையும் கொடுப்பார்கள். பழி வரும் என்றால் உலகமே, கிடைக்கும் என்றாலும் ஏற்கமாட்டார்கள். இத்தகைய சான்றோர் இன்னும் உயிர் வாழ்வதால் தான் உலகம் அழியாமல் இருக்கிறது என்கிறார் இன்னொரு கவிஞர்.

இன்னொரு புலவர் பாடுகிறார். உலகத்தைத் தன் ஒரு குடைக்கீழ் கட்டி ஆளும் மன்னனாக இருந்தாலும் இரவு பகல் பாராமல் காட்டில் வேட்டையாடும் வேடனாக இருந்தாலும் இருவரும் உண்பது நாழியளவு. உடுப்பவை இரண்டு ஆடைகள். பிற வகைகளில் வேறுபாடு இல்லை. நாமே எல்லாவற்றையும் வைத்துத் துய்ப்போமென்றால் நாம் இழப்பவை பல ஆகிவிடும் என்கிறார் புலவர். ஏற்றத்தாழ்வுகள் வந்துவிட்டன. இன்னும் வேற்றுமைகள் அதிகரிக்கவில்லை. புலவர் எச்சரிக்கிறார். தான் ஒருவனே வைத்து வாழ்வது என்றால் பலவற்றை இழக்க நேரிடும் என்கிறார். உறவை, மகிழ்ச்சியை, உடல்நலத்தை, இசையை, பாதுகாப்பை இவன் இழக்க நேரிடும். வேண்டாம் என்கிறார் புலவர்.

புறநானூற்றில் மட்டுமல்லாமல் சங்க இலக்கியங்கள் அனைத்திலும் மனித அவலத்துக்கு எதிரான குரலைக் கேட்கிறோம். அகத்திணைப் பாடல்களில் தலைவன் தலைவிக்கிடையில் உறவைச் சான்றோர் வற்புறுத்துகின்றனர். காதலித்தவன் எந்த நிலையிலும் தலைவியைக் கைவிடக் கூடாது. பெற்றோருக்கு விருப்பம் இல்லையென்றாலும் காதலித்தவனையே மணந்தாக வேண்டும் என்ற அறத்தைத் தலைவி கடைபிடிக்கிறாள். சான்றோர் இந்த அறத்தை வற்புறுத்துகின்றனர். இல்லறவாழ்வின்போது பெரும்பொருள் திரட்டவேண்டும் என்று விரும்பும் தலைவன், தலைவியைப் பிரிந்து செல்ல முனைகிறான். தலைவியின் துயரம் கண்டு பிரிந்து செல்வதன் மூலம் காவிரிப்பூம்பட்டிணமே கிடைப்பதென்றாலும் உன்னை நான் பிரியமாட்டேன் என்று தலைவன் கூறுவதாகப் புலவர் பாடுகிறார்.

இனக்குழுச் சமூகத்தின் தலைவன் பாரி, இவனை வெல்வதற்கு வேந்தர் முற்றுகை இடுகின்றனர். பாரி எல்லாவற்றையும் எல்லோருக்கும்

மன்னர்கள் எனப்படும் பாரி முதலியவர்களுக்கும் மூவேந்தர்களுக்குமிடையில் நடைபெற்ற போர் இன்னொரு வகை. இவை தவிர மூவேந்தர்களில் ஒருவருடனோ, இருவருடனோ குறுநில மன்னர்கள் சேர்ந்து பிறருடன் நடத்திய போர்கள், குறுநில மன்னர்கள் தமக்குள்ளே நடத்திய போர்கள், இவ்வாறு பல வடிவ அமைப்புகள் காணக் கிடைக்கின்றன. இந்த வடிவ அமைப்புகளுக்கு ஏதாவது பொருள் உண்டா என்றும் ஆய்வது நல்லது. இவ்விடத்தில் தான் எங்கல்சின் அறிவு நமக்குப் பெரும் துணை புரிகிறது.

உதாரணமாக, பாரி ஒரு குறுநில மன்னன் எனப் புலவர்களால் கூறப்படுவன். இவனுடைய வள்ளண்மையையும், இவனுக்காக பறம்பு மலையில் உள்ளோர் அனைவரும் போரிட முன் வருவர் என்றும், பறம்பு மலையின் இயற்கைப் பொருளாதாரம் பற்றிக் கபிலர் கூறுவதிலிருந்தும் பாரியை இனக் குழுச் சமுதாயத்தின் தலைவனாக மதிப்பிடுவதே சரியாக இருக்கும். புறநானூற்றில் பாரியைப் பற்றி வரும் பல பாடல்களில் (105 முதல் 120 முடிய)

"நளிகொள் முரசின் மூவர் 109
வென்று எறி முரசின் வேந்தர் 112
பல்வேல் அண்ணல் யானை வேந்தர் 115
வலம்படு தானை வேந்தர் ... 116
பணை கெழு வேந்தர் ... 119

வேந்தர் எனப் பலமுறை சொற்கள் இடம் பெற்றாலும் பாரியை வேந்தனாகக் கூறவில்லை.

பாரி: வள்ளியோன் என்றே கூறப்படுகிறான்.

அதியமான் முதலிய வள்ளல்களும், குமணன் போன்றவர்களும் மேலே குறிப்பிட்ட இனக்குழுச் சமுதாயத்தின் பண்புகளைச் சிறிய அளவிலோ அல்லது பெரிய அளவிலோ கொண்டிருந்தார்கள். இவர்கள் ஏதாவது ஒரு வழியில் அழிக்கப்பட்டால் ஒழிய அடுத்த சமுதாய அமைப்பு - உடைமையை அடிப்படையாகக் கொண்ட அரசை - நிர்வாக அமைப்பாகக் கொண்ட இன்னொரு சமுதாய அமைப்பைத் தோற்றுவிக்க முடியாது. ஆகவே பாரியை ஒழிக்க மூவேந்தர்கள் படையெடுத்து வந்ததிலோ வஞ்சகமாகவோ அல்லது படை கொண்டோ அவனைக் கொன்றொழித்ததில் வியப்பில்லை. ஆகவேதான் மூவேந்தர்களின்

பகையைத் தாம் ஏற்க மறுத்து பல தலைவர்கள் பாரி மகளிரை மணம் செய்து கொள்ள மறுத்தனர்.

சங்ககாலத்தின் குறிப்பிடத்தக்க சிறப்பியல்பு, பாரி போன்ற கடையெழு வள்ளல்களையும் அவர்களையடுத்து வந்த குமணன் போன்றவர்களையும் சிறுகுடிப் பண்ணன் போன்ற சிறு தலைவர்களையும் கொண்டிருந்தமையாகும். இத்தலைவர்களின் சாவு சங்ககாலத்தின் அவல நிகழ்ச்சியாகும். இத்தகையவர் சங்ககாலத்தில் பெருகியிருந்தமையும் இவர்கள் சாவால் புலவர்களும், பாணர்களும் மிக மிக வருந்தி உருக்கமான கையறு நிலைப் பாடல்களைப் பாடினர் என்பதையும் புறநானூற்றில் பார்க்கின்றோம். இந்த வியத்தகு நிகழ்ச்சிக்கு ஒரு பொருத்தமான காரணம் தேவையா? இல்லையா? ஓர் அரசன் (கோப்பெருஞ்சோழன்) இறக்கும் போது அவனுடன் பல புலவர்களும் சேர்ந்து இறந்த வியத்தகு நிகழ்ச்சிக்கு ஆழமான காரணம் தேவை இல்லையா?

5. இப்பிரச்சனையை வேறு ஒரு வகையிலும் ஆராய்வோம். சங்ககாலத்தின் இன்னொரு பண்பு. சமுதாயத்தில் முதல் முறை உடைமையின் நுழைவால் ஏற்பட்ட கலவரமாகும். கோப்பெருஞ்சோழனை அவனது மக்களே படை கொண்டு எதிர்த்தனர். கோப்பெருஞ்சோழனின் சார்பில் பெரும் புலவர் பலர் நின்றனர். சோழனுக்குத் தன் மக்களோடு போரிடுவதால் பயனில்லை என அறிவுறுத்தினர். அத்துடன் தன் மக்களே தனக்கெதிராகப் படை நடத்திய கொடுமையைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் சோழன் வடக்கிருந்து உயிர் விட்டான். புலவர் பலரும் அவனோடு உயிர் துறந்தனர்.

வள்ளல்கள் அநேகமாக மலைநாட்டவராகவே இருத்தல், ஒரு பொருளை உடையது.

வள்ளல்களைப் பற்றிப் புலவர்கள் பாடிய பாடல்களில் சமகாலச் சமுதாய நிலையிலிருந்து புலவர்கள் தரும் விமர்சனம் அடங்கியிருக்கிறது.

– கொடை மடம்

புறம் 137. நாஞ்சில் வள்ளுவனை ஒரு சிறைப் பெரியனார் பாடிய பாடலில் வரும் வரிகள்:

"இரங்கு முரசின் இனம்சால் யானை
முந்நீர் ஏணி விறல்கெழு மூவரை
இன்னும் ஓர் யான் அவா அறியேனே
நீயே முன் யான் அறியுமோனே" –

என்ற வ்ரிகள் பொருள் நிறைவுடையன.

இவனை ஔவை பாடிய பாடல் புறம் : 140 : "நாஞ்சில் பொருநன் மடவன்" "தேற்றா ஈகை" (142 கொடை மடம்)

148. பீடில் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்
செய்யா கூறிக் கிளத்தல்
எய்யாதாகின்று எம் சிறு செந்நாவே

- நள்ளி - வன்பரணர்.

கோப்பெருஞ் சோழன் ஒரு வள்ளல் என்பதையும், இவனால் தமக்குக் கிடைக்கும் செல்வத்தின் அளவு குறைந்து விடும் என்ற கருத்தோடு இவனது மக்கள் இவனை எதிர்த்ததையும் சேர்த்துப் பார்க்கும்போது நடைபெற்ற நிகழ்ச்சிகளின் உண்மை நமக்குப் புரிய வரும்.

கோப்பெருஞ்சோழன் குடும்பத்தில் மட்டுமல்லாமல் இத்தகைய நிகழ்ச்சி சங்ககாலச் சமுதாயத்தில் பரவலாக நடைபெற்றுள்ளது. குமணனுக்கு எதிராக அவன் தம்பி கிளம்பினான். தமையனின் தலையையே வாங்கத் துடித்தான். குமணனும் வள்ளண்மையோடு தன் தலையையே கொடுக்கவும் தயங்கவில்லை. வெளிமான் இறந்த போது அவனை நம்பி வந்த புலவர்க்கு இளவெளிமான் போதிய ஆதரவு காட்டவில்லை.

மேற்கண்ட நிகழ்ச்சிகளிலிருந்து ஒரு உண்மை புலப்படும். பழைய தலைமுறைக்கும் புதிய தலைமுறைக்கும் உடைமையடிப்படையில் ஒரு மோதல் ஏற்பட்டிருக்கிறது. புதிய தலைமுறை பழைய பண்பாட்டை மறுத்துவிட்டுக் கடுமையான முறையில் பழைய தலைமுறையைச் சாடக் கிளம்பிவிட்டது. பண்பாடு மிக்க பழைய தலைமுறை புதிய தலைமுறையின் கலகத்தை எதிர்க்கக் கூட விரும்பாமல் விட்டுக் கொடுத்துத் தன் கையாலேயே தன் சாவைத் தேடிக் கொள்ளத் தயாராகிவிட்டது.

(வள்ளல்கள் எனப்படுவோர் அனைவரும் மாறிவரும் சமுதாயச் சூழலில், மிகத் துணிச்சலோடு தமக்கென எதுவும் வைத்துக்கொள்ளாமல் எல்லாவற்றையும் தந்துவிட்டு அவலத்தையே துணையாகக்கொண்டு நிற்பதைப் புறநானூற்றுப் பாடல்கள் காட்டுகின்றன. இவ்வகையில் இவர்கள் அவல வீரர்களாகத் (Tragedic heroes) தோன்றுகிறார்கள். இதற்கான சமுதாயப் பின்னணி ஒன்று தேவை என்பதை நினைவு கூர்க.

*புறம்: 154,156,165 அரசர் உழையராகவும், புரைதபு வள்ளியோர்ப் படர்குவர் – (கொண்கானங்கிழானை மோசிகீரனார் பாடியது)*

இந்நிகழ்ச்சிக்கு அடிப்படையான காரணம் உடைமையின் வருகையே என்பது புரிவதில்லையா? சங்ககாலத்தில் வாழ்ந்த நன்னன் என்ற மன்னன் இந்த உடைமைச் செருக்கின் முழுவடிவமாகத் தோன்றுகிறான். அரண்மனைத் தோட்டத்திலிருந்து விழுந்த மாங்கனியை உண்ட பெண்ணை, அவள் தந்தை அவள் எடையளவு பொன் கொடுப்பதாகக் கூறிய போதிலும் ஒப்புக்கொள்ளாமல் கொன்று தீர்க்கிறான். இங்கு உடைமை என்ற கருத்தோட்டத்தைக் காப்பாற்றி, அரசு பலத்துடன் அதைச் சமுதாயத்தில் நிலைநிறுத்தும் முயற்சியை நன்னனிடம் காண்கின்றோம். இந்நிகழ்ச்சியிலிருந்து இதற்கு முற்பட்ட சமுதாயத்திலிருந்து உடைமை பொதுவாக இருந்திருக்கலாம். ஆகவே அந்தப் பெண் குற்றமாகக் கருதாமல் மாம்பழத்தை உண்டிருக்கலாம் என்றும் கருத இடமிருக்கிறது.

“பழுமரம் உள்ளூர்ப் பழுத்தாற்றால்” என்ற குறளும் இத்தகைய ஒரு கால நிலையையே குறிப்பதாக இருக்கலாம். அத்துடன் நன்னனின் தண்டனையைக் கண்டிக்கும் முறையில் பழைய பண்பாட்டைக் காக்கும் கடமையயுடைய (சமுதாய மாறுதலின் போது ஏற்படும் பண்பாட்டு நெருக்கடி - கலாச்சார நெருக்கடி மிகக் கொடுமையானது. பழைய பண்பாட்டின் நல்ல அம்சங்களைப் புதிய சமூகச் சூழலில் நிலைநிறுத்த முயலும் வீரப் போராட்டம். சில சான்றோர்க்கு வாய்க்கிறது. உயிரைக் கொடுத்து இப்போரை நடத்தும் பொத்தியார் போன்றவர் சமூக நலத்தின் சாரம் ஆவர்.) புலவர்கள் நன்னனின் பரம்பரையை இனிப் பாடுவதில்லை என்று முடிவு செய்ததையும் இங்கு பார்த்தல் நல்லது.

மேற்கண்ட நிகழ்ச்சிகள் அனைத்தையும் சேர்த்துப் பார்க்கும் போது வள்ளல்கள் சமுதாயத்தில் பெற்றிருந்த மரியாதைக்குக் காரணம் விளங்குகிறது. சமுதாயத்தின் புதிய செல்வங்களை அவர்கள் தமக்கென வைத்துக் கொள்ளாமல் பிறருடன் பகிர்ந்து கொண்டதில் அவர்களின் இனக்குழுச் சமூகத் தலைமைத்தன்மை விளங்குகிறது. இத்தகையவர்கள் பண்பாடு மிக்கவர்களாகப் பாராட்டப்பட்டதன் பொருளும் விளங்குகிறது. உடைமையையும், நிலைப்பாட்டையும், செல்வத்தை வாரியிறைக்காமல் தமக்கெனச் சேர்த்துக்கொள்ளும் பண்பையும் உடைய வேந்தர்களுக்கிடையில் இத்தகைய வள்ளல்கள் நிலைக்க முடியாது

என்பதும் தெரிகிறது. இத்தகைய வள்ளல்கள் இருக்கும்வரை வேந்தர்களின் ஆட்சியெல்லைக்குள் உள்ள மக்கள், வள்ளல்களின் பெருமையையே பல முறையும் எடுத்துக்கூறுவர்.

(பாரி பாரி என்று பல ஏத்தி
ஒருவற் புகழ்வார் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டு, ஈண்டு உலகு புரப்பதுவே

(புறம். 107)

இப்பாடலில் வஞ்சப்புகழ்ச்சி என்ற கூர்மையான எதிர்மறை வடிவில் இக்கருத்து வெளிப்படுகிறது).

இதனால் உடைமையை அடிப்படையாகக் கொண்ட அரசு நிலைபெற வேண்டுமானால் வள்ளல்களை அல்லது இனக்குழுச் சமுதாயத்தின் தலைவர்களை ஒழிக்க வேண்டியது அவர்களின் அரசியல் கடமையாகிறது. அந்நிலையில் நேருக்கு நேர் போர் புரிவது, நியாயமாகப் போர் புரிவது ஆகிய பண்புகளை ஒதுக்கி விட்டு நியாயமற்ற முறையில் வஞ்சகமாகப் போரிட்டு வெல்லும் பண்பையும் பார்க்கின்றோம். புறநானூற்றில் தொடக்கத்தில் காணப்படும் பல பாடல்களில் போர்ப்படை பற்றிய சிறப்பான வருணனைகளைப் பார்க்கின்றோம். யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை ஆகிய படை வகைகளையும் அவற்றின் செம்மாந்த தோற்றத்தையும், உலகத்தையே வெல்லக் கிளம்பிய அவற்றின் நோக்கத்தையும், பகைவர்களின் நாட்டில் இப்படைகள் மேற்கொள்ளும் ஈவிரக்கமற்ற அழிவு வேலைகளையும் இப்பாடல்களில் காண்கிறோம். இந்த வர்ணனைகளைப் பார்க்கும் போது சங்ககாலத்தில் புலவர்களின் கவனத்தை மிகவும் ஈர்த்த பகுதியாக இவற்றைக் கொள்ளலாம். இம்முறையில் படைவகுப்பை நிலைப்படை முறையிலன்றிச் செய்ய முடியாது. (அப்படியானால் இப்படைகள் கூலிப்படைகள் ஆகின்றன. கொடுக்கப்பட்ட பொருள் அல்லது பகைவர் நாட்டில் இடும் கொள்ளைக்காக இப்படையினர் கடுமையான பயிற்சிகளை பெறுகின்றவர் ஆவர்). இவர்கள் உடைமையின் காவலுக்கும், பெருக்கத்திற்கும் புதிய சமுதாயத்தினால் தயாரிக்கப்பட்டவர்கள்.

சங்ககாலத்தில் பெரு மன்னர்களால் வேள்விகள் தொடங்கப்பட்டதின் உண்மையையும் இங்கு பார்த்தல் நலம். சில

மன்னர்கள் அவர்கள் நடத்திய படையெடுப்புக்காகவும், அவர்கள் புரிந்த வேள்விக்காகவும், மிகுதியாகச் சிறப்பிக்கப் பட்டனர். அவர்களில் ஒருவன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி. இத்தகைய வேந்தர்களுக்குப் படைபெயடுப்பின் மூலம் கொள்ளையடிக்கப்பட்ட செல்வங்கள் பெருகி வருகின்றன. உள்நாட்டிலும், சுங்கவரி, பிற வரிகள் மூலமும் பெருகுகின்றது. இந்தச் செல்வப் பெருக்கத்தின் இரகசியம் மக்களுக்குப் புரிந்தும், புரியாமலும் இருக்கின்றது. இந்நிலையில் மாபெரும் வேள்விகளை நடத்துவதன் மூலமும், அவற்றின் அருமை பெருமைகளைப் பிரச்சாரம் செய்வதன் மூலமும் வேள்வி நடத்துவதனாலேயே வேந்தனுக்கு வெற்றியும், செல்வங்களும் பெருகுகின்றன என்ற கருத்தை மக்கள் மத்தியில் நிலைநிறுத்தி விட முடியும்.

புறநானூற்றுப் பாடல்கள் பலவற்றில் வேந்தர்களை, சூரியன் முதலிய வேந்தர்களுக்கும் சிவபெருமான் முதலிய கடவுளர்களுக்கும் நிகராகவோ, மேலாகவோ கூறுவதன் உண்மையும் இப்படிப்பட்டதாகவே இருக்க வேண்டும்.

இவ்வாறு உடைமையை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய சமுதாயத்தின் எழுச்சியைச் சங்ககாலத்தில் நாம் பார்க்கிறோம். உடைமை நோக்கத்துடன் நிலைப்படையை அடிப்படையாகக் கொண்ட அரசின் தோற்றத்தையும் சங்ககாலத்தில் பார்க்கிறோம். இவற்றிற்கு எதிராக நிற்க முடியாமல் பழைய சமுதாயம் அழிவதையும் நாம் பார்க்கிறோம். சங்ககாலத்தின் மையமான நிகழ்ச்சி இது என்று நாம் மதிப்பீடு செய்கின்றோம். இந்த அடிப்படை முரண்பாட்டிலிருந்தே சங்ககாலத்தின் பிற சிறப்பியல்புகளை நம்மால் சரிவர விளக்கி விட முடியும் என்றும் நாம் நம்புகிறோம். இதிலிருந்தே சங்ககாலத்தின் பெருமை, சிறுமை அக்காலத்தின் வளர்ச்சி, தேய்வு இலக்கியங்களின் உருவம், உள்ளடக்கம் முதலிய பல பிரச்சனைகளுக்கும் விடை காண முடியும் என்றும் நாம் நம்புகிறோம்.

6. சங்ககாலத்தின் இந்த அடிப்படையான முரண்பாட்டை அகப்பொருள் பாடல்களில் மையமாகப் பார்க்கின்றோம்.

சங்க இலக்கியத்தின் பெரும்பகுதியாகிய பாலைப்பாடல்களில் அந்தச் சமுதாயத்தில் அவலக் குரலைக் கேட்கின்றோம். குலச்சமுதாயங்களை அழித்து அரசுகள் தோன்றி அரசுகளுக்கிடையிலும்

பெருக்கத்தில் மனித உணர்வுகள் சீர்குலைந்து சமுதாயம் முழுவதுமே பூசல் நிறைந்ததாக மாறிக் கொண்டிருக்கிறது. அந்தச் சமுதாயம் முழுவதும் நிலவுகின்ற பூசல்தான் குடும்பத்திற்குள்ளும், கணவன் மனைவியர்க்கிடையிலும் பூசலாக வெடிக்கிறது. செல்வச் செருக்கில் தன் இன்பத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்ட நிலையில் குடும்பத்தில் இத்தகைய பூசல்கள் தோன்றாமல் இருக்க முடியாது.

உடைமையை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்தில் எல்லாமே விலைப் பொருளாகும். நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெறும். இம்முறையிலேதான் மருதநிலையில் விலைப்பொருளாகிய பரத்தையர்கள் இடம் பெறுகிறார்கள். விலைப்பொருள் ஆகும் நிகழ்ச்சியாகிய இந்தப் பரத்தமை சமுதாயத்தில் பரவலாகும் சூழ்நிலையில்தான் கற்பு என்ற கோட்பாட்டுக்கு இடம் வலுக்கிறது. இது எனது பொருள், இதைத் துய்க்கும் உரிமை எனக்கே உண்டு. இதன் மீது எவனும் கை வைத்து விடக்கூடாது என்ற உடைமைக்- கோட்பாடுதான் குடும்பத்திற்குள்ளும், இவள் என் மனைவி, இவள் எனக்கே உரிமையுடையவள் என்ற கோட்பாடாகப் பிரதிபலிக்கிறது. உடைமைக் கோட்பாட்டையும் அதன் வெளியீடாகிய கற்புக் கோட்பாட்டையும் ஏற்றுக் கொண்ட சமுதாயத்தில் குடும்பப் பெண்களுக்குக் கற்பு காவலாகவும், அணிகலனாகவும் பிரச்சாரம் செய்யப்படும். குடும்பப் பெண்களும் நாளடைவில் இதை ஏற்றுக் கொள்வதில் ஐயமில்லை. இம்முறையில் பரத்தமையும், கற்புடைமையும் சமுதாயத்தில் உள்ள ஒரு முரண்பாட்டின் இருவகை வெளியீடுகள் ஆகின்றன.

முல்லைத் திணையிலும் நெய்தல் திணையிலும் இதே முரண்பாடு பிரதிபலிக்கக் காண்கின்றோம். பொருள் தேடப் பிரிந்து சென்ற தலைவனை எதிர்பார்த்துக் காத்துக்கிடப்பது முல்லைத்திணையின் உரிப்பொருள். பொருளாதாரப் பிரச்சனை கடுமையாகி விட்ட சூழ்நிலையில் முல்லைத் திணைக்கும் அதன் சாரம் ஆகிய கற்புக்கும் மதிப்பு மிகுவதில் வியப்பில்லை. கடலில் மீன் பிடிக்கச் சென்ற தலைவனை எதிர்ப்பார்த்து, நம்பிக்கையைக் காட்டிலும் அதிக அவநம்பிக்கையோடு இருக்க வேண்டிய கட்டாய நிலைமை நெய்தல் நிலத்தில் இயல்பாகிறது. அதுபோலவே இரங்கல் நெய்தல் திணையின் உரிப்பொருள் ஆனதில் ஐயமில்லை.

இவ்வாறு அகப்பொருளுக்கும் சங்ககால புறப்பொருளின் மையப் பிரச்சனையாகிய உடைமைப் பிரச்சனையே மையமாகிறது.

7. அகத்திணைகளுக்கும், புறத்திணைகளுக்கும் உள்ள உறவு பற்றித் தொல்காப்பியர் முதலிய இலக்கண ஆசிரியர்களும், உரையாசிரியர்களும் சில விளக்கங்களைத் தந்துள்ளார்கள். இவ்விளக்கங்கள் பொருத்தமா இல்லையா என்பது பற்றி இப்பொழுது பார்ப்போம். தொல்காப்பியர் அகத்திணையைப் பற்றி ஆயும் போது அகத்திணையில் இடம் பெறும் பொருள்களை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் எனப் பகுத்துள்ளது அனைவரும் அறிந்த செய்தி. தொல்காப்பியர் கருத்தின்படி நிலமும், பொழுதும் ஆகிய முதற்பொருளிடத்துக் கருக் கொள்வது கருப்பொருள் ஆகியவற்றின் அடிப்படையில் அல்லது பின்னணியில் நிகழ்வது உரிப்பொருள். இக்கருத்து மிகவும் பாராட்டுவதற்குரிய ஒன்றாகும். கருப்பொருள்களில் ஒன்றாக தெய்வத்தைக் குறிப்பிட்டது, சமயவாதிகளின் கருத்திற்கு முரண்பட்டதாகும். சமயவாதிகள் நிலம், பொழுது ஆகியவற்றிற்கும் கூட முதற்பொருளாக இறைவனையே குறிப்பிடுவதைப் பார்க்கும் போது தொல்காப்பியர் கருத்திலுள்ள பொருண்மை கொள்கைக் கூறு நம்மை கவரக் கூடியதாக இருக்கிறது. அதுபோலவே "நிலம் பொழுது ஆகியவற்றைச் சார்ந்தே மக்களின் தொழிலும், வாழ்க்கையும் அமைகிறது என்ற கருத்தும் நம்மைக் கவரத்தக்கதே. இதைத் தவிர மக்களின் கலைத்துறை வாழ்க்கையை (பறை, செய்தி, யாழ்) கருப்பொருளின் பகுதியாகக் கூறியது மேலும் பாராட்டுதற்குரியது. வாழ்க்கையை ஒட்டியே, அதுவும் நிலம், பொழுது ஆகியன சார்ந்த மக்களின் வாழ்க்கையை ஒட்டியே பறை, யாழ் போன்றமையும் அமைகின்றன என்ற கருத்தின் பொருண்மைக் கூற்றை நாம் கவனிக்காமல் இருக்கமுடியாது. (பொருண்மைக் கோட்பாட்டின் அடிப்படையில் சமுதாய – பொருளியல் சூழலை ஒட்டி மக்கள் வாழ்க்கை அமைகிறது என்ற ஒரு பகுதி உண்மையைத் தொல்காப்பியர் கண்டுள்ளார். இக்கோட்பாட்டின் இன்னொரு பகுதி உண்மை, மனிதன் சமுதாயப் பொருளியல் சூழலை உருவாக்கவும் வல்லவன் என்ற கருத்து தொல்காப்பியரிடம் இடம் பெறவில்லையே என்று நாம் குறை கூறுவது பொருத்தமில்லை. காரணம் அக்காலச் சமுதாய நிலையில் போதிய அளவு விஞ்ஞானம், தொழில் நுட்ப அறிவும், செயல்பாடும், சமுதாய அறிவும் ஏற்பட்டிருக்க முடியாது என்பதே).

மேற்கண்ட கருத்து தொல்காப்பியருக்கு மட்டுமே அல்லாமல், கூடியவரை சங்கச் சான்றோரிடமும் இடம்பெற்ற கருத்தாகவே இருத்தல் வேண்டும். சங்க இலக்கியத்தை அகம், புறம் எனப் பகுப்பதும்

இவ்விரண்டினுக்கும் இடையில் உள்ள உறவைச் சிந்திப்பதும் சங்ககாலப்புலவர்களின் கருத்தாகவே இருந்திருக்க வேண்டும். தொல்காப்பியர்,

"வெட்சிதானே குறிஞ்சியது புறனே"
"வஞ்சிதானே முல்லையது புறனே"
"உழிஞை தானே மருதத்துப் புறனே"
"தும்பை தானே நெய்தலது புறனே"
"வாகை தானே பாலையது புறனே"

எனக் குறிப்பிடும் போது வஞ்சி ஒழுக்கம், குறிஞ்சி ஒழுக்கம் என்ற பொருளிலேயே கூறுவதாக உரையாசிரியர்கள் ஒப்புக்கொள்கின்றனர். அவ்வாறானால் குறிஞ்சி ஒழுக்கத்தின் புறமாக வெட்சி அமைகிறது என்ற கருத்தில்தான் தொல்காப்பியர் மேற்கண்ட சூத்திரத்தை அமைத்திருக்க முடியும். உண்மையில் அகவாழ்வு புறவாழ்வாக வெளிப்படுகிறதா என்ற கேள்விக்கு நமது பதில் - புறவாழ்வே அகத்தில் பிரதிபலிக்கின்றது. (அகத்திணை வகைகளின் பொருள் பற்றிய ஆய்வின் போது, குறிஞ்சி முதலிய நிலப்பெயர், அவற்றின் ஒழுக்கத்திற்குப் பெயரானதா? அல்லது குறிஞ்சி முதலிய ஒழுக்கத்தால் நிலம் குறிக்கப்பட்டதா என்ற கேள்வியை உரையாசிரியர்கள் எழுப்பியதை இங்கு நினைவுபடுத்தல் நலம். இதற்கு விடைகூறும் முறையில் பொருண்மைக் கோட்பாடும் கருத்து முதன்மைக் கோட்பாடும் தென்படுகின்றன.) இக்கருத்து தொல்காப்பியர் ஏற்கெனவே கூறிய முதற்பொருளின் அடிப்படையில் கருப்பொருள் – முதற்பொருள், கருப்பொருள் ஆகியவற்றின் அடிப்படையில் உரிப்பொருள் என்ற கருத்திற்கு மாறுபட்டதாக இருக்கின்றது. அன்றியும் புறவாழ்வு எனச் சொல்லப்படும் போர் நிகழ்ச்சிகள், அரசியல் வாழ்வு, துறவறம் முதலியவற்றைக் கருப்பொருளின் உட்பகுதியாகவே கொள்வதுதான் தொல்காப்பியர் நெறிக்கே நியாயம் கூறுவதாக அமையும். (அகத்திற்கு முதல், கரு, உரி எனப் பிரித்தது போலப் புறத்திற்குப் பகுக்கவில்லை, ஏன் என்பது ஆய்விற்குரியது.) ஆகவே நம்மைப் பொருத்தவரை புறவாழ்வே அகத்தில் பிரதிபலிக்கின்றது என்ற கருத்தின் அடிப்படையில் (அப்படியானால் அகம், புறத்தை அறவே பாதிக்கவில்லை என்பது நம் கருத்தன்று. அகம் புறத்தைப் பாதித்த முறைமையைச் சங்க இலக்கியத்தின் வழியே பின்னர்க் காண்போம்.) புறத்திணைகளுக்கும், அகத்திணைகளுக்கும் உள்ள உறவைத் தொடர்ந்து ஆராய்வோம்.

முதலில் வெட்சிக்கும், குறிஞ்சிக்குமுள்ள உறவைக் காண்போம். குறிஞ்சி நிலத்தில் வாழ்கின்ற வேடர், வேற்றிடத்திலுள்ள ஆநிரைகளைக் கவர்ந்து வருதல் வெட்சித்திணையாகும்; அல்லது இதன் விரிந்த பொருளில் ஒரு வேந்தனைச் சார்ந்த கூட்டத்தவர் பகைவர் நாட்டின் எல்லையில் புகுந்து அங்குள்ள ஆநிரைகளைக் கவர்ந்து வருதலாகும். குறிஞ்சித் திணையின் உரிப்பொருளாக ஒரு தலைவன் தலைவியை அவளது பெற்றோர் அனுமதியின்றிக் களவில் கூடி அவளைக் கவர்ந்து வருதலாகக் கூறப்படுகிறது. ஆகவே வெட்சி, குறிஞ்சியாகிய இரண்டு திணைகளின் உள்ளடக்கமாகக் களவு நிகழ்ச்சி இடம் பெறுவதாகப் புலவர் விளக்குகின்றனர். இதற்குமேல் இவ்விரண்டனுக்குமுள்ள உறவைப் பார்ப்பதில்லை. குறிஞ்சி நிலத்தில் வாழும் வேடர்கள் தமது ஊர்ப்புறத்தில் உள்ள கூட்டத்தாரிடமிருந்தோ அல்லது தமக்கு அண்மையிலுள்ள முல்லை நிலத்தவரிடமிருந்தோ ஆநிரைகளைக் களவில் கவர்ந்து வருதல் அல்லது போரிட்டுக் கவர்ந்து வருதல், அவர்கள் வாழ்வின் முக்கியமான ஒரு நிகழ்ச்சியாக உள்ளது. களவு என்பது அவர்கள் வாழ்வின் அடிப்படையோடு இயைந்த போக்காக உள்ளது. புறவாழ்க்கையில் இத்தகைய களவோடு நெருக்கமாக உறவு கொண்டவர்கள் அக வாழ்க்கையிலும் இத்தகைய போக்கையே பிரதிபலிப்பது இயற்கையாக இருக்கும். குறிஞ்சி நிலத்தில் மனிதர் வாழத் தொடங்கிய முதற்காலத்தில் இத்தகைய களவு நிகழ்ச்சி சாதாரணமானது. எண்வகைத் திருமண முறைகளில் ஒருமுறை 'களவியல் கவர்தலாகும்'. அஃதாவது ஒரு குழுவைச் சார்ந்தவர் தமக்குத் தேவையான ஆநிரை அல்லது பெண்ணைப் பிற குழுவிடமிருந்து வலுவில் கவர்தல் மனித வரலாற்றின் முதற் காலத்திற்கு ஒத்த நிகழ்ச்சியே.

அவ்வாறானால் இன்னொரு கேள்வி எழலாம். குறிஞ்சித் திணை பற்றிய பாடல்களில் ஒருவன் ஒருத்தியைப் பார்த்தவுடனே அவளை எலுவில் கவர்ந்து வராமல் அவளைக் காதலித்து அவள் உடன்பாட்டோடு அவளைக் கவர்ந்து வரும் நிகழ்ச்சி தானே இடம் பெறுகிறது என்று கேட்கலாம். உண்மைதான். முதற்காலத்தில் நாம் மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிதான் எல்லாச்சமுதாயத்திலும் நடைபெற்ற நிகழ்ச்சி, தொல்காப்பியர்காலம் வரை சமுதாயம் வளர்ச்சி பெற்றுள்ளது. குறிஞ்சி நாகரிகமாகிய காட்டு மிராண்டிகளின் நாகரிகம் தொல்காப்பியர் காலத்தில் மருதநில நாகரிகமாக வளர்ச்சி பெற்றுள்ளது. இடையில் நடைபெற்ற சமுதாய வளர்ச்சி குறிஞ்சியையோ, முல்லையையோ பாதிக்காமல் இருக்க முடியாது. தவிர

குறிஞ்சி நிலத்தில் தலைவன், தலைவியைக் கவர்தல் என்ற களவு மட்டுமே நடைபெற்றது. கற்பு வாழ்க்கைத் தேவையானால், முல்லை நிலத்திற்கு அவர்கள் குடியேறி விடுவார்கள் என்று தொல்காப்பியர் காலத்தில் கூட யாரும் கூறியிருக்கமாட்டார்கள். புலவர்களின் புலன் நெறி சான்ற நாடக வழக்கின்படி குறிஞ்சி நிலத்தில், கார் காலத்தில் இரவுப் பொழுதில் காதல் நடைபெறுவது புலவர்களைப் பொறுத்தவரை மிகவும் ஒரு கவர்ச்சிகரமான செயல். ஆனால் முதற்காலத்துக் குறிஞ்சி வாழ்க்கையில் களவு மட்டுமே குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாக அமைந்திருக்கும். ஊரவர் கூடி சடங்கு முதலியன செய்து கற்பு வாழ்க்கையில் தலைவன், தலைவியரை ஈடுபடுத்துவது என்பது, அங்கு நடைபெறாத, தேவையில்லாத ஒரு நிகழ்ச்சி.

அவ்வாறானால் இன்னுமொரு கேள்விக்கு இடமிருக்கிறது. முதற்காலக் களவு வாழ்வையே குறிஞ்சியின் உரிப்பொருளாகத் தொல்காப்பியர் ஏன் கூறவில்லை? ஏற்கெனவே நாம் கூறிய படி, முதற்காலக் களவு வாழ்க்கை, இடைக்கால நாகரிக வாழ்க்கையின் பாதிப்பால் முன்னைய வடிவிலேயே நடைபெறாமல் இருந்திருக்கலாம். அத்துடன் புலனெறி வழக்கின் படி, முதற்காலக் களவு வாழ்க்கையின் அநாகரீகக் கூறுகளைக் களைந்து தொல்காப்பியர் தமது காலப் பண்பாட்டின் அடிப்படையில் மாற்றி அமைத்தும் இருக்கலாம். வேறு காரணங்கள் (அநேகமாக) கூறுவதற்கில்லை.

ஆகவே வெட்சி வாழ்வின் களவியல் பண்பே குறிஞ்சித் திணையின் களவு வாழ்க்கையாகப் பிரதிபலித்தது என்பதில் ஐயமில்லை. ஆநிரையைக் களவாடுவது போலவே தமக்குத் தேவையான மகளிரையும் அவர்கள் முற்கால வாழ்வில் களவாடினர். இச்செயலே தொல்காப்பியர் காலத்தில் எச்சமாக அல்லது புலனெறி நோக்கில் திருத்தி அமைக்கப்பட்டதாக இடம் பெறுகிறது.

இன்னொன்றையும் இங்கு குறிப்பிடுவது நல்லது. ஒரு வேந்தன் பகை நாட்டின் மீது படையெடுப்பதற்கு முன் நிகழ்ச்சியாகப் பகைவர் நாட்டு எல்லையிலுள்ள பசுவைக் கவர்ந்து வருதலை வெட்சித் திணையாகக் குறிப்பிடுவது நியாயம் அன்று. காரணம் தொடர்ந்து நடைபெறும் போர் வஞ்சியாக இருக்குமானால் வஞ்சித்திணையின் ஒரு பகுதியாகவே ஆநிரை கவருதலும் அமைந்து விட வேண்டும். ஒருவகைப் போரை இருவகைப் போராகக் கூறுவதில் பொருள் எதுவும் இல்லை. அல்லது பசு மாடுகளுக்குப் போரினால் துன்பம் ஏற்பட்டு விடக்கூடாது என்ற அருள் உணர்வு காரணமாகப் பசுமாடுகள் முன்பே கவர்ந்து கொள்ளப்பட்டன என்ற நியாயம், இத்தகைய

கூற்று பழங்காலத்திலேயே பசுமாட்டுத் திருட்டை மறைக்க அரசால் கற்பிக்கப்பட்ட ஒரு பிரச்சாரமே. காரணம் இவ்வாறு ஒருமுறை கவர்ந்து வரப்பட்ட பசுமாடுகள் போர் முடிந்த பின்னர் திருப்பி அனுப்பப்பட்டதற்கு இலக்கியச் சான்றோ, தொல்காப்பியர் முதலிய இலக்கண ஆசிரியர்களின் சான்றோ இல்லை. (முதுகுடுமியின் அருள் கூர்ந்த எச்சரிக்கை: விதிவிலக்கு. ஒரே ஒரு தனிச்சான்று இதில் கூட ஆநிரை கவர்தல் இல்லை. பாதுகாப்பான இடம் செல்க என்பதே கருத்து. (புறம் – 9)

இதுவரை கூறியதிலிருந்து இன்னொன்றையும் நாம் புரிந்து கொள்ளலாம். பழங்காலம் முற்றாக அழிந்து விடுவது இல்லை. காலநிலைமைகள் மாறிய போதிலும், பழங்காலம் ஏதாவது ஒரு வடிவில் புதிய காலத்திற்குள் எச்சமாக வாழ்ந்தே வருகின்றது. வரலாறு இவ்வாறுதான் இயங்கி வளரமுடியும். ஆகவே பழங்காலம் என்பது ஒரு சுமை அல்ல. புதிய காலம் என்பது ஒரு விடுதலையும் அல்ல.

இனி வஞ்சிக்கும் முல்லைக்கும் உள்ள உறவைக் காண்போம்.

வேந்தர்களுக்கிடையில் மற்றவர் நிலத்தைக் கைப்பற்றுவது குறித்துக் கடுமையாக நடத்தும் போர் வஞ்சிப்போர். இத்தகைய போர்கள் நாம் முன்பே கூறியபடி சங்ககாலத்தில் மிகுந்து வந்தன. முல்லை நிலத்தில் பாசறை அமைத்துக்கொண்டு தங்கி இருந்து போர் புரிதல், வஞ்சிப்போரின் ஒரு பண்பாகும். வேந்தர்களின் படையளவு பெருகுவதனாலும், போர்கள் தொடர்ந்து நடைபெறுதலாலும், படையைச் சேர்ந்த மறவர்கள் தம் மனைவியைப் பிரிந்து செல்லுதலும் அதிகரிக்கவே செய்யும். போருக்காகப் பிரிந்து செல்வது மட்டுமே முல்லையின் கருப்பொருள் அன்று. பொருள் ஈட்டுவதற்காக வணிகம், நிமித்தமாகப் பிரிதலும், முல்லைத் திணையேயாகும். போர்த்தொழிலும், நாகரிகத்தின் வளர்ச்சிப் போக்கில் பொருள் ஈட்டும் முறையேயாகிறது. இந்நிலையில் தம் கற்பைக் காத்து இருப்பது, இல்லத்துப் பெண்களின் கடமையாகி விட்டது. இம்முறையிலும் வஞ்சியின் வெளிப்பாடாகவே – பாதிப்பாகவே முல்லைத்திணை அமைகிறது என்பது தெளிவாகிறது.

உழிஞைத் திணைக்கும், மருதத்திற்கும் இவ்வகைப்பட்ட உறவே நிலவுகிறது. மருத நிலத்தில் மதில்கள், கோட்டைகள் அமைக்கப்படுகின்றன. முக்கியமாக மருதநில நாகரிகத்தின் சிறப்பம்சமாகிய நகரத்தைச் சுற்றிலும் மதிற்சுவர்கள் அமைக்கப்படுகின்றன. செல்வம் குவிந்தநிலையில் இத்தகைய

அரண்கள் தேவை. நகரங்களைக் கைப்பற்றுதலுக்காகக் கடுமையான போர்கள் நடைபெறுகின்றன. மருதநிலத்தில் நடைபெறும் வாரிசு உரிமைப் போர்களும் இத்தகையனவே. வேந்தர்களுக்கிடையிலேயே இத்தகைய போர்கள் சாத்தியமாகின்றன. முற்றிலும் உடைமைப் போற்றுக்காகவே உடைமை முறையினாலேயே இத்தகைய போர்கள் கடுமையாகி விட்டன. மருதத்திணையில் வரும் பூசலும், இந்த உடைமை முறையினாலேயே ஏற்படுகிறது. இன்பங்கள் பெருகி வழியும் நகரங்களில் பரத்தையை நாடிப் பிரிவதாகக் குழப்பம் தொடங்குகிறது. காதலன் அல்லது கணவனைப் பற்றும் 'முற்றுகை' முயற்சியைப் பரத்தையர்களைப் போலவே மனைவியரும் மேற்கொள்ளுகின்றனர். நகரங்கள் அடிக்கடி கைம்மாறுவது போலவே கணவரும் கைம்மாறுகின்றனர். இம்முறையில் கணவரே மகளிரின் உடைமையாகிவிட்ட நிலையில் அவனைக் கைப்பற்றும் 'உழிஞைப்போரை' மகளிர் நடத்துகின்றனர். செல்வம் தேடுவதற்காக அல்லாமல், திரட்டப்பட்ட செல்வக் குவியலை யார் கைப்பற்றி அதிகாரம் செய்வது என்பதுதான் உழிஞை, மருதம் ஆகிய இருதிணைகளின் சாரமாகிறது. செல்வக்காப்புக்காகப் போட்டி, பொறாமை, பூசல் இவையே இரு திணைகளின் சாரம். இவ்வகையில் உழிஞையின் வெளியீடாக மருதம் அமைகிறது.

தும்பைக்கும், நெய்தலுக்கும் உறவை இனிப்பார்ப்போம். தும்மைப்போரும் வேந்தர்களுக்கிடையில் நடைபெறும் போர். வலிமையையே தனக்கும் கருவியாகக் கொண்டு படையெடுத்து வந்த வேந்தனை இன்னொரு வேந்தன் வெற்றி கொள்ளும் அல்லது அழித்து முடிக்கும் செயலைத் தும்பைத்திணை கூறுகிறது. இப்போர் மிகக் கடுமையாக நடைபெற்று முடியும் போர். வீரர்களின் தியாகங்கள் இதில் அதிகம். ஒரு வேந்தனின் படைமுற்றாக அழிக்கப்படும் நிகழ்ச்சியின் போதே, மற்றவனின் படையின் ஒரு பெரும் பகுதியும் அழிக்கப்படுகிறது என்பதில் ஐயமில்லை. உண்மையில் இப்போர் வேதனைக்குரிய, இரக்கத்திற்குரிய போர். பகைவர் நாட்டுக்கு ஏற்படும் அழிவும் இத்தோடு சேர்த்து எண்ணத்தக்கது. இப்போரில் கலந்துகொண்டு, திரும்பி வராத மறவர்களின் தொகை அதிகம். இவர்களுக்காக, இவர்களின் நாசத்திற்காக இவர்களுக்கு ஏற்படும் உடல் ஊறுகளுக்காக, இவர்களின் சாவுக்காக. 'இரக்கம்' மேற்கொள்ளும் மகளிர் நிலைமை வேதனைக்கு உரியது. கடல்மேற் கணவர் சென்ற நிலையில் மனைவியரின் இரக்கம் போலவே, இத்தகைய போரில் கலந்து கொள்ளும் கணவர் தம் மனைவியர் நிலையும் ஆகின்றது. இதுதவிர, வணிகம் முதலிய

முறைகளில் பொருள் தேடக் கடல் கடந்தோ வேற்று நாட்டுக்கோ சென்று, குறித்த காலம் கழிந்த பின்னர், இடையில் தடை ஏற்பட்டதனாலோ அல்லது வழிப்பறி கொள்ளையரால் கொல்லப்பட்டதனாலோ அல்லது வேறு காரணத்தினாலோ கணவர் திரும்பி வராத நிலையில் மனைவியர் இரக்கமும், நெய்தல் திணை சார்ந்ததேயாகும். இம்முறையில் பார்த்தாலும் தும்பைக்கும் நெய்தலுக்கும் உள்ள நெருக்கமான உறவு புலப்படும். (அகத்திணைகளுக்கும், புறத்திணைகளுக்கும் உள்ள உறவைப் பற்றிய உரையாசிரியர்களின் விளக்கம் மேற்போக்காகவே உள்ளதால், இதுபற்றி இளவழகனார் விரிவாக ஆராய்ந்துள்ளார். முற்றிலும் சமய நோக்கிலும், கருத்து முதல் நோக்கிலும் உள்ள அவரது ஆய்வைப் பின்னர் விரிவாக விமர்சனம் செய்வோம்.)

(பாலை, பெருந்திணை, கைக்கிளை ஆகியவற்றுக்கும் வாகை, காஞ்சி, பாடாண்திணை ஆகியவற்றுக்கும் இடைப்பட்ட உறவைப் பிறிதோரிடத்தில் ஆராய்வோம். காரணம் பின்னர் குறிப்பிடுவோம்)

8. இதுவரை குறித்த செய்திகளை விமர்சன முறையில் மீண்டும் ஒருமுறை பார்த்துக் கொள்வோம்.

இதுவரை நாம் பார்த்த வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை ஆகிய நான்கு துணைகளில் நமக்குக் கற்பிக்கப்பட்டதற்கு மாறாக, ஒரே வகைப்போர் அல்லது இருவகைப்போர் பற்றிய வருணனையையே பார்க்கிறோம். ஆநிரைக் கவர்தலை இனக்குழுக்களுக்கிடையில் மட்டுமே நடைபெற்ற போராகக் கொண்டால், வஞ்சி முதலிய மூன்று திணைகளின் போரையும், ஒன்றின் தொடர்ச்சியாகவே பார்க்கலாம். மற்றவர் நிலத்தைக் கைப்பற்ற நடத்தும் போரின் தொடர்ச்சியாகவே, மதிலைச் சூழ்ந்து நடத்தும் போராகிய உழிஞையையும் அதில் வெற்றி அல்லது தோல்வி பற்றிய போராகத் தும்பையையும் கருதுவதில் தவறில்லை. இவ்வகைப் போரின் முதற்கட்டமாகவே, வெட்சிப் போரையும் அமைத்துக் கொள்ளக்கூடாதா என்றால் இவ்வாறு வெட்சி முதற்கட்டமாக நடந்த போர் என்பதற்கு இலக்கியச் சான்றுகள் இல்லை. ஆகவே இருவகைப் போராகவே கருதுவதற்கு நியாயம் இருக்கிறது. நாகரிகத்தின் வளர்ச்சிப் போக்கில், கோட்டைகள் முல்லை நிலத்திலோ, நெய்தல் நிலத்திலோ கட்டப்பட முடியாது என்பதில் பொருள் இல்லை. தவிர நிரைகவர்தலாகிய வெட்சிப் போருக்கு முல்லை நிலமே சரியான நிலமாக இருக்க அதிக வாய்ப்புண்டு. ஆகவே போர்முறைகளை, தொல்காப்பியர் போல குறிப்பிட்ட நிலத்திற்குக்

குறிப்பிட்ட வகைப்போர் என்று திட்டப்படுத்துதல் செல்லத்தக்கதுதானா என்பது ஒரு முக்கியமான சிக்கலாகும்.

இதுபோலவே, அகத்திணைகள் பற்றியும் சிக்கல் எழுகிறது. புணர்தலுக்குக் குறிஞ்சி நிலத்தையும், பிரிதலுக்குப் பாலை நிலத்தையும் இவ்வாறே பிற உரிப்பொருள்களுக்குக் குறிப்பிட்ட நிலங்களையும் வகுப்பது. நடைமுறைக்குப் பொருத்தம்தானா என்பது ஒரு கேள்வி. இதற்குமாறாக ஒரு குறிப்பிட்ட நிலத்தில் அந்நிலத்திற்கு உரியது என்று கூறப்பட்ட உரிப்பொருள் மட்டுமே நிகழும் என்பதை நச்சினார்க்கினியர் மறுத்தும் பேசுகிறார். ஒரு நிலத்தில் இருவகை உரிப்பொருளும் நிகழும் என்கிறார். இவ்வாறு, ஒரு குறிப்பிட்ட முதற்பொருளின் பின்னணியில் குறிப்பிட்டதொரு உரிப்பொருள் நடை, நாடக வழக்கு, புலனெறி வழக்கு என்பதற்குச் சிறப்பாக இருக்குமென்றால், வேறு ஒரு சிக்கல் எழுகிறது. கவிதைக் கவர்ச்சிக்காக இவ்வாறு அமைப்பது, வாழ்வின் அமைதியிலிருந்து விலகி அமையுமானால் ஏதோ சிறிது நேரத்திற்குக் கவர்ச்சி நிற்குமே ஒழியக் கவர்ச்சி நீடிக்க முடியாது. வாழ்வு நிலைக்கும், கலைக்கும் இடைவெளி இருக்கலாம். ஆனால் இரண்டும் இரு துருவங்கள் ஆகி விட முடியாது. வாழ்வை ஒட்டியும், கடந்தும் இருப்பதே கலைக்கு வெற்றியாகிறது. வெறும் புலனெறிதான் சங்க இலக்கியம் என்று கூறிவிட்டால் சங்க இலக்கியம் கொண்டு சங்ககாலச் சமுதாயத்தை ஆராய்வது கடுமையான குழப்பத்தில் கொண்டு போய் விடும்.

இவை தவிர, நாம் முன்பே குறிப்பிட்டபடி, அகத்திணைகளுக்கு முதற்பொருள், கருப்பொருள் குறிப்பிட்டதைப் போல, புறத்திணைகளுக்கு வெளிப்படையாகக் கூறப்படவில்லை. ஆனால் உரையாசிரியர்கள், "வெட்சி தானே குறிஞ்சியது புறனே" முதலிய நூற்பாக்களைக் கொண்டு, ஒவ்வொரு புறத்திணைக்கும் முதற்பொருளை வெளிப்படையாகக் குறித்துள்ளனர். கருப்பொருளைத் திட்டமாகக் கூறினாரா? என்பது ஒரு கேள்வி?

இக்கேள்விகளுக்கான விடைகள் ஒரு புறம் இருக்க, சங்ககாலத்தை அடுத்த காலத்தில், (அக்காலம் எந்த நூற்றாண்டுகள் என்பது பற்றி நாம் ஆராயவில்லை). மேற்குறித்த வரையறைகள் பலவும் இலக்கியக்களத்தை விட்டு வெளியேறி விட்டன ('நெடுநல்வாடையில்' தலைவனைப் பிரிந்த தலைவியின் கற்புநிலையே கவிதையாக அமைந்த போதிலும் வேம்பின் பெயர் கூறப்பட்டதால், பாடல் புறத்திணையாகிறது என்ற நச்சினார்க்கினியர் குறிப்பு கருதத்தக்கது. கவிதை இலக்கணம் வெறும் ஆசாரமாகி விட்ட நிலையையே இது குறிக்கிறது. இஃது ஓர் இடைக்காலநிலை.) என்பதையும் நாம் பார்க்க

வேண்டும். அகம், புறம் என்ற வரையறை, குறிப்பிட்ட உரிப்பொருளைக் குறிப்பிட்ட பின்னணியில் பாடுதல் என்ற வரையறைகள் முதலியன, இலக்கியத்தில் இயலவில்லை. இலக்கியம் முற்றாக மாறிவிட்டது. அத்துடன் திணைமயக்கம் என்பதே ஒருவகை அழகாகவும் புலவர்களால் பாடப்படலாயிற்று. சங்கப் பாடல்களிலேயே இத்தகைய திணை மயக்கங்கள் ஏற்பட்டிருப்பதை உரையாசிரியர்கள் சுட்டிக் காட்டலாயினர்.

இதிலிருந்து ஒன்று வெளிப்படுகிறது. அகம், புறம் முதலிய வரையறைகள் – அவை கருத்தளவில் தோற்றுவிக்கப்பட்ட காலத்தில் எத்தகைய பொருள் நிறைவை உடையனவாக இருந்த போதிலும், நாளடைவில் சமுதாய நடைமுறையாக இல்லாமல், நழுவிய காலத்தில் அல்லது நழுவ, நழுவ – நழுவி விட்ட நிலையில் சங்க இலக்கியம் இல்லை, சங்க இலக்கியத்தின் பரிணாமம் இத்திசையில் நடைபெற்றுள்ளது.

(அ) அப்படியானால் ... அகம், புறம் முதலிய வரையறைகள், அவை தோன்றிய காலத்தில் என்ன பொருள் நிறைவைக் கொண்டிருந்தன என்ற கேள்விக்கு விடை கூறுவது நம் கடமை.

(ஆ). இந்த இடத்தில்தான் வாகை, காஞ்சி, பாடாண் ஆகிய புறத்திணைகளுக்கும் பாலை, பெருந்திணை, கைக்கிளை ஆகிய அகத்திணைகளுக்கும் உள்ள உறவை ஆராய வேண்டியவர்களாக உள்ளோம்.

இக்கட்டுரை பற்றி நண்பர் ஜீவஒளியின் கருத்து:

1. சங்கஇலக்கியம், சங்ககாலச் சமுதாயம் பற்றிய (அநேகமாக) மிகச் சரியான ஒரு ஆய்வுமுறையும், மதிப்பீடும் தரப்பட்டிருக்கிறது என நம்பலாம்.

2. இந்தக் கட்டுரையின் எல்லைக்குட்பட்டு அளவாக எடுத்துக் கொள்ளப்பட்டு ஆராயப்பட்ட வி யங்கள் சுருக்கமான, தெளிவான விளக்கங்கள் பெற்று வெளிப்படுவது உண்மையில் ஆசியரின் இயக்கவியல் பொருண்மைவாதக் கண்ணோட்டத்தின் சிறப்பு என்பதில் ஐயமில்லை.

3. இதில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லாக் கருத்துகளும் அந்தந்த எல்லைகளில் சங்க இலக்கியம் பற்றி ஆராய்பவர்களுக்குப் புதிய வெளிச்சம் தரும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு.

4. காலத்தேவை – இன்றைய சமுதாயத்தின் தேவை என்ற அளவில் இத்தகைய ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற வேண்டும் என விரும்புகிறேன்.

5. தமிழ்ப் பண்பாடு, தமிழர் இலக்கிய நெறி, தமிழர் வாழ்வியல், போக்குகள், வரலாற்றுப் பாதைகள் ஆகியவற்றை இன்னும் ஆழமான முறையில் ஆய்ந்து வெளிப்படுத்த இத்தகைய கட்டுரைகள் திறந்த வாசலாக அமையும் என்பது உறுதி.

*(ஜீவஒளி 20-3-1974)*